முரசொலி

பொங்கல் மலர் - 1972



விலை ரூ 3/-

உழுபடை ஈந்ததோ உண்ணும் பால் பொங்கல்
எழுபடை ஈந்ததோ வெற்றித் தேன் பொங்கல்!

விளம்பர உதவி:

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்

மெயின் ரோடு, மேட்டுப்பாளையம் — கோயமுத்தூர் மாவட்டம்

வெற்றி தேடி தந்த பிரதமர்
இந்திரா காந்திக்கும்,
நம் முப்படை வீரர்களுக்கும்,
பொதுமக்களுக்கும் எங்கள்
மனமார்ந்த பொங்கல் வாழ்த்துகள்.



A.R.R சீவல் பாக்டரி,
கும்பகோணம்

A.R.R SEEVAL FACTORY,
KUMBAKONAM

கோட்டாகுடி பெரியநாயக்கர்
ஏ.வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

வெற்றிமிகு புத்தாண்டின் விளக்கொளி பரவட்டும்!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

உங்கள் புத்தாண்டை மேலும் ஒளிமயமாக்குங்கள்.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம் ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம் ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 1000 ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 100 ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.
மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 14,00,000

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-1-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
268 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.


இந்திய வரலாற்றில் இணையற்ற
சரித்திரத்தை உருவாக்கிய
திருமதி 'இந்திரா காந்திக்கு
எங்கள் வாழ்த்துக்கள்!
1970-ம் ஆண்டின் சிறந்த நடிக நடிகைகளுக்கான
தமிழக முதல்வர் 'டாக்டர்-கலைஞரின்
கரங்களால் சிறப்பு விருதுகள்
பெற்ற நட்சத்திரங்கள்
இணைந்து நடிக்கும்...
அன்னை புரொடக்ஷன்ஸ்
சங்கரின்
என்ன முதலாளி செளக்கியமா!
ஈஸ்ட்மென்கலர்
திரைக்கதை வசனம் டைரக்ஷன்
மல்லியம் ராஜகோபால்
பிப்ரவரி 11 முதல்
பாடல்கள்: கண்ணதாசன் / இசை: M.S. விஸ்வநாதன் /
அகில உலக உரிமையாளர்:
M/s. ஈஸ்ட் இந்தியா பிலிம் கம்பெனி லிமிடெட், சென்னை-2.

With the best compliments from

REAVATHI MACHINERY TRADERS

Coimbatore Private Industrial Estate,

Industrial Estate Post,

COIMBATORE-21.



Manufacturers of :

WATER WELL DRILLS, BLAST HOLE DRILLS & VIBRATORY ROAD ROLLERS.

திருநாளாம்
பொங்கலன்று
எமது உளங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்!

பண்டிகை நாட்களில் எங்கள் சொந்தத் தறியில் தயாரித்த வண்ணமிகு பட்டுச் சேலைகளை அணிந்து, அழகு தேவதைகளாகத்-திகழுங்கள்! எங்களிடம் மற்றும் கைத்தறி நூல், மில் ஜவுளிகள், நியாயமான விலைக்கு கிடைக்கும்.

கற்பகம் & கோ.

177, காந்தி ரோட், காஞ்சிபுரம்
போன்: கடை: 259: இல்லம்: 365

MOULIS

YOUR STEEL AND ALLOY STEEL CASTINGS

Leave it to SRSI





To deliver according to
Specification and Dimensional Tolerances.
BEST ATTENTION is given to meet your INTRICATE and
various types of ALLOY STEEL CASTINGS.

MANGANESE STEEL castings are under our REGULAR PRODUCTION.
Any type of STAINLESS STEEL castings you want ASK US.

LOW CARBON STAINLESS STEEL castings are
SPECIALITY in our manufacturing programme.

Catering STEEL & ALLOY STEEL CASTINGS FOR VALVE BODIES & ITS COMPONENTS, CEMENT, PAPER, CHEMICAL PLANTS, HEAVY DUTY AUTOMOBILES, RAIL AND EARTH MOVING EQUIPMENT COMPONENTS

CONSULT

SRI RAMAKRISHNA STEEL INDUSTRIES LTD.

KARAMADI - COIMBATORE DIST.

VSK SRSI 192

எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகினறன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைகுரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும்

வாருங்கள், உழைப்பின் பரிசைப் பல மடங்காய் அறுவடை செய்யுங்கள். உங்கள் களஞ்சியம் நிரம்பி வழியட்டும். பேரின்பப் பொங்கல் நாளிலும், பொன்னான புத்தாண்டு முழுதிலும் தானிய லட்சுமி தாராளமாய் வளம் பொழியட்டும்.

களஞ்சியம் அமைத்துக் கொள்ள இதோ. மிகச் சன்னமான தரமுடைய மேன்மையான **அரசு** போர்ட்லண்ட் சிமெண்ட். பண்ணை சேமிப்பு நிலையங்கள், தானியக் களஞ்சியங்கள், சேமிப்புத் தொட்டிகள் அமைத்திடவும், கிணறுகள், கட்டிடங்கள், நெடுஞ்சாலை அமைப்புக்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் கட்டிடவும் இப்பொழுது பெருமளவில் பயன்படுத்தப்படும் புகழ்பெற்ற சிமெண்ட் **அரசு.**

அரசு போர்ட்லண்ட் சிமெண்ட் உபயோகிக்க சிக்கனமானது. கலவையில் அதிக அளவு மணல் ஏற்கிறது. கட்டுமானங்கள் பல்லாண்டு காலம் பாங்கான எழிலுடன் விளங்கச் செய்கிறது. பருவநிலை எப்படியிருந்தாலும், எளிதில் பெயிண்ட் உரியாமல் காக்கிறது.

அரசு

வலிவும் வனப்பும் வாய்ந்தது

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், ராமநாதபுரம் மாவட்டம்.

AC-22

Coach **BUILDING**

SUPER-SERVICING OF CARS, VANS, LORRIES, BUSES, MOTOR CYCLES, SCOOTERS & TRACTORS.

Manufacture Of **TRACTOR EQUIPMENT**

MAJOR OVERHAULING, REPAIRS & SERVICING OF DIESEL ENGINES.

SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.

SHEET METAL FORMING FERROUS & NON-FERROUS METAL CASTINGS.

Electro **PLATING**

BESIDES, WE ARE THE MAIN DEALERS OF MASSEY-FERGUSON TRACTORS FOR THANJAVUR & TIRUCHIRAPALLI DISTRICTS.

Spray **PAINTING**



from

Singer-TVS
Limited

Regd. Office:
"TVS" Building,
Post Box No. 21,
West Veli Street,
Madurai-1

அருணா ஷுகர்ஸ் முன்னேற்றப் பாதையில் வேகமாக நடைபோடுகிறது

தயாரிப்புத் தொடங்கி ஏழே ஆண்டுகள்தான் ஆகின்றன. அதற்குள் நாங்கள் போதுமான அளவு உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம். இதோடு நாங்கள் திருப்தியடைந்துவிடவில்லை. கரும்புச்சாறு பிழிவதை நாளொன்றுக்கு 2000 டன்களாக உயர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, விரைவில் அமுலாகவிருக்கிறது. நாட்டில் சர்க்கரை தாராளமாகக் கிடைக்க நாங்கள் பெருமளவில் உதவுகிறோம். கிரேட் E-30 என்ற உயர்ந்தரக தூய வெண்ணிற சர்க்கரை தயாரிக்கிறோம். எங்களது சர்க்கரைப் பாகு கால்நடைத் தீவனங்களுக்கும், மருந்து தயாரிக்கும் தொழிலுக்கும் மிகச் சிறந்தது.

அருணா ஷுகர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்:
'தன் பில்டிங்'
175/1, மவுண்ட் ரோடு
சென்னை-2

சர்க்கரை ஆலை:
பெண்ணாடம்
தென்னாற்காடு மாவட்டம்
தமிழ்நாடு

ORWO

(PHOTO. CINE & X RAY FILMS)

Manufactured by:
VEB FILMFABRIK WOLFEN
GERMAN DEMOCRATIC REPUBLIC

*

Sole Distributors for the Southern and Eastern India:

ORWO FILMS EASTERN UNIT

MADRAS-6. CALCUTTA-17.

தமிழக அரசின் நற்பணிகளுக்கும்

கலைஞரின் சீரிய தலைமைக்கும்

எந்நாளும்

தோள் கொடுப்போம்

துணையிருப்போம்!

அனைவருக்கும் எமது உளம் கனிந்த

பொங்கல் நல் வாழ்த்துக்கள்

உணவு வகை, பிரியாணிகளுக்குச் சிறந்த இடம்:

செண்பக அரசு பாண்டியன்

உணவு நிலையம்

45, கச்சேரி ரோடு — திண்டுக்கல்

தொலைபேசி எண்: { கடை: 266 / வீடு: 628 }

க. வே. விங்ரோமாநிந்த நாடார்
உரிமையாளர்:

பால் பொங்கும் இன்னாள்—
புது வாழ்வு மலரும் திருநாள்!
எங்கள் பொங்கல் வாழ்த்துகள்
SANKAR
I C
CEMENT
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
தன் பில்டிங், சென்னை-2
தொழிற்சாலைகள்: சங்கர் நகர் & சங்கரி
உங்கள் சேவையில் கால் நூற்றாண்டு-
தொடர்ந்து செல்வோம் பல நூற்றாண்டு!
சங்கர்
சிமெண்ட்
உறுதியானது.உழைப்பில் சிறந்தது
IS 269
ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

வண்ணத்துப்பூச்சி தரும்
உன்னத பட்டுகள்
''நீலவான் ஆடைக்குள்
நடமாடும் விண்மீன்கள்;
வண்ணங்கள் பலகோடி,
எண்ணங்கள் இன்பம் தரும்;
தறியில் பிறக்கின்ற,
ஆடைகளைக் கண்டிடுவீர்!
உங்களைக் கவர்ந்திடும் ஓர்
கோ-ஆப்டெக்ஸ் புடவை!''
கோ-ஆப்டெக்ஸ்
Criterion CO.2678TMA

பொங்கல் திருநாளில் வேண்டுகோள்

*

சலியாது உழைக்கும் விவசாய பெருங்குடி மக்களுக்கு விளைச்சலைப் பெருக்க உறு துணையாக நின்ற பகலவனுக்கு நன்றி செலுத்தும் நன்னாளே பொங்கல் திருநாள்!

இம்மகிழ்ச்சிகரமான திருநாளில் அனைவருக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்!

நாட்டில் அவசர நிலை நீடித்தபோது, நிலவிய ஒருமைப்பாடும், ஒற்றுமையும் தடையேறாது முக்கியப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்க உதவிய ஊக்கமும், உழைப்பும் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் இடையே நீடித்து நிலை பெற வேண்டுமென்பது எங்கள் அவா.

இந்த அவா இனிது நிறைவேற நாட்டில் தொழிலாளத் தோழர்கள், தொழிலதிபர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் இவர்களிடையே நட்புறவு தழைக்கவும் நல்லெண்ணம் ஓங்கவும், இந்தத் திருநாளில் நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

*

ஈசன் தொழிற்குழு:

ஈசன் இஞ்சினீயரிங் கம்பெனி லிமிடெட்,

ஹாக்பிரிட்ஜ் - ஹிவிடிக் அண்டு ஈசன் லிமிடெட்,

ஈஸ்வரன் அண்டு சன்ஸ் இஞ்சினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட்,

ஈசன் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்,

சென்னை - 1.

வழிகாட்டும் தமிழ்நாடு!





பசுமைப்
புரட்சியில் முன்னணியில் நிற்பது — தமிழ்நாடு

புன்செய்க்கு வரிநீக்கியும் 5 ஏக்கர் வரை நன்செய்க்கு
வரி நீக்கியும் இருப்பது — தமிழ்நாடு



இந்தியாவிலேயே வேளாண்மைக்கு ஏராளமான
பம்பு செட்கள் அமைத்திருப்பது — தமிழ்நாடு

1972-ஆம் ஆண்டுக்குள் பட்டி தொட்டி
எங்கும் மின்வசதி அளிக்க செயல்படுவது — தமிழ்நாடு

சீரணி, இளைஞரணி அமைப்புக்களை உருவாக்கியிருப்பது — தமிழ்நாடு

குடிசை மாற்றுவாரியம் அமைத்திருப்பது — தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியம் அமைத்திருப்பது
தமிழ்நாடு

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைத்திருப்பது
தமிழ்நாடு

குடும்பநலத்திட்டப் பணிகளில் முன்னணியில் நிற்பது
தமிழ்நாடு

- புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி!
- தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள்!
- அண்ணல் கனவை அண்ணு வழி நின்று செயலாக்கும் திட்டங்கள் ஏராளம்!
- வன்முறை தவிர்த்து வறுமை போக்கும் புனிதப் பணியில் அயராது பாடுபடுவோம்!

அரசின் ஆக்கப்பணிகளுக்கு உறுதுணையாக இருப்போம்.

செய்தி — மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு

தமிழரசு

AMALGAMATIONS GROUP

THE AMALGAMATIONS GROUP, WHICH IS THE LARGEST LIGHT ENGINEERING GROUP IN SOUTH INDIA, CONSISTS OF TWENTY-SEVEN COMPANIES WHOSE ACTIVITIES COVER A WIDE RANGE.....

Manufacture

- Automotive & Industrial Diesel Engines.
- Agricultural Tractors & Implements.
- Automobile and Engineering Components.
- Pistons, Rings, Pins & Liners.
- Thinwall Engine Bearings.
- Flywheel Ring Gears.
- Diamond Tooling for Industry.
- Engineers' Cutting Tools, Point & Cutter Grinders.
- Castings, Forgings, Stampings.
- Cycle Rims.
- Lead Acid and Dry-charged Batteries for all Transport, Industrial and Tele-Communication Services.
- Paints, Pigments, Enamels, Varnishes, Plastic Emulsions and Lacquers.
- Synthetic Resins for surface coating.

Build Automotive Coaches & Trailers.
Operate Transport Services.
Own Independent Evening Newspaper.
Print, Publish and Sell Books.
Advertising Consultants.
Handle Real Estate & Financing.
Produce Coffee & Tea.

The Group's Industrial Estates extend to over 200 acres and provide more than 20 separate manufacturing facilities using latest equipment and modern techniques



The Group's Sales are over 500 million rupees. Employ over 18,000 persons.

AMALGAMATIONS PRIVATE LIMITED
202 Mount Road Madras-2 India

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

தலைமை அலுவலகம்: மதுரை.

தங்கள் சேமிப்பு மூலம் நாட்டின் உற்பத்தி பெருகுகிறது. மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

இன்றே பாங்க் ஆப் மதுரையில் சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள்.

சேமிப்புத் திட்டங்கள்:

(1) சேமிப்புக் கணக்கு (2) ரெக்கரிங் டிபாஸிட் (3) "தின சேமி"
(4) ரொக்கப் பத்திரங்கள் (Cash Certificates) (5) தவணை டிபாஸிட்.

எங்கள் வங்கியில் கணக்குத் திறப்பதால் தாங்கள் அடையும் நான்கு நன்மைகள்:

(1) தவணை டிபாஸிட்டுகளுக்கு, வேண்டுகோளின்பேரில் மாதாந்திர வட்டி கொடுக்கப்படுகிறது.
(2) டிபாஸிட்டிற்கு கிடைக்கும் வட்டி வருமானத்தில் ரூ. 3,000/- வரை வருமான வரி விலக்கு உண்டு.
(3) ரூபாய் 1,50,000/- உள்ள டிபாஸிட்டுகளுக்கு சொத்துவரி விலக்கு உண்டு.
(4) பள்ளி, அறநிலையம் போன்ற நிறுவனங்களுக்கு ½% வட்டி கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.

சிறப்பு அம்சம்: தமிழகத்தில் 'சிட்பண்டு' தொழில் நடத்தி வரும் முதல் வங்கி
பாங்க் ஆப் மதுரை லிமிடெட்.

தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகம், கிண்டி, சென்னை-32.

டிராக்டர்கள் விற்பனைக்கு

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட டிராக்டர்கள் தமிழ் நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும்.

	உத்தேச விலை
1. செட்டார் 5511 (55 குதிரைத்திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு. தண்ணீரால் குளிரும் என்சின் கரும்பு சாகுபடிக்கும், கடுமையான விவசாயத்திற்கும் மற்றும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது.	ரூ 32,000 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது.
2. செட்டார் 2011 ரைஸ் ஸ்பெஷல் (25 குதிரைத் திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு எல்லா விதமான விவசாய வேலைகளுக்கும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது. நஞ்சை சாகுபடிக்கு என்றே தயாரிக்கப்பட்டது.	ரூ. 25,000 (வரியுட்பட) (இன்னும் ஒரு மாதத்தில் எதிர்பார்க்கபபடுகிறது)
3. ஆர்எஸ்ஓ 9 (20 குதிரைத் திறன்) காற்றினால் குளிர்விக்கக் கூடியது. கிழக்கு ஜெர்மனி தயாரிப்பு. நவீனமானது, பலவகையான உபயோகத்திற்கு ஏற்றது. மிகக் குறைந்த விலை.	ரூ 11,601 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள டிராக்டர் வகைகளை வாங்க விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட எங்களது கிளை அலுவலகங்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

முகவரி	கவனிக்கப்படும் மாவட்டங்கள்
1. சிறுகாவேரிப்பாக்கம், காஞ்சிபுரம்	செங்கல்பட்டு, வட ஆற்காடு.
2. போக்ஸ் காம்பவுண்டு, சேலம்-1	சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, நீலகிரி.
3. 219, நேருஜி ரோடு விழுப்புரம்	தென் ஆற்காடு.
4. தொழிற்குடியிருப்பு, திருச்சி-10	திருச்சி, தஞ்சாவூர்.
5. தொழிற்பேட்டை, மதுரை-7	மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி.

துணைக்கூடங்கள்: செங்கை மாவட்டத்தில் பொன்னேரியிலும், மதுராந்தகத்திலும் துணைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. விரைவில் ஒவ்வொரு கூடத்தின் கீழும் மூன்று துணைக்கூடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.


R.Natarajan



நுழை வாயில்

ஐந்து ரூபாய் விலைக்குத் திட்டமிட்டுச் செயலாற்றி — ஐந்துரூபாய் அடக்கத்திற்குரிய மலரை மூன்று ரூபாய்க்குத் தந்துள்ளோம் — நமது வாங்கும் சக்தியை எண்ணி.

இந்த ஆண்டும்—'முரசொலி' முழு நிலா ஒளியோடு—முத்தாரப் பொலிவோடு மலர் தந்துள்ளது.

இது வெறும் காகித மலரல்ல—கழகக் குரல் ஒலிக்கும்—அண்ணன் புகழ் மணக்கும்—காவிய மலர்.

மலர் பற்றி நாங்கள் எழுதிவிட்டோம். அதன் மணம் குறித்து இனி நீங்கள்தான் எழுத வேண்டும்.

இந்த மலரின் எழிலுக்கு ஏற்றம் தந்த அனைவரும் நமது நன்றிக்குரியவர்கள்.

அறிஞர் அண்ணா இல்லாது நாம் கொண்டாடும் மூன்றாவது பொங்கலிது—அவர் எழுதி வைத்த மாநில சுயாட்சி உயிலுக்கு உயிர் கொடுப்போம் என இத்திருநாளில் உறுதி பூணுவோம்! ★

கரம் குவிப்போம்!

அன்பு உடன் பிறப்பே,

தமிழர் திருநாளாம், இந்தத் தங்கத் திருநாளில் என் இதய வாழ்த்துக்களை உனக்களித்து மகிழ்கிறேன். பொங்கல் விழா — பொங்கல் மலர் — இப்படி எண்ணிடும் பொழுதே; இந்நாளில் எனக்கும் உனக்கும் மடல் எழுதி வாழ்த்துக் குவிக்கும் நம் அருமை அண்ணன் இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு தானிருக்கிறது. தாயைத் தந்தையை இழந்த வேதனை, தட்டிக்கொண்டேயிருப்பதில்லை இதயக் கதவுகளை! ஆனால் தமையனைப் பிரிந்த சோகம் ஒருக்கணமும் உள்ளத்தை விட்டு நீங்கியதில்லையே!

இந்நாளில் கரும்பினைக் காண்கிறேன்; சுவைத்திடுமுன்னே அண்ணனின் சுவைத் தமிழ் தானே இனித்திடுகின்றது நெஞ்சில்!

பால் பொங்கிடும் புதுப் பானையில் எனினும்; அவர் நம் பால் அன்பால் விளைத்த பாச உணர்வுதானே பளிச்சிடுகின்றது மனத்தில்!

மாவிலை தோரணம் கட்டுகின்றோம். மஞ்சளும் இஞ்சியும் கொட்டுகின்றோம். செந்நெல் மணிகளைக் குவிக்கின்றோம். செந்தமிழ்ப் பாடல்கள் இசைக்கின்றோம். பறவையின் கீதம். அருவியின் ஓசை. அனைத்தையும் கேட்டு ரசிக்கின்றோம்.

அண்ணன் இருந்தால் இந்தப் பொங்கல் நாளில் இவை பற்றி எழுத்தாரம் கிடைத்திருக்கும் நமக்கும் நாட்டுக்கும். குயில் கூவும் சோலையில்! அது அண்ணனின் எழுத்தில் எல்லாம் கூவுமே! மயில் ஆடும் காவினில்! அது அண்ணனின் தமிழ்ச் சொல்லாய்த் தோகை விரிக்குமே! ஏழையின் சிரிப்புக்கோர் விளக்







கம் — ஏந்திழை பேச்சுக்கோர் விளக்கம் — ஏர் பிடித்தோர் உழைப்புக்கோர் விளக்கம்— பொங்கும் பாலுக்கோர் விளக்கம் — புன்னகை மழலைக்கோர் விளக்கம் — தம்பியின் நகைப்புக்கோர் விளக்கம் — தாயின் அசைவுக்கோர் விளக்கம் — இப்படி ஆயிரம் விளக்கமளித்து நம்மை விழாக் களிப்பில் மட்டும் ஆழ்த்தாமல்; சிந்தித்திட — செயல் புரியப் புறப்பட — எழுதிக் காட்டும் அண்ணன் இன்று இருந்திருந்தால் பொங்கியெழுந்து விடுதலை பெற்ற புதிய வங்கத்தின் போர்ப் பரணி பற்றி ஒரு காவியமே தந்திருப்பாரே, இந்தப் பொங்கல் விழாவில்!

உங்களுக்கும் உருதுதான் என உரத்த குரலில் முழக்கிய ஜின்னாவைப் பார்த்து எங்கள் மொழி வங்க மொழி என அதிர்வேட்டுப் போல் சொல் உதிர்த்து அக்கணமே கைது செய்யப்பட்ட ஒரு இளைஞன் — இன்று விடுதலை பெற்ற வங்கத்தின் ''தேசபந்து'' வாகப் போற்றப்படுகிறான்.

''என் மக்கள் அடிமைகளா? பாகிஸ்தானிய சர்வாதிகாரப் பேரரசின் கயிற்றில் ஆடுகின்ற பம்பரமா என் பூமி? இல்லை! இல்லை! இந்த மாநிலத்திற்கு உரிமை வேண்டும். அதிகாரங்கள் இன்னும் பல வேண்டும். இந்தக் குரலை அடக்கக் கொடியவர்களால் இயலாது! கொன்று குவிக்கலாம் சிலரை! குழிவெட்டி வைக்கலாம் கொள்கை வீரர்களுக்கு! ஆனால் நியாயம் ஒரு நாள் வென்றே தீரும்!''

எனச் சூளுரைத்துச் சுடர் முகம் தூக்கிய இளைஞர் படையினை நடத்திக் காட்டி இன்று பாரோர் போற்றப் ''பங்களா தேஷை'' உருவாக்கிக் காட்டிவிட்ட அந்த மாவீரனை, அவனி புகழ்கிறது.



அவன் கோரிக்கை புறக்கணிக்கப்பட்ட போது — அவனுடைய மக்கள் கொன்று குவிக்கப்பட்ட போது — அவனேயே சிறையில் போட்ட போது — அவன் கட்சி பெற்ற வெற்றி அலட்சியப் படுத்தப்பட்ட போது — ஓட்டு முறையை வேட்டு முறை அங்கீகரிக்க மறுத்த போது — அவனுக்காக வாதாடிப் போராடி அவன் பக்கம் வலிமை சேர்த்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியை — அவருக்குத் துணை நின்ற இந்தியத் தலைவர்களைப் புதிய வங்க நாடு வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

அதிகாரப் பரவலாம்! ஆறு அம்சத் திட்டமாம்! அதற்கோர் கட்சியாம்! கிளர்ச்சியாம்! இப்படி எழுந்த கிண்டலும் கேலியும் எங்கோ மறைந்து இன்று வங்கத்தில் சுதந்திர சூரியனே உதித்துவிட்டான்.

பலாச்சுளை கேட்டனர்! கேட்ட போது தர மறுத்தனர்! பலாப் பழத்தையே பறித்துக் கொண்டனர். இல்லை; இல்லை — பலா மரத்துக்கே அவர்கள் சொந்தக்காரர்களாகி விட்டனர்.

இந்த உணர்ச்சிமிகு வரலாறு அண்ணன் கையில் கிடைத்திருந்தால் இந்தப் பொங்கல் நாளில் எத்துணை எழுச்சிமிகு காவியமாக நமக்குப் படைக்கப்பட்டிருக்கும்!

உன் கவனமெல்லாம் இப்போது வங்கத்தையே வட்டமிடுகிறது—நானறிவேன். ஆதிக்கக் காரனின் ஆணவம் அடக்கப்பட்டு உரிமைக் கொடி பறக்கும் வங்கப் புது நாட்டை நோக்கி வாழ்த்து கீதம் பாடுகிறுய்!

ஒற்றுமையாக நின்ற இந்தியாவின் உறுதுணையால் உரிமை பெற்ற வங்க தேசத்தை உலகமெங்குமுள்ள உரிமை வேட்கையாளர்கள் வாழ்த்திடவே செய்வர்.

பொங்கல் நாளில் புதுப் புது எண்ணங்கள் மலரும் இதயச் சோலையில் பூத்திடும் கவின்மிகு பனி மலர்களை இந்த வெற்றிக்குப் பாடுபட்ட வீரர்களின் காலடியில் குவிப்போம்!

நமக்கோர் ‘உயில்’ எழுதி வைத்துவிட்டுச் சென்ற அண்ணன் உறங்கும் திக்கு நோக்கிக் கரங் குவிப்போம்!





நகலும்

அசலும்

இவர்கள்
ஓய்வுகாலத்தை
இப்படிக் கழிக்கலாம்

ஆளுநர் ஷாவுடன்

டிசம்பர் 15–ம் நாள்—

பாகிஸ்தான் இராணுவ அரசினலே நியமிக்கப்பட்ட கவர்னர் ஏ. எம். மாலியும், அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களும் இந்திய ராணுவத்தின் கிடுக்கித் தாக்குதலுக்கு அஞ்சி முடி துறந்து டாக்காவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் தஞ்சமடைந்தனர்.

இந்தியப் படையினர் முன்னேறிக் கொண்டிருந்தாலும், யாகியாவின் குரல் ஏதோ ஒரு கற்பனைத் துணிச்சலில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த நேரம்.

அதாவது வங்க தேசம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டதெனப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அறிவித்ததற்கு முதல் நாள்.

முன்னமேயே ஏற்பாடு செய்திருந்தபடி, நானும், 'மறவன் மடல்' தினகரனும் தமிழக ஆளுநர் கே. கே. ஷாவைச் சந்திக்கச் சென்றோம்.

நேரம்—சரியாக பகல் 12 மணி.

கரும்பச்சை உடுப்பும், கையில் சிவப்புப் பட்டையும் அணிந்திருந்த ஆளுநரின் மெய்க்காப்பாளரிடம் எங்களை நாங்கள் அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

இன்முகத்தோடு எங்களை மேலே மாடி அறைக்கு அழைத்துச் சென்றார், அவர்.

''முரசொலியிலிருந்து வருகிறீர்கள், இல்லையா? வாருங்கள் வணக்கம்'' குறிப்பறிந்து கேட்டுவிட்டு சிரித்த முகத்தோடு எங்களை வரவேற்று அமரச் செய்கிறார், தமிழக ஆளுநர் கே. கே. ஷா.

சாதாரண மேஜை—சாதாரண நாற்காலி. ஒரு ஓரத்தில் அவர்—மறு ஓரத்தில் நாங்கள்.

என் இதயம்

தமிழ்நாட்டில் இருக்கிறது அதைப்பிரிந்துவர என்னால் முடியாது.

50 நிமிடங்கள்

அறையை நோட்டம் விடுகிறோம்.

ஒரே ஒரு படம் மாட்டப்பட்டிருக்கிறது. அதிலே பேரறிஞர் அண்ணா முறுவலிக்கிறார்.

''என்ன பார்க்கிறீர்கள்?—அண்ணா அவர்களின் மேல் எனக்கு அளவு கடந்த பற்றும் பாசமும் உண்டு. பல சோதனைக் கட்டங்களில் அவரோடு நான் கலந்து பேசி முடிவெடுத்திருக்கிறேன். நாட்டுப் பற்றில் அவர் இணையற்றவர். மன எழுச்சியை மற்றவர்களுக்கு உண்டாக்குவதில் அவர் ஒரு சுத்த வீரன். டெல்லியில் பாதுகாப்புக் கண்காட்சியை என்னுடைய விருப்பத்திற்கிணங்க வந்து திறந்துவைத்து அவர் ஆற்றிய சொற்பொழிவை என்னால் மறக்க முடியாது.

''மதிப்பிற்குரிய அண்ணா ஒரு திறமை வாய்ந்த நிர்வாகி. மக்களின் அபிமானத்திற்கும் அன்பிற்குமுரிய பெருந்தலைவர். நட்பிற்கு அவரைக் காட்டிலும் ஒரு சிறந்த பரதிருபத்தைக் காண்பதரிது. இதையெல்லாம் நான் அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன்.''

ஆளுநரைப் பேட்டி காணச்சென்றிருந்த எங்களது கவனம் முழுவதையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டது கணீரென்ற அவரது குரல்.

''இந்தியா — பாகிஸ்தான் போர் நிலை, இந்த நேரத்தில் எல்லைப் பாதுகாப்பில் முனைந்து நிற்கும் வீரர்களுக்காக நாட்டு மக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தாங்கள் தங்கள் கருத்தினைத் தெரிவிக்கவேண்டும்!'' இது கேள்வி.

இது பதில்:

''இன்று நாம் ஈட்டியுள்ள வெற்றியில், களம் புகுந்துள்ள தமிழ்நாட்டு வீரர்களின் பங்கு பெருமைப்படக்கூடிய அளவு உள்ளது. நாட்டுப் பற்றினாலே உந்தப்பட்டு, வேறெந்த இழப்பையும் பொருட்படுத்தாமல் ஒன்றுபட்டு நின்று இந்த நாட்டைக்

தமிழ்நாடு அரசு வீட்டு வசதித் துறையில் காட்டும் எல்லா முயற்சிகளையும் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கோபன்...

காக்க நமது முப்படையும் செயல்பட்டது நமக்கெல்லாம் நிறைவை அளித்துள்ளது.

''பொது மக்களிடையே இந்த நெருக்கடி நேரத்தில் காணப்பட்ட ஒத்துழைப்பும் ஆதரவும் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. தமிழ் நாட்டுக்கேயுரிய இந்தப் புனிதமான பொங்கல் திருநாளில் தமிழ் நாட்டு மக்களுக்கு எல்லா வகையிலும் நல்ல எதிர் காலம் வாய்க்க வாழ்த்துவதோடு ஒரு வேண்டுகோளையும் நான் இணைக்கிறேன்.

''யுத்த நிதிக்குப் பெருமளவில் உதவ தமிழகத்து மக்களெல்லாம் முன்வர வேண்டும்.

''அதே போல் தொழிலாளர் வர்க்கமும் சட்ட ரீதியான தங்கள் கோரிக்கைகளையும், நியாயமான குறைகளையும் தற்போதைக்கு மறந்து உற்பத்தியை உயர்த்தி, நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடே ஏற்படாத வண்ணம்—விலைவாசிகள் உயரா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது அவரது கடமையுமாகும்.

இந்த யுத்தத்தில் தமிழ்நாடு இந்தியாவின் பலம் வாய்ந்த தசை நார் போல விளங்கி வழிகாட்ட வேண்டுமென விரும்புகிறேன்.



'முரசொலி' பொங்கல் மலர் மூலம் தமிழக மக்களுக்கு, ஆளுநர் ஷா தன் கைப்பட தமிழில் எழுதித்தந்த பொங்கல் வாழ்த்து

மழை ஓய்ந்தது போல் பதில் முடிகிறது. மேலே சுழன்ற மின் விசிறியிலே ஆளுநரின் பார்வை பதிகிறது.

''மாணவர் — மகளிர் சமுதாயம் பற்றிய தங்கள் எண்ணம்..?'' நீட்டி நிறுத்துகிறோம் வினவை.

''இந்தப் போர்ச் சூழ்நிலையில், மாணவர் — மகளிர் பேரணிகளின் எழுச்சி நாடு முழுவதுமே ஒரு புதிய உற்சாகத்திற்கு வித்திட்டுள்ளதாக நான் உணர்கிறேன். பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை முறியடிக்கக் கொண்ட எழுச்சியோடு இவ்விரு தரப்பினரும் நின்று விடாமல், நமது ஜனநாயகத்தின் எதிர்கால வளத்திற்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் காணிக்கையாகச் செலுத்த முன்வந்து விட்டனர் என்றே நான் கருதுகிறேன்.''

''தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகளின் பணியைப் பற்றி...?''

''நானே சொல்ல நினைத்தேன். கேள்வி முடியுமுன்பே பதிலை ஆரம்பித்துத் தொடர்கிறார். — ''தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகின் சிறப்பான ஆதரவு கிடைக்கப் பெற்றவன் நான். இதனால் அவைகளைப் பற்றி நான் அபிப்பிராயம் கூறத்தான் வேண்டும்.

''தமிழ்நாட்டு செய்தித் தாள்கள் பிரச்னைகளை அணுகும் முறை அர்த்தத்தோடும், நாட்டுப் பற்றின் அடிப்படையிலும், ஜனநாயக முறைக்கு ஏற்றதாகவும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்கள் நாட்டு மக்களின் பக்கம் நின்று அற்புதமாக சேவைசெய்து வருகிறார்கள். இந்த நாட்டுச் செய்தித் தாள்களின் குரல் இங்கத்திய மக்களின் குரலாகவே எதிரொலிக்கிறது. இன்றியமையாத விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில் தமிழகப் பத்திரிகைகள் சிறந்த சாதனைகளையே செய்துள்ளன.''

பதில் முடிந்தானதும், நாம் கேள்வியைத் தொடுக்கிறோம்.

''இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் சிறப்பு மிக்க தலைமையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?''

''திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் தலைமை இந்திய வரலாற்றிலேயே அருமையான சாதனைகள் உருவாக ஏற்ற காலமாகக் கருதப்படுமென்பது திண்ணம்'' பெருமிதத்தோடு இதைச் சொன்ன ஆளுநரின் வலது கை விரல்கள் மேஜையில் தட்டி ஒலியெழுப்புகின்றன.

மேலும் அவரே தொடர்கிறார்: ''அம்மையாரின் ராஜ தந்திரம், பிரச்னைகளின் பல கூறுகளையும் நுணுகி ஆராயும் திறமை, முக்கிய அம்சங்களைக் கிரகித்துக் கொண்டு முடிவெடுக்கும் திறன், நாட்டுப் பற்று, காலமறிந்து செயல்படும் ஆற்றல், மனோதிடம் ஆகிய சிறப்பியல்புகளுக்கு அவர் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.

''மதச் சார்பற்ற கொள்கை, ஜனநாயகக் கோட்பாடுகள், சமதர்ம லட்சியம் ஆகியவற்றைப் பேணிக் காக்க இந்திரா காந்தியைக் காட்டிலும் வல்லமை படைத்த வீராங்கனையை இது வரை இந்த உலகம் கண்டதில்லை. உண்மையிலேயே அவரைப் பிரதமராகக் கொண்டு இயங்கும் இந்தக் காலம் நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமின்றி, உலக அமைதிக்கும் ஒரு உத்தரவாதமான காலமாகும்.

''தங்களுடைய ஆயுத பலத்தால், வல்லரசுகள் மற்ற நாடுகளை அடிமைப்படுத்திவிட முடியாது என்பதை அவரது தலைமை உலகுக்கு உணர்த்தி விட்டது.

''விவேகத்தின் பொறுமையைப் பலவீனத்தின் அறிகுறி எனக் கருதக்கூடாது என்று இந்திரா நிரூபித்திருக்கிறார். அவர் தலைமை ஏற்றிருப்பதானது இந்த நாட்டிற்குக் கிடைத்த பெரும் பேறேயாகும்.''

உணர்ச்சிமயமாக இதைச் சொன்னார் ஆளுநர் ஷா.

இந்தியா, வங்க தேச மக்களைப் பாகிஸ்தானின் இராணுவப் பிடியிலிருந்து மீட்டது பற்றியும், வங்கம் சுதந்திர நாடாக அங்கீகாரம் பெற்றது பற்றியும் கேட்டோம்.

அவர் சொன்னார்: ''ஐக்கிய நாடுகளிடையே, இந்தப் பிரச்னையில் அமெரிக்கா போன்ற வல்ல



ரசுகள் அநியாயமாகத் துணை நின்றபோதும் கிழக்கு வங்க விடுதலை சக்திகளின் வெற்றிக்கு உறு துணையாக நின்று, தனிச் சுதந்திர நாடாக அதை அங்கீகரித்த தானது தூய்மையான ஜனநாயக மரபுகளைக் காப்பதில் நமக்குள்ள பிடிப்பை உலகுக்கே உணர்த்தக் கூடியதாகும். இந்திய வரலாற்றிலேயே இது ஒரு பொன்னேடாகும்.''

எங்கள் பேச்சு தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்துத் திரும்பியது. தமிழகத்தின்தொழில் நிலை — வேளாண்மை குறித்து ஆளுநர் ஷா அவர்கள் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் நீர் மின்சக்தி போன்ற இயற்கை ஆதாரங்கள் சற்றுக் குறைவாக இருந்தாலும், தொழில்துறை வியத்தகு வளர்ச்சி பெற்றிருக்கிறது. உணவு உற்பத்தியிலே பசுமைப் புரட்சிபோல் நாம் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் நல்ல பலன்களை அளித்திருக்கிறது. தற்போதைய மின்சக்தி பஞ்சத்தை சரிக்கட்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. அணு சக்தி நிலையம் ஒன்றும் இங்கே கிடைக்குமானால் நிச்சயம் வேகமாக நிலைமை சீரடையக்கூடும் என்பது திண்ணம்.

''மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கே தொழிலமைதி சிறந்தே விளங்குகிறது. தொழிலாளர் உறவில் நிலவும் சுமுகமான சூழ்நிலைதான் தொழில் அபிவிருத்திக்குப் பெரிதும் வழி செய்வதாகும். தொழிலாளிகளிடம், தொழிலின் லாபத்தில் தமக்குரிய பங்கு குறித்து அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டால் — நிர்வாகத்தில் அவர்களுக்குரிய பங்கு கிடைக்கச் செய்துவிட்டால் நிச்சயமாக உற்பத்தி கணிசமான அளவு பெருகும் என்பதில் சந்தேகமில்லை.''

சில நிமிடங்கள் அமைதி. ஆளுநர் அவர்கள் முன்னாள் வீட்டு வசதி அமைச்சராக மத்திய அமைச்சரவையில் பணியாற்றியது நினைவுக்கு வந்தது.

''தமிழக அரசு வீட்டு வசதித் துறை குறித்து தங்கள் அபிப்பிராயம் என்ன?'' நாங்கள் கேட்டோம்; உடனேயே பதில் பிறந்தது—

''வீட்டு வசதிப் பிரச்னையைத் தீர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது; அதுதான் ஒரு சுழல் நிதியை ஏற்படுத்துவது. வீட்டு வசதியினை விரிவு படுத்திடத் தேவைப்படும் நிதியை நாம் முதலில் அடைந்தாக வேண்டுமல்லவா? நான் இந்தப் பிரச்சினையை மூன்று கோணங்களில் அணுகுவேன்.

1. ''குடிசைகளை மாற்றி பயனுள்ள நிலங்களிலும் பல அடுக்கு மாடி வீடுகள் அமைத்து குடிசைவாழ் மக்களை அங்கே குடியேறச் செய்து உப்பரி நிலங்களைப் பயன்படுத்தி பெரு நிதி தேடலாம்.

2. ''இந்த நில விருத்திப் பயனின் விளைவாகக் கிடைக்கும் மூலாதாரத்தைக் கொண்டே வீட்டு வசதியைப் பெருக்கலாம்.

3. ''சிக்கனச் செலவிலேயே நவீன மோஸ்தர் வீடுகள் கட்டி குடியிருப்போருக்குத் தவணைமுறையில் தந்து அதைச் சொந்தமாகும் படி செய்யலாம்.

''இந்தப் பணியில் தீவிரம் காட்டுவதால் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு காண முடியும். தமிழ்நாடு அரசு வீட்டு வசதித்துறையில் காட்டும் எல்லா முயற்சிகளையும் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.''

சிறிதாகத் திறந்திருந்த கண்ணடி ஜன்னல் வழியே வீசிய 'சில்'லென்ற காற்றில், எங்கள் மேஜைமேலிருந்த காகிதமொன்று கீழே பறந்து விழுகிறது. நாங்கள் எழுவதற்குள் தானே எழுந்து போய் அதை எடுத்து மேஜை மேல் வைத்துவிட்டு மீண்டும் அமர்கிறார், ஷா.

நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

பின்னர் எங்கள் பேச்சு தமிழகத்தின் மாநில நிர்வாகம் பற்றி

அவர் கொண்டுள்ள கருத்தினை அறியத் திரும்பியது.

அவர் சொன்னது இது:

''பொதுவாகவே தமிழ்நாட்டில் மாநில நிர்வாகம் மிகுந்த பொறுப்புணர்ச்சியை உணர்த்துவதாக இருக்கிறது. காவல் துறையும், நிர்வாகச் செயல் முறையும் சிறப்பாகவே உள்ளது.

''மனு நீதித் திட்டம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் திட்டமாகும். தலத்திலேயே மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அது அங்கேயே தீர்த்து வைக்கப்படுவதை நான் கண்டு வியந்தேன். அதன் அருமையை உணர்ந்த நான் தமிழக மக்கள் அந்தத் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஆளுநர் முடித்தார்—நாங்கள் தொடர்ந்தோம்:

'' 'டில்லி நகர மக்கள் குழு' சென்ற மாதம் அளித்த வரவேற்பில் உங்கள பேச்சு அருமையாக இருந்தது. ஆறு மாத காலத்திலேயே அகன்று வர முடியாத அளவுக்குத் தமிழ்நாடு என்னைக் கவர்ந்துவிட்டது'' என்று அங்கே தாங்கள் பேசியிருந்தீர்கள். இந்த நாட்டு மக்களிடம் தங்களுக்கு அப்படிச் சொல்லிக் கொள்கிற அளவுக்குப் பற்றும் பாசமும் ஏற்படக் காரணம் என்ன?''

''ரொம்பவும் நல்ல கேள்வி. அந்தக் கூட்டத்தில் பேசிய ஒருவர் நான் திரும்பவும் டில்லிக்கு வந்து விடவேண்டுமென்று கூறினார். அதற்குத்தான் நான் சொன்னேன் என் இதயம் தமிழ்நாட்டில் இருக்கிறது; அதைப் பிரிந்து வர என்னால் முடியாது என்று.

''என்னுடைய அந்த விடையானது, தமிழ்நாட்டு மக்களெல்லாம் என்பால் காட்டும் அன்பு ஆசை—பாசம் ஆகியவற்றின் கூட்டுத் தொகைதான். இந்த நாட்டு மக்களின் ஒழுங்கு முறை, மற்றவரை மதித்து நடக்கும் குணம், தன்மானத்தில் உள்ள அசைக்க முடியாத பற்று, உழைப்பே உயர்வு தருமென்ற நெறிப்படி அயராது உழைத்தல் ஆகியவையெல்லாம் தான் என்னை அப்படிச் சொல்ல வைத்தது.''

அண்ணாவின் பொன்மொழி

இந்த நாட்டில் தான் சமயக் கொள்கைகள் அதிகம் ஆயினும் இந்த நாட்டில்தான் ஒழுக்கச் சிதைவு நிறைந்திருக்கிறது.

பட்டுக் கத்தரித்தாற்போல் வார்த்தைகள் வந்து விழுந்தன. ஆங்கிலத்திலேயே முழுவதுமாகப் பேசிவிடாமல் சிரமப்பட்டாவது நடுநடுவே அவர் தமிழில் பேசியது எங்களுக்கு வியப்பைத் தந்ததோடு தமிழ் கற்பதில் அவருக்கு உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியது.

''தங்களின் தமிழ் பயிற்சி எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது'' என்று ஒரு வினாவைத் தொடுத்தோம்.

மெல்ல இதழ்விரித்துச் சிரித்தபடி சொன்னார். ''எழுதவும் பேசவும் ஆர்வத்துடன் பயின்று வருகிறேன். தமிழில் பேசுவதைப் புரிந்து கொள்ளுவதுதான் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. முதல்வர் கருணாநிதி மேடையில் அருவியெனக் கொட்டும் சொல்லோவியம் கண்டு வியக்கிறேன். கலைஞரின் தேனினுமினிய சொல்லாரத்தை என்னால் புரிந்து சுவைக்க முடியவில்லை—என் பயிற்சி இன்னும் அந்த அளவுக்கு வளரவில்லை.

ஆனால் குறுகிய காலத்தில் நான் தமிழ்ப் பயிற்சியில் வளர்ச்சி பெற்றிருக்கிறேன்'' என்றார்.

ஆளுநரின் தமிழ் உணர்ச்சியைத் தமிழக மக்களுக்கும் ஆதாரமாகக் காட்ட விரும்பிய நாங்கள் ''தமிழக மக்களுக்குத் தங்கள் கைப்பட தமிழில் பொங்கல் வாழ்த்து எழுதித் தர இயலுமா?'' என்றோம்.

''ஓ....என்ன எழுத வேண்டும்'' என்றார்.

''தமிழக மக்களுக்கு என் அன்பான பொங்கல் வாழ்த்துகள்'' என்று நாங்கள் ஒரு தாளில் எழுதிக் காட்டி இவ்வாறு எழுதுங்கள் என்றோம்.

தன்னுடைய தமிழ்ப் பயிற்சி வளர்ச்சியை தனித்தன்மையுடன் காட்ட விரும்பிய ஆளுநர் நாங்கள் எழுதியதைப் பார்க்க ஒப்பாதவராய், ''வேண்டாம் வேண்டாம் வாசகத்தைச் சொல்லுங்கள்; நான் எழுதி விடுகிறேன்'' என்றார்.

''தமிழக மககளுக்கு என் அன்பான பொங்கல் வாழ்த்துக்கள்'' இப்படி எழுதுங்கள் என்று நாங்கள் தமிழிலேயே கூறினோம்.

பேனாவை எடுத்து நிதானமாக எழுதத் தொடங்கினார். நாங்கள் விழிகளை அகல விரித்து வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தோம்.

ஆளுநர் அதை மிகப் பெருமிதத்தோடு எங்களிடத்திலே காட்டி 'சரிதானா' என்பதை ஒருபுன்னகை மூலமாகவே கேட்டார்.

'வாழ்த்து' என்கிற வார்த்தையின் முதல் எழுத்தில் அவர் 'வ'வுக்குப் பதிலாக 'ல'போட்டிருந்தார். நாங்கள் அதைச் சுட்டிக் காட்டித் திருத்தம் சொன்னபோது—அதைப் புரிந்து கொண்டு அவர் சொன்ன விளக்கம்—தமிழ்ப் பயிற்சியில் நூற்றுக்கு நூறு தேறி வருகிறார் என்பதை மெய்ப்பித்தது.

''ஓ...'ல' போட்டால் லாழ்த்து என்று ஆகிவிடும் அல்லவா?''—எனக் கூறி அதை அவர் கைப்படவே திருத்தி எங்களிடம் தந்தார். அவர் தந்த வாழ்த்தைத் தான் இக்கட்டுரையின் ஒரு பகுதியில் நீங்கள் காணுகிறீர்கள்.

நாங்கள் இறுதியாக—''தங்களின் ஒரு நாள் பணியைத் தெரிவிக்க முடியுமா?'' என்றோம்.

அவர் கடகடவென மணிப்படி அவர் பணியினைத் தெரிவித்தார். அதைக் குறித்துக் கொண்டு நாங்கள் விடைபெற்றபோது எழுந்து ''நன்றி—வணக்கம்'' எனத் தமிழில் கூறி இன்முகத்தோடு எங்களை வழியனுப்பிவைத்தார்.

ஆளுநர் அவர்களின் ஒரு நாள் பணி இது.

அதிகாலை 5—15 க்குத் துயிலெழுதல். 6—15 வரை படித்தல். 7—15 வரை ஆசனப் பயிற்சி, 8—10 க்குள் மற்ற கடன்கள் சிற்றுண்டி.

10—00 மணி வரை தமிழ் கற்றல்.

1—00 மணி வரை பேட்டி, கூட்டம், ஆலோசனை, விசாரணை, இறுதியாக மதிய உணவு.

3—00 முதல் 4—00 மணி வரை தமிழ் படித்தல். 4—00 முதல் 7—00 வரை பேட்டி, கூட்டம், மற்ற பொது நிகழ்ச்சிகள். இடையில் 30 நிமிடங்கள் நடைப் பயிற்சி.

7—30 முதல் 8—00 மணி வரை சொற்பொழிவைப் படித்தல். திருத்தல். 9—00 'க்கு இரவு உணவு.

10—00'க்குப் புத்தகங்களில் கவனம் செலுத்தல். 11—15'க்கு தமிழ்ப் பாடங்களைப் படித்தல்.

---இரா. நரசிம்மன்

1943-ஆம் ஆண்டு நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஐந்தாவது ஆனர்ஸ் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த நேரம். அப்பொழுது திருவாரூரிலிருந்து 'முரசொலி மன்ற' ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள வருகை தர வேண்டும் என்று அதன் செயலாளர் 'மு. கருணாநிதி' என்று கையெழுத்திட்டு ஒரு அழைப்பு மடல் வந்து சேர்ந்தது. வெளியூரிலிருந்து என்னைச் சொற்பொழிவாற்றுமாறு முதன் முதல் அழைத்த அழைப்பு அதுதான்.

அழைப்பினைக் கண்ட எனக்கு அளவிலா மகிழ்ச்சி, குறிப்பிட்ட நாளில் வந்து விழாவில் கலந்து கொள்கிறேன் என்று உடன் மறுமடல் வரைந்தேன். போக்குவரத்துப் பயணச் செலவுக்கு என்று ரூபாய் இரண்டு பணவிடைத்தாள் மூலம் வந்து சேர்ந்தது.

பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என்னுடன் பயின்று வந்தார். அவருக்கும் அழைப்பு வந்திருந்ததால் இருவரும் சேர்ந்து விழாவிற்கு முதல்நாளே திருவாரூருக்குப் புறப்பட்டோம், மாலை 7 மணி அளவில் திருவாரூர் சந்திப்புக்குப் போய்ச் சேர்ந்தோம். 'முரசொலி மன்றச்' செயலாளர் தோழர் மு. கருணாநிதி புகைவண்டி நிலையத்திற்கு வந்திருப்பார் என்று எதிர்பார்த்தோம். புகைவண்டியைவிட்டு இறங்கி நிலையத்தில் சிறிது நேரம் தங்கியிருந்து பார்த்தோம். யாரும் எங்களைத் தேடுவதாக இல்லை. பிறகு நகருக்குள் போய்க் கேட்டறிவோம் என்ற எண்ணத்தோடு விசயபுரம் கடைத்தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தோம். எதிரில் யாரேனும் நம்மை எதிர்பார்த்து வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டே சென்றோம்.

அப்பொழுது நான் தாடி வளர்த்துக் கொண்டிருந்தேன். கடைத்தெருவில் போய்க் கொண்டிருந்தபோது இரண்டு இளைஞர்கள் எதிரே வந்து கொண்டிருந்தனர். அவர்களாக இருக்குமோ என்று நானும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் பேசிக் கொண்டே எதிர்நோக்கிச் சென்றோம். அவர்களும் எங்களைப் பார்த்துக் கொண்டே வந்தனர். நாங்களும் அவர்களைப் பார்த்துக் கொண்டே சென்றோம். எங்களை அவர்கள் தாண்டிவிட்டனர்; நாங்களும் அவர்களைத் தாண்டிச் சென்றோம். தாண்டியவுடன் திரும்பிப் பார்த்தோம்; அவர்களும் திரும்பிப் பார்த்தனர். நாங்களும் நின்றோம்; அவர்களும் நின்றனர்.

அருமைக் கலைஞர் அண்ணாவின் நிழல்!*

அமைச்சர் நாவலர்

நாங்களும் அவர்களை நோக்கி நடக்கத் தொடங்கினோம்; அவர்களும் எங்களை நோக்கி நடக்கத் தொடங்கினர். என்னைப் பார்த்து, ''நீங்கள்தான் நெடுஞ்செழியனா?'' என்று ஒருவர் கேட்டார். நான், ''ஆமாம்!'' என்று சொல்லிவிட்டு ''நீங்கள்தான் மு. கருணாநிதியா?'' என்று கேட்டேன். அவர் ''ஆமாம்!'' என்றார். உடன் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அவருக்கு அறிமுகமானார். அது தான் கலைஞர் அவர்களை நான் முதன் முதலில் கண்ட நிகழ்ச்சியாகும். கலைஞர் அவர்களுடன் வந்த இளைஞர் நண்பர் தென்னன் அவர்கள் ஆவார்.

ஃ ஃ ஃ

நான் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறிய பிறகு கலைஞர் அவர்களைத் திருவாரூரில் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அப்பொழுது அவர் பள்ளியிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். ஒருமுறை உயர்நிலைப்பள்ளிக்கு எதிரில் அவர் நின்றுகொண்டிருந்தார். ஒற்றைமாட்டு வண்டியில் சென்று கொண்டிருந்த நான் இறங்கி அவர் அருகே சென்றேன். வகுப்பிற்குச் செல்வதற்கு முன்னால் 'முரசொலி' துண்டு வெளியீடுகளை (அவரே ஆசிரியராக இருந்து, அவரே எழுதி, அவரே அச்சடித்தவை) மாணவர்களிடம் வழங்கிக் கொண்டிருந்தார். திராவிட இயக்கத்தினிடத்தில் அவர் கொண்டிருந்த துடி துடிப்புணர்ச்சியை அவரது செய்கை அப்பொழுதே வெளிப்படுத்திற்று.

ஃ ஃ ஃ

1944 என்று கருதுகிறேன். கலைஞர் அவர்களின் திருமணத்தில் கலந்து கொள்ள நானும், இளவல் செழியனும் திருவாரூரிலிருந்து நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள வடகண்டத்திலிருந்து நடந்தே சென்றோம். அவரது திருமணம் திருவாரூரில் நடைபெற்றது. நாங்கள் செல்லுவதற்குள் திருமணம் முடிந்துவிட்டது. நான் வாழ்த்துக்கூறும் வாய்ப்பினை இழந்துவிட்டதால், அந்த வாய்ப்பினை எனக்கு அளிப்பதற்காக மாலை 4 மணி அளவில் மீண்டும் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். மணமக்கள் வந்து அமர்ந்திருந்தனர். நான் பூரிப்போடும் பெருமையோடும் மணமக்களை வாழ்த்தி சிறிய உரையாற்றினேன். இது அவர் என்னிடத்தில் கொண்டிருந்த தனி அன்பையும், மதிப்பையும் காட்டுவதாக அமைந்தது.

ஃ ஃ ஃ

1946-ஆம் ஆண்டு நானும் கலைஞர் அவர்களும் திருவாரூருக்கு அருகில் உள்ள கிளரியம் என்ற ஊருக்குச் சொற்பொழிவாற்றச் சென்றோம். நாங்கள் கலந்து கொள்ள இருந்த கூட்டத்தை நடத்தவொட்டாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவ்வூரைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்கள் அரிவாள், ஈட்டி, வேல் கம்பு, தடி ஆகியவற்றுடன் எங்களைச் சூழ்ந்து கொண்டனர். எப்படியும் கூட்டத்தை நடத்திவிட்டுத்தான் செல்வதென்ற உறுதியுடன் நானும் கலைஞரும் அங்கேயே உட்கார்ந்துவிட்டோம். எதிரிகளின் சூழ்ச்சித் திட்டத்தை முன்கூட்டி அறிந்து வைத்திருந்த தோழர் மன்னை நாராயணசாமி அவர்கள் கழக வீரர்கள் சூழ்ந்த படையொன்றினைத் திரட்டிக் கொண்டுவந்து எங்களுக்குப் பாதுகாப்பாக நின்று கொண்டார். எதிரிகள் தாக்கும் எண்ணத்தோடு எங்கள் எதிர்ப் புறத்தில் நின்று கொண்டிருந்தார்களே யல்லாமல் தாக்குதலை நடத்த முடியவில்லை. அப்படிப்பட்ட நெருக்கடியான தொல்லைகள் சூழ்ந்த நிலையிலும் கலைஞர் அவர்கள் தம் கடமையை ஆற்றத் தவறவில்லை. கூட்டத்தை முடித்துக்கொண்டுதான் நாங்கள் அவ்விடத்தை விட்டு அகன்றோம்.

ஃ ஃ ஃ

1946-ஆம் ஆண்டில் நான் கோவையில் ஜி.டி. நாயுடு அவர்களின் விடுதிக் காப்பாளனாகப் பணியாற்றிய நேரத்தில், கலைஞர் அவர்கள் திரைப்படக் கதைக்கான உரைநடை எழுதக் கோவையில் வந்து தங்கியிருந்தார். ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் இருந்து வந்தார். அப்பொழுது நாங்கள் இருவரும் அடிக்கடி கண்டு கொள்வதுண்டு. கழகத் தோழர்கள் எங்களைக் கூட்டத்திற்கு கூப்பிடுவதுண்டு. ஆனால் போக்குவரத்து வழிச் செலவுக்குப் பணம் தரமாட்டார்கள். கழகம் அவ்வளவு ஏழ்மையுற்றிருந்தது. நானும் கலைஞர் அவர்களும் ஆறு ஏழு மைல்கள் நடந்தே சென்று கூட்டத்தில் பேசிவிட்டு நடந்தே திரும்பி வருவோம். திரும்பி வந்து நான் இருந்த விடுதியில் இரவு உணவை உட்கொள்ளுவோம். இடையூறுகளைப் பற்றிக் கவலைப் படாமல் பணியாற்றும் பண்பு அவரிடத்தில் நிரம்பக் காணப்பட்டது.

ஃ ஃ ஃ

கலைஞர் அவர்களுக்கு மாணவப் பருவத்திலிருந்தே இயக்கக் கொள்கைகளிடத்து நீங்காப் பற்றும் தணியா ஆர்வமும் உண்டு. எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும் கொள்கை வெறியோடு தான் செய்து முடிப்பார்.

இளமைப் பருவத்திலிருந்தே எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் வியக்கத்தக்க வகையில் அவரிடம் காணப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்வன்மையும், எழுத்து வன்மையும் கலைஞரைப் பெரிதும் ஆட்கொண்டன. பேரறிஞர் அண்ணா அவர்களை நிழல்போல் தொடர்வதில் பெரிதும் வெற்றி பெற்றார்.

தொடக்கக் காலத்திலிருந்தே சொல்லோவியம் தீட்டுவதிலும், கவிதை புனைவதிலும் எல்லோரையும் கவர்ந்தவராவார்.

சிறு கதை—பெருங்கதை—கவிதை — கட்டுரை —நாடகம்—திரைக்கதை—திரைக்கதையின் உரை நடை ஆகியவற்றை அழகாகவும், அருமையாகவும், எளிமையாகவும், எடுப்பாகவும் எழுதுவதில் வல்லவர்.

உவமைகளின் மூலம் கருத்துக்களை விளக்குதல், செய்யுட்களுக்கான எதுகை மோனை போன்ற அணிகளை உரைநடையில் கையாளுதல், சொற்களில் நகைச்சுவை நயம் காணுதல், சிலேடைச் சொற்களைப் பயன்படுத்துதல் போன்ற சிறந்த திறமைகள் அவருக்கு உண்டு.

ஒரு இயக்கத்தின் தொண்டனுக்கு இருக்க வேண்டிய திறமைகளும், தலைவனுக்கு இருக்க வேண்டிய திறமைகளும் அவரிடம் நிரம்ப உண்டு.

தம் கருத்துக்கு ஏற்ப சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு கருத்துக்கு வெற்றி தேடிக் கொள்வதில் கலைஞர் மிகவும் வல்லமை படைத்தவராவார்.

எல்லோரையும் தழுவிக் கொண்டு செல்ல வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த வழியில் நடைபோட்டுச் செல்ல பெரிதும் விரும்புபவராவார்.

அறிஞர் அண்ணா அவர்கள் கட்டிக் காத்த கழகத்தையும், அமைத்துத் தந்த அரசையும் மேலும் மேலும் புகழோடும் பெயரோடும் வளர்த்துக்கொண்டு போக வேண்டும் என்பதில் எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார். ★

அன்றே அவர் அமைச்சர்

பேராசிரியர்

அமைச்சர் அன்பழகன்

1942 ஜனவரியில் திருவாரூரில் உள்ள விஜய புரத்திற்கு ஒரு விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அங்குதான் கலைஞரைப் பார்த்தேன். அப்போது அவர் இளைஞர்.

அதற்குப்பின் 43—ல் குடந்தையில் நடைபெற்ற மாணவர் திராவிடர் கழக மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போது—திருவாரூரில் நடை பெறும் தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவில் நான் கலந்துகொள்ள வேண்டுமென்று நண்பர்கள் கருணானந்தமும், தவமணி ராஜனும் அழைத் தார்கள் சென்றேன். விழா மேடையில் கலைஞர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த் தேன்.

44—ல் திருவாரூரில் கலைஞர் எழுதிய சாந்தா அல்லது பழனியப்பன் என்னும் நாடகத்திற்குத் தலைமை தாங்க என்னை அழைத்திருந்தார்கள். அதற்கு நானும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் சென்றிருந் தோம். அந்த நாடகத்தில் கலைஞரே கதாநாயகனாக நடித்தார். நாடகத்தின் கருத்துக்களை நானும் பாரதி தாசனும் பாராட்டிப் பேசினோம்.

அப்போது கலைஞர் தமிழ் மாணவர் மன்றச் செயலாளராக இருந்தார். என்னுடைய டைரியில் அவரின் முகவரியைக் குறித்துத் தந்தபோது— **'மு. கருணாநிதி - அமைச்சர்-மாணவர் தமிழ் மன்றம். திருவாரூர்''** - என்று எழுதினர். (செயலாளருக்கு அமைசர் எனப் பொருளுண்டு) 67—ல் தான் அமைச் சராகப் போவதை அவர் 44—லேயே எழுதி உறுதிப் படுத்தி விட்டார்.

ஃ ஃ ஃ

கழகம் மும்முனைப் போராட்டம் நடத்த அறி விப்புச் செய்தபோது போராட்டத்தின் நோக்கத் தையும், தன்மையையும் விளக்க நாடு முழுதும் கூட்டங்கள் நடைபெற்றன. கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டத்திற்கு இவர் தலைமை ஏற்றிருந் தார். அதன் தொடர்பாக சிதம்பரத்தில் நடைபெற்ற மாநாட்டில் வடக்கு ஆதிக்கத்தை எதிர்த்து கலைஞர் தீவிரமாகப் பேசினர்.

''கல்லக்குடிக்குப் போகிறேன். வெற்றியோடு திரும்புவேன்—இல்லையேல் அண்ணன் கண்ணீர்விடும் படியான களச்சாவைப் பெறுவேன்'' என்று கூறினர்.

மாநாட்டின் முடிவில் அண்ணா பேசுகின்ற போது—''தம்பி கருணாநிதியின் உணர்ச்சிமிக்க பேச்சைக் கேட்டேன். கண்களில் நீர் வரும் அளவுக் குப் பேசினர். என் தம்பியை நான் அப்படி விட்டு விடமாட்டேன்,'' என்றார்கள்.

கலைஞர் கல்லக்குடிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வெளியேவந்தபோது, சென்னையில் அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக் கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் அவரைப் பாராட்டிப் பேசிய நான் ''முகிலைக் கிழித்து வெளிவரும் முழு மதியைப் போல் கலைஞர் கல்லக்குடிப் போராட்டத்தில் ஈடு பட்டு சிறைசென்று வெளி வந்துள்ளார்'' என்று கூறி னேன். இன்றைக்கும் கலைஞர் நான் அன்றைக்குப் பாராட்டிக் கூறிய வாசகங்களைப் பெருமைப்படக் கூறு வார்.

★

போகி
மக்கள்

1940 முதல் 72 வரை...

அமைச்சர் என்.வி.நடராசன்

1940ம் ஆண்டு திருவாரூரில் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது கலைஞர் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். அதற்குப் பின்னரும் இடையில் பலமுறை சந்தித்தோம். ஆனால் நெருக்கமான தொடர்பில்லை.

1944ல் புதுவை மாநாட்டில் நன்கு அறிமுகமானோம்.

கலைஞர் எப்பொழுதுமே தன் மனத்தில் பட்டதைத் துணிவுடன் சொல்லக் கூடியவர்.

1946ல் மாவூரில் பெரியாரின் நெருங்கிய நண்பரான சர்மா என்ற காங்கிரஸ்காரர் இல்லத்தில் தந்தை பெரியார் திராவிடசழக பயிற்சி வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். திராவிட கழகப் பயிற்சி வகுப்பு ஒரு காங்கிரஸ்காரர் வீட்டில் நடப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அதே நாளில் கலைஞர் அவர்கள் குடந்தையில் மாணவர் மாநாடு நடத்தத் திட்டமிட்டார். ஐயா யார் யாரை வேண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்துவிட்டுச் செயல்படுகிறாரோ அவர்களை யெல்லாம் குடந்தை மாநாட்டில் பேசவைக்கிறார் கலைஞர்.

ஐயா என்னை அழைத்து கலைஞர்செய்கிற காரியம் தவறு என்று அறிக்கை எழுதச் சொன்னார்—நான் ''வேண்டாம்; அவர்கள் வளர வேண்டியவர்கள். அவர்களை ஐயா எதிர்த்து எதையும் செய்வது நல்லதல்ல'' எனக் கூறினேன். ''நீ எழுதவில்லை என்றால் என்னிடம் கொடு. நான் எழுதுகிறேன்'' என்றுகூறி விட்டு அறிக்கை எழுதி 'விடுதலை'க்கு அனுப்பினார்.

''நான் கலைஞரைச் சந்தித்து ஐயா கோபமாக இருக்கிறார்கள்—அவரிடம் மன்னிப்புக் கேளுங்கள்'' என்றேன்.

''ஐயாவிடம் மன்னிப்புக் கேட்பதிலோ அல்லது அவருக்குத் தலை வணங்குவதிலோ நான்தயக்கம் காட்டமாட்டேன். ஆனால் நான் மேற்கொண்டுள்ள கடமை சரிஎன்று என்மனம் உணர்த்தும் போது அதற்கு மாறாக மன்னிப்புக் கேட்பது என்பது நான் மேற்கொண்டுள்ள கடமைக்கு ஊறு செய்வதாகும். உங்கள் நல்லெண்ணத்திற்கு நான் என்றும் நன்றிகாட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் உங்கள் யோசனைப்படி மன்னிப்புக் கேட்க இயலாமைக்கு வருந்துகிறேன்'' என்றார் கலைஞர்.

இதில் கலைஞருடன் விரிவான விவாதம் செய்தேன்—அதில் என்னால் வெற்றி பெறமுடியவில்லை.

ஐயா திருமணம் செய்து கொண்டது தலைவர்களிடம் கருத்து வேறுபாட்டை உண்டாக்கியது என்றாலும் அண்ணா அமைதியாக இருந்தார். கழகத்தில் தீவிர வாதிகள் எனப் பெயர் பெற்ற பாரதிதாசன் போன்றவர்கள்—''உடனே விடுதலை அலுவலகத்திற்கு சீல் வைக்க வேண்டும்'' என்றார். 'விடுதலை'யிலிருந்த கார் கழகத்திற்குச் சொந்தமானதால்—ஐயா காரில் போய்க் கொண்டிருக்கும்போதே பாதி வழியில் காரை நிறுத்தி ஐயாவை இறங்கச் செய்து காரை எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும்'' என்றார்.

அண்ணா அமைதியாகவே பதில் சொன்னார். ''தமிழ்நாட்டுக்கு ஐயா செய்துள்ள சேவைக்கு இன்னும் நாம் அவருக்கு எவ்வளவோ தரவேண்டும். நடந்துபோன செய்தியை நாம் மறந்துவிடுவதுதான் நல்லது என்றார்—இக்கருத்தை பாரதிதாசன் ஒப்புக் கொள்ளவில்லை—ஆனால் கலைஞர் அவர்கள் அண்ணாவின் கருத்தை நிறைவாக ஏற்றுக்கொண்டார்.

கலைஞர் எதிலும் முடிவெடுப்பதில் அப்போதே தெளிவாக இருந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்று.

கலைஞர் பொருளாளராக இருந்தபோது 10 லட்சம் தேர்தல் நிதி திரட்டப்போவதாக அறிவித்து விட்டார். இது அண்ணாவுக்குப் பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. ''10 லட்சம் எவ்வாறு திரட்ட முடியும்? இவர் துணிச்சலாக அறிவித்துவிட்டார்—இயலாவிட்டால் பெரும் சோதனையாகிவிடுமே'' என்று அண்ணா பலமுறை என்னிடம் வருந்திக் கூறினார்—''மூன்று லட்சத்திற்கு மேல் நம்மால் சேர்க்க இயலாது'' என்றும் உறுதியாகச் சொன்னார்.

எதிர்ப்புகளையும் மீறி கலைஞர் அவர்கள்—பத்து லட்சமல்ல—பதினொரு லட்சம் சேர்த்து அண்ணா—கலைஞருக்கு 'பதினோரு லட்சம்' என்றே பட்டம் சூட்டும் அளவுக்கு அண்ணாவின் பெருமிதத்திற்குரிய பாராட்டினைப் பெற்றார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கலைஞர் அண்ணா அவர்களின் இதயத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டார். பணம் சேர்த்துத் தந்ததனால் மட்டுமல்ல— ''எதிர்ப்புக்கிடையே இவ்வளவு தொகை சேர்த்தாரே'' என்பதுதான் அண்ணாவிற்கு ஏற்பட்ட மகிழ்ச்சி.

அண்ணா ஒருமுறை என்னிடம் மனம் விட்டுக் கூறினார்—''நிதி திரட்டுவதில் நான் என்னைவைத்தே கருணாநிதியைக் கணக்கிட்டுவிட்டேன்—எனக்கு அந்தத் திறமை போதாத காரணம்தான் முதலில் நான் அதிர்ச்சியடையும் நிலை ஏற்பட்டது'' என்றார்.

கலைஞரின் இன்றைய அரசியல் நடைமுறைகளை வைத்துப் பார்க்கும்போது அவர் ஒரு அண்ணாவாக மாறிக் கொண்டு வருகிறார் என்பதுதான் என் அபிப்பிராயம்.

அண்ணாவின் செயல், அண்ணாவின் நடைமுறை, அண்ணாவின் அரசியல்விவேகம், அண்ணாவின் நட்புத்தன்மை, அண்ணாவைப்போலவே பிரச்சினைகளை பிறருடன் கலந்து அணுகுதல், அண்ணாவின் குடும்பப் பாகம் இவைகள் அனைத்தும் இன்று கலைஞரிடம் உள்ளன.

அரசியல் என்றால் அபிப்பிராய பேதங்கள் ஏற்படத்தான் செய்யும்—இரண்டு பக்கமும் அணைத்து நியாயம் வழங்குதல்தான் ஒரு சிறந்த தலைவனுக்கு இருக்க வேண்டிய முத்திரை.

இவைகளில் முக்கால் அண்ணாவாகி விட்டார் கலைஞர்.

முடிவில் ஒரு சுவையான செய்தி—மதுரையில் முத்து சட்டத்தை எரித்தபோது-கலைஞரும் நானும் மதுரையில் இருந்தோம் என்பதற்காக சட்ட எரிப்பை முன்னின்று நடத்தினோம் என்று, எங்கள் இருவரையும் கைது செய்து மதுரையிலிருந்து திருச்சி சிறைக்கு போலீஸ் வேனில் அழைத்து வருகிறார்கள். வரும் வழியில் கூறினார்—''பூம்புகார்'' படத்திற்காக கே. பி. சுந்தராம்பாள் அவர்களை நாளை மறுநாள் ஒப்பந்தம் செய்வதாக இருந்தேன்—கைது செய்து விட்டார்கள். இதனால் கம்பெனி வேலைகள் தாமதமாகலாம்'' எனக் கூறிக் கொண்டு வந்தார்.

சிறிது நேரம் கழித்து ஜன்னல் வழியாகப் பார்த்தபோது எங்கள் போலீஸ் வேனைத் தாண்டி கே.பி. சுந்தராம்பாள் அவர்களின் கார் போய்க் கொண்டிருந்தது. கலைஞர் டிரைவரிடம் கூறி அந்தக் காரை 'ஓவர் டேக்' செய்யும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி எங்கள் வேன் சுந்தராம்பாள் அவர்களின் காருக்கு முன்னால் போய்நின்றது.

போலீஸ் அதிகாரியின் அனுமதியோடு கலைஞர் இறங்கினார். சுந்தராம்பாள் கலைஞரைக் கண்டதும், ,'முருகா முருகா'' இப்டிச் சந்திக்கிறேனே என்றார்

''நான் உங்களைச்சந்திக்க வேண்டும் என்று இருந்தேன்—அந்தச் சந்திப்பை இங்கேயே பேசி முடித்துக் கொள்வோம்'' எனக் கூறி அங்கேயே பட ஒப்பந்தங்களை ஐந்து நிமிடங்களில் பேசி முடித்துக் கொண்டு விடைபெற்றார்.

விடைபெறும்போது சுந்தராம்பாள் சொன்னார், ''நம்மை முருகன் தான் சந்திக்க வைத்திருக்கிறான்'' என்று—''இல்லை இல்லை போலீஸ் அதிகாரிகள் சந்திக்க வைத்தனர்' அவர்களுக்கு நன்றி கூறுங்கள்'; என்று கலைஞர் நகைச்சுவையாகக் கூறினார்.

ஃ

With the best compliments of

"M/s. INDIA PHOTO MOUNTS"

MANUFACTURERS OF:

PHOTO MOUNTS, CUT-OUT MOUNTING BOARDS Etc.,

88, A. P. T. ROAD

ERODE



சேலத்தில் சந்தித்தேன்

அமைச்சர் சத்தியவாணிமுத்து

ஆற்றல்மிகு கலைஞர் அவர்களை நான் முதலில் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்ட போது—அரசியலில் எனக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லாத நேரம். ஏதோ ஒரு மாநாட்டிற்கு நான் என் தந்தையுடன் சென்றிருந்தபோது சந்தித்ததாக நினைவு.

சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் — இந்தி எதிர்ப்புப் பேச்சாளர் வரிசையில் —மீனாம்பாள் சிவராஜ், மூவாலூர் மூதாட்டியார், இராம மிருதத்தம்மையார், பன்னீர் செல்வம், ரோஸ் அருணாசலம், டாக்டர் தருமாம்பாள் ஆகியோர் பெயருடன் கலைஞர் அவர்கள் பெயரையும் குறிப்பிட்டார்கள். கலைஞர் நல்ல பேச்சாளர் என்று அப்போதே சொன்னார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி சுயமரியாதை இயக்கமாக மாறியபோது சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நானும் கலந்து கொண்டேன். அங்கு கலைஞரிடம் நன்கு அறிமுகமாகும் வாய்ப்புப் பெற்றேன்.

அதற்குப் பின்னர் சென்னையில் கோகலே ஹாலில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் என் கணவர்தான் மாநாட்டின் வரவேற்பாளர்—அண்ணா அவர்கள் என்னை அழைத்து வரவேற்பு உரையைப் படிக்கும்படி சொன்னார்.

அந்த மாநாட்டில் கலைஞரும் நாவலரும் கலந்து கொண்டார்கள். அப்போது நாவலருக்கு இளந்தாடி நாவலர் என்று பெயர்.

பாண்டிச்சேரியில் கலைஞர் அவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டபோது நான் பாண்டிச்சேரியில் இருந்தேன். பாண்டிச்சேரி மாநாட்டில் அம்பேத்கார் படத்தை ஜனார்த்தனமும்—ஜின்னா படத்தை பேராசிரியர் அன்பழகனும், திராவிட நாடு படத்தை நானும் திறந்துவைக்க இருந்தோம்.

காலை நிகழ்ச்சி முடிந்து மாலை நிகழ்ச்சியில்தான் நான் 'திராவிட நாடு' படத்தைத் திறந்து வைக்க வேண்டும்—மதிய நேரத்திற்குப் பின்னர் கலாட்டா தொடங்கிவிட்டது. நான் தோழர்கள் துணையுடன் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றேன். அன்று மாலைதான் செய்தி வந்தது, காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டு கலைஞர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று.

அதற்கு முதல் நாள்தான் கலைஞர் அவர்கள் சாந்தா அல்லது பழனியப்பன் என்ற நாடகத்தை மாநாட்டில் நடத்தினார்கள். அதிலே அவரும் நடித்தார்.

இன்றைக்கு மட்டுமல்ல—கலைஞரின் எழுத்தும், அவருடைய தீவிரப் பணியும் அன்றைக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு அச்சமூட்டியது. —அழுக்காறு மனம் கொண்டோர் அவரை அடித்து நொறுக்கி அவர் இறந்து விட்டார் என நடுத்தெருவிலே போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். அதனால்தான் அன்றைக்கு நடுத்தெருவிலே தூக்கி எறியப்பட்டவர் இன்று அமைச்சுக் கட்டிலில் இருக்கிறார். கோட்டையில் 20 ஆண்டுகளாகப் பரிபாலனம் செய்தவர்கள் இன்று குப்பை மேட்டிலே தூக்கியெறியப்பட்டிருக்கிறார்கள் — முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

கலைஞர் அன்று தினை விதைத்தார்

இன்று தினை அறுத்தார்!

காங்கிரசார் அன்று வினை விதைத்தனர்.

இன்று வினை அறுக்கின்றனர்.

★

டெல்லியிலிருந்து சென்னை வருவதற்குள்!

அமைச்சர் மாதவன்

கலைஞர் அவர்களை நான் 57—க்குப் பிறகுதான் சந்தித்தேன். 'முரசொலி' அலுவலகத்தில் முகவை மாவட்டச் செயலாளர் தென்னரசுவுடன் சென்று பார்த்ததாக நினைவு.

அதற்கு முன்னர் பொதுக் கூட்டங்களில் பார்த்திருக்கிறேன்—பழகும் வாய்ப்பு எனக்கு 57—க்குப் பிறகுதான் கிட்டியது.

ஃ ஃ ஃ

கலைஞரின் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாக ஓரிரு சம்பவங்களை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்:

71—ல் நடாளு மன்றத்திற்கு தேர்தல் நடைபெறுகின்றபோதே, தமிழ் நாட்டில் சட்டமன்றத் தேர்தலையும் நடத்திவிட மத்திய அரசின் அனுமதி பெறுவதற்காகக் கலைஞரும் நானும் டெல்லி சென்றிருந்தோம். அப்போதுதான் பிரதமர் இந்திராவைச் சந்தித்துவிட்டு வெளியே வந்துகொண்டிருந்த ஆந்திர முதல்வர் பிரம்மானந்தரெட்டி எங்களைச் சந்தித்தார்.

உரையாடும்போது நாங்கள் வந்திருக்கும் நோக்கம் பற்றி அவரிடம் கூறினோம்.

''நானும் ஆந்திராவில் சட்டமன்றத் தேர்தல் நடத்த அனுமதி கேட்கத்தான் வந்தேன். பிரதமர் பிடிவாதமாய் மறுத்துவிட்டார். உங்களுக்கு எங்கே சம்மதம் தெரிவிக்கப் போகிறார்?''—என்று ஆந்திர முதல்வர் எங்களுக்குள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

கலைஞர் அதுபற்றிக் கவலைப் படவில்லை.

அப்போதே பிரதமரைச் சந்தித்து எண்ணத்தைத் தெரிவித்தோம்.

''நீங்கள் விரும்பினால் தமிழ்நாட்டில் தாராளமாய் இரண்டு தேர்தலையும் நடத்தலாம்'' என்று மறுக்காமல் அனுமதி தந்தார். அந்நிகழ்ச்சி உண்மையில் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

தமிழக மக்களிடம் கழகத்திற்கு உள்ள செல்வாக்கையும்—கலைஞர் அவர்களின் தலைமைச் சிறப்பையும் பிரதமர் நன்கு அறிந்து வைத்திருந்த காரணத்தால்தான் கேட்டவுடன் அனுமதி தந்தார் இந்திரா.

தேர்தல் தேதி அறிவித்த பிறகு ஒரு மாத கால இடைவெளிக்குள் அவர் சூறாவளியெனச் சுழன்று ஆற்றிய பணிகூட எனக்கு வியப்பைத் தரவில்லை. கலைஞர் என்பதற்குள்ள மறு பெயரே—செயல் வீரர், வெற்றியாளர் என்பதுதான்.

ஆனால்... பிரதமரிடம் தேர்தலுக்கு அனுமதி பெற்ற உடன் டெல்லியில் விமானம் ஏறினோம்.

விமானத்தில் ஏறி அமர்ந்து ஒரு அரைமணி நேரம் கழித்து—விமானத்திலேயே தேர்தல் பணியைத் தொடங்கிவிட்டார்.

தேர்தல் நேரத்தில் தலைமைக் கழகத்தின் சார்பாக வெளிவந்த போஸ்டர்கள் அனைத்திற்கும் உள்ள வாசகங்களையும்—தேர்தல் அறிக்கைக் குறிப்புகளையும் அரசின் சாதனைகளையும்—ஒரே மூச்சில் கிடுகிடுவென எழுதி முடித்து விட்டார்.

அதாவது டெல்லியிலிருந்து விமானம் சென்னை வருவதற்குள் இத்தனையையும் அவர் எழுதிமுடித்தது எனக்குப் பெரும் வியப்பைத் தந்தது.

ஃ ஃ ஃ

தேர்தல் முடிந்த பின்னர் வெற்றிச் செய்தியோடு டெல்லி சென்றிருந்தோம். அங்கு நிதியமைச்சர் சவானோடு உரையாடுகையில் கலைஞரிடம் சவான் கேட்டார்:

''தமிழ் நாட்டில் கழகம் வெற்றிபெறும் என்று எனக்குத் தெரியும்—ஆனால் இத்தனை அமோக வெற்றி பெறுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு பெரிய வெற்றியை உங்களால் எப்படிப் பெற முடிந்தது? அந்தச் சாணக்கியத்தை எனக்கும் கொஞ்சம் கூறுங்கள். நானும் தெரிந்து கொள்ளுகிறேன்'' என்று வியந்து கேட்டார்.

இவ்வாறு சாதனைகளின் சின்னமாகத் திகழும் கலைஞர் அவர்கள் எதிர்காலத்தில் சரித்திர நாயகனாகவும் திகழப்போகிறார் என்பதனை அரசியலில் அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் உறுதிப்படுத்தி வருகிறது.

ஃ

தொண்டரின் துணைவர்

அமைச்சர் சாதிக்பாட்சா

52—ல் நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது தேர்தல் நேரத்தில் சந்துகளிலும், வீதிகளிலும், முக்கியப் பாதைகளிலும் தேர்தல் கூட்டம் நடைபெறும். தேர்தல் கூட்டங்களில் அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர் தவறாது பேசுவர்-அந்த நேரத்தில்தான் நான் முதலில் கலைஞரைப் பார்த்தேன்.

62—ல் தேர்தலில் என் தேர்தல் பிரச்சாரத்திற்கு தொகுதிக்கு வந்திருந்தபோது எங்கள் வீட்டில் கலைஞருக்கு ஒரு விருந்து கொடுத்தேன்—அதில் கடல் பாசியால் செய்யப்பட்ட அல்வா குறிப்பிடத்தக்கது. அதை விரும்பிச் சுவைத்த கலைஞர் அதை எப்படிச் செய்கிறீர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டறிந்ததோடு அன்று இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் அது குறித்துப் பேசினர்.

''நண்பர் சாதிக்பாட்சா எனக்கு விருந்து தந்தபோது கடல் பாசியில் அல்வா தயாரித்தார். மிகவும் சுவையாக இருந்தது. கடலில் விளையும் பாசியில் சுவையான அல்வா தயாரிக்க இயலுமென்றால் கடல் தண்ணீரையும் சுவையான குடி நீராக்க முடியும். அதையும் சாதிக்பாட்சா அவர் வீட்டிலேயே செய்து தருவாரானால்—சாதனையாக இருக்கும். அரசாங்கத்திற்குச் செலவும் மிச்சமாகும்'' என்று நகைச்சுவையாகக் கூறினர்.

67—ல் அவர் பொருளாளராக இருந்து நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டபோதுதான் கலைஞருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அப்போது என் தொகுதியில் நிதி திரட்டுவதற்கு ஒரு புதுமுறையைக் கையாண்டார் கலைஞர்.

கழகத் தோழர்களும் சில முக்கியப் பிரமுகர்களும் கலைஞரைத் தங்கள் இல்லத்திற்கு விருந்திற்கு அழைத்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைக் கழகத்திற்கு நிதிசேர்க்கும் ஒரு வாய்ப்பாகவும் பயன்படுத்துக் கொண்டார் கலைஞர்.

''யார் இல்லத்திலும் தேநீர் சாப்பிடுவதாக இருந்தால் தேர்தல் நிதியாக ரூ. 100 தர வேண்டும். உணவு சாப்பிடுவதானல் ரூ. 500 தரவேண்டும்'' என்றார். அந்த வகையிலும் ஓரளவு கணிசமான தொகை வசூலாயிற்று.

எந்த நேரமும் ஏதாகிலும் ஒரு பணியில் ஈடுபட்டு வரும் கலைஞர் அவர்கள் நண்பர்களுடன் மனம் விட்டு உரையாடுவதைத்தான் அவர்களுக்கு நல்ல ஓய்வாகக் கருதுகிறார். நண்பர்களுடன், சக அமைச்சர்களுடன் அறிஞர் அண்ணா அவர்களைப்போன்றே குடும்பப் பாசத்துடன் பழகி வருகிறார்.

71 தேர்தல்—மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்றபோதும், இரவு பகலாகக் கண் விழித்து கழக வெற்றிக்கு அவர் உழைத்த விதம்தான் என்னை மிகவும் கவர்ந்த செயலாகும். அப்படிப்பட்ட ஒரு உழைப்பை அண்ணா அவர்களைத் தவிர வேறெந்தத் தலைவரிடமும் நான் கண்டதில்லை.

கலைஞரிடம் உள்ள சிறப்புத் தன்மைகள்—அனைவரையும் அணைத்துச் செல்லுதல்—அவரே முடித்துவிடக் கூடிய சிறு பிரச்னையானாலும் மற்றவர்களைக் கலந்து முடிவெடுத்தல்—விட்டுக் கொடுத்துப் போதல்—நிதானமாகச் செயல்படுதல் இவைகளில் அவர் அண்ணா அவர்களின் நிழலாகவே நிற்கிறார்.

எந்த நேரத்திலும்—எத்தனை பெரிய பிரச்னையில் ஈடுபட்டிருந்தபோதும் கழகத் தொண்டன் கூறும் குறைகளை, கோரும் நியாயங்களை அவர் அலட்சியப் படுத்துவதில்லை. அதனை சலிப்படையாது கேட்டுத் தீர்த்து வைப்பதில் கலைஞருக்கு இணை கலைஞர்தான்.

இத்தகைய பண்புகள் நிறைந்து இருக்கின்ற காரணத்தால் நான் தலைமைத் தகுதியிலும் முதல்வர் கலைஞர் தலைசிறந்து விளங்குகிறார். ✱

சொற்சிலம்ப வல்லார்

அமைச்சர் ஆதித்தனார்

கலைஞர் அவர்களை நான் ரஷ்யாவுக்குப் போய்வந்த நேரத்தில் சந்தித்திருக்கிறேன். ஆனால் அவருடைய ஆற்றலை, அறிவை, திறமையை அதற்கும் முன்னரே பத்திரிகை வாயிலாக, எழுத்து வாயிலாக சந்தித்து உள்ளூர மகிழ்ந்திருக்கிறேன்.

அவருடைய சுறு சுறுப்பும், ஆற்றுவேகப் பணியும், வாதத்திறமையும் கண்டு அன்று முதல் இன்று வரை நான் வியந்து வருகிறேன்.

குறிப்பாக இயந்திரம் கூட தொடர்ந்து வேலை செய்தால் அதற்கும் ஓய்வு தேவைப்படுகிறது—தேவைப்படும். ஆனால் கலைஞர் அவர்கள் 24 மணி நேரமும் ஓய்வின்றிப் பணிபுரிகிறார்கள். கலைஞருடைய சிறந்த நிர்வாகத் திறமைக்கு இது அடிப்படைக் காரணம் என்பது என் அபிப்பிராயம்.

ஃ ஃ ஃ

கலைஞருடைய இரு பொருள் தரும்படியான பேச்சுகள் அனைவரையும் கவரக்கூடியதாகும். அவைகளை நான் பன்முறை ரசித்திருக்கிறேன்.

அவர் கண்நோய் மருத்துவ மனையில் இருந்தபோது—அவரைக் காண வந்த ஒருவர் 'என்ன தையல்போட்டிருப்பதால் தொல்லை அதிகமாக உள்ளதோ?'' என்று விசாரிக்கிறார். ''தொல்லையே 'தைய'லால் வருவதுதானே?'' என இருபொருள்பட கூறினார். கேட்டவர் சில விநாடிகளுக்குப் பிறகே அதன் உட்பொருளைப் புரிந்துகொண்டு வாய்விட்டுச் சிரிக்கிறார்.

கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் ராஜாஜிக்கும் மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தபோது ''ஃப்ரீயாத்தானே இருக்கீங்க'' என்கிறார் ராஜாஜி. ''இந்தப் பதவியே ஃப்ரீதானே'' (பொருள் கொடுத்து பெறாதது) கலைஞரின் இருபொருள் நகைச் சுவையை ராஜாஜி ரசிக்கிறார்.

ஒரு சமயம் நான் திருநெல்வேலி சுற்றுப் பயணத்திற்குச் சென்றிருந்தபோது பல்வலித் தொல்லை ஏற்பட்டது. பல்லைப் பிடுங்கி விடலாம் என்று மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு பல் பிடுங்குவதற்கான கொறடு இல்லை. அதனால் மருந்து மட்டுமே போட்டுக் கொள்ள முடிந்தது.

மருத்துவமனை வசதிகள் பற்றி ஒரு முறை பேச்சு வந்தபோது—''நெல்லை மருத்துவமனையில் பல் பிடுங்க கொறடா கூட இல்லை'' என்று கூறினேன்.

''ஆமாம் 'கொறடா' அழகமுத்து நெல்லையில் இல்லைதான்'' என்றார். வார்த்தை ஒன்றுதான். பொருளில் எத்தனை வேறுபாடு. அதனை நகைச்சுவையாகப் பயன்படுத்தி பிறரை மகிழ்விப்பதில் கலைஞர் வல்லவர்.

நகைச்சுவையில் மட்டுமல்ல—பெரிய தத்துவங்களை மக்களுக்கு எளிமையாகப்புரியும் வகையில் கூறக்கூடிய ஆற்றல் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு.

ஒருமுறை தஞ்சைப் பொதுக் கூட்டமொன்றில் சோசலிசச் தத்துவத்திற்கு அவர் தந்த விளக்கம் நல்ல உதாரணமாகும்.

''ஒரு சிலரின் வாழ்க்கை வளமாகவும்—பலருடைய கண்கள் குளமாகவும் இருக்கின்ற சமுதாய நிலை மாற வேண்டும்—அதுதான் உண்மையான சோசலிசம்'' என்றார்.

இவ்வாறு தத்துவ விளக்கம் தருவதிலும் தலைமைப் பொறுப்புக்குரிய பணிகளில் ஓய்வு உறக்கமின்றிப் பணி புரிவதிலும்—நகைச்சுவைப் பேச்சிலும் நாகரிக மிக்க அரசியல் நடாத்துவதிலும் கலைஞர் அண்ணா வழியில் செயல்பட்டு வருகிறார். அவர் சீரிய தலைமை வெல்க! வாழ்க!

★

வடக்கிலும் வாகை சூடியவர்



அமைச்சர் ராஜாராம்

1950-ம் ஆண்டு சேலத்தில் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன், கலைஞர் ஆகியோர் மாடர்ன் தியேட்டரில் இருந்த போது அங்குதான் முதலில் கலைஞரைப் பார்த்தேன்.

அதற்குப் பிறகு சேலம் கல்லூரியில் என் தலைமையில் நடைபெற்ற தமிழ் மன்றக் கூட்டத்தில் கலைஞர் உணர்ச்சி வசமாகப் பேசினார். அதற்குப் பின்னரே நல்ல அறிமுகமாகும் வாய்ப்பு ஏற்பட்டது.

கலைஞர் முதன் முதலில் கல்லூரியில் பேசியதும் சேலம்கல்லூரியாகத்தான் இருக்குமென நினைக்கிறேன்.

52 தேர்தலில் திராவிட நாடு பிரச்சினையில் கையொப்பமிட்டவர்களை நாம் ஆதரித்த நேரம்.

கம்யூனிஸ்டுகள் 23 பேரை சேலம் சிறையில் கொன்று குவித்தது காங்கிரஸ் ஆட்சி. அந்தச் சம்பவத்தை தேர்தல்கூட்டங்களில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கூட கலைஞரைப் போல் அத்தனைத் தெளிவாக மக்கள் மத்தியில் வைக்கவில்லை. கூட்டத்தில் கலைஞர் பேச்சைக் கேட்ட யாரும் கண்ணீர் விடாமல்இருந்ததில்லை. அந்த அளவு உருக்கமுடன் பேசினார்.

அப்போது ஓமலூர் தொகுதியில் பி. ரத்தினம் பிள்ளை என்பார் சுயேட்சையாக நின்றார்—அவரைநாம்ஆதரித்தோம். அவரை எதிர்த்து இன்றைய தேவி பாரடைஸ் உரிமையாளர் நஞ்சப்ப செட்டியார் நின்றார். அது தமிழகத்தில் முக்கியத் தொகுதிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. நஞ்சப்ப செட்டியார் ஏராளமான பணத்தை தண்ணீர்மாதிரி செலவுசெய்தார்.

சுயேட்சை வேட்பாளர் ரத்தினம் பிள்ளையை ஆதரித்துப் பேசி வந்த கலைஞர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் அக்கிரமத் தன்மைகளைக் கூறிய பின்னர் — ''இங்கே எங்கள் ஆதரவோடு ரத்தினம் நிற்கிறார் — அவரை எதிர்த்து நஞ்சப்ப செட்டியார் நிற்கிறார் — நீங்கள் யாருக்கு ஓட்டளிக்கப் போகிறீர்கள்? ஒரு கையிலே நஞ்சு இருக்கிறது — இன்னொரு கையிலே ரத்தினம் இருக்கிறது. நஞ்சுதான் 23 கம்யூனிஸ்டுத் தோழர்களின் உயிரை சேலம் சிறையில் பறித்தது. இப்போது சொல்லுங்கள் உங்களுக்கு நஞ்சு வேண்டுமா? ரத்தினம் வேண்டுமா?'' என்று உள்ளத்தை உருக்கும் வகையிலும் பேசினார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் யாரைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் உரையாடிய போதுதான் முதல் தடவையாகக் கலைஞரை அழைத்துக் கொண்டு டெல்லி சென்றேன்.

டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் — அஜய் முகர்ஜி, நாத்பாய், புபேஷ் குப்தா, பி. ராமமூர்த்தி, கிரேன் முகர்ஜி, சுரேந்திரநாத் துவிவேதி, எம் ஆர். மசானி, என். ஜி. ரங்கா, வாஜ்பாய், பால்ராஜ் மதோக், ஜோதிபாசு, குர்ணம் சிங், காயிதே மில்லத், கோபர்ஹக்டே, பிராங் அந்தணி, போன்ற பல்வேறு கட்சித் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசினோம். ஒவ்வொருவரும் பேச்சின் முடிவில் நீங்களே ஏன் இந்த முறை குடியரசுத் தலைவர் பதவியை ஏற்கக் கூடாது என்றே கலைஞரிடம் கேட்டனர்.

கலைஞர்டெல்லிக்கு வந்தது யாராவது ஒரு நடுநாயகமான ஒருவரை அனைவரின் ஒத்துழைப்புடன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில் தான் நாங்கள் டெல்லி சென்றோம்.

''அண்ணா இல்லாத வேளையில் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றுவதுதான் முக்கியமே தவிர வேறு எந்தப் பொறுப்பையும் நான் ஏற்க முடியாது'' என கலைஞர் மறுத்து விட்டதோடு, உடனடியாக, முடிவெடுத்து வி. வி. கிரி அவர்களை குடியரசுத் தலைவருக்கு தாம் முன்மொழிவதாகச்சொல்லிவிட்டுப்புறப்பட்டு வந்த காட்சி இன்னும் என் மனதைவிட்டு நீங்கவில்லை. ✱

முதல்வரால் முதல்வர்

அமைச்சர் ஓ.பி.ராமன்

நான் திண்டுக்கல்லில் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது — கலைஞர் அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேச வந்திருந்தார்கள். அங்குதான் அவர்களை முதலில் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

54-ல் மதுரையில் நடைபெற்ற மாவட்ட மாநாடு கலைஞர் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது. ண் ஆபரேஷன் காரணமாக கலைஞர் அவர்கள் அந்த மாநாட்டிற்கு வர இயலவில்லை. ''கண்ணிலே வேதனை இருந்தாலும், என் பார்வையெலாம் மதுரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாநாட்டுப் பந்தலையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. வீர மறவர்கள் அணி வகுக்கும் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு பூரித்துக் கொண்டிருக்கிறேன் — நான் மருத்துவ மனையிலிருந்தபடியே மாநாட்டிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று அண்ணா அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள்.

அண்ணா அவர்கள் அந்தக் கடிதத்தைப் படித்த போது, கலைஞரின் கட்சி உணர்ச்சியை மதிக்கும் வகையில் மாநாட்டுப் பந்தலே அதிரும் வண்ணம் கையொலி எழுந்தது. அந்த மாநாட்டில் கலைஞர் அவர்களைப் பற்றி தலைவர்கள் கூறிய உயர் கருத்தும் என் இதயத்தில் கலைஞரின் திருவுருவம் அழுத்தமாகப் பதிவதற்கு மதுரை மாநாடு முக்கியக் காரணமாக அமைந்தது.

என்னைப் பொறுத்தவரை கலைஞர் அவர்களிடமிருந்து நான் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் — அவர் ஆற்றும் கண்ணுறக்கமற்ற பணிதான் என்னை ஒவ்வொரு நாளும் வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

அவர் புகழுக்கும் பெருமைக்கும் அந்தப் பணிதான் அடித்தளம் என்பதுகூட என் எண்ணம்.

எனது மாவட்டத்தைச் சார்ந்த மதுரை மக்கள் அவர் மீது நீங்காத அன்புகொண்டிருக்கிறார்கள். கலைஞர் எத்தனை முறை மதுரை வந்தாலும், அந்த மக்கள் தருகின்ற உற்சாக வரவேற்பில் ஒரு துளியும் சலிப்பு ஏற்பட்டதில்லை.

அண்மையில் யுத்த நிதி பெறுவதற்காக மதுரை வந்திருந்தார்கள். மதுரை நகரத் தெருக்களில் சென்ற போது — ஏதோ வெளிநாட்டுத் தலைவர்களைக் காண்பது போன்று சாலை ஓரங்களில் மக்கள் கூடிநின்று மாலையிட்டு கரவொலி எழுப்பி மகிழ்வோடு வரவேற்றனர்.

மக்கள் உள்ளத்தில் நிறைந்திருந்த அந்த நாள் மன்னர்களை வரவேற்பது போன்று மதுரை மாந்தர் கலைஞரை வரவேற்றனர். ஒரு நாட்டுத் தலைமகனை செறு முனையிலிருந்து வெற்றி வாகையுடன் திரும்பியுள்ள வீர மறவனை வரவேற்பது போன்று அத்தனை உற்சாகத்துடன் கலைஞரை வரவேற்றனர்.

அந்தக் காட்சியை நான் என்னை மறந்து பெருமிதத்தோடு ரசித்தேன் என்று தான் சொல்ல வேண்டும்.

மதுரை மக்கள் இவர் மீது வைத்துள்ள அன்பினைப் போன்று கலைஞரும் மதுரை மக்கள் மீது வைத்துள்ள அன்பு மாற்றுக் குறையாதது.

யுத்த நிதியை பெற்றுக்கொண்டு அவர் பேசும் போது, ''மதுரைக்கு வரும் போதெல்லாம் பெறுவதும் கொடுப்பதும் வழக்கம் — இம்முறை யுத்த நிதியை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் — வைகைநதியில் பாதித்த குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க முதலமைச்சர் நிதியிலிருந்து தொகை தருகிறேன்'' எனக் கூறினார்.

அதே கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசிய மத்திய அமைச்சர் அனுமந்தையா அவர்கள் ''இந்திய மாநில முதல்வர்களின் வரிசையில் முதல் அமைச்சராகத் திகழக் கூடியவர் கலைஞர்'' என்று குறிப்பிட்டார்கள். அதுதான் முழுக்க முழுக்க உண்மை.

உலகிலேயே செல்வாக்குள்ள தலைவர்கள் யாரும் தன்னுடைய பிறந்த நாளை — பிறருக்கு — அதுவும் சமுதாயத்தின் கடைக்கோடியில் வாழும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் லட்சிய நோக்குடன் கொண்டாடியதில்லை. அதைக் கலைஞர், செய்திருக்கிறார். இதனாலும் அவர் பெயருக்குச் சான்றாகக் கருணையின் வடிவமாகத் திகழ்கின்றார்.

★

விரைவு - தெளிவு - துணிவு

அமைச்சர் இராமச்சந்திரன்

1953'ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது நான் மாணவர் நிலையில் முதன் முதலில் கலைஞரைப் பார்த்தேன்.

இதுவரை தமிழக அமைச்சரவையில் முதல்வராக இருந்த அமைச்சர்களின் அதிகாரபூர்வமான புகைப்படங்கள் அனைத்திலும் அவர்களது பார்வை 'ரைட்'டிலேயே (வலது பக்கம்) இருந்துள்ளது. ஆனால் இன்றைய முதல்வர் கலைஞர் அவர்களின் அதிகாரப்பூர்வப் படம் மட்டும் முதல்வரின் பார்வை 'லெப்'ட்டில் (இடது பக்கம்)இருக்கிறது. இந்தப் பார்வையிலிருந்தே கலைஞர் ஒரு லெப்ட்டிஸ்ட்என்பதை உணர முடிகிறது.

சுறுசுறுப்பாகப் பதில் தருவதற்கு வின்ஸ்டன் சர்ச்சிலைத்தான் உவமையாகக் கூறுவர். அதனை அடுத்து பேரறிஞர் உடனுக்குடன் அத்தகைய பதிலைத் தருவதை சட்டமன்றத்திலும், மற்ற இடங்களிலும் கண்டோம். அதே நேரத்தில் சூடும் சுவையும் நிறைந்த பதில்களை நொடிப் பொழுதில் தருகின்ற நுண்ணறிவினைக் கலைஞர் பெற்றிருக்கிறார் என்பதனை மாற்றாரும் ஒப்புக் கொள்வர். அவருடைய சட்ட மன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்போரும் உணர முடியும்.

தி. மு. கழகம் என்ற அமைப்பு அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்ட ஒரு இயக்கம். அது மட்டுமல்ல—அண்ணா அவர்களின் இயல்புக்கு ஏற்ப உருவாகிய அமைப்புமாகும். இதனை அந்த வழியிலிருந்து கொஞ்சமும் பிறழாமல்நடத்திச் செல்வதற்கு அண்ணா அவர்களின் இயல்பு அமைந்திருக்க வேண்டியது அவசியம்.

வியக்கத்தக்க முறையில் அண்ணா அவர்களின் இயல்பு கலைஞரிடம் இன்று முழுமையாக இருக்கிறது. எல்லோரையும் அரவணைத்துச் செல்வதில்—இயக்கத்தில் எந்த ஒரு தொண்டனையும்அணைத்துக்கொண்டு கழகத்தை என்றும்போல் கட்டிக் காத்து மேலும் வளர்த்து எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப அண்ணாவின் இதயத்தோடு செயல்பட்டு வருகிறார் கலைஞர்.

கலைஞர் அவர்கள் அண்ணா பற்றிக் கவிதை பாடுகின்றபோது—''அண்ணனே உன் இதயத்தைத் தா'' என உருக்கமாகக் கேட்டார். ஆனால் கவிதை இலக்கியத்தில் அவர் கேட்டதுதான் நமக்குத் தெரியுமே தவிர—அவர் அதை அண்ணா அவர்களிடமிருந்து பெற்றுவிட்டார் என்பது அவர் கழகத்தையும், அரசையும் நடத்திச் செல்லும் பாங்கிலிருந்துதான் தெரிய வருகிறது.

தகுதிகளில் தானே தலைசிறந்து விளங்குபவர்களை தலைவர் என்று ஏற்றுக் கொள்வது உலக நியதி. ஆனால் தன்னைப் போன்ற தகுதி மிக்க தலைவர்களை வளர்த்துச் சென்றார் அண்ணா.

பேரறிஞர் அண்ணா அவர்களை தமிழ்த்தாயின் தலைமகன் என்றும், அறிஞர் என்றும் கூறி வருகிறோம். தான் மட்டும் சிறந்த தலைவராக இல்லாமல் தனக்குப் பின்னால் சிறந்த தலைமையை உருவாக்கிச் சென்ற காரணத்தால்தான் அண்ணா அவர்கள்இன்றைக்கும் மக்கள் இதயம் நிறை தலைவராகத் திகழ்ந்து வருகிறார்.

அந்த இடத்தை அண்ணாவிற்கு அடுத்து கலைஞர் பெற்று வருகிறார் என்பதில் யாருக்கும் இரண்டுவிதக் கருத்து இருக்க முடியாது.

ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்றுவிரும்புகின்ற முற்போக்குக் கொள்கையுடைய இளைஞர் சமுதாயத்திற்கு—ஈடு இணையில்லாமல் கிடைத்திருக்கிற அரிய வாய்ப்பு நாம் கலைஞரை முதல்வராகப் பெற்றிருப்பது.

அவரைக் கண் எனக் காத்து அவர் காரியம் யாவிற்கும் கை கொடுத்து துணையிருப்போமானால்—இளைஞர் சமுதாயத்தை,தொழிலாளர் உலகை—தமிழகத்தை ஒளிமயமான காலத்திற்கு அழைத்துச் செல்ல கலைஞரைப் போன்ற சிறந்த மாலுமியைக் காண முடியாது.

★

பார்க்கிறேன்-வியக்கிறேன்!

அமைச்சர் கண்ணப்பன்

1950ல் பொள்ளாச்சிப் பொதுக்கூட்டத்தில் பார்த்தேன். அப்போது நான் பள்ளி மாணவன். 9'ம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன்.

57 தேர்தலின்போது தொகுதி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க பொள்ளாச்சிக்கு கலைஞர் வந்திருந்தார். அப்போதுதான் நன்கு அறிமுகம் ஆகும் வாய்ப்பு கிடைத்தது.

1962'ல் பொள்ளாச்சித் தொகுதி கேட்டிருந்தேன்—அண்ணா அவர்களிடம் ''மாணவப் பருவத்திலேயே எனக்கு கண்ணப்பரைத் தெரியும்–சுறுசுறுப்பானவர்'' என்று கலைஞர் எனக்காகச் சிபாரிசு செய்தார்.

66'ல் கலைஞர் பொருளாளராக இருந்த நேரத்தில் நிதி திரட்டுவதற்காகக் கோவை மாவட்டம் வந்திருந்தார்.

அப்போது அவருக்கு நல்ல காய்ச்சல். அதோடு பேசினார். ''என் உடல் நிலை மிகவும் பாதித்திருப்பதாக எனக்கு முன் பேசிய ஒவ்வொருவரும் சொன்னார்கள் — அப்படிப் பாதித்திருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை — காரணம் என் மனைவி அருகிலிருந்தால் இந்நேரத்தில் என்னை எப்படியெல்லாம் கவனித்துக் கொள்வாளோ அதை விடப் பன்மடங்கு என்கூட வரும் நண்பர்கள் பணிவிடை செய்தார்கள். உதவினர்கள்'' என்றார்.

ஆலயங்களில் தமிழ் வழிபாட்டு முறையை சில பெரியவர்களும் 'பெரிய ஏடுகள்' நடத்துவோர் எனப் பெயர் பெற்ற கூட்டமும் எதிர்த்த போதும் தமிழ் வழிபாட்டு முறையைத் துணிச்சலுடன் கொண்டு வந்தார்.

''போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் — போர்க்களத்தில் இறந்த வீரர்களுக்கு உதவ வேண்டும் — அவர்கள் குடும்பத்தாரின் கண்ணீரைத் துடைக்கிற அளவு நிதி உதவி செய்ய வேண்டும்'' என ஆளுநர் கூட்டிய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தை நான் கலைஞரைச் சந்தித்துச் சொன்னேன்.

அந்த வினாடியே தலைமைச் செயலகச்செயலாளரையும் — இராணுவ அதிகாரிகளையும் அழைத்துப் பேசினார்.

களத்தில் மரணமடைகின்ற ராணுவ வீரர்களின் குடும்பம் ஒன்றுக்கு ரொக்கம் ரூபாய் ஐயாயிரமும், நிலமும் கொடுக்க உடன் முடிவு செய்தார்கள்.

இந்தச் செய்தி முன்பே பத்திரிகைகளில் வெளியான பழைய செய்தி என்றாலும் இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் - போர்க்களத்தில் மாண்டவர்களுக்கு உதவ வேண்டும் என கவர்னர் கூட்டிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் முதல்வர் கலைஞர் அவர்களிடம் கூறிய நேரம் மதியம் 11.30 மணி— அவர் தலைமைச் செயலாளரையும் — இராணுவ அதிகாரியையும் அழைத்துப் பேசி விவாதித்து முடிவெடுத்து அறிவித்த நேரம் 12.30 மணி— ஒரு மணி நேரத்தில் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் — மறுநாள் கூட செய்யலாம் — நிதி வசதியைப் பார்த்து — பைல்களை வரவழைத்து அதிகாரிகளிடம் பேசி முடிவெடுக்க வாரத்தைக் கூடத் தள்ளியிருப்பார் வேறு ஆட்சியாளராக இருந்தால்.

ஏழைகளின் இதயமும் — வீர மறக்குல உணர்வும் — மின்னல் வேகச் செயலும் — அண்ணா அவர்களின் சிந்தனையும் கலைஞருக்கு இருப்பதால் தான் — ராணுவ வீரர் குடும்பம் மட்டுமல்ல — நாடே இன்று நன்மை பெற்று வருகிறது.

ஃ

அமைச்சர்கள் பேட்டி: தினகரன்



அரசியல் பாலபாடக் கதைகள்
குரங்கு ஆப்பம் பங்கிட்ட கதை
தொழிலாளி
முதலாளி
இரண்டு பூனைகளிடம் ஒரு அப்பம் கிடைத்தது
உர்... உர்...
உர்... உர்...
அப்பத்திற்கு இரண்டும் சண்டை இட்டன.
ஒரு குரங்கு வந்து பங்கிட்டுத் தருவதாகக் கூறியது.
அப்பத்தைப் பிய்த்து தராசில் போட்டது.
அளவு அதிகம் எனக் கூறி அப்பத்தை சிறிது சிறிதாக உண்டது.
அப்பம் முழுவதையும் அதுவே தின்றுவிட்டுச் சென்றது.

ஆப்பசைத்த குரங்கு


முஜிப்
கி. வங்கம்
பாக்கிஸ்தான் அரசு
இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் மரம் அறுத்துக் கொண்டிருந்தனர்.
சுயாட்சிக் கோரிக்கை
மரத்திலே ஆப்பு வைத்துவிட்டு வெளியே சென்றனர்.
யாகியா கான்
இதை ஒரு குரங்கு பார்த்துக் கொண்டிருந்தது.
அவர்கள் சென்றதும் குரங்கு கீழே இறங்கிவந்து அந்த ஆப்பை அசைத்தது.
கீச்...கீச்...
ஆப்பசைத்த குரங்கு அந்த இடைவெளியிலே மாட்டி நசுங்கி செத்தது.

கூடா நட்பு தீதாய் விளையும்

ஏமாந்த காக்கை
பாகிஸ்தான் மக்கள்
யாஹ்யாகான் ஆட்சி
வடை விற்ற கிழவியிடம் ஒரு காக்கை வடையைத் திருடியது!
வடையை திருடிய காக்கை ஒரு மரத்தில் வந்து அமர்ந்தது.
பூட்டோ
அந்த வழியே அப்போது ஒரு நரி வந்தது. காக்கை வாயில் வடை இருப்பதை பார்த்தது.
அழகாயிருக்கே! எங்கே ஒரு பாட்டு பாடு!
வடையை அபகரிக்க கருதி காக்கையைப் பார்த்து ஒரு பாட்டு பாடக் கூறியது.
கா.. கா..
விபரம் புரியாத காக்கை பாட வாயிலிருந்த வடை கீழே விழுந்தது.
அதனை நரி எடுத்துக்கொண்டு ஓடியது.

வரலாறு படைத்த மாநில சுயாட்சி சாசனம்

"பலாச்சுளை கேட்டனர்! கேட்ட போது தர மறுத்தனர்! பலாப்பழத்தையே பறித்துக்கொண்டனர். இல்லை, இல்லை - பலாமரத்துக்கே அவர்கள் சொந்தக்காரர்களாகி விட்டனர்"

-கலைஞர் 'பங்களாதேஷ்' விடுதலை பற்றி மலரின் முன்னுரையில் இவ்வாறு கூறுகிறார்!

6-அம்சத் திட்டம்தான் வங்க நாட்டு மக்கள் ஆதிக்க அரசைப்பார்த்து முதன் முதலில் கேட்ட பலாச்சுளையாகும்!

1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதி அவாமி (மக்கள்) லீக் கட்சித் தலைவர் என்கிற முறையில் ஷேக் முஜிபூர் ரகுமான் '6அம்சத் திட்டம் - எங்கள் வாழும் உரிமை' என்னும் தலைப்பில் தனது 'பலாச்சுளைத் திட்டத்தை' வெளியிட்டார்!

முஜிபூர் எழுதி வெளியிட்ட அந்தப்பிரகடனத்தின் முக்கியப் பகுதிகள் கீழே மொழி பெயர்த்துத் தரப்பட்டிருக்கிறது.

முரசொலி மாறன்

ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காகவே போராட்டம்!

நமது நாட்டின் இரு பகுதிகளுக்கிடையே நிலவும் அரசியல் பொருளாதாரப் பிரச்னைகளுக்கு நிலையான தீர்வுகாணும் அடிப்படை கொள்கைகளாக ஆறு அம்சத் திட்டத்தை வைத்துள்ளேன். அது பற்றிய விமர்சனங்களைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால் என்னுடைய திட்டத்தை விமர்சித்து அதில் குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அதை எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக ஒரு தரப்பார் வசைமாரி பொழிகிறார்கள்; என் மீது தவறான நோக்கம் கற்பிக்கிறார்கள்.

நான் சாதாரணமாக இந்தத் தாக்குதல்களை அலட்சியப்படுத்துபவன். ஏனெனில் இந்த வசவாளர்களின் குரல் நமக்கு வாடிக்கையானது; அவர்களின் பழிப்புக் காட்டுகிற முகம் நமக்குப் பழக்கமானது; அவர்களது வழக்கமான அந்த ஏசல்கள் நமது அலட்சியத்தைத் தவிர வேறு எதையும் பெறத் தகுதியற்றது. அடுத்ததாக என்னுடைய ஆறு அம்சத் திட்டம் ஐந்தரைக் கோடி கிழக்குப் பாகிஸ்தானியரது உள்ளத்தையும், வாழும் உரிமை கோரும் அவர்களது கோரிக்கைகளையும் உண்மையாகப் பிரதிபலிக்கிறது என்பதில் எனக்குக் கொஞ்சம் கூடச் சந்தேகமில்லை...

உள்நோக்கம் கொண்டவர்கள் தங்களது ஏஜண்டுகள் மூலமாகவும், பாதுகாவலர்கள் மூலமாகவும் விஷமத்தனமான பிரச்சாரத்தினால் எமது மக்களைத் தவறான பாதையில் இட்டுச்செல்ல முடியாது. இதே கூடாரத்தைச் சேர்ந்தவர்கள்தான் நாம்எந்தச்சாதாரண —குறை காண முடியாத—கோரிக்கைகளை வைத்த போதெல்லாம் 'மதத்திற்கு ஆபத்து'; 'நாட்டுப் பிரிவினை கோரப்படுகிறது'; 'தனி நாடு கேட்கிறார்கள்' — என்கிற எதிர்ப்புக் குரல் கிளப்பினார்கள் என்பதை நம் மக்கள் மறந்து விட மாட்டார்கள். உருது மொழியோடு வங்க மொழியும் ஆட்சி மொழியாக வேண்டும் என்னும் நமது சாதாரண கோரிக்கையில் இந்தியாவின் கை மறைமுகமாக இருப்பதாகக் குறை கண்டவர்கள் இதே ஆசாமிகள்தான்....!

முதலாவது அம்சம்

ஆறு அம்சத் திட்டத்தில் முதலாவது அம்சமாக நான் கீழ்க் கண்டவற்றைப் பரிந்துரை செய்துள்ளேன்:

லாகூர் தீர்மானத்தின் அடிப்படையில் பாகிஸ்தானில் உண்மையான கூட்டாட்சியை உருவாக்கக்கூடிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும்; வயது வந்தோருக்கு வாக்குரிமை என்கிற அடிப்படையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற — சட்டமன்றம் தலைமையானது என்கிற விதத்தில் பாராளுமன்ற ஜனநாயக முறையில் அரசு அமைக்கப்பட வேண்டும்...

2-வது அம்சம்

மத்திய அரசிடம் தேசப் பாதுகாப்பு; வெளிநாட்டு உறவு, ஆகிய இரண்டே இரண்டு இலாக்காக்கள்தான்இருக்க வேண்டும். இதர அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களிடத்தில்தான் இருக்க வேண்டும்.

இரு தலைப்புகளை கொண்ட மத்திய அரசு (Two Subject Centre) ஒரு கௌரவமான கூட்டாட்சிக்குப் போதிய வலுவுள்ளதாக இருக்குமா என்பதை உணர்ச்சிவசப்படாமல் ஆராய்வோம்.

ஒரு கூட்டாட்சியை வலுவுள்ளதாக ஆக்குவது அதன் ஆதீனத்தின் கீழ் இருக்கும் இலாக்காக்களின் குவியல் அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

'சமாதான காலத்தில்' மக்கள் கொண்டிருக்கும், பற்று பக்தி;

'யுத்த காலத்தில்' மக்கள் காட்டும் கட்டுப்பாடு, கீழ்ப்படியும் உணர்ச்சி;

—ஆகிய இவைகளினால்தான் ஒரு கூட்டாட்சி வலுப்பெறுகிறது.

திறமையும், வலுவும் கொண்ட மாநிலங்கள்;

மகிழ்ச்சியும், வலுவும் கொண்ட மக்கள்;

—இவைதான் ஒரு கூட்டாட்சிக்கு வலிமை அளிக்கக்கூடிய ஆதாரங்களே தவிர, மத்திய அரசாங்கத்திடம் எத்தனை இலாக்காக்கள் இருக்கின்றன என்கிற எண்ணிக்கையால் ஒரு மத்திய அரசு வலுப்பெற்று விடாது.

நிர்வாகத்தில் ஆகட்டும்;வளர்ச்சிப் பணிகளில் ஆகட்டும் — ஒரு அரசைத் திறமை மிகுந்ததாக ஆக்குவது அதிகாரத்தைப் பரவலாக்குவதால்தான் முடியுமேதவிர, அதிகாரத்தை ஒரே இடத்தில் குவித்து வைப்பதால் முடியாது.

—இதுதான் தற்கால அரசியலில் (Political Science) அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தத்துவமாகும்!

எந்த இலாக்காக்களை (மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து) கூட்டாகவும் திறமையாகவும் அதிகப் பயனுள்ள வகையிலும் நிர்வகிக்க முடியுமோ அந்த இலாக்காக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதும் கூட்டாட்சித் தத்துவத்தின் முக்கிய தத்துவமாகும். ஜில்லா போர்டு, நகராட்சி போன்ற உள்ளாட்சித் துறைகள் இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே இயங்குகின்றன.

வேற்றுமையில் ஒற்றுமை; அதிக அதிகாரக் குவியலின்றி ஏற்படுகிற இணைப்பு;

—இவைதான் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளாகும்!

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் 1946-ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்த மந்திரி சபைக் குழு (CABINET MISSION) இந்தியக் கூட்டாட்சி என்கிற மத்திய அரசிடம் தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, செய்திப் போக்குவரத்து ஆகிய மூன்றே மூன்று இலாகாக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று முன்மொழிந்தது.

காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக் கட்சியும் இந்த 'மந்திரி சபைத் திட்டத்தை' (Cabinet Plan) ஒப்புக் கொண்டது என்பது நினைவு கூறத்தக்கது.

ஆனால் இறுதியில் இந்தத் திட்டம் செயல்படவில்லை என்றாலும் அது **'வேறு தகராறு காரணமாக'** என்பது மறுக்கமுடியாத உண்மை.

—ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இப்படி ஒரு திட்டத்தை முன்மொழிந்து; அதற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியும், முஸ்லீம் லீக் கட்சியும், ஒப்புதல் தெரிவித்தன என்பது மூன்று இலாகாக்களுடன் ஒரு கூட்டாட்சி செயல்பட முடியும் என்பதை அக்கட்சிகள் ஒருசமயம் ஏற்றுக் கொண்டன என்பதை

உலகிற்குப் பிரகடனப்படுத்துகின்றன.

என்னுடைய இப்போதைய திட்டத்திற்கும் அப்போதைய பிரிட்டீஷ் மந்திரிசபைத் திட்டத்திற்கும் உள்ள ஒரே வித்தியாசம் இதுதான்: அந்தத் திட்டம் மத்திய அரசிடம் மூன்று இலாக்காக்களை ஒப்புவித்திருந்தது. நான் இரண்டு இலாக்காக்களைத் தந்திருக்கிறேன்.

தகுந்த காரணங்களுக்காகவே நான் போக்குவரத்து இலாக்கா மத்திய அரசிடம் இருக்கத்தேவையில்லை என்று கூறுகிறேன்.

எந்த இலாகாக்களில் எல்லா மாநிலங்களுக்கும் தனித்தனி என்று பிரிக்க முடியாத நலன்கள் பின்னிக் கிடக்கின்றனவோ அந்த இலாகாக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்கவேண்டும் என்பது கூட்டாட்சித் தத்துவத்தின் முதுகெலும்பாகும்.

செய்தித் தொடர்பு அப்படிப்பட்ட இலாக்காவாகும்.

எல்லா மாநிலங்களின் பொதுவான நலன்கள் செய்தித்தொடர்பு எனும் இலாக்காவில் பின்னிக் கிடக்கின்றன.

அந்த இலாக்காவை ஒவ்வொரு மாநிலமும் தனித் தனியாகக் கொள்வதை விட மாநிலங்களின் சார்பாக மத்திய அரசே கையாண்டால்தான் திறமையாகவும் லாபகரமாகவும் அது நடக்க முடியும்.

தடைபடாத நீண்ட இருப்புப் பாதை; எங்கும் நிற்காமல் பெரிய நகரங்களை இணைக்கும் விதத்தில் ஓடும் ரயில் வண்டிகள் — இவைகளை உதாரணமாகச் சொல்லலாம்!

பூகோள ரீதியில் ஒரே பிராந்தியம் இருந்தால்தான் இது சாத்தியப்படும்.

ஆனல்பாகிஸ்தான் அப்படியல்ல. என்பது முடியாத காரியம்.

இரு பூகோளப் பகுதிகளுக்கும் இரண்டு தனித் தனியான நிர்வாக அமைப்புகள் இருந்தால்தான் செய்திப் போக்குவரத்தினைச் செம்மையாக நிர்வகிக்க முடியும்.

ஆகவே அது எந்த விதத்திலும் மத்திய அரசின் கையில் இருக்கும் இலாக்காவாக இருக்கவே முடியாது.

இப்போதைய அரசுகூட நீண்ட தாமதத்திற்குப் பிறகு இரயில்வே இலாக்காவை மாநிலத்தின் கையில் ஒப்புவித்திருப்பது இந்தஉண்மையை ஒப்புக் கொண்டிருப்பதற்கு உதாரணமாகும்!

தபால் — தந்தி — செய்திப் போக்குவரத்து இலாக்காவை அதைப் போலவே மாநிலங்களின் கீழ்க் கொண்டுவர வேண்டும்!

3-வது அம்சம்

மூன்றாவது அம்சமாக கீழ்க் கண்டவற்றுள் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று கருதுகிறேன்:

(அ) இரு பகுதிகளுக்கும் இருவிதமான கரன்சி முறை அல்லது நாணய முறை வேண்டும். அந்த நாணயம் சம மதிப்புகொண்டவையாக இருக்க வேண்டும்.

(ஆ) ஒரேகரன்சி அல்லது நாணய முறை இருந்தால் கீழ்க்கண்ட பாதுகாப்புகள் செய்து தரப்பட வேண்டும்:

கிழக்கிலிருந்து மேற்கே மூலதனம் போய்ச் சேர்ந்து விடாமல் தடுக்க அரசியல் சட்டத்தில் போதிய பாதுகாப்பு இருக்க வேண்டும்.

இரண்டு பகுதிகளுக்கும் இரண்டு ரிசர்வ் பாங்கி முறை வேண்டும்.

கரன்சி அல்லது நாணய முறை ரிசர்வ் பாங்கிகள் இருக்கும்.

இது ஒன்றும் புரட்சிகரமான திட்டமல்ல!

அமெரிக்காவில் பெடரல் ரிசர்வ் சிஸ்டம் (Federal Reserve System) மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் செவ்வனே நடந்து வருவதை இங்கே உதாரணம் காட்ட விரும்புகிறேன்.

அப்படி இருந்தால் ஒருமுறைதான் மூலதனம் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு ஓடுவதைத் தடுத்து நிறுத்த முடியும்.

பாகிஸ்தான் பூகோள ரீதியாக இரு பகுதிகள் கொண்டது என்பது நிலைநாட்டப்பட்ட உண்மையாகும்!

எனவே ஒரு பகுதியில் ஏற்படும் சுபிட்சம் அல்லது பஞ்சம் இன்னொரு பகுதியில் நிச்சயம் எதிரொலிப்பதில்லை.

ஒரு பகுதியிலே வளர்ச்சி ஏற்பட்டால் அது நாடு முழுவதற்குமான வளர்ச்சியாகாது.

ஒரு பகுதியில் அரசாங்கம் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவு செய்தால் அதன் காரணமாக அடுத்த பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்படுவோருக்கு வேலை கிடைத்துவிடாது.

இரு பகுதிகளும் பொருளாதார ரீதியில் சுயேச்சை பெற்றதாக விளங்குகின்றன.

இங்கேயிருக்கிற விலைவாசிகளுக்கும் கூலி—சம்பள விகிதத்திற்கும் அங்கே நிலவுகிற விலைவாசிகளுக்கும், கூலி—சம்பள விகிதத்திற்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை. தங்கம் கூட இரு பகுதிகளிலும் ஒரே விலைக்குக் கிடைப்பதில்லை.

—ஆனல் இதன் காரணமாக மூலதனம் இங்கேயிருந்து அங்கே

ரஷ்யாவில் மத்திய நிதி அமைச்சரவை கிடையாது!

பாகிஸ்தான் இரு பூகோளப் பகுதிகளாகவும், அவ்விரு பகுதிகளிடையே சுமார் ஆயிரம் மைல் அன்னிய பூமி கொண்டதாகவும் அமைந்திருப்பதால் இரு பகுதிகளுக்குமாகச் சேர்ந்து ஒரே ஒரு செய்தித் தொடர்பு இலாக்கா என்கிற இலாக்காவை மத்திய அரசின் கையிலிருந்து எடுத்துவிட—வேண்டும் என்று நான் கூறவில்லை.

'ஆ'—வில் கண்ட முறை பின்பற்றப்பட்டால் கரன்சி மத்திய அரசின் கையில்தான் இருக்கும். ஆனல் அப்போது தனித்தனியான போவது தடுக்கப்படுகிறதா என்றல் இல்லை.

இப்போதுள்ள நிலைமையைக் கொஞ்சம் விளக்க விரும்புகிறேன்:

நம் இரு பகுதிகளுக்கும் ஒரே விதமான பொருளாதார அமைப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

நமக்கு ஒரு மாதிரியான நாண

யச் செலாவணி முறை வழக்கத்தில் இருந்து வருகிறது.

ஒரே ஒரு நிதி இலாக்கா மேற்குப் பாகிஸ்தானில் இருந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி வருகிறது. அதற்கு ஒரு மேற்கு பாகிஸ்தான் அமைச்சர் இருக்கிறார். ஒரே ஒரு ரிசவ் பாங்கி இருக்கிறது. அது மேற்குப் பாகிஸ்தானில் இருக்கிறது. அதுவே கரன்சி நோட்டுகளையும், நாணயங்களையும் அச்சிட்டு வெளியிடுகிறது.

அப்படி வெளியிடப்படும் கரன்சி நோட்டுகளும், நாணயங்களும் நாடு முழுவதும் சுற்றிவிட்டுக் கடைசியில் எங்கு போய்ச் சேருகிறது?

மேற்குப் பாகிஸ்தானுக்கு!

அந்த ரிசர்வ் பாங்கியின் தலைமை அலுவலகம் மட்டுமல்ல; இப்போது புதிதாகத் துவங்கப்பட்ட ஒன்றிரண்டு பாங்குகளைத் தவிர மீதமுள்ள எல்லா பாங்கிகளின் தலைமை அலுவலகங்களும் எங்கேயிருக்கின்றன?

மேற்குப் பாகிஸ்தானில்!

தலைநகரம் அங்கே இருப்பதால் முப்படையின் தலைமை அலுவலகங்கள் எங்கேயிருக்கின்றன?

அங்கே!

வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்கள், வெளிநாட்டு — உள்நாட்டு வியாபார நிறுவனங்களின் தலைமைக் காரியாலயங்கள் எங்கே?

அங்கே!

எனவே இங்கே ஒரு சிறு பேரம் நடைபெற்றாலும் உடனடியாக அந்தப் பணம் மறுநொடியே தலைமைக் காரியாலயம் இருக்கும் இடமான அங்கே போய்ச்சேர்ந்து விடுகிறது!

கம்பெனிகளின் பங்குப் பணம்; பாங்கிகளிலேயே உள்ள டெப்பாசிட் தொகை; அரசாங்கம் சேமிக்கும் பணம்; இங்கே இயங்கும் அலுவலகங்களின் வருமானம்; லாபம்; சேமிப்பு — இவையனைத்தும் ஒரு நொடியில் அங்கு போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

பாங்கிகள் எப்படி இயங்குகின்றன என்பதை உணர்ந்தவர்கள் அறிவர்: பத்து சதவிகிதத்திற்கும் குறைவான டெப்பாசிட் பணம் தான் பாங்குகளின் கைவசம் இருக்கும். மீதமெல்லாம் முதலீடு செய்யப்பட்டு விடுகிறது.

அப்படி முதலீடு செய்யப்படுகிற சேமிப்புத் தொகைதான் மூலதனம் (Capital) என்று சொல்லப்படுகிறது.

இந்த மூலதனம் முழுவதும் அங்கே முதலீடு செய்யப்படுகிறது.

அதனால்தான் இங்கே மூலதன வளர்ச்சி என்பது இல்லாத பொருளாக இருக்கிறது.

பணம் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்காக முதலீடு செய்யப்படுகிறது என்றால் அது வேலைவாய்ப்பினை உண்டாக்குகிறது என்று பொருள்!

யாருக்கு வேலை வாய்ப்பு உண்டாக்கிக் கொடுக்கப்படுகிறது?

அங்கேயிருப்பவர்களுக்கு!

எனவே தொழில் வளர்ச்சியெல்லாம் அங்குதான் காணப்படுகிறது!

மூலதனம் போய்க் கொண்டிருக்கும் அந்த 'ஒருவழிப் பாதை அடைக்கப்பட்டால்தான் நமக்கெல்லாம் விமோசனம்!

அதைச் செய்வதற்குத்தான் நமக்கென ஒரு ரிசர்வ் பாங்கி வேண்டும் என்று கோருகிறேன்!

நமக்குப் பொருளாதார அழிவு ஏற்படாமலிருக்க இது ஒன்றே உகந்த வழி!

இந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்டால் கரன்சி அல்லது நாணயச் செலாவணி நமது ஒற்றுமையின் அறிகுறியாக மத்திய அரசின் கையில் இருக்கும்; ஆனால் அதே நேரம் தனி ரிசர்வ் பாங்கி உருவாக்கப்படுவதன் மூலம் நமது அழிவும் தடுத்து நிறுத்தப்படும்!

இது எனது மேற்குப் பாகிஸ்தானியச் சகோதரர்களுக்குப்பிடிக்காவிட்டால் அடுத்துள்ள ஒரே வழி நாணயச் செலாவணியை மாநிலத்தின் கையில் கொடுப்பது தான்!

நாணயச் செலாவணி மாநிலத்தின் கையில் இருப்பதால் மத்திய அரசு பலகீனப்பட்டுவிடாது. நாட்டின் ஒன்றுபட்ட தன்மைக்கும் பங்கம் வந்துவிடாது.

எந்த மாதிரி அடையாளங்கொண்ட கரன்சிகளை வெளியிடுவது என்பது பற்றி விவாதித்து நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும்!

நாணயச் செலாவணி என்கிற இலாக்கா மத்திய அரசின் கையில்

நவீன சகுந்தலை

இல்லாமலேயே ஒரு கூட்டாட்சி செவ்வனே செயல்பட முடியும்.

அகில இந்தியாவிற்குமாகச் சேர்த்து மந்திரிசபைக் குழு சமர்ப்பித்தத் திட்டத்தில் நாணயச் செலாவணி என்கிற இலாக்கா மத்திய அரசிடம் ஒப்புவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாணயச் செலாவணி மத்திய அரசிடம் இல்லாமல் அது செயல்பட முடியாது—என்பது தெரிந்திருந்தால் அதை பிரிட்டிஷ் அரசு சிபார்சு செய்திருக்குமா? அப்போதைய காங்கிரசும், முசுலிம் லீக்கும் அதற்கு ஒப்புக் கொண்டிருக்குமா?

4வது அம்சம்

வரி விதிக்கிற சகல உரிமைகளும், வரியை வசூலிக்கிற சகல உரிமைகளும் மாநிலங்களுக்கே வேண்டும். இந்த உரிமைகளில் எதுவும் மத்திய அரசிற்குக் கிடையாது.

மத்திய அரசு தனது செலவுகளுக்காக மாநிலங்கள் வசூலிக்கிற வரிகளில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளும்.

—ஒருமைப்பாட்டு வாதிகளையும், போலிக் கூட்டாட்சி வாதிகளையும் இந்த அம்சம் மிகவும் கலக்கியிருக்கிறது.

இத்திட்டத்தினால் நாடுஉடைந்துவிடும் என்றும், பிரிவினை ஏற்பட்டுவிடும் என்றும் அவர்கள் விதவிதமான சப்தங்களையும், தூசிகளையும் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்!

எந்தக் காலத்திலும் எல்லாவிதமான சீர்திருத்தங்களுக்கும் இப்படிப்பட்ட எதிர்ப்பு ஏற்படுவது இயற்கைதான்!

ஒரு வலுவான கூட்டாட்சி வரிவிதிக்கும் உரிமையில்லாமல் இயங்க முடியும்; இயங்கிக்கொண்டு இருக்கிறது. இதனால் ஒரு கூட்டாட்சி மேலும் வலிவு பெறமுடியுமே தவிர வேறு விளைவுகள் ஏற்பட்டுவிடாது!

வரிவிதிப்பு என்பது அவசியத்தினால் ஏற்பட்ட ஒரு கடமை. அது உரிமையும் அல்ல; மகா பெரிய சக்தியும் அல்ல! (Taxation is a duty and necessity rather than a right and power).

வரியை விதிப்பதும், அதை வசூலிப்பதும் தொல்லைகள் நிறைந்த ஒரு பொறுப்புதானே? அதாவது ஒருவன் உடல்வருந்தி உழைத்துச் சாப்பிடுவது போல!

இப்போது இருப்பதைவிடச் சிறந்த வேலை தேட வேண்டும் என்று விரும்புகிறவர்களையும், தினசரித் தொல்லைகளிலிருந்து விடுபட சொத்துக்களைக் குத்தகைக்கு விடுபவர்களையும் நாம் தினசரி வாழ்க்கையில் நிறையப் பார்த்திருக்கிறோம்.

பழைய காலத்து ராஜாக்கள் அப்படித்தான் செய்தார்கள். தற்காலத்து நிலப் பிரபுக்கள் பலரும் அப்படித்தான் செய்கிறார்கள். வரி வசூலிப்பதற்கு ஏஜெண்டுகளை நியமனம் செய்வது புதிய முறையல்ல.

வரி வசூலால்தான் ராஜாங்கங்கள் இயங்குகின்றன என்றாலும், மத்திய அரசாக இயங்கி வந்த சக்கரவர்த்திகள் அனைவரும் வரி வசூலிக்கும் உரிமையை யாருக்காவது கொடுத்துவிட்டு அத்தொல்லைகளிலிருந்து விடுபடவே விரும்பினார்கள் என்பது எந்த நாட்டு வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலும் தெரியவரும்.

பண விவகாரங்கள் அனைத்தையும் தாங்களே கையாளவேண்டும் என்று தற்கால ஆட்சியாளர்கள் நினைப்பதற்குக் காரணம் அவர்களுக்கிருக்கும் 'பனியா மனப்பான்மை' தானே தவிர வேறொன்றுமில்லை.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் வரி விதிக்கும் அதிகாரம் பற்றி அவர்கள் ஏன் இப்படி சர்ச்சை செய்கிறார்கள் என்று கேட்கத் தோன்றும். ஆனால் அவர்கள் வரிவிதிப்பிலே கண்ணாயிருப்பதன் காரணம் ஏதோ ஒரு பெரிய அதிகாரம் கைக்கு வருகிறது என்பதால் அல்ல. திரட்டப்படும் பணத்தின் மீது அவர்கள் கண் வைத்திருப்பது தெரிய வரும்.

மத்திய அரசு இயங்குவதற்குப் பணம் வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் ஒவ்வொரு மாநிலமும் தான் வசூலிக்கும் வரியில் இத்தனை பங்கு பணத்தினை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடுவது என்று அரசியல் சட்டத்திலேயே பங்கிடு செய்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

எந்த வரியில் மாறுதல் செய்வதன் மூலம் பண்டங்களின் தேவையில் மாறுதல் செய்ய முடியுமோ அத்தகைய (Fiscal Txation) வருமான வரி போன்றவை மட்டிலுமே மத்திய அரசு கவனம் செலுத்துவது வழக்கம்.

சில தொழில்களைப் பாதுகாப்

பாவ மூட்டை

பதற்காக வேறு தொழில்களுக்கு வரி விதிக்க வேண்டியிருக்கிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக வரிவிதிக்க வேண்டியிருக்கிறது.

வியாபார ரீதியாக அரசாங்கம் வரி விதிக்க வேண்டியிருக்கிறது.

—பொதுவாக இப்படிப்பட்ட வரிகள் மாநிலங்கள் கையில் இருப்பதுதான் வழக்கம்.

—இப்படித்தான் அமெரிக்காவிலும் இதர கூட்டாட்சிகளிலும் நடைபெறுகின்றன.

சோவியத் நாட்டில் மேற்குறிப்பிட்ட வருமான வரி போன்றவைகளைக் கூட மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கவில்லை.

சோவியத் யூனியனில் உள்ள மத்திய அரசில் நிதி அமைச்சர் என்கிற ஒரு அமைச்சர் பதவியே கிடையாது; நிதி அமைச்சகம் என்கிற அலுவலகமும் கிடையாது.

அங்கு நிதி அமைச்சரும், நிதி அமைச்சகங்களும் மாநிலங்களில்தான் இருக்கின்றன.

அவை மத்திய அரசின் தேவைகளைக் கவனித்துக் கொள்கின்றன.

—இந்த ஏற்பாடுகள் காரணமாக அமெரிக்காவும், சோவியத்நாடும் பலகீனமாகிவிட்டனவா?

—இந்த ஞானத்தையும் அனுபவத்தையும் வைத்துக் கொண்டுதான் பிரிட்டீஷ் அரசு உருவாக்கிய 'மந்திரி சபைக்குழு' வரி விதிப்பு அதிகாரம் இல்லாத ஒரு மத்திய அரசைப் பரிந்துரை செய்தது; இந்த ஏற்பாட்டிற்குக் காங்

லிருந்து மத்திய அரசு பெறுகிற வருமானத்தை அந்த மத்திய அரசு எப்படி வேண்டுமானாலும் செலவிடலாம்.

அதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் மாநிலங்களுக்குக் கிடையாது.

யுத்த காலத்தில் வேண்டுமானால் மத்திய அரசு தனது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வழிவகை செய்து கொள்ளலாம்! நெருக்கடி நேரத்தில் மத்ஙிய அரசை மேலும் வலுப்படுத்திக் கொள்ளலாம்.

—எனவே மாநில சுயாட்சி கோருகிறவர்களை நாட்டு ஒற்றுமைக்கு உலை வைப்பவர்கள் என்று கூறுவது பித்தலாட்டமாகும்!

ஆனல் அதே நேரம் வரி வசூலிக்கும் அதிகாரம் என்னும் சுமையை மத்திய அரசிடமிருந்து எடுத்து விடுவதன் மூலம் கீழ்க்கண்ட நன்மைகள் கிடைக்கும்:

(அ) தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் - போன்ற துறைகளில் மத்திய அரசு அதிகக் கவனம் செலுத்த முடியும்.

(ஆ) ஒரே மாதிரியான காரியத்தை மாநிலங்களும் மத்திய அரசும் செய்வதால் ஏற்படும் - பணம் - நேரம் - உழைப்பு ஆகியவை மீதப்படும். வழக்குகளும் குறையும். இப்படி மீதப்படுவதால் கிடைக்கும் பணத்தையும், அலுவலர்களையும் வேறு பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்த முடியும்.

(இ) வரி வசூலிப்பது சுலபமாகவும்,

வணிக்குத் தனித் தனியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்,

2. கிழக்குப் பகுதி வெளிநாட்டுச் செலாவணி வருவாய் கிழக்குப் பாகிஸ்தானிடமும், மேற்குப் பகுதி வருவாய் மேற்குப்பாகிஸ்தானிடமும் இருக்கும்.

3. மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலாவணித்தேவையை இரு பகுதிகளும் சரி சமமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரப்படியோ தந்துவிட வேண்டும்!

4. உள்நாடு சம்பந்தப்பட்ட பொருள்கள் கட்டுப்பாடின்றி சுங்க வரியில்லாமல் ஒரு பகுதியிலிருந்து இன்ெனுரு பகுதிக்குச் சென்று வரலாம்!

5. மாநில அரசுகள் வெளி நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்ளலாம்; வெளி நாட்டில் வியாபாரத் தொடர்பு நிலையங்கள் வைத்திருக்கலாம்; வியாபார சம்பந்தமாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்—இப்படி அரசியல் சட்டத்தில் அதிகாரங்கள் வரையறுக்கப்படவேண்டும்.

கிழக்குப் பகுதியைத் தொழில்மயமாக்க வேண்டும். செல்வம் இங்கேயே தங்கி இங்குள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். பண வீக்கத்தைக் குறைக்க ஏற்றுமதியையும் இறக்குமதியையும் செம்மைப்படுத்தி நியாய விலையில் பண்டங்கள் மக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்!

கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக் கட்சியும் ஒப்புக் கொண்டது.

வரி விதிக்கிற பாரத்தைத் தாங்காமலேயே ஒரு மத்திய அரசு தனக்குத் தேவையான ரொக்கச் செலவினங்களைச் சந்திக்க முடியும்!

—இந்த நோக்கத்தோடுதான் நான் என் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறேன்!

என்னுடைய திட்டத்தின்படி ஒவ்வொரு தலைப்பிலும் வருகிற வருவாயில் குறிப்பிட்ட சதவிகிதம் மத்திய அரசிற்குப் போய்ச் சேரவேண்டும்—என்று அரசியல் சட்டத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

அப்படி மாநிலங்களின் வருவாயி

செலவுக் குறைவானதாகவும் ஆகும்.

(ஈ) வரி வசூலிப்பது மாநிலங்களாக இருப்பதால் இப்போது இரு துறைகள் வசூலிப்பதைவிட செலவுக் குறைவு ஏற்பட்டு சிக்கனமும் ஏற்படும்.

(உ) ஒரு முனை வரிதான் நவீன வரி விதிப்பு முறையாகும். அதை இம்முறையால் எய்த முடிகிறது.

5-வது அம்சம்

இந்த அம்சத்தின் கீழ் நான் கீழ்க்கண்டவற்றைச் சிபாரிசு செய்திருக்கிறேன்.

1. நாட்டின் இரு பகுதிகளும் சம்பாதிக்கிற வெளிநாட்டுச் செலா

சணல் தொழிலைத் தேசிய மயமாக்கி சணல் உற்பத்தியாளருக்கு நியாய விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்; சணல் ஏற்றுமதியால் கிடைக்கும் அன்னியச் செலாவணி இங்கேயே தங்க வழிவகை காண வேண்டும்.

இந்தக் கருத்தை மனதில் வைத்துத்தான் 1957—ல் அவாமி லீக் அரசாங்கம் சணல் வாணிக வாரியத்தைத் துவங்கியது. ஆனல் மத்திய அரசு அதை இயங்க விடாமல் செய்துவிட்டது!

—இத்தகைய ஒரு சுபிட்ச சூழ்நிலை கிழக்கிலே உருவாக வேண்டுமானல் எனது மேற்

கூறிய திட்டங்கள் நிறைவேற்றப் பட்டாக வேண்டும்.

6-வது அம்சம்

இந்த ஒரு அம்சத்தின்படி கிழக் குப் பகுதிக்கு ஒரு தனி இராணு வம் அல்லது இராணுவம்போன்ற அமைப்பு உருவாக்கப்பட வேண் டும்.

இது ஒன்றும் புதுமையான திட்டமல்ல.

பிரிவினைக்கு முன்பு 'கிழக்குத் துப்பாக்கிப் படை' (Eastern Rifles) என ஒரு அமைப்பு இருந்தது.

பிரிவினைக்குப் பிறகு அதன் வதும் ஒரு சில குடும்பங்களின் கையில் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்குகிறவரை இந்நிலையிலே மாற்றமேதும் இருக்க முடியாது. ஆனல் அதற்கு முன்பு இப்போது நடக்கும் பிராந்தியச் சுரண்டலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

மூன்ருவதாக இப்போது அநீதி இழைக்கப்படுகிறதென்ருல் அதற் குக் காரணம் நாட்டின் பூகோள அமைப்பால் உருவாக்கப்பட்டிருக் கிறது. ஒரு செயற்கைத் தன்மை தான்! உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம்!

கப்பட்டிருக்கின்றன!

—எனவே அவைகள் செல விடுவது அப்பகுதியில்தான்!

தலைநகரம் இங்கேயிருந்தால் இப் பகுதி வாழ்ந்திருக்கும்; அப்பகுதி தாழ்ந்திருக்கும்!

இப்பகுதி வளர்ந்தோங்கி அப்பகுதி தாழ்ந்திருந்தால், ஏ, மேற்குப் பகுதி வாழ் மக்களே! நீங்கள் எந்த மாநில சுயாட்சி கேட்பதற்காக எங்கள் மீது கண்டனக்கணை பொழிகிறீர்களோ; இல்லாத உள்நோக்கங்களைக் கற்பிக் கிறீர்களோ; அந்த மாநில சுயாட்சி முழக்கத்தை நீங்கள் அல்லவா எழுப்பியிருப்பீர்கள்! பிராந்திய நீதி

மாநில சுயாட்சியால் மத்தியஅரசு வலுப்பெறும்!

பெயர் (East Pakistan Rifles) என்று மாற்றப்பட்டது.

தற்போதைய அரசு அதை மாநிலத்தின் கையிலிருந்து பிடுங்கி விட்டது.

ஒரு வேண்டுகோள்

நான் முடிப்பதற்கு முன்பு எனது மேற்குப் பாகிஸ்தான் சகோதரர்களுக்கு ஒரு வேண்டு கோள் விடுக்கிறேன்,

முதலாவதாக; நான் மேலே சொன்னதெல்லாம் கிழக்குப்பகுதி மக்களின் நன்மைக்காக மட்டுமே என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். எனது 6 அம்சத் திட்டத்தில் கிழக்குப் பகுதி மக்க ளுக்கு நன்மையிருப்பது போலவே மேற்குப் பகுதி மக்களுக்கும் நன்மையிருக்கிறது. இதை நிறை வேற்றுவதால் இரு சாராருக்கும் சரிசமமான நலன்களே கிட்டும்

இரண்டாவதாக; கிழக்குப் பாகிஸ்தானத்துச் செல்வம் மேற்கே சென்று குவிகிறது என்று நான் குறிப்பிடும்போது ஒரு பூகோளப் பிராந்தியத்திற்கு அந்த ஆதாயம் போய்ச் சேருகிறது என்பதையே நான் குறிக்கிறேன். ஏதோ மேற் குப் பகுதியில் வாழும் பாமர மக்கள் அத்தனைப் பேருக்கும் அந்தச் செல்வம் நேரடியாகப் போய்ச் சேருகிறது என்று அதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. இப் போது நடைபெறுகிற பொருளா தாரச் சுரண்டலில் சிக்குண்டு எங் களைப் போலவே அவதிப்படும் துர்ப்பாக்கியர்கள் லட்சோப லட் சம் பேர் மேற்குப் பகுதியிலும் இருக் கிருர்கள் என்பது எனக்குத் தெரி யும். நாட்டின் செல்வம் முழு

பாகிஸ்தானின் தலைநகரம் இப் போது இருப்பது போல் மேற்குப் பகுதியிலே இல்லாமல் கிழக்குப் பகுதியிலே அமைந்திருந்தால் இப் போது நடப்பதெல்லாம் தலை கீழாக நடக்கும். வருமானத்தில் 62 சதவிகிதம் இராணுவத்திற் குச் செலவழிக்கப்படுகிறது. 32 சதவிகிதம் மத்திய அரசின் நிர் வாகத்திற்குச் செலவழிக்கப்படுகி றது. தலைநகரம் மட்டும் கிழக்கே யிருந்தால் அந்தப் பணமெல்லாம் இங்கே செலவழிக்கப்படும்!

''அரசாங்கம் செலவு செய்தால் அது பொது மக்களுக்குச் வருமான மாக மாறி விடுகிறது. அரசாங் கத்திற்கு வருமானம் வந்தால் அது பொதுமக்களுக்கு செலவாக மாறி விடுகிறது'' — என்பது பொருளாதாரப் பழமொழி!

—தலைநகரம் இங்கேயிருந்தால் இந்தப் பழமொழி இங்கே பலித் திருக்கும்!

இப்போது வருவாயில் 94 சத விகிதம் மேற்கே செலவிடப்பட்டு, மேற்குப் பகுதி மக்களின் வரு மானமாக மாறுகிறதே—அந்த தொகை முழுவதும் நம் பகுதியை வளமாக்கப் பயன்படுத்தப்பட்டி ருக்கும்.

'மத்திய அரசின்' தலைநகரம் அங்கேயிருப்பதால் முப்படைகளின் தலைமை அலுவலகங்கள் அங்கே அமைந்திருக்கின்றன.

மத்திய அரசின் நிறுவனங்கள் அனைத்தும் அங்கே அமைக்கப்பட் டிருக்கின்றன!

வெளிநாட்டுத் தூதுவரகங் கள் இயற்கையாக அங்கே அமைக்

கோரும் போராட்டத்தை நீங்கள் அல்லவா துவக்கியிருப்பீர்கள்!

அப்படியொரு நிலை ஏற்பட்டி ருக்குமேயானல் மாநில சுயாட்சிக் கோரிக்கையின் உண்மையான அடிப்படை நீங்கள் கூறுவது போன்ற தவருன அடிப்படை அல்ல என்பதை உணர்ந்துகொண் டிருப்பீர்கள்!

நீங்கள் அப்படி பிராந்திய அரசியல் நீதி வேண்டி மாநில சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பி யிருந்தால் நாங்கள் என்ன செய் திருப்போம் தெரியுமா?

கிழக்குப் பகுதி மக்களாகிய நாங் கள் உங்கள் கோரிக்கை குறுகிய மனப்பான்மை கொண்டது; பிரிவினை மனப்பான்மை வளர்ப்பது—என்றெல் லாம் கெட்டபெயரிட்டு வசைபுராணம் பாடாமல் உங்கள் மாநில சுயாட்சித் திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொண் டிருப்போம்!

நீதி கோருவதும்; சமத்துவம் கோருவதும் உங்கள் உரிமை! அப்படிச் செய்ய வேண்டியது உங்கள் கடமை!—என்று கருதி யிருப்போம்!

இல்லை, இல்லை; நாங்கள் இன் னும் ஒருபடி மேலே சென்றிருப்போம்!

நீங்களே இந்தக் கோரிக்கைகளை எழுப்புகிறவரை நாங்கள் காத்திருக்க மாட்டோம். நீங்கள் மாநில சுயாட் சித் திட்டக் கோரிக்கையை எழுப்பு வதற்கு முன்பே நாங்கள் அதை நிறை வேற்றி உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்திருப்போம்!

நாங்கள் சகோதரர்களுக்குள்

ளாக நீதி — சமத்துவம் — நடுநிலைமை மாறாத நேர்மை—இருக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

ஒரு நாடு என்பது ஒரு பெரிய குடும்பமே தவிர வேறல்ல. குடும்பத்திற்குள்ளாகவே ஒருவர் மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவதால் இன்னொருவர் வயிறு நிரம்பிவிடாது. ஆகவே, நாங்கள் எங்கள் நியாயமான பங்கினைக் கேட்கும்போது எங்களைச் சுயநலவாதிகள் என்று நீங்கள் எந்த மனசாட்சியை வைத்துக்கொண்டு கேட்கிறீர்கள் ?

உங்கள் சகோதரர்களாகிய எங்கள் பங்கினையும் சேர்த்துச் சாப்பிடும் உங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று சற்று சிந்தித்துப் பார்த்தீர்களா?

நாங்கள் எங்களுக்குரிய பங்கினைத்தான் கேட்கிறோம்; உங்களுக்குரிய பங்கினை அபகரிக்க விரும்பவில்லை!

நாங்கள் உங்களோடு சம பங்காளிகளாக வாழ விரும்புகிறோம்; நீங்களோ ஆதிக்கம் செலுத்துபவராக வாழ நினைக்கிறீர்கள்!

எந்தத் தலைவன் நாட்டின் இரு பகுதியும் இரு கண்கள்; இரு காதுகள்; இரு நாசித் துவாரங்கள்; இரு வரிசைப் பற்கள்; இரு கைகள்; இரு கால்கள்—என்று சமமாகப் பாவிக்கிறானோ; எந்தத் தலைவன் இரு அவயங்களில் ஒன்று தெரிந்தோ தெரியாமலோ பலவீனப்படுத்தப்பட்டால், அது ஒட்டு மொத்தமாக நாட்டையே பழுதாக்கும் என்றும், அப்படிச் செய்கிறவர்கள் நாட்டின் எதிரிகள் என்றும் கருதுகிறானோ; எந்தத் தலைவன் அந்த எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டானோ அவனே நாட்டின் தேசியத் தலைவனாக இருக்கத் தகுதி படைத்தவன்!

எனதருமை மேற்குப் பாகிஸ்தான் சகோதரர்களே! சகோதரிகளே! வங்க மொழி ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை எழுப்பியபோது அது நாட்டுப் பிரிவினை கோரிக்கை என்று கண்டனக் குரல் கிளப்பினீர்கள்!

ஆனால் பிறகு இந்தக் கோரிக்கையை நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள். ஆனால் அதை ஒப்புக் கொண்டதால் நாடு பிரிவினை செய்யப்பட்டதா?

எங்களது பரிசுத்தமான—நியாயமான கோரிக்கைகளுக்காக ஒவ்வொரு முறையும் நாங்கள் உங்களோடு எத்தகைய உக்கிரமான போராட்டம் நடத்த வேண்டியிருந்தது? எவ்வளவு இரத்தம் சிந்த வேண்டியிருந்தது? எத்தனை அடக்குமுறைகளைச் சந்திக்கவேண்டியிருந்தது? நீங்கள் என்ன அன்னிய ஆட்சியாளரா — உங்களிடம் போராடி நீங்கள் விரும்பாத விதத்தில் சலுகைகளைத் தட்டிப் பறிக்க வேண்டும் என்பதற்கு! இதற்காக நீங்கள் வெட்கப்பட வேண்டாமா? இது உங்களுக்குப் பெருமை தருவதாக இருக்கிறதா? தயவுசெய்து இந்த மனப்பான்மைக்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள்.

தயவு செய்து எங்களது சகோதரர்களாக இருங்கள்; எங்களை அடக்கி ஆள்கிறவர்களாக இருக்காதீர்கள் !

இந்த 6-அம்சத் திட்டத்தை தங்களுக்கே உரிய காரணங்களுக்காக எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எதையும் தங்கள் சொந்தத் தராசில் வைத்து எடை போடுவார்கள். இப்போதிருக்கின்ற ஆதிக்க அரசுதான் நிலையான அரசு என்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்க முனைகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குத் துரோகிகள் — நாட்டு ஒற்றுமையைக் கெடுப்பவர்கள் — என்று பட்டம் சூட்டி விடுவார்கள். நமது மாபெரும் முன்னோர்களான பஸ்லுல் ஹக்—சுரவர்த்தி போன்றோர் அத்தகைய தாக்குதலுக்குப் பலியாகியிருக்கின்றனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிறவர்களுக்கு இத்தகைய எதிர்ப்புகள் சர்வ சாதாரணம்!

என்னை நோக்கியும் இத்தகைய எதிர்ப்புக் கணைகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

நமது பெரியவர்கள் ஆசியாலும், எனது தோழர்கள் துணையாலும், என் நாட்டு மக்களின் அன்பு கெழுமிய ஆதரவாலும் ஆண்டவன் எதையும் தாங்கும் இதயத்தை எமக்கு வழங்கியுள்ளான்.

கரை காண முடியாத அளவு என் நாட்டு மக்களின் பேரன்பு எனக்குப் பக்கபலமாக இருக்கின்றவரை நான் அவர்களுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

என் நாட்டு மக்களின் பிரச்னையைத் தீர்க்கிற மகத்தான பொறுப்புக்கு முன்னால் தனி ஒருவனான என் உயிர் எம்மாத்திரம்?

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதைத் தவிர புனிதமான போராட்டம் இந்த உலகத்தில் வேறு என்ன இருக்கிறது?

—எனது அரசியல் ஆசானான சுரவர்த்தியின் ★ காலடியிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடமிது! நம்மை நடத்திச் செல்ல இன்று அவர் நம்மிடையே இல்லை!

ஆனால் அவர் கற்றுத் தந்த பாடத்தின்படி வாழ்ந்து, அவர் ஏற்றி வைத்த உரிமைக் கொடியை மேலோங்கிப் பறக்கவிட நான் உறுதி ஏற்றிருக்கிறேன்.

நமது நாடு என் வாழ்நாளில் இருள் மிகுந்த காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது.

இந்த இடர் மிகுந்த நேரத்தில் ஏற்கனவே சுமைகள் மிகுந்திருக்கும் என் தோள்களின் மீது கட்சித் தலைமை என்னும் பொறுப்பு மிகுந்த பாரத்தையும் அவாமி லீக் கட்சி ஏற்றி வைத்திருக்கிறது.

நான் பணியாற்றுவதற்குப் பயப்படுபவன் அல்லன்.

எனவே அடக்கத்தோடு அந்தப் பெரிய பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்!

என் மக்கள் மீது நான்மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

இரவு நேரத்தின் கருமை மிகுந்த பகுதிதான் விடியற்காலைக்கு முன்னோடி என்பதையும் நான் அறிவேன்!

நம்மிடமிருந்து பலவந்தமாகப் பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் மீட்கப் போராடுவதற்கு என் வாழ்நாளின் மீதமுள்ள நாட்களைச் செலவிடும் வகையில் எனக்கு மனோபலத்தையும், உடல் நலத்தையும் வழங்கிட என் அன்புக்குரிய மக்கள் அல்லாவை வேண்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும்!

★ சுரவர்த்திதான் அவாமி லீக் கட்சியை நிறுவியவர்.

R. Natarajan

பிறை-மலர்-பூஜை

"வணக்கம். வாருங்கள், நலந்தானே?"

வாசற்படியின் மேல் ஏறி நின்ற சிவதாணு சுற்றுமுற்றும் பார்த்தான். வீட்டின் கதவு பூட்டிக் கிடந்தது. வராந்தாத் தூணில் தொங்கிய பிளாஸ்டிக் பலகையில் பொறித்திருந்த 'கே. எஸ். காசிநாதன் எம். ஏ.,' என்னும் பெயரின்கீழே, 'அவுட்' என்ற எழுத்துக்கள் பளிச்சென்று தெரிந்தன. அந்த பெயர்ப் பலகைக்கு மேலே பொருத்தப் பெற்றிருந்த சிறியதொரு மரப் பெட்டியில் அன்று வந்த சில தபால் கடிதங்கள் கிடப்பது அதன் கண்ணாடிச் செருகல் வழியே காணப்பட்டது....

ஜெகசிற்பியன்

'வீடு சாத்திக் கிடக்கிறதே யார் நம்மை வரவேற்பது?' என்று எண்ணிய சிவதாணு மீண்டும் தன் பார்வையை அங்குமிங்குமாக ஓடவிட்டான். அந்தப் பெரிய வீடும் அதைச் சார்ந்த விசால மான தோட்டமும் பாழடைந்த மாதிரி தோற்றமளித்தன. வியப் படைந்த நிலையில் மோவாயைத் தடவியவாறு தயங்கி நின்றவன், ஏதோ சந்தேகமடைந்து ஓரடி முன்சென்று பூட்டை இழுத்துப் பார்த்தான் ''வணக்கம். வாருங் கள், நலந்தானே?''

திடுக்குற்ற சிவதாணு பூட்டிக் கிடந்த பூட்டைச் சட்டென்று விட்டு விட்டுப் பின்னால் நகர்ந்து பரபரப்புடன் சுற்றிலும் திரும்பி நோக்கினன். மாலை முதிர்ந்து வந்த அந்த மங்கலான நேரத்தில் —வீட்டின் உள்ளோ, வெளியிலோ —யாரும் இருப்பதாகத் தெரிய வில்லை.

''என்ன இது விந்தை எங் கிருந்து இவ்வரவேற்புக் குரல் கேட்கிறது. அதுவும் ஒரு பெண் ணின் குரல் போல் தொனிக்கி றதே?' — சிவதாணுவின் மனதில் அச்சம் புகுந்து கொண்டது. அவன் அங்கு வந்திருப்பதன் காரணமும் அவ்வீட்டின் சுற்றுப்புறச் சூழலும் சேர்ந்து அந்த அச்ச உணர்ச்சியை மேலும் மிகையாக்கின. ஒரு மாதத்துக்கு முன் திடீரென்று இறந்துபோன ஓர் இளம்பெண் ணின் தந்தையைப் பார்த்துத் துக்கம் விசாரித்து விட்டுப்போகவே அவன் இங்கு வந்திருக்கிருன்.

குழம்பி நின்ற சிவதாணு தன் னிடமிருந்த தைரியத்தையெல்லாம் கூட்டிச் சேர்த்து நெஞ்சில் நிறுத் திக்கொண்டு அந்தக் குரல் வந்த திக்கை நோக்கி மெல்ல நடந்து போய், வராந்தாவின் வலப் பக்கம் சாத்தாமல் ஒருக்களித் திருந்த சன்னலை ஓசைப்படாமல் திறந்து பயப்பிராந்தியுடன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

'கிர்ர்..கீக்கீ கிர்ர்..கீக்கி'

குபுக்கெனச் சிரித்து விட்டான் சிவதாணு. சிரித்துக் கொண்டே அந்தச் சன்னலைப் பரக்கத் திறந்து விட்டுத் தன் பார்வையை மீண் டும் உள்ளே செலுத்தினன்.

அவ்வறையின் சன்னலோரம் நிறுத்தப் பெற்றிருந்த ஒரு ஸ்டாண்டில் பித்தளைப் பூணிட் டுப் பாங்குற விளங்கிய கிளிக் கூண்டு ஒன்று தொங்கிக் கொண் டிருந்தது. அந்தக் கூண்டினுள் அழகியதொரு பச்சைக் கிளி சிறகுகளை அடித்து அங்குமிங்கு மாக அவசர நடை பயின்றவாறு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

சற்றுமுன் தனக்கு முகமன் கூறி வரவேற்றது யார் என்பதை இப்போது புரிந்து கொண்ட சிவ தாணு புன்னகையுடன் தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த் தான்; ஆறரையாகி விட்டிருந் தது. 'சரி; அவர் வரும் வரை யில் இப்படி உட்கார்ந்திருப் போம்' என்று எண்ணியவனய் வராந்தாவில் கிடந்த ஒரு பெஞ் சில் அமர்ந்தான். செங்கல்பட்டி லிருந்து சென்னைக்குப் பஸ்ஸில் வந்ததால் அவன் உடம்பு வெகு வாகச் சோர்ந்திருந்தது. அத்து டன், வந்த உடனேயே காசி நாதனைப் பார்க்க முடியாது போனதால் மனம் சுணங்கித் துவண்டது. ஆயினும் அவரை நேருக்கு நேர் சந்திக்கும்போது அந்த முதல் விநாடி நேரத்தில் ஏற்படப் போகும் துன்ப அனு பவத்தை நினைக்கையில் அவ் விநாடியின் தூரம் தள்ளிப்போவ தில் அவனுக்கு உள்ளூற ஒருவித ஆறுதலாகவும் இருந்தது. அவர் தாமாகவே வரட்டும்; அல்லது வரா மலே போனாலும் நல்லதுதான்.'

இரண்டு கால்களையும் நெடுக நீட்டி, பெஞ்சின் பின்னே இருந்த சுவரில் சரிந்து சாய்ந்தவாறு மெல் லக் கண்களை மூடினன் அவன்.

புறப்புலன் அடைப்பட்டதுமே அகப்புலன் திறந்து கொள்வது சகஜமல்லவா? இதுகாறும் தீவிர முயற்சி செய்து முடக்கிப்போட்டு வைத்திருந்த அந்தத் துயர நிகழ்ச் சிகளின் நினைவுகள் கட்டவிழ்ந்த ரப்பர் பிரிச் சுருணைப்போல் அவ னது மனப் பரப்பில் சிலிர்த்துக் கொண்டு நீண்டன.

ஃ ஃ ஃ

சிவதாணுவின் தாய் மாமனை காசிநாதன் ஒரு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி யாற்றி வருபவர். வயசு ஐம்பத்து நாலுக்கு மேல் இருக்கும். சைவ சித்தாந்தத்திலும் பழந்தமிழ் இலக் கிய ஆராய்ச்சிலுமாகத் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண் டிருந்த அவர் அறிஞர் பெருமக்க ளிடையே பெரிதும் மதிப்பு வாய்ந் தவராக விளங்கினர். அவரது வாழ்க்கைத் துணைவியான கோமதி யம்மாளைப் பெண்ணினத்தின் தில கம் என்றுதான் சொல்லவேண்டும்.

இவர்களின் ஒரே செல்வ மக ளாகப் பிறந்து, பெற்றோரின் குணநலன்கள் அத்தனையையும் வரித்துக் கொண்டு, பதினேழு வயது நிரம்பப்பெற்ற அழகுப் பதுமையாய் வளர்ந்து நின்ற விஜயா, கல்லூரியில் பி. ஏ. முத லாண்டில் படித்துக் கொண்டிருந் தாள். இம்மூன்று பேர் கொண்ட அச்சிறு குடும்பத்தில் நிலவிய அமைதியையும் மகிழ்ச்சியையும் காணும் எவரும் வியந்து பாராட் டாமல் இரார்.

ஆயின், எங்கும் எதிலும் ஏதே னும் ஒரு குறையை வைத்துத் தனது அலகிலா விளையாட்டைக் காட்டுவது இயற்கையின் செயல் அல்லவா? மனத்தளவில் எவ்விதக் குறையுமின்றி இனிதே நாட் களைக் கழித்து வந்த காசிநாத னின் உடம்புக்கு அடிக்கடி ஏதா வது வந்து சில தினங்கள் வரை பாடாய்ப் படுத்திவிட்டுப் போவது வழக்கமாயிற்று. உள்ளத்தின் திண்மை கொண்டு அதையெல் லாம் எளிதில் எதிர்த்து வந்த அவர், ஒரு சமயம் கடுமையான வயிற்று வலியால் அவதிப்படலா ஞர். அவரைப் பரிசோதித்த டாக் டர், வயிற்றில் ஏதோ கட்டி இருக்கிறது என்று கண்டு அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். ஒரு மாத காலம்வரை படுக்கையில் கிடந்த காசிநாதன் மெல்ல மெல் லக் குணம் பெற்று எழுந்து நட மாடலானர். ஆனல் இரண்டு வாரங்களுக்குப் பின் அவருக்குத் திடீரென்று ஜுரம் வந்துவிட்டது. ஏற்கனவே பலவீனமாயிருந்த அவ ரது உடலால் இந்தக் கடுமை யான ஜுரத்தைத் தாங்க முடி யாது போகவே ஒருசில தினங் களில் உயிராபத்தான கட்டத்தை நெருங்கி விட்டார். அவரைக் காப்பாற்றத் தம்மால் ஆனவரை முயற்சி செய்த டாக்டர்களும் நம்பிக்கை இழந்தவர்களாய், 'இனி மனிதப் பிரயத்தனத்தால் ஆகக் கூடியது ஒன்றுமில்லை; ஏதேனும் அற்புதம் நிகழுவதை எதிர்பார்க்க வேண்டியதுதான்' என்று சொல்லி விட்டனர்.

முச்சந்தியும் சந்து முனையும்

முச்சந்தி என்பதற்கும் சந்துமுனை என்பதற்கும் வித்தி யாசம் தெரியாமல் காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிருர்கள்.

முச்சந்தி என்பது கண் ணியமானது; சந்துமுனை என் பது தரக்குறைவானது. காங் கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் முச்சந்திக்கும் சந்து முனைக்கும் வித்தியாசம் தெரி யாதவர்களா யிருக்கிருர்கள். அவர்கள் இதை உணர வேண்டும்.

—அறிஞர் அண்ணா

கோமதியம்மாளும் விஜயாவும் புழுவாய்த் துடித்தனர். ஊன் உறக்கமின்றி இராப் பகலாகக் கண் விழித்துக் காசிநாதனின் பக்கத்திலேயே இருந்து பணிவிடைகள் செய்துவந்த அவர்களும் நோயாளிகள் போல் இளைத்துத் துரும்பாயினர்.

அன்று மாலை ஆறரை மணி இருக்கும். ஒளி கரந்து இருள் சுரந்து வரும் நேரம். பாதிப் பிரக்ஞை தவறிய நிலையில் படுத்துக் கிடந்தார் காசிநாதன். அவரது தலைமாட்டில் சோகமே உருவாய் உட்கார்ந்திருந்த விஜயா, திருவாசகப் பாடல் ஒன்றை மெல்லிய இனிய குரலில் பாடிக்கொண்டிருந்தாள். கால்மாட்டில் கண்ணீரும் கம்பலையுமாக விம்மிப் பொருமிக்கொண்டு நின்றிருந்தாள் கோமதியம்மாள். கட்டிலைச் சுற்றி உறவினர்களும் நண்பர்களுமாகக் குழுமியிருந்தனர்.

அறையில் விளக்கு ஏற்றப்பட்டது. புலம்பிக் கரைந்து நின்றுகொண்டிருந்த கோமதியம்மாள் ஏதோ நினைவு வரப்பெற்றவளாய் சட்டென்று நிமிர்ந்து சுவரில் தொங்கிய காலண்டரைப் பரபரப்புடன் பார்த்தாள். மூன்றாம் பிரதிமைத் திதி. வாடி வெளுத்துச் சோர்ந்திருந்த அவளது முகத்தில் இப்போது ஓர் அசாதாரண நம்பிக்கையொளி சுடர்விட்டது. மணமான காலத்திலிருந்து கடந்த மாதம் வரை மூன்றாம் பிரதிமைத் திதியன்று அவள் சகல நேம நியமங்களுடன் முழு விரதமேற்றுத்தெய்வ சிந்தனைகளில் மனத்தை நிலைநிறுத்திப் பிரதிமைத் தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டவள். இத்தகைய நோன்பினால் மாங்கல்ய கெட்டிப்பாடு சித்திக்கும் என்பது அவளின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆனால் அன்றைய தினம் அவளுக்கு அந்த நினைவே இல்லை. மரணப் படுக்கையில் கிடக்கும் கணவரின் அருகிலிருந்து பணிவிடைகள் செய்து வந்ததால், அன்று மூன்றாம் பிறை தினம் என்பது முற்றும் மறந்தே போய்விட்டது. ஆயினும் அவளை அறியாமலே அன்றைய தினம் மேற்கொள்ள வேண்டிய எல்லா அனுஷ்டானங்களையும் கைக்கொண்டுவிட்டாள் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது, பொழுது புலர்ந்தது முதல் இந்நேரம் வரை பச்சைத் தண்ணீர்கூட அவள் அருந்தவில்லை; சிந்தையெல்லாம் இறைவனின் மீதே லயித்துக் கிடக்கிறது...

கோமதியம்மாள் ஏதோ ஆவேசம் வந்தவள் போல் மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் மளமளவென ஏறி விரைந்தாள். அவ்வறையில் இருந்தவர்கள்இதைக் கண்டு திகைத்தனர்.

பூஞ்சை இருள் பூசிக் கிடந்த மாடித் தளத்துக்குத் தட்டுத்தடுமாறி ஏறி வந்த அவள் அவசரமாக மேற்றிசையில் தன் பார்வையைச் செலுத்தினாள்.

அங்கே—

மேற்கு வானின் விளிம்பில் ஒளித் துகளால் கீறிய ஒரு சன்னமான வளைவுக் கோடு போல் மூன்றாம் பிறை மங்கலாக ஒட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது.

இடக் கையால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொணடு வலக் கையால் மாங்கல்யத்தை எடுத்து இறுகப் பற்றியவாறு அந்தப் பிறை நிலாவைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்ற கோமதியம்மாள் தன் வாய்க்குள்ளாகவே ஏதோ முனகியவளாய், கையிலிருந்த மாங்கல்யத்தை இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டபோது, கீழேயிருந்து— ''அம்மா'' என்று விஜயாவின் அழைப்புக் குரல் கேட்டுத் திடுக்குற்றுப் பதறி மாடித் தளத்திலிருந்து படிக்கட்டில் பாய்ந்து இறங்கினாள்.

ஐந்தாறு மணி நேரமாய்ச் சுயப் பிரக்ஞை இழந்த நிலையில் கிடந்த காசிநாதன் இப்போது கொஞ்சமாகக் கண் திறந்ததைக் கண்டே விஜயா அவ்வாறு மகிழ்ச்சியுடன் 'அம்மா' எனக் கூப்பிட்டாள். ஆனால் கோமதியம்மாளோ அந்த அழைப்பை 'வேறு விதமாக' எண்ணிவிட்டாள் போலும்.

மறுகணம், மாடிப் படிக்கட்டில் ஏதோ தடதடவென்று உருளும் சப்தம் கேட்டது. காசிநாதனைச் சுற்றி நின்றவர்கள் பதற்றத்துடன் ஓடிவந்தனர். அங்கே, காலிடறிப் படிகளில் விழுந்து உருண்டதால் நெஞ்சிலே பலத்த அடிப்பட்ட நிலையில் வெற்றுடம்பாய்க் கிடந்தாள் கோமதியம்மாள்...

விதியின் விளையாட்டை என்னென்பது? மரணப் படுக்கையில் கிடந்த காசிநாதன் பிழைத்தெழுந்து கொண்டார். சொற்ப நாட்களில் அவருக்குப் பூரண குணம் திரும்பி வந்துவிட்டது.

மனித வாழ்வின் நிலையாமையை நன்கு அறிந்தவரான அவர் தம் மனைவியின் மறைவினால் ஏற்பட்ட தாங்கொணாத் துயரத்தை நெஞ்சின் ஆழத்தில் போட்டு அழுத்திக் கொண்டார். 'அவள் ஒரு தெய்வப் பெண்; என்னுயிரைத் தேடி வந்த எமனின் கையில் தன்னுயிரை ஈடாகக் கொடுத்துவிட்டு மறைந்து போனாள்' என்று மட்டுமே அவரால் வெளிப்படையாகச் சொல்ல முடிந்தது. ஆயினும் அவரிடம் ஒரு பெரிய மாறு

பாவனை அதிகம்

ஒவ்வொரு அதிகாரியும் பொழுது விடிந்து பொழுது போனால் "இன்றைக்குக் கழிந்தது; நாளை என்ன நிலைமையோ?" என்று அஞ்சும்அளவுக்கு நிலைமை எதுவுமில்லை. அப்படிப்பட்ட எந்த ஆபத்தும், எந்த அதிகாரிக்கும் இல்லை.

ஏதோ ஆபத்பாந்தவர்களைப்போல், கஜேந்திரன் காலை முதலை பிடிதுத்துக்கொள்ள, அது ஆதிமூலமே என்று அலற "வந்தேன் வந்தேன்" என்று மகாவிஷ்ணு வந்தாராம்- அதைட்போல் யாரோ "எங்களைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று சொன்னதுபோல "வந்தோம் வந்தோம்" என்று பாவனை காட்டுகிறீர்களே; அது அளவுக்கு அதிகமாக இருக்கிறது.

—அறிஞர் அண்ணா
67ல் சட்ட மன்றத்தில் பேசியது.

எங்கே புறப்பட்டீர் ஐயா?
கவியரங்கில் பாடவா
கருத்தரங்கில் பேசவா?

தல் தென்படலாயிற்று. தம்செல்வ மகள் விஜயாவின் மேல் அவர் முன்னைவிடப் பன்மடங்கு அன்பும் பாசமும் காட்டத் தொடங்கியது தான் அது.

இப்படித் தம் செல்வி விஜயாவையே உயிராகவும் உலகமாகவும் கொண்டு அமைதியாக நாட்களைக் கடத்தி வந்த காசிநாதனின் வாழ்க்கையில் விதி மீண்டும் குறுக்கிட்டது. அந்தக் குறுக்கீட்டின் விளைவு...

ஃ ஃ ஃ

''வணக்கம். வாருங்கள் நலந்தானே?''

சட்டென்று கண் விழித்த சிவதாணு, அவசரமாக எழுந்து நின்றான்.

''நன்னலமே விஜயா'' எனப் புன்முறுவலுடன் கூறிக்கொண்டே வாசற்படியில் ஏறிய காசிநாதன், அப்போதுதான் அங்கு சிவதாணு நின்றிருந்ததைக் கவனித்தவராய், ''ஓ... நீங்களா..? சௌக்கியமா தாணு?'' என்றார் அன்புக்குரலில்.

''வணக்கம், மாமா'' என்று சொன்ன சிவதாணுவின் கண்கள் கலங்கி விட்டன. உதடுகளை இறுக மடித்துத் தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு தலை குனிந்தான் அவன்.

காசிநாதனோ எவ்வித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல், அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தார். ஆனால் அவரது பரந்த நெற்றிமேட்டில் மட்டும் குப்பென வியர்வைத் துளிகள் அரும்பின. கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார். சிவதாணு அவரைப் பின் தொடர்ந்தான்.

''உட்காருங்கள் தாணு'' — என்று இருக்கையைக் காட்டி விட்டு, மற்றோர் அறைக்குச் சென்ற காசிநாதன் முகம் கை கால்களைக் கழுவி வேறு உடை மாற்றிக் கொண்டு திரும்பி வந்தார்.

''வணக்கம், வாருங்கள். நலந்தானே?'' — கூண்டின் குறுக்குச் சட்டத்தின் மீது அழகு நடை பயின்று கொண்டே தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துத் தெள்ளத் தெளிந்த தீங்குரலில் கொஞ்சியது அந்த அஞ்சுகம்.

''நன்னலமே விஜயா'' எனப் பூஞ்சிரிப்புடன் சொல்லியவாறு குளிர்ப்பதன பெட்டியைத் திறந்து ஒரு கொத்துத் திராட்சைப் பழத்தை எடுத்து வந்து கிளிக் கூண்டின் கதவைத் திறந்து உள்ளேயிருந்த சிறு கொக்கியொன்றில் மாட்டினார் காசிநாதன். சிறகுகளை அடித்துத் தன் மகிழ்ச்சியைக் காட்டிய கிளி அவரது கையை இதமாகக் கொத்தி ஏதோ சொல்வது போல் கிசுகிசுத்துவிட்டு ஒரு திராட்டையை கவ்வி எடுத்துக் கால் விரல்களில் பற்றிக் கொண்டு சுவைத்து உண்ண ஆரம்பித்தது. கூஜாவிலிருந்த ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீர் ஊற்றிக் கூண்டினுள் வைத்து விட்டு வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் அவர். இவ்வளவையும் வியப்புடன் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் சிவதாணு.

''வீட்டில் சிவகாமி, குழந்தைப் பையன் முருகு எல்லாம் சௌக்கியம்தானே?'' என்று பரிவுக் குரலில் விசாரித்தார் காசிநாதன்.

குனிந்த தலை நிமிராமலே, 'ஆம்' என்று முனகினான் சிவதாணு. சின்ன வயசு முதலே அவனுக்கு அவர் மீது மிகுந்த அன்பும், மரியாதையும் உண்டு. அவனுடைய படிப்புக்காகவும், படிப்பை முடித்தபின் பாங்க் ஒன்றில் உத்தியோகம் பெறவும் அவரே பெரிதும் உதவி செய்தார். அதன்பின் சிவகாமியைப் பெண் பார்த்துத் தம் சொந்தச் செலவில் திருமணமும் செய்து வைத்தார். மணமான மறு வருடம் அவன் வேலை மாற்றலாகிச் செங்கல்பட்டுக்குக் குடும்பத்தோடு போய் விட்டான். ஆயினும், இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் சென்னைக்கு வந்து தன் அக்காவையும் மாமாவையும் பார்த்துவிட்டுப் போகத் தவறுவதில்லை அவனுடையதமக்கை கோமதியம்மாள் அகால மரணமடைந்தபோது தன் மனைவி குழந்தையோடு இந்த வீட்டில்தான் தங்கியிருந்தான். தமக்கையின் ஈமக் கடன்கள் முடிந்தபின் ஊருக்குக் கிளப்பிப் போனவன் இன்று தான் இங்கே முதல் தடவையாக வந்திருக்கிறான்.

''என்ன தாணு, ஒன்றுமே பேசவில்லையே என்மேல் கோபமா? என்று இளநகையுடன் வினவினார் காசிநாதன்.

சிவதாணு பதிலேதும் சொல்லாமல் மௌனமாயிருந்தான்.

''அப்படி உனக்குக் கோபம் இருந்தால் அது தவறென்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால் அவசியம் தெரிவித்திருக்க வேண்டிய அந்த முக்கியமான சேதியை தெரியப்படுத்தாமலே இருந்துவிட்டேன் அல்லவா? ஆனாலும் என்ன செய்வது? எனக்கே அவ்விஷயம் உண்மைதான் என்று நம்ப ஒரு வாரம் பிடித்ததே!''

''ஆமாம், மாமா இம்மாதிரி நடக்குமென்று நான் கனவில்கூட நினைக்கவில்லை,'' என்றான் சிவதாணு அடைத்த குரலில். அவனுடைய கண்கள் கலங்கின. நெஞ்சின் வேதனையால் உதடுகள் துடித்தன.

காசிநாதன் மெல்லச் சிரித்துக் கொண்டார். ''விதியின் கரங்களால் எழுதப்படுவது மிக மிக இரகசியமானது. அதை எழுதிய விதிக்கே அது செயல்படும் விநாடியின்போதுதான் அதனைத்தெரிந்து கொள்கிறது,'' என்று ஏதோ கனவில் முனகுவது போல் சொன்னார்.

சிவதாணு அவர் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தன் இருக்கையிலிருந்து சற்றே முன்னால் நகர்ந்து வந்து, ''எல்லாம் சரிதான், மாமா, விஜயாவின் மறைவைத் தான் உடனே உங்களால் எனக்குத் தெரியப்படுத்த முடியவில்லை. அவள் நோய்ப் படுக்கையில்கிடந்த போதாவது ஒரு வரி கடிதம்

எழுதியிருக்கலாம் அல்லவா?'' — என்று அவரைக் குற்றவாளியாக்குவது போல் ஒருவிதப் படபடப்புடன் கேட்டான்.

காசிநாதன் இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் சிறுபொழுது மௌனமாய் இருந்துவிட்டுப் பின் நீண்டதொரு பெருமூச்சு விட்டவராய்த் தணிந்த குரலில் கூறினார்: ''அவள் எந்த நோய்க்கும் உள்ளாகவில்லையே தாணு ''

திடுக்குற்றவன் போல் நிமிர்ந்த சிவதாணு, ''என்ன மாமா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று அவசரமாக வினவினான்.

''ஆமாம், தாணு! அதுதான் நடந்த உண்மை '' என்றவாறு சோர்வுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு சொன்ன தகவல் இது...

அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை. மாலை நேரம். காசிநாதன் கல்லூரியிலிருந்து வீடு வந்து சேர்ந்ததும், சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தம் மகள் விஜயாவுடன் வழக்கம் போல் வெளியே உலாவிவரக் கிளம்பினர்.

ஆர்க்காடு சாலை வழியே நெடுகச் சென்று கொண்டிருந்த அவர்கள் கிட்டத்தட்ட விருகம்பாக்கத்தை நெருங்கி விட்டனர். முத்தொள்ளாயிரம் பற்றிய பேச்சில் நடைச் சிரமத்தையோ நேர நழுவலையோ உணராமல் இவ்வளவு தூரம் வந்துவிட்டதை இப்போதுதான் அவர்களால் அறிய முடிந்தது. ஆயினும் அதற்காக எவ்விதப் பதற்றமும் அடையாமல் சாவதானமாகவே திரும்பி நடக்கலாயினர்.

அந்தச் சாலையின் இருமருங்கிலும் புதராக வளர்ந்திருந்த செடிகொடிகளின் பசுமைக் காட்சிகளை மனம் திறந்து பார்த்து ரசித்தவாறு குதூகலமாக வந்து கொண்டிருந்தாள் விஜயா. ஏதோ சிந்தனையில் மூழ்கியவராய் கைத்தடியை மெல்ல வீசி வீசி நடந்து கொண்டிருந்த காசிநாதன் சட்டென்று நின்று சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தார். அந்த நிசப்தமான சூழ்நிலையில் எங்கோ ஓரிடத்தில் மனோரஞ்சித மலரின் சுகந்த மணம் இளங்காற்றில் மிதந்து வந்து அவரது நாசியை வருடியது.

''என்ன அப்பா?'' என்று கேட்டு விஜயாவும் நின்றாள். ''ஓ.. மனோரஞ்சிதப் பூவின் வாசனை கமகமக்கிறதே!''

சாலையின் வலப்பக்கம் பச்சைத் தேர் போல் பம்மலாக வளர்ந்து நின்ற காட்டுச் செடிகளுக்கு மேலே மனோரஞ்சிதச் செடியின் ஒற்றைக் கிளையொன்று தலை நிமிர்ந்து நிற்க, அதன் கரும் பச்சை இலைக் கணுக்களிடையே வெளிர்ப் பச்சை நிறமான தடித்த இதழ்களுடன் கூடிய இரு மனோரஞ்சித மலர்கள் முகையவிழ்த்திருந்தன.



போரில் வென்ற வீரர்களுக்கு
பொங்கல் வாழ்த்து எழுதுகிறேன்.

அதே மலர்களைப் பார்த்த காசிநாதனின் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் அலை புரண்டன. அவரது மனைவி கோமதியம்மாளுக்கு மனோரஞ்சிதம் என்றால் கொள்ளைப் பிரியம். இதையெண்ணி ஒரு கணம் கண் கலங்கிய அவர் அப்பூக்களைப் பறித்துப் போய் அவளது படத்துக்குச் சூட்ட வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டுத் தம் கைத்தடியின் பிடி வளைவை உயர்த்திப் புதருக்கு மேலே காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த மனோரஞ்சிதக் கிளையை வளைத்துத் தாழ்த்திக் கொண்டு மறு கையால் அவ்விரு மலர்களையும் பறிப்பதில் முனைந்தார்.

அண்ணாந்து பார்த்தபடி அவருக்குப் பின்னால் வந்து நின்று கொண்டிருந்த விஜயா திடீரென்று உரத்த குரலில், ''அப்பா ' என்று கூவிக் கொண்டே அவரது கையைப் பற்றி இழுத்து அப்பால் தள்ளினாள். அதிர்ச்சியுற்றுத் தடுமாறிச் சாய்ந்த காசிநாதன் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து திகிலுடன் திரும்பிப் பார்த்தார்.

அவர் நின்ற இடத்திலிருந்து ஒரு கயிற்றரவு கனவேகப் புதருக்குள் நெளிந்தோடி மறைந்தது. விஜயா தன் இடக் காலைக்குனிந்து அழுத்திப் பிடித்தவாறு நொண்டி நொண்டி வந்து தந்தையின் மேல் சாய்ந்தாள். சில விநாடிகளுக்குள்ளாகவே அவளுக்கு விஷம் ஏறிப் பிரக்ஞையும் பிசகி விட்டது.

இச்சமயம் அவ்வழியே ஒரு லாரி வர, அதை நிறுத்தி விஜயாவை அதில் தூக்கிக் கிடத்திக் கொண்டு மருத்துவமனைக்குவிரையுமாறு வேண்டிக் கொண்டார்காசிநாதன். ஆனால்...?

சாய்வு நாற்காலியிலிருந்து சட்டென்று நிமிர்ந்த அவர், ''என்ன சொன்னேன் தாணு...? ஆமாம்; விஷயம் அவ்வளவுதான். என் அருமைச் செல்வி விஜயா நடு வழியிலேயே கண்ணை மூடி விட்டாள். என்னுயிரைத் தேடி வந்த எமனின் கையில் அவள் தன்னுயிரை ஈடாகக் கொடுத்து விட்டுப் போய் விட்டாள்,'' என்றார் கரைந்த குரலில்.

பிரமை பிடித்தவன் போல், வேர்த்து விறுவிறுத்து உட்கார்ந்திருந்தான் சிவதாணு.

நீண்ட நேர மௌனத்திற்குப் பின் காசிநாதனின் முகத்தில் பழைய தெளிவும் புன்சிரிப்பும் வந்து குடியேறின. ''மணி எட்டாகி விட்டதே இன்றைக்கு என்னால் சமையல் வேலையில் ஈடுபட முடியாதென்று நினைக்கிறேன்..''

என்றவாறு நிமிர்ந்து உட்கார்ந்த அவர், ''தாணு! தயவுசெய்து ஹோட்டலுக்குப் போய் நம் இரண்டு பேருக்குமாகச் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்துவிடுங்கள்,'' என்றார்.

ஃ ஃ ஃ

இரவு உணவுக்குப் பின் இருவரும் பழையபடி கூடத்து அறையில் வந்து அமர்ந்து குடும்ப விஷமாய்ப் பலவும் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சுக்கிடையே, ''நான்இங்கே எதற்காக வந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா மாமா?'' என்று கேட்டான் சிவதாணு.

''அந்த விஷயம்தான் முடிந்து விட்டதே, மறுபடியும் ஏன் அதைக் கிளறுகிறாய்?'' என்று சற்றே சலிப்புடன் பதிலிறுத்தார் காசிநாதன்.

''இல்லை, மாமா நான் இங்கு வந்த காரியத்தை இன்னும் உங்களிடம் சொல்லவில்லை.''

காசிநாதன் அவனை அமைதியாக ஏறிட்டுப் பார்த்தார்.

''உங்களுக்குப் புத்தி சொல்வதாக நினைக்க வேண்டாம் மாமா நானும் என் மனைவியும் பல நாட்கள் யோசனை செய்தே இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதாவது... உங்களை இனிமேல் இங்கு தனியாக விட்டு வைக்க எங்களுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை.''

இதற்குப் பதிலேதும் சொல்லாமல் புன்முறுவல் பூத்துக் கொண்டார் காசிநாதன். சிவதாணு தொடர்ந்து சொன்னான்.

''உங்களுக்கோ வயதாகி விட்டது. பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள்தாம் இருக்கின்றன என்று நினைக்கிறேன். இங்கே தனிமையில் இருந்து கொண்டும் — தனியாகச் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டும் இப்படி எதற்காகச் சிரமப்பட வேண்டும்? யாருக்காகச் சம்பாதிக்க வேண்டும்? பேசாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு எங்களோடு வந்து தங்கி அமைதியாக நாட்களைக் கழிக்கலாமே! இந்த வீட்டை விட்டுக் கொஞ்ச காலத்திற்கேனும் நீங்கள் வேறு இடத்தில் வசித்தாக வேண்டும். இதைத்தான் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். உங்களுக்காக என் வீட்டில் மாடி அறைகளைத் துப்புரவு செய்து வைத்திருக்கிறோம். எங்களோடு நீங்கள் வந்து தங்கியிருந்தால் எங்களுக்கும் அது எவ்வளவோ ஆறுதலாக ஆதரவாகவும் இருக்கும்.''

காசிநாதன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். சிவதாணுவுக்கு மேலே என்ன பேசுவது என்று தோன்றவில்லை. அவன் தன் இருக்கையில் அப்படியும் இப்படியுமாக நெளிந்தபடி அவரது முகத்தைப் பட்டும் படாமலும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆமாம்; நான் தனியாய் இருப்பதாக யார் உனக்குச் சொன்னது?'' என்று மெல்லச் சிரித்துக் கொண்டே கேட்டார் காசிநாதன்.

சிவதாணுவுக்கு ஒன்றும் புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தான் அவன்.

காசிநாதன் மீண்டும் நகைத்துக் கொண்டே, ''இங்கே பார், தாணு! எனக்கு இந்த வீட்டில் தனியே இருப்பதில் எவ்விதச் சிரமமுமில்லை. நான் விரும்பும் உணவை நானே சமைத்துக் கொள்வதை ஒரு நல்ல பொழுது போக்காகக் கொண்டிருப்பதால் அதுவும் கஷ்டமாகத் தோன்றவில்லை. இதுவும் தவிர நடந்து போன நிகழ்ச்சிகள் எதையும் எண்ணி நெஞ்சில் துயர மூட்டம் போட்டுக் கொள்ளும் நிலையை விட்டு வெளியேறி நாட்கள் பல ஆகிவிட்டன. இவையெல்லாம்ஒரு புறமிருந்தாலும் இங்கு நான் தனித்து இல்லை என்பதை மட்டும் உனக்குத் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். இதில் ஏதேனும் சந்தேகமிருந்தால் அதை இப்போதே போக்கி வைக்கிறேன் பார்...'' என்று கூறியவாறு மெல்ல எழுந்து போய்ப் புத்தக அலமாரியிலிருந்து ஓர் அழகிய சிறு புத்தகத்தை எடுத்துக்கொண்டு திரும்பி வந்து சாய்வுக் குரிசில் சாய்ந்தார்.

வியப்பும் திகைப்புமாக உட்கார்ந்திருந்த சிவதாணு அவருடன் கழுத்தை நீட்டி அவரது கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தான். கெட்டியான சிவப்பு அட்டையுடன் கூடிய திருக்குறள் புத்தகம் அது.

கிளிக்கூண்டு இருக்கும் பக்கமாகத் திரும்பி நிமிர்ந்து உட்கார்ந்த காசிநாதன் அப்புத்தகத்தில் ஏற்கனவே அடையாளமிட்டு வைத்திருந்த ஒரு புத்தகத்தைப் புரட்டினார். மறு கணம்—

''அன்பின் வழியது உயர்நிலை.',

ஆச்சரியத்தால் சிவதாணுவின் கண்கள் அகல விரிந்தன. காரணம், கூண்டினுள்ளிருந்த கிளி அழகாகத் தலையைச் சாய்த்துத் தன் பவள வாயைத் திறந்து இனிய குரலில் தெளிவாக இப்படிச் சொல்லி நிறுத்தியது. உடனே காசிநாதன், ''..அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு'' என்று புன்னகையுடன் கூறிக் கொண்டே எழுந்து போய் ஒரு திராட்சைப் பழத்தை எடுத்துக் கிளிக்குக் கொடுத்து விட்டு வந்து உட்கார்ந்தார்.

சில நிமிடங்கள் வரை அந்த அறையிலே ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. சாய்வு நாற்காலியில் இருந்த வண்ணம் அக்கிளியையே பார்த்துக் கொண்டிருந்த காசிநாதன் மெல்லப் பெருமூச்சு விட்டவராய்த் தணிந்த குரலில் சொன்னார்: ''இப்போது தெரிந்து கொண்டீர்களா சிவதாணு, நான் இங்கே தனிமையில் இல்லை என்பதை? என் அருமை மகள் விஜயாதான் இந்தக் கிளியை வாங்கி வளர்த்து, இதற்கு இக்குறட்பாவின் முதலடியைச் சொல்லிக் கொடுத்தாள். இம்மாதிரி இன்னும் ஐந்து குறள்களின் முதலடிகளையும் இதுசொல்லும். தனக்குப் பின் தன் தந்தைக்கு ஒரு துணை வேண்டும் என்பதற்காகவே அவள் இப்படிச் செய்தாளோ என்னவோ? என்னைப் பொறுத்தவரை எனது செல்வக்குமாரி விஜயா சாகவில்லை; இந்தக் கிளியின் வடிவிலே அதோ என்னைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். அவளது சங்கு நிறக் கழுத்தில் அணிந்திருந்தகருக மணி மாலையைப் போலவே இந்தக் கிளியும் தன் பசிய வண்ணக் கழுத்தில் கருங்கோட்டு ஹாரம் அணிந்து கொண்டிருப்பதைப் பார், தாணு! தினமும் காலை, மாலை வேளைகளில் என்னைப் பார்த்து, ''வணக்கம்; வாருங்கள், நலந்தானே?' என்று என் மகள் விஜயாவைப் போலவே இவ்வஞ்சுகம் கொஞ்சிக் கேட்கும் போது நான் சஞ்சீவியை உட்கொண்டவன் மாதிரி புத்துயிரும் புதுத் தெம்பும் பெற்றுப் புளகாங்கிதம் அடைகிறேன். ஒரு மனிதனுக்கு இதைவிடவா வேறு அன்பும் ஆனந்தமும் ஆறுதலும் துணையாக வேண்டும்?''

மறு நாள் காசிநாதனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டு விட்டான் சிவதாணு.

ஃ ஃ ஃ

ஒரு மாதம் ஓடி, ஒரு வெள்ளிக் கிழமை காலை ஒன்பது மணி வாக்கில், சிவதாணு காரியாலயத்

துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த சமயம் தந்திச்சேவகன் வந்து தந்தி யொன்றைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

'உன் மாமா உடல் நலமின்றிப் படுத்திருக்கிறார்; உடனே புறப் பட்டு வரவும்' என்று அத்தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆபீசுக்கு லீவு எழுதி அனுப்பிவிட்டுத் தன் மனைவி—குழந்தையோடு சென்னைக் குப் புறப்பட்டான் சிவதாணு.

ஓராண்டுக்கு முன் ஒரு மூன் றாம் பிறை நாளன்று காசிநாத னின் வீடு எப்படி இருந்ததோ, அப்படியே இன்றும் காட்சியளித் தது. உறவினர்களும் நண்பர்களு மாக வந்து குழுமியிருந்தனர். வெட்டிச் சாய்த்த வாழை மரம் போல் கட்டிலில் படுத்துக் கிடந் தார் காசிநாதன். நூற்றி ஆறு டிகிரிக்கு மேல் ஜுரம் காய்ந்து கொண்டிருந்ததால் அவருக்குச் சுயப் பிரக்ஞையே தவறிப்போய் விட்டிருந்தது.

கடந்த மூன்று தினங்களாகத் தம் முழுத் திறமையையும் காட் டிச் சிகிச்சை செய்து வந்த டாக் டரின் முகத்தில் இப்போது அவ நம்பிக்கை படரலாயிற்று. அவர் சிவதாணுவைத் தனியே அழைத் துப் போய், ''என்னால் ஆன வரை முயன்று பார்த்து விட் டேன். இனி கவுடள்தான் அவ ரைக் காப்பாற்ற வேண்டும். நாளை காலை அவசியமிருந்தால் எனக்கு போன் பண்ணுங்கள்'' என்று மன வேதனையோடு கூறிவிட்டுக் கிளம்பிச் சென்றார்.

சிவதாணு சிறு பிள்ளை போல் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். காசிநாதனை அவன் எத்தனை உள்ளன்போடு நேசித்திருக் கிறான் என்பதற்கு அவனுடைய கண்களிலிருந்து மடை திறந்து கொட்டிய கண்ணீர் காட்சி பகர்ந் தது.

இரவு மணி பத்து இருக்கும். எங்கும் நிசப்தம் நிலவியது. அன்பும் அறமும் சத்திய நெறியும் கொண்டு எல்லார்க்கும் நல்லவராய்ப் பெரு வாழ்வு வாழ்ந்த பெரிய மனிதர் ஒருவரின் தூய ஜீவன் தம் கண் ணெதிரே இன்னும் ஒரு சில விநாடி களில் — பறந்தோடிப் போகப் போகிறதே என்று தாளமுடியாத அவல உணர்ச்சியால் தாக்குண்ட ஒவ்வொருவரும் நெஞ்சுநெக்கு விட்டு விரியத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர்.

மனத்தில் திகிலூட்டும் விதமாக அங்கு நிலவியிருந்த அமைதியை இதமாக வருடிக் கலைப்பது போல் கூடத்து அறையிலிருந்து ஓர் இனிய குரல் எழுந்து ஒலித்தது—

''வணக்கம். வாருங்கள் நலந் தானே?''

கட்டிலைச் சுற்றிக் கல்லாய், மர மாய்ச் சமைந்துநின்ற அனைவரும் தலை நிமிர்ந்து அவ்வொலி வந்த திக்கில் திரும்பினர். அதே சமயம், இவ்வளவு நேரமாக எவ்வித அசைவு மின்றி மரக்கட்டை போல் படுத் துக் கிடந்த காசிநா தன் மெல்லக் கண் திறந்தார். முகத்தில் ஓர் அசாதாரணப் புன்னகை தவழ, அங்கிருந்த அனைவர் மேலும் பார் வையைத் திருப்பினார். பிறகு, தம் கால்மாட்டில் நின்று கொண்டிருந்த சிவதாணுவை நோக்கி ஏதோ சமிக்ஞை செய்வது போல் மெல்லக் கண்ணிமைகளை அசைத்தார். அந் தச் சமிக்ஞையை உடனே புரிந்து கொண்டவனாய்ச் சரேலெனக் கூடத்து அறையை நோக்கி விரைந்து சென்றான்.

அங்கே—

கிளிக் கூண்டின் கதவு திறந்து கிடந்தது. சிறகுகளைப் படபட வென அடித்துத் திமிறிய அந்தப் பச்சைக் கிளியின் கழுத்தைக் கவ் விப் பற்றிக் கொண்டிருந்த ஒரு கறுப்புப் பூனை சன்னல் வழியே வெளியே பாய்ந்து இருளில்புகுந்து மறைந்தது

ஃ ஃ ஃ

விதியின் விளையாட்டை என் னென்பது? மரணப் படுக்கையில் கிடந்த காசிநாதன் மறுபடியும் பிழைத்தெழுந்து கொண்டார்.

அவர் முதன் முதலாகச் சொன் னது இதுதான்:

''என்னுயிரைத் தேடி வந்த எமனின் கையில் அந்தக் கிளி தன்னுயிரை ஈடாகக் கொடுத்து விட்டுப் போய் விட்டது. பூனை வடிவிலே வந்த எமனைப்பார்த்துக் கூட, 'வணக்கம். வாருங்கள், நலந்தானே?' என்று அன்பும் பண் புமாக வரவேற்ற அக்கிளியின் பெருந்தன்மையை எப்படிப்போற் றுவதென்றே எனக்குத் தெரிய வில்லை.''

ஃ ஃ ஃ

ஆ...என்ற உணர்ச்சி

உணவு நெருக்கடியைப் பற்றிப் பேசுகின்ற நேரத் தில் வெள்ளைக்காரனால் இத்தனையும் வந்தது என்று நினைக்கவில்லையா? நான் போய் எத்தனையோ நாட்களாகி விட்டன; இன்னும் எதற்காக என்னை இழுக்கிறீர்கள் என்று வெள்ளைக்காரன் கேட்க முடியும்?

ஒரு தடவை ஒரு வீட்டி னுள் நுழைகிறபோது நிலைப்படியில் இடித்துக் கொண்டால் ஒன்பது ஆண்டு கழித்து அந்த நிலைப்படியைக்கடக்கிறோம் என்றாலும் "ஆ" என்ற உணர்ச்சி தான் இருக் கிறது.

இதை உங்களுக்கு எரிச் சல் ஊட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்ல வில்லை. உங்கள் ஆட்சியில் நாங்கள்பட்ட தொல்லை களை நினைக்கிறபோது "ஆ" என்ற உணர்ச்சி தான் இருக்கிறது.

—அறிஞர் அண்ணா

நல்வாழ்வுக்கு வழி

கி. ஆ. பெ. விசுவநாதம்

இப் பரந்த உலகில் ஆராய்ந்து பார்க்கும் பொழுது சாதி இரண்டொழிய வேறில்லையென நன்கு தெரிகிறது. நீதி வழுவாத நெறிமுறையில் நின்று, பிறருக்கும் வழங்கி வாழ்பவன் மேற் குலத்தான் எனவும், அவ்வாறு வாழாதவன் கீழ்க் குலத்தான் எனவும் ஆகின்றனர். அறநூல்கள் அனைத்தும் இதையே கூறுகின்றன.

துன்பம் மிகுந்த வயிறே! உன்னோடு வாழ இனி என்னால் முடியாது. ஒருநாள் உணவை விட்டு இரு என்றால் இருப்பதில்லை. இரண்டுநாள் உணவை ஒன்றாக ஏற்றுக்கொள் என்றால் அதையும் ஏற்றுக் கொள்வதில்லை. நான் உனக்காகப் படுகின்ற துன்பத்தையும் நீ ஒருநாளும் அறிந்து கொள்வதில்லை. உன்னோடு வாழ்வதே தொல்லையாக இருக்கிறது. நான் என் செய்ய?

ஆற்றங்கரையில் செழித்து வளர்ந்து நிற்கும் நீண்ட மரமும், அரசர் அறிய சிறந்து வாழ்கின்ற வாழ்வும் ஒரு காலத்திற் வீழ்ச்சியுற்று விடும். உழுது, உண்டு வாழும் வாழ்வே ஒரு நாளும் வீழ்ச்சியுறாத வாழ்வாகும். அதற்கு ஒப்பானது பழுதற்ற தொழில் வேறு எதுவும் இல்லை.

தண்ணீரானது நில நலத்தினால் சிறப்பை அடையும். தக்க செல்வம் படைத்தவர் ஈகைக் குணத்தினால் சிறப்பை அடைவர். கண்களைப் பெற்றவர்கள் கருணை காட்டுவதால் சிறப்படைவர். பெண்மக்கள் கற்பழியாத் தன்மையால் பெருஞ் சிறப்பை அடைவர்.

உற்றாரும், உறவினரும், பெற்றாரும், பிறந்தோரும் காலில் விழுந்து வணங்கி வேண்டினும் கீழ்மக்கள் தம்மிடமுள்ள செல்வத்துள் சிறிதும் வழங்கமாட்டார். கரும்பானது தன்னைக் கசக்கிப் பிழிகின்ற மக்களுக்கே சாறு வழங்குவது போல கீழ் மக்களும் தன்னை அடித்துத் துன்புறுத்தும் மக்களுக்கே விரைந்து வழங்குவர்.

நீரும், நிழலும், மனையும், செல்வமும், சீரும் சிறப்பும், பேரும், புகழும் பெற்று வாழ்கின்ற பெருவாழ்வு வேண்டுமானால், அதை மிக எளிதாகப் பெறலாம். அதற்கு செய்ய வேண்டியதெல்லாம் நல்லதை எண்ணுவதே. வஞ்சமற்ற நெஞ்சமே வாழ வகுக்கும் தன்மையுடையது.

ஆறில்லாத ஊரும், நீரில்லாத கிணறும், நெய்யில்லாத உணவும், உடன் பிறப்பில்லாத உடம்பும், மனைவி இல்லாத வீடும், அறிவில்லாத செயலும் அழகின்றி, சிறப்பின்றி, சுவையின்றி பயனின்றி, ஒளியின்றி, நலமின்றி பாழ்பட்டு அழியும்.

ஒருவன் தனக்கு வருகின்ற வருவாயைவிட அதிகமாக செலவுகளைச் செய்தால், அவன் செல்லுமிடமெல்லாம் பெருமை அழிந்து, அறிவு கெட்டு நல்லவர்களாலும் பொல்லாதவனாகக் கருதப்பட்டு, பின் திருடனாகவும், தீயவனாகவும்கூட காட்சியளிக்க நேரிட்டுவிடும்.

மானம், குடிபிறப்பு, கல்வி, அறிவு, ஈகைக் குணம், உணர்வு, நெறி, உயர்ச்சி, முயற்சி, இச்சை ஆகிய அனைத்தும் இந்தப் பாழான உடம்பில் பசி வந்தவுடன் சில மக்களிடம் பறந்தோடிப் போய்விடுகிறது.

உண்பது உழக்கு அரிசியும், உடுப்பது நான்கு முழத் துணியும்தான். ஆனாலும் மனிதன் எண்ணுவதோ என்பது கோடி நினைவுகள். எவ்வளவுதான் விழிப்பாகப் பாதுகாத்து வந்தாலும் உடைந்து போகிற மண்கலத்தைப் போன்ற இவ்வுடம்பைப் பெற்று வாழும் வாழ்க்கை சாகும்வரை துன்பமுடையதாகவே இருக்கும்.

மரம் பழுத்துவிட்டால் எவரும் அழைக்காமலேயே வௌவால்கள் மரத்தைச் சூழ்ந்து கொள்ளும். கன்றை ஈந்த பசுவானது சிறிதும் ஒளிக்காமல் பாலைப் பொழிந்து தருவதுபோல தம் மிடத்துள்ள பொருளை ஒளிக்காது வழங்கும் வள்ளண்மையுள்ள மக்களை உலகினர் யாவரும் உறவினராகவே கொள்வர்.

இழுக்குள்ள பாட்டை விட இசை மட்டும் நல்லது. உயர் குலம் பேசுவதைவிட ஒழுக்கமே நல்லது. குற்றமுள்ள வீரச் செயலைவிட கொடுநோய் நல்லது. பழிக்கு அஞ்சாத மனைவியோடு வாழ்வதைவிட தனித்திருந்து சாவது நல்லது.

யானையின் உடலிலே பாய்கின்ற அம்பு பஞ்சுக் குவியலிலே பாய முடியாது. அதுபோல கடுஞ் சொற்களாவது இனிய சொற்களை வெல்லாது. ஆனால் இனிமையான சொற்கள் கடுமையான சொற்களை வென்றுவிடும். ஆம், இரும்பினால் செய்த கடப்பாரைக்குப் பிளவுபடாத கருங்கற்பாறை பசுமரத்தின் வேருக்குப் பிளவுபட்டுவிடும்.

கல்வி யறிவு இல்லாவிடினும் பொருள் மிகுந்து விடுமானால், பலரும் அவனிடம் சேர்ந்து போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பர். ஆனால், பொருள் இழந்த ஒருவனை கட்டிய மனைவியும் விரும்பாள். பெற்ற தாயுங்கூட பொருட்படுத்தமாட்டாள். அவன் வாய்ச்சொல் எவரிடமும் செல்லுபடியாதில்லை.

ஆல மரமும், அத்தி மரமும் பூக்காமலே காய்ப்பதுபோல ஏவாமலே அறிந்து செய்யும் மக்களும் சிலர் இருக்கின்றனர். நன்றாக உழுது, எரு விட்டு விதைத்தாலும் முளைக்காத சில விதைகளைப் போல இடித்திடித்துச் சொல்லி உணர்த்தினாலும் உணராத மக்களும் சிலர் இருக்கின்றனர்.

முத்துச் சிப்பி கருக்கொள்ளும்பொழுதே அழியத் தொடங்குகிறது. மூங்கில் முத்தை விளைவிக்கும்பொழுதே அழியத் தொடங்கிவிடுகிறது. வாழைமரம் குலையை ஈனும்பொழுதே அழியத் தொடங்கிவிடுகிறது. அயல்மாதர் மீது மனம் வைக்கும்பொழுதே மக்களின் கல்வி, அறிவு, பொருள் மானம், மரியாதை ஆகிய அனைத்தும் அழியத் தொடங்கிவிடுகிறது.

ஃ ஃ ஃ

தன்னம்பிக்கை தரும்
மென்மையான
அணி...

CCM-ன் ஸ்டேலாங்கர்

'ஆன்டிகிரிஸ்' (கசங்காத) பாப்ளின் ஷர்ட்டிங்குகள்

CCM-ன் ஸ்ட்ரேஞ்சர்

மெர்ஸிரைஸ் செய்யப்பட்ட பாப்ளின் ஷர்ட்டிங்குகள்

உயர்தர எகிப்திய பருத்தியால் தயாரிக்கப்பட்டவை

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

விற்பனையாளர்கள்: வெங்கடேஷ் வஸ்திராலயா

உழுபடை ஈந்ததோ உண்ணும் பால்பொங்கல்
எழுபடை ஈந்ததோ வெற்றித் தேன்பொங்கல்!

விளம்பர உதவி:

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

டாக்டர் நஞ்சப்பா ரோடு,

கோயமுத்தூர் - 18.

With the best compliments of:

South India Viscose Limited

Manufacturers of:

**BEST QUALITY RAYON YARN,
STAPLE FIBRE AND WOOD PULPS**

SIRUMUGAI

(Near Mettupalayam)

COIMBATORE DISTRICT.

பொங்கல் பண்டிகைக்கு

புது மாடல்

கைச்சட்டை (சிலாக்)	கால் சட்டை
26" ரூ 5-33	26" ரூ 5-41

உறுதிக்கு உத்திரவாதம்....

பழங்காலம் முதல் பல நாடுகளிலும் பல்வேறு வடிவங்களில் போர் நடந்து வருகிறது. தனி ஒருவன் இன்னொருவனை அடித்து நொறுக்குவதில் தொடங்கிய இந்தக் கொடுமை, சில நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து வேறு சில நாடுகளைப் பகைத்துத் தாக்கும் உலகப் போர் வரையில் வளர்ந்து, இன்றும் பல நாடுகளை அலைக்கழித்து வருகிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் இடையிலும் இரண்டு உலகப் போர்கள் நடந்து எவ்வளவோ துன்பங்களை விளைவித்து முடிந்தன. இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, யூ.என்.ஓ. என்ற உலக நாடுகளின் பேரமைப்பு ஏற்பட்டதால் இனிப் போர்கள் முன்போல் நடப்பதற்கில்லை என்று பலரும் நம்பினார்கள். அந்த நம்பிக்கை வீண் ஆயிற்று. முரட்டு நோயாளி ஒருவன் மருத்துவ விடுதியில் படுக்கையில் கிடந்து, பிறகு புதிய இரத்த ஓட்டம் சிறிது பெற்றவுடன், அடுத்தவனை அடிக்கச் செல்வதுபோல், தோற்ற நாடும் சிறிது தேறியவுடன் அயல்நாட்டுடன் போருக்குச் செல்லும் காட்சியைக் காண்கிறோம். 1965–ம் ஆண்டில் இந்தியாவுடன் போர் தொடுத்துத் தோல்வியுற்ற பாகிஸ்தான் மறுபடியும் இந்த ஆண்டில் போர் தொடுத்திருப்பது அதைத்தான் நினைவூட்டுகிறது.

போர் கொடியது, போர் வேண்டாம் என்று பல ஆண்டுகளாக உணர்ந்து வந்துள்ள நாடு இந்தியா. வன்முறையைக் காலமெல்லாம் எதிர்த்து அன்பின்பெருமை விளங்கும் வகையில் வாழ்ந்து காட்டிய தலைவரை — காந்தியடிகளைப் பெற்றது இந்தியா. பழங்காலத்திலும் போர் முறையை வெறுக்கும் முறையில் மனம் திருந்திய மாமன்னன் அசோகனைப் பெற்ற பெருமை உடையது இந்தியா. இன்றும், எந்த நாட்டின் மண்ணையும் கவரும் கருத்து இல்லாமல், பிறர் செய்யும் கொடுமைகளையும் பலமுறை பொறுக்கும் பண்பு உடையதாய் விளங்குகிறது இந்தியா. ஆகவே, பாகிஸ்தானின் போர் வெறியிலிருந்து விலகுவதற்கு நம் நாடு எவ்வளவோ முயற்சிகளைச் செய்து பார்த்து விட்டது. கடைசியில் வேறு வழி இல்லாமல், கொடுமை செய்வதற்கென்றே துணிந்து முன் வந்த யாகியாகானின் முயற்சியை முறியடிப்பதற்காக போரில் இறங்கும்படியாக நேர்ந்து விட்டது. உண்மை உணராமல், உலகஅமைதியைப் பற்றி வாயளவில் பேசிச் செயலளவில் போருக்குத் தூண்டுதல் செய்யும் போக்கில் அமெரிக்காவும் சீனாவும் நடந்து கொள்வது உலக வரலாற்றில் வெறுக்கத்தக்க பகுதியாகப் பொறிக்கப்படும். ஆனால், இன்று, உலக வல்லரசுகளின் கருத்தையும் எதிர்த்துத் தற்காப்புப் போர் செய்து தீர வேண்டிய நெருக்கடியை இந்தியா வரவற்றுவிட்டது. உண்மை வெல்லும் என்று தன் குறிக்கோளை அடைய முனைந்து நிற்கிறது.

1965–ல் பாகிஸ்தான்தொடுத்த போரின்போது, அந்தப் போருக்குக் காரணமாக இருந்த தளபதி அயூப்கான் எந்தப் போர் முனையையும் எட்டிப் பார்க்கவில்லை. இந்த ஆண்டில் தொடுக்கப்பட்டுள்ள போரிலும், போர்தொடுத்த யாகியாகான் எந்தப் போர்முனைக்கும் சென்று படைக்கலம் ஏந்தவில்லை. அவருடைய அரசில் ஊதியம் தேடிவந்த ஊழியர்கள் மட்டுமே வீரர் என்ற பெயர் பூண்டு போர்முனையில் சென்று படைக்கலம் ஏந்திக் கொல்கிறார்கள்; கொல்லப்படுகிறார்கள்.

பழங்காலப் போர்முறை இவ்வாறு இல்லை. நாட்டின் தலைவர்கள் போர்க்களத்திற்குச் சென்றார்கள்; தமிழகத்து மூவேந்தர்கள் போர்முனைக்குச் சென்ற காட்சிகளையும் குறுநில மன்னர்கள் படைக்கலங்கள் ஏந்திப் போர் புரிந்த காட்சிகளையும் புறநானூறு முதலான பழைய நூல்கள் விளக்கிக் காட்டுகின்றன.

ஓர் அரசனுடைய நகரில்பொதுவான இடத்தில் ஒரு மரத்தில் பெரிய பறை கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பறை அடிக்கப்பட்டால், குடிமக்கள் எல்லோரும் அதன் ஒலி கேட்டுப் பொதுவிடத்தில் திரண்டுவிடுவார்கள். அயல் நாட்டிலிருந்து பகைவர் படையெடுத்து வந்தால், அல்லது ஊருக்குப் பொதுவான அவசரக் கடமை ஏற்பட்டால் அந்தப் பறை ஒலிக்கப்படும். சில வேளைகளில் புயல் வீசும்போது, மரக்

வீர மரபு

டாக்டர் மு.வ.

சரியான சூடு

“இதுவரை காங்கிரஸ் கட்சியிலேஇல்லாதவர்கள் கூட, அவர்கள் பதுக்கல் காரர்களாக இருந்து பிடி பட்டவுடனே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரை அணுகி ‘நான் நீண்ட நாளாகக் காங்கிரஸ்; ஆனால் வெளியேதான் தெரியாது‘ நான் காங் கிரஸ் என்று பார்த்துத் தான் பிடிக்கிறார்கள்’ என்று சொல்லலாம்’ ஆகையால் அந்த நேரத் தில் அவர்கள் போட்டுக் கொண்டு வருகிற கதர்ச் சட்டை, சலவை செய்ததா புதிதா என்பதை மட்டுமா வது பார்த்துக் கொண்டு, அந்தப் புகார்களை என்னி டத்தில் கொண்டு வர வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

—அறிஞர் அண்ணா 67ல் சட்ட மன்றத்தில் பேசியது.

கிளைகள் உராய்ந்து அந்தப் பறை யில் ஒலி எழுந்தால், அந்த நக ரில் உள்ள தலைவன் அந்த ஒலி யைப் போர்க்கு வந்த அழைப் பாகக் கருதி உடனே ‘போர், போர்’ என்று புறப்படுவானாம். ‘‘அத்தகைய வீரம் மிகுந்த தலை வனைப் பெற்றுள்ளோம் நாங்கள்’’ என்று தம் தலைவனைக் குறித்துப் பெருமைப் பாராட்டிக் கொள் கிறார் புலவர் ஔவையார். அவ் வாறு பாராட்டப்பெற்ற தலைவன் அதியமான்.

பொதுவில் தூங்கும் விசியுறு
தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும்
உளனே.’’
(புறநானூறு—89)

இதனால், நாட்டை ஆளும் தலை வன், போா வந்ததும் தானே முன்னே புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாகும் பழைய முறை விளங்குகிறது. இந்தக் காலத்துப் போர்க் கருவிகள் வேறு; பழங் காலத்து கருவிகள் வேறு. பழைய வேலும் வாளும் வில்லும் வீர ரோடு வீரர் நெருங்கி நின்று தம் வலிமையைக் காட்டித் திறமை யைப் புலப்படுத்திப் போர் செய் வதற்கு இடந்தந்தன. அதனால் தலைவர்கள் தம்வலிமையும் திற மையும் துணைசெய்யப் போர்க் களம் புகுவதற்கு இடம் இருந் தது. இக்காலத்துக் கருவிகள், நெடுந் தொலைவில் உள்ள வீரர் களையும் சுட்டுப் பொசுக்க வல் லவை. ஆகையால் வலிமையும் திறமையும் உடைய வீரர்களைப் பயங்கொள்ளிகளும் புதிய பீரங்கி முதலியவற்றால் சுட்டுக் கொல்ல முடிகிறது. ஆகவே கருவிகளின் ஆற்றல் முதலிடம் பெற்றுள்ள இக்காலப் போர்க்களத்தில் தலை வர்கள் முன்னின்று நடத்தும் முறை இல்லாமற் போயிற்று.

அதியமான் போர்க் களத்தில் இருந்த நிலையில், அரண்மனையிலி ருந்து ஒரு நல்ல செய்தி வந்தது. அவனுடைய துணைவி ஓர் ஆண் குழந்தை பெற்றது பற்றிய செய்தி அது. செய்தியைக் கேட்ட வீரத் தலைவன் மகிழ்ந்தான். ஆனால், அந்த மகிழ்ச்சியை விடப் போர்க் களத்தில் கடமை பெரிதாக உணர்ந்த உள்ளம் உடையவன் ஆகையால், மகிழ்ச்சி விரைவில் மறைந்தது. பகைவர்மேல் கொண்ட சினமும் வீர உணர்ச்சி யுமே மேலெழுந்து நின்றன. பகை வர் மேல் பாய்ந்து தாக்கினான்; கடும் போர் நிகழ்த்தினான். பகை வர் எறிந்த வேலால் கழுத்தில் புண்பட்டான். போர் முடிந்தது; அவனுக்கு வெற்றியாக முடிந்தது. உடனே சிறிதும் காலம் தாழ்த் தாமல், நகர் நோக்கிப் புறப் பட்டான்; அரண்மனைக்கு வந் தான்; தன் துணைவி குழந்தை பெற்றுக் கிடக்கும் அறையை நோக்கிச் சென்றான்; அறைக்குள் சென்று தம் அருமை மகனின் முகத்தைப் பார்த்தான். புலவர் ஔவையாரும் உடனிருந்தார். அதியமான் அப்போது எந்த நிலை யில் காட்சி அளித்தான் என்ப தைப் புலவர் கூறியுள்ளார். அதிய மானின் கையில் வேல் இருந்தது; காலில் போர்க்காகக் கட்டியவீரச் கழல் இருந்தது; உடம்பெல்லாம் வியர்வை அரும்பியிருந்தது; கழுத் தில் பகைவரின் வேலால் ஏற் பட்ட புண் ஆறாத பச்சைப் புண் ணாகவே இருந்தது. அவனுடைய முகத்தில் போர்க்களத்துச் சினம் மாறாமல் விளங்கியது. தன் குழந் தையைப் பார்த்த பிறகு அவனு டைய பார்வையில் ஏதேனும் மாறுதல் நேர்ந்ததா என்று புல வர் கவனித்தார். ‘‘பகைவரை நோக்கிய காரணத்தால் சிவந் திருந்த கண்கள் உன் மகனுடைய முகத்தைப் பார்த்த பிறகும் சிவப்பு மாறாமல் அப்படியே இருக் கின்றனவே! வீர உணர்ச்சி இந்த அளவிற்கு உள்ளதே! உன்னைப் பகைத்தவர் யாரும் உன்னிட மிருந்து தப்பிப் பிழைக்க முடி யாது’’ என்று வியந்து கூறினர்.

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்
புண்..
இன்னும் மாறாது சினனேஅன்னே
உய்ந்தனர் அல்லரிவன் உடற்றி
யோரே
செறுவர் நோக்கிய கண்தன்..
சிறுவன் நோக்கியும் சிவப்பா
னவே
(புறநானூறு 100)

குடும்ப நலத்தை விட—மனைவி மக்களின் இன்பத்தை விட—நாட் டின் நலமே நெஞ்சினில்மேலோங்கி நிற்க வாழ்ந்த வீரர் தலைவன் அவன். அத்தகைய மரபில் வந்த தமிழ் மக்கள், இன்று நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை உணர்ந்து தம் கடமையை ஆற் றத் தயங்க மாட்டார்கள் என் பது உறுதி.

★



நிழற்கோடு விழுந்தாலும் - நின்
எழிற்கோலம் மறைந்திடுமோ ?

கமலி கண்மூடிக் கிடந்தாள்.

அவள் வட்டமிட்ட பட்டு முசத்தோடு முகம் பதித்துக் கிடந்த மீனாவின் விழிகள் வெள்ளம் எடுத்துப் பெருகின.

ஐந்து வயதுக் கமலிக்குத் தூக்கம் வந்து இமைகளைக் கெஞ்சும் போதுகூடக் கண்மூடத் தெரியாதே! பெரிய பாட்டிக் கிழவியைப் போல அம்மா தூங்கியதற்குப் பிறகு தூங்கி, அவள் எழுவதற்கு முன் எழுந்து விடும் இவள், இன்று ஏன் அம்மா விழித்துக் கொண்டு இருக்கும் போதே கண்மூடிக் கிடக்கிறாள்?

உதயசூரியன் கண் விழித்து எழுந்து தன் நீண்ட வழிப் பயணத்தைத் தொடங்கிய பிறகும் கூட அவள் படுக்கையை விட்டு கண் விழித்து எழுந்திருக்கவில்லை.

'என்ன அவளுக்கு?'

துடித்துப் போனாள் மீனா.

''கமலி...''

பாசத்துடன் பற்றி அசைத்த கை சுட்டது.

குழந்தைக்குக் காய்ச்சல்

கலவரத்துக்கு ஒன்றும் இல்லை. காய்ச்சல்தான். ஆனால் மீனா எப்படி அலறிவிட்டாள்? அவள் தாய்மையில் பூத்த மலர்களுக்குக் கணக்கு இல்லை. மண்ணுக்கு வாரிக் கொடுத்ததற்கும் கணக்கு இல்லை. அடிக்கடி நேரும் இந்தத் துன்பியல் நாடகம் முடிந்து போகாதா என்ற விரக்தி நிலைக்கு அவள் வந்துவிட்ட போதுதான் கமலியின் உயிரை வளர்க்கும் தியாகச் சுமையை அவள் வயிற்றுக்குஅளித்தது வாழ்க்கையின் உறவு.

'கடவுளே! இதாவது நிலைக்குமா?'

அழைக்கப்பட்ட கடவுள் நல்லவனாகத்தான் இருக்க வேண்டும்!

'இது' நிலைத்தது. நிலைத்தே விட்டது. மீனாவின் இரத்தத்தையும், சதையையும் வாங்கிக் கொண்டு இந்த உலக நாடகத்தைப் பார்ப்பதற்குப் புதியதொரு

புகழ்

வாசவன்

ரசிகையாகப் பிறந்தாள் கமலி. அவளுக்கு முன் பிறந்த துரை ராசனைப் போல உலக நாடகத்தை ஒரேஒரு ஆண்டு மட்டும் கண்டு களித்து, பிறகு அந்தக் களிப்பிலே கரைந்து மறைந்துவிடாமல், இந்த உலகத்தில் அழுத்தக்காரியாக நிலைத்து விட்டாள்.

'அழுத்தம்' என்று சொன்னதும் ஓர் அழகுக்காக அல்ல. கமலியின் பிறப்பே ஓர் அழுத்தம் தான். அவள் வளர்ச்சியிலே ஓர் அழுத்தம். அவள் பழக்க வழக்கங்களிலே ஓர் அழுத்தம். முன்னைப் பழம் பொருட்களின் ஊரடர்ந்த செறிவே அவள் வடிவாகிப் பொலிந்தது. அவள் முற்ருத இளங் கீரைப் பருவத்தில் முற்றிவிட்ட அறிவுக் கனிகளும் குலுங்கின.

பெற்றவளுக்குப் பயம். 'இயற்கைக்கு மீறிய இயல்புகள் ஏன் இவளிடத்தில்? இவற்றின் முடிவு என்னவாகும்?' இப்படியொரு வேதனை, கமலியின் வளர்ச்சியோடு மீனுவின் இதயத்தில் வளர்ந்து வந்தது.

பெற்றவனுக்கோ மேற்பரப்பின் விந்தையான விளைவுகளில் ருசியை அனுபவித்த வெறி; ''என் கமலி உலக அதிசயங்களுள் ஒன்று. அவள் புகழுக்குப் புகழ் தேடிக்கொடுக்க வந்த பொற்கொடி. அவளால் புகழுக்கு மட்டுமல்ல; பெற்றவர்களாகிய நமக்கும் புகழ் கிடைக்கப் போகிறது!''

பெற்றவன் ஒரு புகழ் விரும்பி. புரியவில்லையா? எழுத்தாளன்! தன் புகழுக்குத் தன் எழுத்தை நம்பி இருந்தான் அவன். நல்ல வேளையாக எழுத்து அவனை ஏமாற்றி விடவில்லை. ஆனால் உலகம்தான் ஏமாற்றி விட்டது. உலகம் என்றால் பூகோள உருண்டை அல்ல; மனிதர்கள். அவர்களைக் கூடக் குறை கூறுவது 'சரி' என்று தோன்றவில்லை. அவர்கள், தமக்குத் தெரிந்த காதலை, பெண்களின் வயிற்றை, தொப்புளை, கவர்ச்சிப் பிரதேசங்களை எழுத்தில் எதிர்பார்த்தவர்கள். பிழைக்கத் தெரிந்தவர்கள், வாசகர்களுக்குக் காட்ட வேண்டியதைக் காட்டி, பெற வேண்டியதைப் பெற்று மகிழ்ந்தார்கள். அப்படி எழுதியவர்களும் எழுத்தில் காலூன்றி நிற்கவில்லை. எங்கேயோ ஓர் அலுவலகத்தில் கால் ஊன்றி நின்று கொண்டுஎழுத்தை மாலை நேரப் பொழுதுபோக்குக் கச்சேரியாக நடத்திக் கொண்டு இருந்தார்கள்.

நான் இன்னும் அந்த எழுத்தாளன் பெயரைச் சொல்லவில்லையா? மன்னியுங்கள். பெயர்தான் மனிதனுக்குப் போடுகிற அடையாளக் குறி. அதை நான் அவசியம் சொல்லியாக வேண்டுமே! அவன் பெயர் கார்வண்ணன். அவன் பெண்களின் உடலைக் காட்டி எழுத மாட்டான். இலட்சியத்தைக் காட்டி எழுதுவான். இலட்சிய எழுத்து யாருக்கு வேண்டும்? யாருக்குத் தேவையாக இருந்தாலும் பல பத்திரிகைகளுக்கு அது தேவையாக இல்லை. அதனால் அவனுடைய இலட்சிய எழுத்து விலை போகாத கந்தல் துணியாகி விட்டது.

எனவே அவன் வாழ்க்கை ஒரு சூளையாய் எரிந்தது. அதற்காக அவன் கையைக் காலை உதறிக் கொண்டு எங்கேயும் ஓடிவிடவில்லை. எழுத்தில்தான் தங்கி இருந்தான்.

கார்வண்ணன் இலட்சிய எழுத்தாளன். அவனை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கம்பீரமான எழுத்தாளனுக்கு ஒரு பலவீனம் இருந்தது: புகழ் ஆசை. அதையும் நீங்கள்தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

ஒரு நாள் காலை அதிசயம் எந்த நேரத்திலும் நிகழலாம் என்றாலும், அந்தக் காலை நேரத்தில் நிகழ்ந்த அதிசயத்துக்குக் கண்ணைப்பறிக்கும் வண்ணம் இருந்தது.

கார்வண்ணனுக்கும் சினிமா உலகத்துக்கும் ஸ்னானப் ப்ராப்தி (புரியவில்லையா? அப்படியானால் அது 'மாடர்ன்' எழுத்து. சரியாகச் சொல்லப் போனால் அம்மாஞ்சி எழுத்து!) கூட இல்லை. அதில் அவனுக்குக் கவர்ச்சியும் இல்லை. ஆனால் அந்தக் கவர்ச்சி, அவன் வீட்டுக்கு இம்பாலாக் காரில் ஓர் அதிசயமாக வந்தது.

''வணக்கம். நான் கே. ஆர். பிக்சரின் முதலாளி! நான் கதை தேடி வந்திருக்கிறேன்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் பட முதலாளி.

கார்வண்ணனுக்கு அந்த'பாஷை' யே பிடிக்கவில்லை. ''கதை தேடி வந்தீர்களா? ஏன்? கதை காணாமல் போய் விட்டதா? அதன் உயரம் என்ன? அகலம் என்ன?'' என்று கேட்டான்.

பட முதலாளிக்கு அந்த வேடிக்கைப் பிடிக்கவில்லை. ''நீங்கள் நல்ல எழுத்தாளர் என்று கேள்விப்பட்டேன். கதை கேட்கலாம் என்று வந்தால் படுக்காளித்தனமாகப் பேசுகிறீர்களே!'' அவர் திருநெல்வேலிக்காரர். அந்த மண்ணில் செந்நெல் செழிக்கும். சொல்லில் 'படுக்காளித்தனம்' செழிக்கும்!

கார்வண்ணன் அந்தப் படுக்காளித்தனத்தை ரசித்திருக்கலாம். சிரித்து ஒதுக்க வேண்டிய ஓர் குப்பைக்குப் போய்ச் சீறி விழுந்தான்: ''யாரைப் பார்த்துப் படுக்காளி என்கிறீர்? ஒரு சிருஷ்டிகர்த்தாவிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதே தெரியாத உம்மிடம் கதையைப் பற்றிப் பேச நான் தயாராக இல்லை. போம் வெளியே!''

சிருட்டிகர்த்தாவாம் சிருஷ்டி கர்த்தா!

இம்பாலாவிடம் பேசுகிறது ஒரு 'கால் நடை!'

பட முதலாளிக்கு அவமானமான அவமானம்! துடித்தார். அவருக்குக்கோபம் வந்து விட்டால் துமலும் கூடவே வந்து விடும். கையை ஆட்டிக் கொண்டு எழுந்தார், 'உன்னை ஒரு கை பார்க்கிறேன்.' என்று அதற்குப் பொருள்.

அப்பொழுதுதான் குழந்தை கமலி, ''அப்பா...!'' என்று அழைத்துக் கொண்டே ஓடி வந்தாள்.

பட முதலாளியின் கண்கள் அந்தப் பிஞ்சின் அழகில் இமைக்காமல் மொய்த்தன. அந்தக் கணத்தில் அவருடைய கோபம் ஆவியாக மறைந்து, ஆவல் பனியாகப் பெய்தது. ''கார்வண்ணன் சார்! இந்தக் குழந்தை...''

''என் குழந்தை. 'அப்பா' என்று அழைத்தாளே அவள்? புரியவில்லையா?''

''எத்தனை அழகு?'' என்று மயங்கினார் ப. மு.

''என் சிருட்டியின் கம்பீரம் அது!''

பட முதலாளியைப் போலவே கார்வண்ணனும் கோபமாக இருந்தான். பிறகு அவருக்குக் கோபம் இருந்த இடத்தில் கமலி இருந்தாள். அவனுக்கு கமலி இருந்த இடத்தில் கர்வம் இருந்தது! அதனால் இருவரும் ஒரு வகையாக 'ஒத்து'ப் போனார்கள்.

''என்னை மன்னியுங்கள்'' என்று ஒரேயடியாகச் சரணம் பாடினார். ப.மு.

''எதற்காக?''

''ஓர் அழகான குழந்தையைப் பெற்றிருக்கிறீர்களே, அதற்காக!''

''என் சிருட்டி எழுத்தில் மட்டுமல்ல; இந்தக் கமலியிலேயும் இருக்கிறது! என் எழுத்துச் சிருட்டியை அவமதித்துதற்கு, என் உயிர்ச் சிருட்டிக்காக மன்னிப்புக் கேட்டு ஈடு செய்து விட்டீர்கள்! வியாபாரிகள் மன்னிப்புக் கேட்டால், அதிலும் ஒரு வியாபாரம் இருக்குமே! நீங்கள் இப்பொழுது என்ன வியாபாரம் செய்யப் போகிறீர்கள்?'' என்று சிரித்தான் கார்வண்ணன்.

படமுதலாளியின் முகம்சுருங்கி விட்டது. அவன் சிரிப்போடு விட்டு வீசிய கல், அவர் மனத்தில் 'ணங்'கென்று விழுந்தது. அவருக்கும் சிரிக்கத் தெரியாதா? சிரித்தார். ''உங்கள் குழந்தையை மையமாக வைத்து ஒரு படம் எடுக்கலாம் என்று நினைக்கிறேன். ஓர் அருமையான கதை என்னிடம் மாட்டிக் கொண்டிருக்கிறது'' என்றார்.

''என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்,'' என்றான் கார்வண்ணன்.

''எதற்கு?''

''உங்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறதே ஓர் அருமையான கதை, அதன் தலை எழுத்துக்கு.''

''கதையை விடுங்கள் சார்! உங்கள் குழந்தை— அதற்கு வரப் போகிற புகழ்— அந்தக் குழந்தையைப் பெற்றதால் உங்களுக்கு வரப் போகிற புகழ்...'' ஒரே புகழ் மழையாகப் பொழிக்தார் ப. மு.

கவனியுங்கள்! புகழ்! அது கார்வண்ணனின் பலவீனம். அவன் எந்த இடத்தில் விழுவான் என்பதை அறிந்து கொண்டு தட்டவில்லை ப. மு. அவர் கண்ணை மூடிக் கொண்டு தான் தட்டினார். ஆனால், அது அவன் பலவீனமான இடத்தில் குறியோடு பாய்ந்து விட்டது.

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்று எதையும் செய்யத் தயாராகி விட்ட தோரணையில் கேட்டான் கார்வண்ணன்.

''முதலில் உங்கள் குழந்தையை வைத்துப் படம் எடுக்கப்போகும் எனக்கு உங்கள் வாழ்த்து வேண்டும்,'' என்றார் ப. மு.

பஸ்மாசூரனுக்கு வரம் கொடுத்த பரமசிவனைப் போல, ''உங்களுக்கு என் வாழ்த்துக்கள்'' என்று வரம் அளித்த கார்வண்ணன், மேலும் வரம் அளிக்கும் உற்சாகத்துடன் கேட்டான்: ''முதலில், என்று பேச்சைத் தொடங்கினீர்களே. அதனால் அடுத்து ஏதோ ஒன்றைக் கேட்க விரும்புகிறீர்கள் போல் தெரிகிறது. என்ன வேண்டும்?''

''குழந்தைக்கு நீங்கள் ஓர் ஒப்பந்தம் போட வேண்டும்?''

''போட்டால் போயிற்று!''

''பத்தாயிரம் ரூபாய்க்கு ஒப்பந்தம்!''

கார்வண்ணன் வாயைப் பிளந்தான். 'இந்தத் தமிழகத்தில் இலக்கியத்தைத் தவிர மற்றபடி ஈ, எறும்பும் கூட வளமாகத் தான் இருக்கின்றன, என்ற எண்ணம் முண்டி முளைத்து வந்த போது, அவன் இன்னும் கொஞ்சம் அதிகமாக வாயைப் பிளந்தான்.

''நாளைக்கு ஒப்பந்தத்தோடு வருகிறேன்!'' என்று ப. மு. விடை பெற்றுக் கொண்ட பொழுது, கார்வண்ணன் எழுந்து நின்று கரம் கூப்பினான். அதே சமயத்தில் அவனுக்குள் இருந்த சிருட்டிகர்த்தா என்ற கம்பீரமான மனிதன் தலை குனிந்தான்!

உள்ளே உற்சாகத்துடன் ஓடிய அவனை எதிர் கொள்வதைப் போல மீனா எதிரே வந்தாள்!

''மீனா! நம் கமலி பிரபல நட்சத்திரமாகப் போகிறாள்! புகழ் அவளைத் தேடி வந்திருக்கிறது..'' என்று உற்சாகமாக வழிந்தான் கார்வண்ணன்!

மீனாவுக்கு அது உற்சாகம் அளிக்கவில்லை. 'இந்த மனிதர் ஐம்பது வயது வரை புகழுக்குத் தாவி மூக்கை உடைத்துக்கொண்டிருக்கும்போது, இந்தக் குட்டிக் கமலிக்கு இவ்வளவு பெரிய புகழ் வாய்ப்பா? இந்தப் புகழ் கதை எங்கே போய் முடியும்?' என்ற கவலை, அவள் மனத்தில் பொங்கியது.

சொன்னபடியே மறு நாள் பட முதலாளி சிரித்த முகத்தோடு வந்தார். ஐந்து பிராயத்துச் சீதேவியை ஆயிரத்தோரு ரூபாய் அச்சாரத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

பத்தே நாட்களில் படப்பிடிப்பு ஆரம்பமாகியது. குழந்தை கமலி நடிப்பதற்காகவே பிறந்தவள் போல அத்தனை அருமையாக நடித்தாள். பார்த்தவர்கள் வியந்தார்கள். விநியோகஸ்தர்கள் வியாபாரத்துக்கு அலைந்தார்கள். பத்திரிகைக்காரர்களோ அவளைப்பற்றி போட்டி போட்டுக் கொண்டு எழுதித் தள்ளினார்கள்.

படம் வெளியாவதற்கு முன்னாலேயே கமலிக்குப் புகழ் வந்து குவிந்தது. கார்வண்ணனுக்கும் அவளால் புகழ் வந்து நனைந்தது. இப்பொழுதெல்லாம் எழுத்தைப் பற்றிப் பேசுவதை விட, திரை உலகத்தைப் பற்றியே அதிகம் பேசுகிறான் அவன்.

பாக்வாலா என்ன ஆனான்
நான் சொன்னபடிதானே ஆச்சு!
இன்னொருதரம் வந்தால்
இந்தக் கால்தான் பதில் சொல்லும்.

இந்த நிலையில்தான் கமலீ காய்ச்சலால் கண் மூடிக் கிடக்கிறாள்.

''என்ன மீனா, கமலியின் பக்கத்தில் கவலையுடன் நின்றுகொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே மீனாவை நெருங்கினான் கார்வண்ணன்.

அவள் கண்களில் மனம்கரைந்து கொண்டிருந்தது. வேதனையின்



கடனும்-பயனும்

கடன் வாங்கலாமா; கூடாதாஎன்பதல்லகேள்வி. எதற்காக வாங்குகிறோம் என்பதுதான் கேள்வி. ஒரு 500 ரூபாய் என்னுடைய நண்பர் கருத்திருமனிடத்தில் கடன் வாங்கி, நான் ஒரு பசு மாடு வாங்கி, பால் கறந்து நானும் சாப்பிட்டு மற்றவர்களுக்கும் விற்று, கடனை அடைத்தால் நண்பர் கருத்திருமனிடம் வாங்கிய கடனைக் கொடுக்கின்ற வாய்ப்புக் கிட்டுகிறது.

அதற்குப் பதிலாக எனக்குவேண்டியவர், கருத்திருமன் என்று ஒரு 500 ரூபாயைக் கடனாகக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, ஒரு அல்சேஷன் நாய்க்குட்டியை வாங்கினேன் என்றால், அது வாங்கக் கூடிய கடன் அல்ல.

அல்சேஷன் நாய், குட்டி போடாதா, விற்கக் கூடாதா, அதிலிருந்து லாபம் வராதா என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்கலாம். கேட்டால் அதை அல்சேஷன் ஆண், நாய்க்குட்டி என்றுசொல்லி விடலாம்.

ஆக, வாங்கப்படும் கடன் பயன்படுத்தப்படும் முறையில், நாம் அதிலிருந்து பெறக்கூடிய ஆதாயத்தைப் பொறுத்தும், போட்ட பணத்தைத் திருப்பி எடுக்க வேண்டுமென்ற அந்த முறையில் செலவழிக்கப்பட்டதா என்பதைப் பார்த்தும்தான் கடனின் தன்மையைத் தீர்மானிக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் 67—ல் பேசியது.

சிறகுகளாக இதழ்கள் துடித்தன. ''என் குழந்தை...''

''அவள் உன் குழந்தைதான் மீனா! இதில் என்ன உனக்குத் திடீர்ச் சந்தேகம்?'' என்று புன்னகைத்தான் அவன்.

''கமலிக்குக் காய்ச்சல்...''

''கமலிக்குக் காய்ச்சலா?''என்று கேட்டவர் கார்வண்ணன் அல்ல. பட முதலாளி. அப்பொழுதுதான் வாசற் படிக்குள் காலெடுத்து வைத்து வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார் அவர்.

''ஆமாம்,'' என்று அழுது வழிந்தாள் மீனா!

''அப்படியானால் பருத்தி சேலையாகவே காய்த்து விட்டது!'' என்று உற்சாகத்துடன் கூறினார் ப. மு.

''பருத்தி சேலையாகக் காய்ப்பதற்கும், கமலி காய்ச்சலாகக் கிடப்பதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று எரிச்சலோடு கேட்டாள் மீனா.

''இன்றைக்குப் படப்பிடிப்பில் கமலி காய்ச்சல் கண்டவளாகத்தான் நடிக்க வேண்டும். அவள் நடிக்க வேண்டிய அவசியம் இல்லாமலே காய்ச்சல் வந்து விட்டது. இதோடு அவள் நடித்தால் காய்ச்சல் காட்சி ரொம்பத் தத்ரூபமாக இருக்கும்!'' என்றார் ப. மு.

அதைக் கேட்டுவிட்டு ஆத்திரத்தோடு தலை நிமிர்ந்தாள் மீனா. ''கமலி கண் திறக்காமல் கிடக்கிறாள்! இதோடு அவள் படப்பிடிப்பில் கலந்து கொள்வதா! உங்களுக்குக் காட்சி தத்ரூபமாக அமைய வேண்டும். அதைத்தவிர ஓர் உயிரின் வேதனையைப் பற்றி உங்களுக்குக் கவலை இல்லை. நான் ஒரு தாய். என் குழந்தையை நான் படப்பிடிப்பில் கலந்து கொள்ள அனுமதிக்க முடியாது'' என்று படபடத்தாள்.

பட முதலாளியின் நிலை சிக்கலானது. கதாநாயகியிடம் பல்லைக் காட்டி பரிதாபக் கண்ணீர் விட்டு, கால் ஷீர்ட் வாங்கி இருந்தார் அவர், இந்த ஒரு நாள் இழந்தால் ஆயிரக் கணக்கில் நட்டம் ஏற்படும். இந்த நட்டத்தைச் சமாளிப்பது எப்படி?

ப. மு.வின் மூளையில் பரபரத்தது ஓர் அறிவுப் புழு. கார்வண்ணன் எந்த இடத்தில் தட்டினால் விழுவான் என்பதை ஆரம்பத்திலேயே உணர்ந்தவர் அல்லவா அவர்?

இடம் பார்த்துத் தட்டினார்.

''கார்வண்ணன் சார்! கமலியின் நடிப்பைக் கண்டவர்கள் பாராட்டுகிறார்கள். எல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதானே? கதையின் உச்சக்கட்டம் இன்று படமாகப் போகிறது. படத்தில் கமலி காய்ச்சலில் துடிக்கும் காட்சிதான் கதையின் க்ளைமாக்ஸ். அவள் காய்ச்சலாக 'நடிப்ப'தைவிட, தத்ரூபமாக இருந்தால் குழந்தை புகழ் ஏணிக்கே ஏறி விடுவாள். யாருக்காக அவள் அந்தக் புகழ் ஏணியில் ஏறுகிறாள்? உங்களுக்காக!''

''எனக்குப் புரிகிறது. அது மீனாவுக்குப் புரியவில்லை. என் குழந்தை அகில இந்தியப் புகழ் பெற வேண்டும். அந்தப் புகழில் நாமும் இருக்க வேண்டும் என்ற என் ஆசையை நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். மீனாவுக்கு எங்கே தெரிகிறது?'' என்று கூறிய கார்வண்ணன், மீனாவின் பக்கம் திரும்பிப் பார்த்தான். ''மீனா கமலிக்குக் காய்ச்சல் கண்டிருப்பதை அதிருஷ்டம் என்று சொல்ல வேண்டும். அது படத்தில் எவ்வளவு உணர்ச்சி நிறைந்த கட்டம் என்பதைப் பலர் பாராட்டும்போதுதான் நீ உணர்வாய். கிளம்பு மீனா, கமலியை எடுத்துக் கொண்டு.'' என்றான்.

''முடியாது. என் குழந்தைக்குப் புகழ் வேண்டாம். இந்த நிலையில் நான் அவளைப் படப்பிடிப்புக்குத் தூக்கிக் கொண்டு போக மாட்டேன்.'' என்று குழந்தையை அணைத்துக் கொண்டு விம்மினாள் மீனா.

கார்வண்ணன் எங்கே தன் மனைவியின் கண்ணீரில் கரைந்து விடுவானோ என்ற பயத்தில், அவனைக் கண்ணீரோடு கலக்கவிடாமல் குறுக்கிட்டார் ப. மு.:''சார் படப்பிடிப்புக்கு நேர மாகிறது!''

''கமலியை எடுத்துக் கொண்டு கிளம்பு மீனா!''

''மாட்டேன்.''

''ஏன் மாட்டாய்? போகிறாயா, இல்லை உன்னையும் உன் குழந்தையையும் வெளியே இழுத்துக் கொண்டு போய்த் தள்ளட்டுமா?'' என்று கார்வண்ணன் கத்த—

அழுகையும் கமலியுமாக மீனா கிளம்ப—

ப. மு. வெற்றிப் பெருமிதத்தோடு நடந்தார்.

இரவு மணி ஒன்பது.

கார்வண்ணன் குட்டிப்போட்ட பூனையைப் போல வீட்டைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தான்.

மீனாவும், கமலியும் இன்னும் வரவில்லை.

இன்னுமா படப்பிடிப்பு முடியவில்லை?

கவலை; பெருமூச்சு.

கைவளை ஒலிக்கிறது.

திரும்பிப் பார்க்கிறான்.

மீனா! மீனா மட்டும்தான்! கமலி இல்லை, அவளைத் தூக்கிச் சுமக்கும் மீனாவின் தோள் காலியாக இருக்கிறது.

''குழந்தை எங்கே மீனா?'' என்ற பதற்றத்துடன் கேட்டான் அவன்.

''இருக்கிறாள்!''

''எங்கே?''

''புகழில்!''

''விளங்கச் சொல்லேன்!''

''இனி விளங்கிக் கொள்ள ஒன்றும் இல்லை.''

''ஏன்?''

''நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகக் கமலி காத்துக் கொண்டிருக்கவில்லை.

''என்ன சொல்கிறாய் மீனா?''

''கமலி இறந்து விட்டாள்!''

''என்ன?'' அவன் இருதயம் வெடித்துக் கொண்டது.

''படப்பிடிப்பில் பல மணி நேரம் அவளைத் தொட்டிலில் கிடத்தி இருந்தார்கள். கடைசியில்... கடைசியில் நான் எடுத்தேன் அவளை அல்ல, அவள்பிணத்தை!''

''கமலி...'' என்று கதறினான் அவன்.

''புகழுக்கு ஆசைப்பட்டீர்கள். அவள் புகழ்பெற்று விட்டாள். நீங்கள் நினைத்ததற்கு மேலாகவே அவள் புகழடைந்து விட்டாள். ஸ்டுடியோவில் கலைஞர் கூட்டம் எல்லாம் அவளைச் சூழ்க்து நிற்கிறது. அவள் சடலத்தை அடக்கம் செய்ய ஒரு பெரிய ஏற்பாடே நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் கனவு கண்ட புகழ் கிடைத்து விட்டது. மகிழ்வதற்குப் பதிலாக ஏன் அழுகிறீர்கள்?'' என்று வெறியோடு கத்தினாள் மீனா.

''என் கண்ணீரால் கழுவ என் கண்மணியின் சடலம் எங்கே?'' என்று அலறினான் அவன்.

''புகழ் இல்லாத உங்கள் கண்ணீரை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லாமல்தான் அவள் ஸ்டுடியோவிலேயே செத்துப் போனாள். புகழ் வெறிக்காக என் செல்வத்தைப் பலி வைத்த உத்தமரே! உங்களிடம் தன் வெற்றுடலைக் கூட அவள் விட்டுப்போகவில்லை. தெரிகிறதா? அவள் புனிதப் புகழ் பயணத்தை, உங்கள் அழுக்குக் கண்ணீரால் ஆடை கட்டி மறைக்காதீர்கள்!''

முறையற்ற புகழுக்கு விலை கொடுத்து விட்ட கார்வண்ணன், தலையில் அடித்துக் கொண்டு கத்தினான்.

இப்பொழுது சிரித்துக் கொள்ளப் புகழுக்கு ஒரு வாய் தேவையாக இருந்தது. ★

புல்லாங்குழலே!

கவிஞர் அப்துல் ரகுமான்

கண்ணின் கனவுவர்ணம் கரைத்துவிழும்
கண்ணீர் மழைத்துளியின் சங்கமத்தால்
மண்வயிற்றில் கருவாகிப் பிறந்துவந்தாய்!

மதுநீர் இழந்துமண மூச்சுவிட்டு
விதிநீரின் ஓடமாய்ப் பூ மிதக்கும்
நதிநீராம் பால்குடித்து வளர்ந்துவந்தாய்!

பருவப்பூ மணத்தூதால், இளவேனில்
இரவு புளகமுற்ற மதுப்பொழுதில்
நெருப்பின் வரங்களினால் ருதுவானாய்!

நேற்று, சுரம் நிச்சயித்த முகூர்த்தத்தில்
ஏற்றிவைத்த தாரகைப்பூம் பந்தற்கீழ்
காற்றோடு கந்தர்வ மணம்புரிந்தாய்!

குளிர்ராகக் குழந்தைகளை ஈன்றெடுத்துத்
துளிக்கின்ற நவரசப் பாலூட்டி
வெளியென்னும் தொட்டிலிட்டுத் தாலாட்டினாய்!

ஏகாந்த மௌனவெளிக் கோப்பைகளில்
ராக ரசமூற்றி நிறைக்கின்ற
சோகலயப் பெருமூச்சே! இசைக்குழலே!

நானுமொரு தவம்செய்வேன் உன்னைப்போல்;
ஞான நதிக்கரையில்; என்மூச்சே
கானங்க ளாகின்ற வரம்பெறுவேன்.

With The Best Compliments Of

BHARATH REFINERIES & OIL MILLS

MANUFACTURERS OF "COMMANDER" BRAND REFINED OIL

46, PARK ROAD, ERODE-1

PRO: T. VELAPA GOUNDER

TELEGRAM: COMMANDER. TELEPHONES: *OFFICE 837, 838; RESI: 1155*

பொங்கல் வாழ்த்துக்கள்

ஸ்ரீ மீனுஷி மில்ஸ் லிமிடெட்,
மதுரை, பரவை, மணப்பாறை
மொத்தக் கதிர்கள் : 1,10,204.
தானியங்கி விசைத்தறிகள் : 300

சரோஜா மில்ஸ் லிமிடெட்
சிங்கநல்லூர்
கிளை: தியாகராசர் மில்ஸ்,
கப்பலூர்,
மொத்தக் கதிர்கள் : 49,928

லாயல் டெக்ஸ்டைல் மில்ஸ் லிமிடெட்,
கோவில்பட்டி.
கதிர்கள் : 38,203
தானியங்கி விசைத்தறிகள் : 124
விசை தறிகள் : 224

ஸ்ரீ சிவகாமி மில்ஸ் லிமிடெட்,
தேனூர்.
கதிர்கள் : 25,040

விரும்பியதையெல்லாம் விரும்பியபடி பெற வேண்டும் என்று தான் மனிதன் கனவு கண்டு வந்திருக்கிறான். அந்தக் கனவின் சின்னங்களாக, உருவகங்களாகவே கேட்டதையெல்லாம் கனிகளாகத் தந்துவிடும் வானுலக மரமாகிய கற்பகம், விரும்பியதையெல்லாம் பாலாகக் கொடுக்கும் வானுலகப் பசுவாகிய காமதேனு, தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் வான்மணியாகிய சிந்தாமணி, எந்த நோயையும் உடனே குணப்படுத்தி மூவா வாழ்வளிக்கும் வான்மருந்தாகிய சஞ்சீவி, சாவை வெல்லும் அமுதம், எடுக்க எடுக்கக் குறையாது உணவளிக்கும் அமுதசுரபி முதலானவை விளங்குகின்றன.

ஐயாயிரம் ஆண்டுகளாகத் தமிழன்னை தன் காலக்கருவினுள் இத்தகைய கனவுத் திட்டங்களாகவே தமிழிலக்கியத்தை, அதன் மலர்ச்சியாகிய தமிழியக்கத்தை, அவற்றின் மலர்ச்சிகளாகிய திராவிட இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவங்கிடந்து பேணிவந்திருக்கிறாள்.

நம் தமிழ் இன்று உலக அரங்கேறத் தொடங்கிவிட்டது. நம் தமிழகத்தின் படிநிலையும் இன்று முன் என்றும் இருந்ததைவிட உயர்ந்து வருகின்றது. தமிழகம் நீண்ட நாள் கண்ட ஒரு உலகக் கோட்பாடு, ஒரு கடவுட் கோட்பாடு, ஒருவனொருத்தி காதல் மணமாகிய கற்புக் கோட்பாடு, சாதி மத வருண வகுப்புப் பேதங்கள் அற்ற சமுதாயக் கோட்பாடு, ஆண்டானடிமையற்ற, முதலாளி தொழிலாளியற்ற, செல்வர் ஏழையற்ற சமுதருமக் கோட்பாடு ஆகியவற்றை இந்தியாவும் உலகும் பல்வேறு வடிவுகளில் கனவு காணத் தொடங்கிவிட்டன.

நம் தமிழகம் கேட்பவற்றைக் கேட்குமுன் கொடுக்கத் துடிக்கும் ஒரு தமிழியக்கக் காண்முனையை, நம் கனவுகள் தாண்டி வேகமாக நனவுத் திட்டங்களிடும் ஒரு நாயகனை நம் முதல்வராக, பண்டாரகர், உலகப் பெருங் கவிஞர், தமிழவேள், கலைஞர் மு. கருணாநிதி உருவில் பெற்றுவிட்டது! ஆயினும் இச்சமயத்தில்தான் நம் கனவு காணும் திறத்திற்கு, நம் விருப்பங்களை விழுப்பங்களாக்கும் நம் துணிவிற்கு, விரும்பியதை வழுவாமல் கூறும் நாத்திறத்துக்கு ஒரு சோதனை ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாம்.

ஆளுபவர் திண்ணியராக, அவர்கள் ஆட்சித்திறம் திண்ணியதாக இருந்துவிட்டால் மட்டும் போதா. ஒரு கை தட்டினால் ஒலி ஏற்படாது. இருகை தட்டினால்தான் ஒலி ஏற்படும். ஆளப்படுபவரும் திண்ணியராக, அவர்கள் விருப்பங்களும் குறிக்கோள்களும் திண்ணியவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆளுபவர்களின் எண்ணங்களுக்கு, செயல்களுக்கு, திட்டங்களுக்குச் சரியான ஆதரவும் ஊக்கமும் ஆற்றலும் ஏற்படும்.

முற்போக்குகளுக்குக்கூட இவர்கள் கையிலுள்ள பத்திரிகைகள் எவ்வளவு பூடகமான கதை கட்டுரை சமய புராணப் பிரசார இயக்கங்கள் நடத்தின, நடத்தி வருகின்றன என்பதைத் தேசிய முற்போக்குவாதிகள் கண்டும் அசட்டையாய் இருந்து வருகிறார்கள்.

அரசியல் கட்சியைவிட மக்கள் உள்ளத்தின் கட்சியும் மாணவ உள்ளத்தின் கட்சியுமே தொலை

கற்பகத்தைச் சேர்ந்தார்க்கு...

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

இது மட்டுமன்று, ஆளுபவருக்கும் ஆளப்படும் பொதுமக்களுக்கு மிடையே இரு வகுப்புகள் இருக்கின்றன. ஒன்று ஆட்சித் துறையை நிர்வகிக்கும் ஆட்சி வகுப்பு. இது சுயாட்சிக் காலத்திலிருந்து அயல்மொழி படித்து அயலாட்சிக் கொள்கைகளுக்கேற்ப நடந்து அப்பண்பாட்டில் வளர்ந்து, இன்னொன்று, அந்த அயலாட்சி வகுப்பையும் அவர்களது அயல் மொழித் தகுதியையும் பண்பாட்டையும் பயிற்றுவித்து உருவாக்கிய கல்வி முறை—பள்ளிகளுக்கு [illegible] பல்கலைக்கழகங்கள்.

சுதந்தரம் ஏற்பட்டபின்பும், பல நல்ல தேசியக் கட்சிகள், முற்போக்குக் கட்சிகள் ஆட்சிக்கு வந்த பின்னும்கூட இவ்விரண்டு வகுப்புகளும் கிட்டத்தட்ட அப்படியேதான் இருக்கின்றன. நம் சமுதாயத்திலுள்ள சுயாட்சிக் கால அடிமைப் போக்குகளையும் பிற்போக்குத் தலைமைகளையும் ஆதரித்து வலுப்படுத்துவதிலேயே இவ்விரண்டன் சக்திகளும் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றன.

அண்மைக் காலத்தில் "அரசியல் வேறுபாடுகளைப் பயன்படுத்தி மாணவர்களைத் தமிழுக்கெதிராகத் திருப்பிவிட இவை பயன்பட்டு வந்துள்ளன. தமிழ்ப் பாடத் திட்டம் தமிழ் மந்திரங்கள் ஆகிய சிறு

நோக்கில் நாட்டின் வருங்கால வளத்துக்கு முக்கியமானது ஆகும்.

நல்லாட்சியைப் பெற்றும், அதன் முழுப் பயனை நாம் இழந்துவிடாதிருக்க வேண்டுமானால், ஆளுபவர் ஆளப்படுபவர் ஆகியோருக்கிடையில் இருந்துவரும், வளர்ந்துவரும் பிற்போக்குச் சக்திகளை முறியடிக்க தேசியக் கட்சிகள், முற்போக்குக் கட்சிகள் யாவும் தம் இடைவேற்றுமைகளை மறந்து செயற்படுதல் வேண்டும்.

இன்றைய வங்கால தேச நிலவரம் இதற்கு ஒரு எச்சரிக்கைச் சம்பவம் ஆகும்.

நாற்பது ஆண்டுகளுக்குமுன் தொலை நோக்கான தலைவர்கள் சமுதாயத்துறையிலும் மொழித் துறையிலும் உழைத்திருந்தால், இன்று இப்பிரச்னை இவ்வாறு வளர்ந்திருக்காது.

இவ்வகையில் தமிழ் மக்களுக்குப் பொதுவாக, தமிழியக்கத்திற்கு, திராவிட இயக்கத்திற்கு திராவிட கழக, திராவிட முன்னேற்றக் கழகங்களுக்கு, மாணவர் இயக்கங்களுக்கு, தமிழாசிரியர்களுக்குச் சிறப்பாகப் பெரும் பொறுப்புண்டு.

★

வங்கச் சரித்திரம்

பங்களாதேஷ் மக்களுக்கும் பாகிஸ்தானியர்களுக்கும் என்ன உறவு

கிழக்கு வங்கத்தை பாகிஸ்தான் அடக்கி ஆள எண்ணியது ஏன் எதிர்காலத்தில் என்ன நடக்கும்?

மனிதனுக்குச் சிலசமயம் மடியிலுள்ள பொடி மட்டை கூட சுமக்க முடியாத பாரமாகத் தோன்றுவதுண்டு. அதேபோல், ''வலுவாகக் காலூன்றச் சரியானதோர் இடமும் வகையாகக் கைப்பிடிக்குள் ஒரு நெம்புகோலும் கிடைத்து விட்டால், இந்த பூமிப் பந்தையே துரும்பு போல் லகுவாகத் தூக்கிக் காட்ட முடியும்'' என்று ஆர்க்கிமிடீஸ் பாணியில் அதே மனிதன் சில சமயம் முழங்குவதுமுண்டு. இந்த இருவித நிலைகளும் மனித மனப்போக்கில் கலவையிடும் மாறுதல் மட்டுமல்ல, நாடுகளுக்கும் அவ்வப்போது ஏற்படும் சரித்திர நியதியுமாகும்.

''ஆயிரமாண்டுப் போர் புரியப்'' போவதாக அடிக்கடிக் கொக்கரித்து வந்த பாகிஸ்தானத்துக்கு, இன்று, தனது சொந்த மண்ணை கராச்சியும் பிண்டியுங்கூட சுமக்கவொண்ணு நிலப்பரப்பாகத் தெரியத் தொடங்கிவிட்டன. ஆயிரமாண்டுகளாக போற்றியும் பேணியும் வந்த நாகரிகப் புகழும், நன்னெறிகளும், மனிதத் தன்மையும் மக்களாட்சிப் பண்பும் பாழ்படக் கூடாது என்பதற்காகத் தனது உருக்கு உடலைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்த இந்தியா, இன்று, தனது பொன் மயமான சரித்திரத்தில் புது ஏடு ஒன்றைப் பெருமையோடு சேர்த்துப் படித்துக் குதூகலிக்கிறது. ஆர்க்கிமிடீஸ் நியதிப்படி இந்த உலகத்தை எந்த இடத்திலிருந்து நெம்பினால் உயரத் தூக்கிக் காட்ட முடியும் என்பதைக் கணித ரீதியாக யாரும் சொல்லவில்லை. ஆனால், அறநெறிகளும் அரசியல் நாகரிகங்களும் எந்த இடத்திலிருந்து போதிக்கப்பட்டால், அது, உலகத்தைச் சொர்க்கத்துக்கு ஈடாக உயர்த்திக் காட்டும் என்பதைக் கடந்த திங்கள் பங்களாதேஷ் எனும் கிழக்கு வங்கத்தை விடுவிக்கும் போரில் வென்றதால், நம் இந்தியா, தெளிவாகவே நிரூபித்துவிட்டது.

''பொன்நிகர் பங்களாதேஷ்'' என்று இந்தியா விடுவித்த புதுநாட்டின் பெயர் சொல்லி எல்லோரும் மகிழ்கிறார்கள். பொன்நிகர்த்த அந்தப் பெருநிலத்தைப் புதுநாடாக்க இந்தியா சிந்திய ரத்தமும் ஏற்படுத்திக் கொண்ட இழப்புகளும் கொஞ்சமல்ல. தகடூர், புள்ளலூர், தெள்ளாறு, சலாமிஸ், ஜாமா, வாடர்லூ, நார்மண்டி, லெனின்கிராட் என்பன போன்ற புகழ்பெற்ற போர்முனைகளின் சிறப்பான பட்டியலில், நமது இந்தியப் படை வென்ற டாக்கா போர்முனையும், சரித்திரத்தால் இணைத்துக் கொள்ளப்பட்டு மிளிர்கிறது. பாரசீக ஏகாதிபத்தியத்தின் இராணுவ வெறியையும் ஆரிய இன உயர்வு மமதையையும் வேரறுத்து, அவை என்



றைக்கும் பெரியதொரு போருக்குத் துணிந்தெழாதவாறு செய்த பெருமை, கிரேக்கர்கள் வெற்றி பெற்றசலாமிஸ் போர்முனைக்கு உண்டு. அந்தப் போர் முனையில் ஆரிய இனஉயர்வுக் கொள்கைக்கு விழுந்த அடி, இன்றளவும் மனிதகுல முன்னேற்றச் சரித்திரத்தில் எதிரொலிப்பதைக் காணலாம். கார்ல் மார்க்ஸ் பிறக்காதிருந்தால் கம்யூனிசத் தத்துவமும் பிறந்திருக்காதோ என்னவோ, சலாமிஸ் போர் முனையில் பாரசீகர்கள் தோற்காதிருந்தால் இந்த உலகம் இன்றுபோல் இருக்க முடியாது அதேபோல், பொதுவாக உலகத்து ஜனநாயக மரபுகளும் மாண்புகளும் — குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்தின் நிலையான எல்லைகளும், நிறைவான அமைதியும், ஜனநாயக அரசியலும், தொய்வுவிழா முன்னேற்றமும் — டாக்கா போர்முனை வெற்றியால் புதியதொரு பாதுகாப்பைப் பெற்றுவிட்டன.

கிழக்கு வங்கத்தின் சுதந்தரப் பிரகடனம், தனியொரு நாட்டின் புதிய எல்லைக்கோடுகளை நிர்ணயித்த நிகழ்ச்சி மட்டுமல்ல. அது உலகத்துப் பழம்பெரும் நாகரிகச் சமுதாயங்களின் ஒட்டு மொத்தமான எதிர்கால வெற்றிகளையும் கோடிட்டுக் காட்டுவதாகும். தாய் மொழிப் பற்றும் தன்னாட்சி ஆர்வமும் எத்தகு அற்புதங்களைச் சாதிக்கும் என்பதற்கு, பங்களாதேஷ் உதயம் ஒரு சான்று. இந்த உதயத்துக்கு உறுதுணையாக நின்ற இந்தியாவின் வீரமும் விவேகமும், துணிச்சலும் மனிதாபிமானமும், உலகச் சரித்திரத்தில் ஒரு சில நிகழச்சிகளை மட்டுமே ஒப்பிடக் கூடியனவாகும். கிழக்கு வங்க விடுதலையில் இந்தியா ஏற்ற பங்கு பற்றி அவதூறுகப் பலர் கதை கட்டி மகிழ்கிறுர்கள். அப்படிப் பட்டவர்கள் நிலவிலே நிற்கும் மனிதர்களாயினும், மனத்திலே

இருள் மூண்டிக் கிடப்பவராவர். ஏசு கிறிஸ்துவே இன்று அவர்களிடையில் தோன்றிவிட்டால், தங்கச் சிலுவையிலே மீண்டும் அவரை மாட்டி ''பொற் சிலுவையிலல்லவா புனிதனை ஏற்றி இருக்க வேண்டும்?'' என்று துணிந்து செல்வத் திமிர்வாதம் பேசக்கூடியவர்கள். யார் என்ன சொன்னாலும், கிழக்கு வங்க விடுதலையில் இந்தியா ஏற்ற பங்கு இரத்தக் கலப்பின்பாற்பட்டது; தட்டிக் கழிக்க முடியாதது; நீதி நேர்மையின் அடிப்படையில் அமைந்தது. தாமஸ்பெயினி அமெரிக்காவுக்கு வந்தது ஏன்? மகாகவி பைரன் கிரேக்கத்துக்கு ஓடியது ஏன்? டிரைபஸ் வழக்கில் எமிலிஜோலா எதற்காக வாதாடினான்? பெருமாட்டி அன்னிபெசன்டு இந்தியாவில் குடி புகுந்தது ஏன்? இவற்றுக்குக் கிடைக்கிற விடைதான், இந்தியா கிழக்கு வங்கத்துக்கு ஏன் உதவியது என்பதற்கும், ஏற்ற விடையாகும்.

இப்படி ஆழமாக விடைதேடிப் புறப்பட்டால், இன்று கேள்வி கேட்கும் ஏகாதிபத்திய உணர்வுகள் தாம் இத்தனைக்கும் காரணம் என்பதும் புலனாகும். ஏகாதிபத்திய வெறியர்கள் ஏதோ ஒரு லாபத்திற்காக — குழந்தைகள் மணல் வீடு கட்டி கண நேரம் மகிழ்கின்ற செயல் போல் — தம்மிச்சையாக நாடுகளின் எல்லைக் கோடுகளை வரைந்து கிறுக்கியதன் குளறுபடிகளை, இன்றைய பங்களாதேஷ் விடுதலை வெள்ளையாகத் தெரிவித்து விட்டது. துப்பாக்கி முனையிலும் அரசியல் சூதாட்ட நோக்கிலும், வல்லரசுகளால் வரையறுக்கப்பட்ட நாடுகளின் எல்லைகள், ஆயுத பலத்தாலும் அடக்குமுறைப் பயமுறுத்தல்களாலும் நெடு நாட்களுக்கு நிலைக்க முடியாது என்பதை, இது தெளிவாக நிரூபித்துவிட்டது. இதற்காகவே கொரியா போராடிக் கொண்டிருக்கிறது; வியட்னாம் இன்னமும் ரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறது; ஜெர்மனி காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. தலையற்ற முண்டம் போல் பரிதாபக் காட்சியளிக்கும் பாகிஸ்தானமும்; பக்டூனிஸ்தான், ''சிந்துஸ்தான்'' என்பன போன்று தனித் தனியாகச் சிதறிப்போய், மதவெறியும் ஆரிய இன வெறியும் தாண்டவமாடும் ஒரு சில இராணுவக் கண்டோன்மெண்டுகள் மட்டுமே, பாகிஸ்தான் என்ற பெயரோடு இறுதியில் நிற்கும்போல் சூழ்நிலைகள் தோன்றுகின்றன.

இத்தகு பரிதாபச் சூழ்நிலைக்குப் பாகிஸ்தான் இராணுவ வெறியும் ஆரிய இன மமதையும் ஓரளவுக்கே காரணம். அதன் முழுக் காரணத்தையும் ஆராய்ந்தோமானால், அது ஒரு நாடு என்று உருவகப்படுத்தப்பட்டதே தப்பான அடிப்படையில் என்பது இப்போது தெளிவாகிறது. ''கம்ப்யூட்டர் மெஷின்'' கழித்துக் கூட்டிப்போட்டுக் கொடுத்த கணக்கு அது. அதன் தவறுகளைச் சுட்டிக்காட்ட மனித சக்தியால்தான் முடியும். துரதிருஷ்டவசமாக மனிதனின் 'பாஷை' இயந்திரக் கம்ப்யூட்டர்களுக்குப் புரிவதில்லை. இந்த இடத்தில்தான், இயந்திரமயமாகிவிட்ட மேற்குக்கும், இன்னமும் இருதயந்தான் உலகத்தை ஆளவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கும் கிழக்குக்கும் தகராறு தொடங்குகிறது. மனித உணர்ச்சிக்கு மதிப்பே இல்லை என்று அறுதியிட்டு முடிவு கட்டிவிட்டிருந்த நேரத்தில், மத வெறியின் ஆங்காரக் கூச்சலில் முகிழ்த்த நாடு பாகிஸ்தான். ஆங்கில ஏகாதிபத்தியம் அன்று இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லைக்கோடுகளை வரையறுத்தபோதே, பாகிஸ்தானத்தைப் பொறுத்தவரை துக்கிரிக் குழந்தையாக அநேகரால் வருணிக்கப்பட்டது. அது பழங்கதை. அந்நாட்டின் பிறப்பு குறித்த விமர்சனம் இப்போது காலங்கடந்த விவகாரம்.

இன்று அந்த நாடு உலகம் ஒப்புக்கொண்ட ஒரு அங்கம். இது உண்மை. ஆனால், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பாகிஸ்தான் வாழ்ந்த வாழ்க்கை இருக்கிறதே, அது போலியானது; நாகரிகத்துக்கு ஒவ்வாதது. தன்னிடமே அது தயை தாட்சண்யம் காட்டிக் கொண்டதில்லை. பாகிஸ்தானிடமே அந்த பாகிஸ்தான் நட்புணர்வு பாராட்டியதில்லை. அறுத்தெறியப்பட்ட அங்கம்போல் கிழக்குப் பாகிஸ்தான் அவ்வப்போது பல்வேறு காரணங்களுக்காகத் துடித்துத் துடித்து இரத்தத்தைப் பாய விட்டபோதும், இஸ்லாமாபாத் ஆட்சி உணர்ச்சிகளையும் பரிவையும் காட்டிக் கொண்டதில்லை. அந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள், மறுபகுதி மக்களின் மொழி, பண்பாடு, உணவு முறை, உடைப் பழக்கம் ஆகியவைகளைப் பொருட்படுத்தி, 'ஒருநாட்டு மக்கள்' என்ற பாசத்தோடு இருதயங்களைத் தொட்டுப் பேசுவதற்கு முயற்சி செய்ததே இல்லை. ஆதிபத்தியம், எல்லைக்கோடு, பலமான மத்திய ஆட்சி என்கிற மாய்மாலங்களிலேயே பாகிஸ்தான் இது நாளும் காலத்தை ஓட்டி வந்தது. தன் நாட்டு மக்களையே இன மாறுபாட்டின் பெயரால் கொன்று குவிக்கும் கொடூரத்தைப் பாகிஸ்தான், நாஜி ஜெர்மனியைப் போல் விடாப்பிடியாகப் பின்பற்றி வந்தது.

பாரசீக ஏகாதிபத்தியத்தால் அரசியலில் உருவாக்கப்பட்ட ஆரிய இன உயர்வுக் கொள்கையால் ஆட்டிப் படைக்கப்படும் எந்த இனமும், ஆட்சியும், தங்கள் குடிமக்களுக்குள்ளாகவே பாரபட்சம் காட்டுவது சரித்திர ரீதியான உண்மை. கொடுங்கோலன் இட்லர் ஆரிய தர்மத்தையும், ஆரிய இன உயர்வையும் புதுப்பிக்கப் போவதாகப் பறைசாற்றினான். ஆரிய இனத்தவர்களல்லாத மக்கள் ஆடுமாடுகளைக் காட்டிலும் கீழானவர்கள் என்று அவன் பகிரங்கமாகச் சொன்னான்; அரசியல் சட்டமாகவும் துணிந்து செயல்படுத்தினான். தன்னுடைய ஆட்சியைப் 'பத்தாயிரம் ஆண்டு கால ஆட்சி' என்றுபிதற்றினான். இட்லர் ஆட்சியில் ஜெர்மானிய யூதர்கள் துவக்கத்தில் அனுபவித்த கொடுமைகளை, யாகியா கான் ஆட்சியில் கிழக்கு வங்க மக்கள் அனுபவித்தது, சரித்திர நியதிதான் போலும். பாகிஸ்தான் ஆட்சியாளரிடம் காணப்பட்ட பல்வேறு அவலட்சணங்களைக் காட்டிலும், ஆரிய இனவெறிக் கோட்பாடு ஒன்றுதான் தமிழர்களைப் பெரிதும் அருவருப்பு கொள்ளச் செய்தது. ஏனென்றால், தமிழர்கள், சரித்திரக் காலந்தொட்டு ஆரிய இனவெறியை எதிர்த்து நிற்கும் பழைய நாகரிகச் சமுதாயங்களில் முக்கியமானவர்கள்.

கிழக்கு வங்கம் பாகிஸ்தானிலிருந்து பிரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு அடுக்கடுக்காக ஆயிரம் காரணங்களைச் சொல்லலாம். ஆனால், இவைகள் அனைத்துக்கும் மேலாக பாகிஸ்தானத்தின் மூலபலம் முறிந்து — ஆயுத பலங்குன்றி — ''அனைவரும் சமமே; இன உயர்வு பேசுவது இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்றதல்ல'' என்ற புத்தி அதற்கு வரவேண்டும் என்பதில்தான் தமிழக மக்கள் பெருங்கவலை எடுத்துக் கொண்டனர். திராவிடர்க் கழகம் துவக்கப்பட்ட புதிதில், நாகர்கோவிலில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், அறிஞர் அண்ணா அவர்களிடம் அங்கிருந்த காங்

கிரஸ்வாதிகளால் ஒரு கேள்வித்தாள் கொடுக்கப்பட்டதாம். அதில் 'முகமதலி ஜின்னு ஆரியரா? அல்லது திராவிடரா?' என்று கேடகப்பட்டிருந்தது. பதில் சொன்ன அண்ணு அவர்கள், ''ஸ்ரீமான் ஜின்னு ஆரியர் — திரு. ஜின்னு திராவிடர்'' என்று தமக்கே உரிய திறனேடு விடையிறுத்தாராம். ஜின்னு அவர்கள் தமது காலம்வரை திரு. ஜின்னுவாகவே இருந்தாரா என்பது வேறு விஷயம். அவர் மறைவுக்குப் பின் பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பேற்ற சீடகோடிகள் அனைவருமே அவரை 'ஸ்ரீமான் ஜின்னு'வாகவே மதித்து வழிநடக்கத் தலைப்பட்டனர். ஆரிய இனவெறியின் உச்சாணிக் கிளையில் அமர்ந்து கொண்டு, மற்ற மக்களை அலட்சியக் கண்களோடு நோக்கிக் கொண்டிருந்தனர் அவர்கள்.

மதத்தின் பேரால் அந்நாடு அமைக்கப்பட்டிருந்தாலும். அதன் நடைமுறை ஆரிய இன வெறி கொண்ட 'பெருமக்கள்' பாவனையில் நடைபோடுவதாக இருந்தது. இல்லாவிடில், அதே இஸ்லாமிய சகோதரனின் இரத்தம் கங்கை போல் காவிரி போல் டாக்கா நகரத் தெருக்களில் பாய்ந்திருக்காது. மதத்தின் அடிப்படையில் — புனித நூல் குர்–ஆன் போதனைப்படி மேற்குப் பாகிஸ்தானியர் ஒழுகுபவர்களாக இருந்தால், நபிகள் நாயகத்தின் சமத்துவம் — சகோதரத்துவம் என்கின்ற கொள்கைகள் அங்கு செவ்வனே வாழ்ந்திருக்கும். இவைகள் எல்லாம் இல்லாதுபோனது ஏன்? ஏனென்றால் ஆரிய இனத்தவரும், அதன் வழிவந்த பாரசீக ஏகாதிபத்திய நடைமுறைகளும் அங்கு கையாளப்பட்டவைதான் காரணம்.

மேற்குப் பாகிஸ்தானத்துக்கும், கிழக்குப் பகுதிக்கும் இடையில் இருந்த தூரம் 1200 மைல்கள். மத்திய ஆட்சியின் மையப் பீடத்திலிருந்து இத்தனைத் தொலைவில் இருக்கும் மாநிலத்துக்கு எத்தகு பாதுகாப்பும், எவ்வளவு சுதந்தரமும் இருக்கும் என்பதை இஸ்லாமாபாத் இன்று உணர்த்தி விட்டது. ஆட்சியின் மையப் பீடத்திலிருந்து தொலைவு அதிகமாக ஆக, அந்தத் தொலைதூரக் குடிமக்களுக்கு எவ்வளவு மரியாதை கிடைக்கும் என்பதை பாரசீக ஏகாதிபத்தியத்தின் சரித்திரம் நமக்குச் சொல்கிறது. உலகத்தின் முதல் வரலாற்றாசிரியன் ஹெரடாட்டல் இப்படிக் குறிப்பிடுகிறான்:–

''அவர்கள் (பாரசீகர்கள்) தங்களுக்கு அருகாமையிலுள்ளவர்களுக்குத்தான் மதிப்பும் மரியாதையும் அளிப்பார்கள். அடுத்து வாழ்வோர் அவர்களுக்கு அருகிலுள்ளோர்க்கு மதிப்பளிப்பார்கள். இந்த அடிப்படையிலேயே அவர்கள் ஒருவருக்கொருவரை மதிக்கும் மனப்பான்மை இருக்கிறது. வெகு தொலைவில் வசிப்பவர்களுக்கு பாரசீகர்கள் மதிப்போ சிறப்போ கொடுப்பதில்லை என்பதுடன் அப்படிக் கேட்பதற்கும் [வெகு தொலைவிலுள்ளோர்க்கு அருகதை இருப்பதாகவும் கருதுவதில்லை'' (ஹெரடாட்டல்–ஏ.டி. காட்லி மொழி பெயர்ப்பு புத்தகம் 1–ம் பக்கம் 133–135)

ஆரிய இன உயர்வுத் திமிரின் இத்தகு பழக்கத்தைத்தான், இஸ்லாமாபாத், கிழக்கு வங்கத்தில் துவக்சத்திலிருந்து கடைபிடித்து வந்திருக்கிறது. இதன் அடிப்படையில்தான் மேற்குப் பகுதிக்கு கிழக்குப் பகுதி விடுத்த அறைகூவல்களுக்கெல்லாம் காரணம் அமைந்தது. இதனை கிழக்கு வங்க மக்கள் வெளியுலகத்துக்குச் சொன்னபோது யாருக்கும்

கூவத்திலிருந்து எங்கள் நண்பனுக வந்துசேர்ந்த முதலை இறந்துவிட்டதே? ஆ....

கேட்காதவாறு கட்டுப்பாடாக அழுத்தப்பட்டுவிட்டது. ஆனல், பாரசீக ஏகாதிபத்தின் வழித்தோன்றலாகத் தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் ஈரான் மன்னர் இதனைத் தெளிவாக்கி விட்டார்.

1971 அக்டோபர் திங்களில் பெர்சிபோலிஸ் நகரில் ஆடம்பரமாக நடைபெற்ற திருவிழா ஒன்றின் விவரம் நமக்குத் தெரியும். பாரசீக ஏகாதிபத்திய ஸ்தாபகம் — பேரரசன் மகாசைரஸ் ஆட்சிப் பொறுப்பேற்ற 2500–ம் ஆண்டு விழா கொண்டாட்டமே அது. சைரஸ் மன்னனின் சாதனைகளைக் காட்டிலும், அவன் ஆரிய இனத்தவன் ஆரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கியவன், மனித குலத்துக்கே உரிமைகளைப் போதித்தவன் என்றெல்லாம் ஈரான் நாட்டு விளம்பர இலாகா முழு வேகத்தில் பிரசாரம் செய்தது. நமது கரிகாலனைக் காட்டிலும், அசோகனைக் காட்டிலும் அப்படியொன்றும் அந்த 'மகாப்பெரிய சைரஸ்' மனிதக் குலத்துக்கு மாபெரும் சேவை புரிந்திடவில்லை. இருப்பினும் அவன் செய்த சேவைகளில் மெச்சத்தகுந்த இரண்டொன்றைச் சொல்லி, 'ஆரிய குலத்தின் அற்புதங்கள் மிகைப்படுத்தி உலகுக்கு நினைவூட்டப்பட்டன. இந்த அரிய பெரிய நிகழ்ச்சியையொட்டி ஈரான் மன்னர் பாகிஸ்தான் யாகியாகானுக்கு 'சைரஸ் பேரரசனின் இரத்தக் கலப்புள்ள ஆரிய குலத்தவர்' என்பதாக வாழ்த்தனுப்பினர். பாரிஸ் பத்திரிகை நிருபரொருவருக்கு ஈரான் மன்னர் அளித்த பேட்டியில் குறிப்பிடப்பட்ட கருத்துதான், கிழக்கு வங்க மக்களைத் துச்சமென மதித்த பாகிஸ்தான் ஆட்சியினரின் போக்குக்கு மூலவேர் எது என்பதை, உலகம் புரிந்து கொள்ளச் சரியாக உதவிற்று.

''ஈரான் நாடு நூற்றுக்கு நூறு பங்கு எல்லா வகையிலும் பாகிஸ்தானத்தை ஆதரிக்கிறது. பாகிஸ்தானின் விவகாரத்தில் எந்த வெளிநாடும் தலையிடுவதை நாங்கள் விரும்பவில்லை. ஈரானியரும்

பாகிஸ்தானியரும் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்கிற பந்தம் எங்களுக்குள் உண்டு''—அதாவது மகாசைரஸ் மன்னன் வழித்தோன்றல்கள் — என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்தின் பயங்கர இருட் படலத்தை, உலகத்தை எப்போதும் கற்கால நாகரிகத்திலேயே வைத்திருக்க நினைக்கும் ஆரிய இனத்திமிரின் விளைவை — பாரிஸ் பத்திரிகை நிருபர் சரியாக உணர்ந்தாரா இல்லையா என்பது நமக்குத் தெரியவில்லை, ஆனால், இந்தியாவில் இந்தக் கருத்தைச் சொல்வதற்கு ஏன் கட்டுப்பாடாக மறுக்கப்படுகிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மேற்குப் பாகிஸ்தானியர் கிழக்குப் பகுதி மக்களைத் தாழ்வாக நினைத்ததற்குத் தகுதியான காரணத்தைத் தயவுசெய்து இந்தியாவின் அரசியல்வாதிகளும் இதழ்களும் பகிரங்கமாகத் தெரிவிப்பது நல்லது. இந்த விஷயத்தில் கட்டுப்பாடான மவுனம் சாதிப்பது பின்னால் பெரிய கேடாக வந்து முடியும். நாசிஜ ஜெர்மனியின் துவக்கக் கால நோக்கத்தைச் சொல்வதற்குக் கூச்சப்பட்டோர் பின்னர் கை பிசைந்து நின்றதையும் நாம் கண்டிருக்கிறோம். இதில் உண்மையைச் சொல்லத் தயக்கம் காட்டுவதும், ஏதோ காரணங்களைச் சொல்லி மயக்கம் காட்டுவதும், எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

நாஜி இட்லர்கூட யூதர்களைத் தவிர்த்து மற்றவரைக் கொல்ல முயலவில்லை. செங்கிஸ்கான் கூட தன்னை எதிர்த்துப் போரிட்டபோதன்றி, விரும்பிய நேரத்திலெல்லாம் மங்கோலியர்களைக் கொன்று குவிக்கவில்லை. ரொடீசியாவில் பெரும்பான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அரசியல் துரோகம் எதன் அடிப்படையில்? தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்கள் நடத்தப்படும் இழிவான நிலைக்கு எது காரணம்? அமெரிக்காவில் நீக்ரோ குடிமகன் நடத்திவரும் சமத்துவப் போராட்டம் எதற்காக?

தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் கடவுளர்களுக்கு அர்ச்சனை செய்யக் கூடாது எனச் சொல்வோரின் நோக்கம் என்ன? இவைகளுக்கெல்லாம் தாராளமாகவும் சரியாகவும் விடை சொல்லத் தயங்காத நாம், மேற்குப் பாகிஸ்தானியர் கிழக்குப் பகுதி மக்களிடம் ஆரிய இனத் திமிரோடுதான் நடந்து கொண்டனர் என்பதை ஏன் சொல்லத் தயங்க வேண்டும்? இந்த நூற்றாண்டில் பெரும் பகுதி மக்களை சிறு பகுதியினர் ஆடுமாடுகளைவிடக் கேவலமாக மதித்தனர் என்றால், அதற்கு உள்ள உண்மைக் காரணத்தை இங்கு ஏன் பொய்ச்சாயம் பூசி மறைப்பதற்கு நாம் முயலவேண்டும்? பாகிஸ்தானத்துக்கு இராணுவ வெறி என்கிறோம். அந்த இராணுவத்தில் மேற்குப்பகுதியினர் 95 சதவிகிதமும், கிழக்கத்திய மக்கள் 5 சதவிகிதமும் இருக்கும் வகையில் ஏன் பாரபட்சம் காட்டப்பட்டது. இந்தியர்களைத் துவக்கத்தில் ஆங்கிலேயர் இராணுவத்தில் சேர்ப்பதற்கு தயக்கங் காட்டிய இனவெறியும் ஆணவப் போக்கும் நாம் மறந்துவிடவில்லையே! இதே அடிப்படையில் மேற்குப் பாகிஸ்தான், கிழக்குப் பகுதி மக்களைப் புறக்கணித்தது என்பதை, ஏன் இங்கு சொல்லத் தயக்கம் காட்டப்படுகிறது?

மேற்குப் பாகிஸ்தானியர் ஆரியர் என்று சொல்வதைத் துவக்கினால், கிழக்கு வங்க மக்கள்— அதாவது இன்றைய பங்களாதேஷ் மக்கள் — திராவிடர்கள் என்று பகிரங்கமாக ஒப்புக் கொள்வதில் ஏற்படும் தயக்கமாக இருக்கலாம் என்றுதான் யூகிக்கமுடிகிறது.

ஆனால், யார் இதைச் சொன்னாலும் மறந்தாலும், இந்திய அரசாங்கம் இதனைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறது. ஈரான் மன்னர் தெரிவித்த கருத்தை இந்திய அரசும் வழி மொழிந்திருக்கிறது. அதாவது மேற்குப் பாகிஸ்தானியர் ஆரிய குலத் தோன்றல்கள் எனவும், கிழக்கு வங்க மக்கள் திராவிட இனத் தொடர்பு கொண்டவர்கள் எனவும், பெருந்தன்மை மிக்க இந்திரா காந்தி அரசு ஒப்புக் கொண்டு, அதன் அடிப்படையிலேயே, கிழக்கு வங்க மக்களுக்குப் 'பொன் நிகர்' வங்காளத்தை விடுவித்துப் புது நாடாக்கிக் கொடுத்திருக்கிறது.

இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ள அப்பட்டமான உண்மை இதோ:

> ''பாகிஸ்தானத்தின் இரண்டு பகுதிகளும் 1200 மைல் தூரத்தால் தனித் தனியாக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, மொழி, இயற்கையான நாட்டமைப்பு, பண்பாடு, வாழ்க்கை முறை ஆகிய அனைத்திலும் மாறுபட்டவையுமாகும். மேற்குப் பாகிஸதான் பொதுவாக மத்திய ஆசியாவுடனும் குறிப்பாக ஈரான் அல்லது ஈராக் நாட்டுடனும் இணைத்துப் பார்க்கத்தக்கதாகும். மேற்குப் பாகிஸதானத்து மனிதன் நான்கு மொழிகளில் ஏதாவதொன்றில் பேச முடியும். அவற்றில் ஒன்றைக்கூட கிழக்கு வங்க மனிதனால் புரிந்து கொள்ள முடியாது. கிழக்குப் பாகிஸ்தான் மொழியான வங்காளத்தில் கராச்சியிலுள்ள அரசியல்வாதிகளில் எவருக்காவது பேசக்கூடிய திறமை இருக்குமானால், அது, அரியதொரு அரசியல் திறமையாகக் கருதப்படுகிறது. ('பங்களா தேஷ்' ஆவணம், மத்திய அரசு வெளியீடு—பக்கம் 4)

இது மட்டுமல்ல, மேலும் அந்தப் பதிப்பு தெரிவிக்கிறது:—

> ''சண்டைகள் எதுவுமின்றி சாதாரணமாகக் கழியும் நாட்களிலேயே பாகிஸ்தானத்தின் இரு பிரிவுகளுக்கும் பொதுவாக இருப்பது இஸ்லாமிய மத உணர்வும், பாகிஸ்தான் அரசாங்க விமானப் போக்குவரத்தும்தான். தொடர்ச்சியான எல்லையோ தொடர்பான பண்பாடோ அங்கு இல்லை. நெடிதுயர்ந்த உருவமும் பழுப்பு நிறமும் கொண்ட பஞ்சாபிகள், பட்டாணியர், பலுச்சிகள், சிந்திகள் ஆகிய மேற்குப் பாகிஸ்தானியர் கி. மு. 2000 வாக்கில் இந்தியாவில் பாய்ந்து புகுந்த ஆரியர்களின் சந்ததியினராவர். கிழக்குப் பாகிஸ்தானத்தின் மெல்லிய உடலும் கறுப்பு நிறமும் கொண்ட வங்காளிகள் ஆரியர்களால் அடிமை கொள்ளப்பட்ட திராவிடர்களோடு நெருங்கியவர்கள். மேற்குப் பாகிஸ்தானிகள் கோதுமையும் இறைச்சியும் உண்பவர்கள். இந்தியும் பெர்சியமொழியும் கலவையிட்ட உருது மொழி பேசுபவர்கள். கிழக்குப் பாகிஸ்தானியர் அரிசியும் மீனும் முக்கிய உணவாக உண்பவர்கள். இந்தோ—ஆரியக் குழுவைச் சார்ந்த இசைமயமான வங்காள மொழி பேசுபவர்கள்.'' (பங்களா தேஷ் ஆவணம் பக். 491)

மேற்குக்கும் கிழக்குக்கும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஏற்பட்ட மோதுதல்கள் அனைத்துக்கும், இந்திய அரசின் பதிப்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது போல், ஆரிய—திராவிட இன வேறுபாடுதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதில் எவ்விதத் தவறும் இல்லை.

மெல்ல... மெல்ல... என் மேனி நடுங்குது மெல்ல....

அது மட்டுமல்ல, சரித்திரத்தின் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், சைரஸ் வழி வந்தவராக வருணிக்கப்பட்ட யாகியாகான் முடிவும், அதே சைரஸ் மன்னன் முடிவைப் போலவே ஆகியிருக்கிறது. அதுவரை உலகமே காணாத — கேளாத — மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிய அந்த மகா சைரஸ் — 'பார்த்த இடம் பாலைவனம்; நடந்த இடம் தவிடுபொடி' என்று சரித்திரம் வருணிக்கும் அவ்வளவு பெரிய இராணுவத்தை வைத்துக் கொண்டிருந்த அவன் — அதுவரை உலகத்தைக் கதிகலங்க அடித்து அரசோச்சிய மிகப்பெரிய சாம்ராஜ்யாதிபதிகளின் மணிமுடிகளைக் காலின் கீழ்ப் போட்டு மிதித்த அந்த மகா சைரஸ் — இறுதியில் ஒரு பெண்ணிடம் போர் செய்துதான் மாண்டொழிந்தான். இந்த விவரத்தையும் சரித்திராசிரியன் ஹரடாட்டல் மிகச் சுவையாக எழுதிவைத்துப் போயிருக்கிறான்.

நாகரிகத் தொட்டிலெனச் சொல்லப்படும் பாபிலோனியப் பேரரசை மகா சைரஸ் வெற்றிகொண்ட கையோடு, அதனை அடுத்திருந்த சிறிய நாடான மெஸ்ஸாகட்டி என்ற இடத்தையும் விட்டு வைக்க மனமில்லாமல், தனது படையணியை அதன் பக்கம் திருப்பினான். அந்த நாட்டை ஆண்டு வந்தது ஒரு பெண். டோமிரஸ் என்ற பெயர் படைத்த வீராங்கனை. பாபிலோனிய ஏகாதிபத்தியத்தையே நெடு நாட்களுக்குப் பயமுறுத்திக் கொண்டிருந்த அரசி அந்த டேமிரஸ். கணவனை இழந்தவள். தன் நாட்டின் மீது சைரஸ் பார்வை திரும்பி இருப்பதை அறிந்த அரசி டோமிரஸ், மகாசைரஸ் மன்னனுக்கு எச்சரிக்கை விடுத்தாள்.

''சைரஸ் மன்னனே உனது நோக்கத்தை மாற்றிக் கொள். இங்கிருந்து வெளியேறி உனது நாட்டினுக்கு அரசனாக இருந்து அரசாட்சி நடத்து. எங்கள் நாட்டை நாங்கள் எப்போதும் போல் அமைதியாக ஆட்சி செய்ய வழிவிடு. இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் — படையெடுத்து, என் நாட்டு வலிமையை ஒருமுகப் படுத்திப் போருக்குத் தயாராகும்படி என்னைத் தூண்டினால், அதன் முடிவு உனக்குச் சாதகமாகவே இருக்குமா என்பதை நீ அறியமாட்டாய். ஆகவே உன் நாட்டுக்குள் என் படை புகாதிருக்க வேண்டுமானால், நீ உடனே இங்கிருந்து திரும்பிவிடு''.

அரசி டோமிரஸ் சைரஸ் மன்னனுக்கு இப்படி எச்சரிக்கை விடுத்ததாக ஹேரடாட்டல் குறிப்பிடுகிறான். டிசம்பர் 3—ல் நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் இதே ரீதியில்தான் யாகியா கானுக்கு எச்சரிக்கை விடுத்தார். ஆனால் சைரஸ் மன்னன் போன வழியில் அவன் வழிவந்த யாகியா கான் நடை போட்டார்; அரசி டோமிரஸ் பாணியில் பிரதமர் இந்திரா காந்தி போருக்கு ஆயத்தமானார். ஹெரடாட்டல் மேலும் சொல்கிறான்:

''அரசி டோமிரஸ் விடுத்த எச்சரிக்கைக்கு சைரஸ் மன்னன் செவி சாய்க்கவில்லை. ஆகவே, டோமிரஸ் தன்னிடமுள்ள படைபலம் அனைத்தையும் திரட்டிப் போர்முனை சென்றாள். இந்தப் போர், எனக்குத் தெரிந்தவரை — கிரேக்கர்களைத் தவிர — உலகத்தில் வேறு யாரும் எங்கும் பொருதாத அளவுக்கு மிகக் கடுமையாகவும், மகாக் கோரமாகவும் நடைபெற்றது. இறுதியில் அரசி டோமிரஸ் பெருவெற்றி பெற்றாள். மகா சைரஸ் டோமிரஸ் படைகளிடம் சிக்கி மாண்டான். மனித ரத்தத்தை நிரப்பிய தோல் துருத்தி ஒன்றைக் கையில் ஏந்தியபடி குவிந்திருந்த பிணக் குவியல்களில் சைரஸ் பிணத்தைத் தேடிக் கண்டுபிடித்தாள். இன்னமும் உன் ரத்தப் பசி அடங்காவிடில் இதையும் குடி'' என்று, தான் கொண்டு வந்த தோல் துருத்தியை சைரஸ் பிணத்தின் தலையில் சொருகினாள்.''

சரித்திரம் திரும்பும் என்கிறார்கள். இவ்வளவு அழகாகத் துல்லியமாகத் திரும்புகின்ற சரித்திரத்தை நேருக்கு நேராகச் சந்திப்பதற்கு நமது தலைமுறை பெற்றுள்ள பேறு பெரிது.

இதுமட்டுமல்ல, நமது தலைமுறையில் ஆசியாவின் கிழக்குப் பகுதியில், முற்றிலும் திராவிட மக்களைக் கொண்ட தனி அரசு — பொன் நிகர்த்த புதிய பங்களாதேஷ் அமைந்த அருமையையும் காண்கிறோம். ஷேக் முஜிபுர் ரகுமான் போராடிப் பெற்றுள்ள திராவிட மக்கள் குடியரசை, டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நல் வாழ்வு காணத் துரித நடைபோட்டு வரும் தமிழகம், இந்தப் பொங்கல் திருநாளில் நெஞ்சார வாழ்த்துகிறது — பாச உணர்வோடும், பழங்கால உறவுமுறைகளின் தூய நினைவுகளோடும், என்றைக்கும் தமிழக மக்கள் பொன்னிகர்த்த வங்காளக் குடியரசு மக்களுக்குத் துணையாக நிற்பார்கள். இருபகுதி மக்களுக்கும் இடையே, இருதயம் இடையறாது பேசிக் கொண்டிருக்கும்.

★

விடுகதை இலக்கியம்

தமிழ் இலக்கியத்தை அணி செய்யும் பழந்தமிழ்ப் பாட்டில் விடுகதைப் பாட்டு நல்லிடம் பெறுவதாகும். நெடுங்காலமாக அது மக்கள் இலக்கியமாக மன்றில் வளர்ந்து வந்துள்ளது. தொல்காப்பியர் இதனைப் பிசி என்கிறார். யாப்பு எழுவகைப் படுமமன்றும், அதில் பிசி ஐந்தாம் இடத்தைப் பெறுமென்றும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

> ‘பாட்டு, உரை, நூலே, வாய்
> மொழி, பிசியே
> அங்கதம், முதுசொல்லொடு
> அவ்வேழ் நிலத்தும்’
> (தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், 78)

—என்று நூற்பா எடுத்துரைக்கின்றது.

உள்ளத்தில் இயல்பாகத் தோன்றுவது விடுகதை என்பதைத் ‘தோன்றுவது’ என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இது இயற்கை இலக்கியப், பகுப்பில் சேர்வதாகும். இதனோடு ஒத்து விளங்குவன மந்திரம், வசைப்பாட்டு, பழமொழி முதலியன.

விடுவிக்க வேண்டிய கதை இதனுள் அடங்கியிருக்கும். குட்டிக் கதை ஒன்றினை இது கொண்டு விளங்கும். இது புல் நுனிமேல் உள்ள பனித்துளி போன்றதாகும். செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு ஆவலைத் தூண்டும் முறையில் வெளிப்படுத்தும் மக்கள் இலக்கியம் இது. கேட்போரைச் சிந்திக்க வைத்து, அறிவிற்கு வேலை கொடுக்கும் இலக்கியப் பணியினை இது மேற்கொண்டுள்ளது. மிகுதியும் கல்வி பயிலாத நாட்டுப்புற மக்கள் பொழுதுபோக்கிற்கு இதனைக் கருவியாய்ப் பயன்படுத்திவருகின்றனர். சிறுவர் இச் சிற்றிலக்கியத்தில் காட்டும் தணியா ஆர்வம் நாடறிந்த ஒன்று. அங்ஙனம் நாடறிந்த விடுகதைப் பாட்டுக்கள் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம்:

> ‘மழை பெய்யாத தண்ணி
> வண்ணான் வெளுக்காத வெள்ளை
> கொசவன் பண்ணாத பண்டம்.
>
> அது என்ன?’

உள்ளே நீர் இருக்கும்; அது மழை நீர் அன்று; பால் போல் வெளுத்திருக்கும்; ஆனால் அதற்கும் வண்ணத்தானுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏனென்றால் வண்ணான், பெயருக்கேற்ப, துணிமணிகளை நிறமாக்கிக் (வண்ணம் ஆக்கி) கொண்டு வருவானே தவிர வெள்ளையாக்கிக் கொண்டு வருவதில்லை. வெள்ளையாக்கிக் கொண்டு வந்த காலத்தில், ‘வெள்ளைக்குப் போடு’ என்று கூறி வந்தார்கள் செட்டி நாட்டில்; சலவைக்குப் போடு என்ற பொருளில். குயவன் தண்டசக்கரத்தில் வைத்து உருவாக்காத பொருள். இது எதுவாக இருக்கும்? மேலே கூறிய அனைத்தும் செயற்கைப் பொருள்கள். இதுவோ இயற்கைப் பொருள். ஆனால் முன்னதனோடு இது ஒருபுடை ஒத்து விளங்கும். அந்த ஒப்புமை கொஞ்சம் உண்டு. அதை வைத்துத்தான் முடிவு செய்ய வேண்டும். அப்படிப்பார்க்கும்போது ‘தேங்காய்’ என்பது விடையாக வரும்.

உலக வழக்கில் கதைக்கு விடை இல்லை. ஆனால் விடுவிக்கப்பட வேண்டிய இக் கதைக்கு விடை உண்டு, கணக்குப் போல. கதையும் கணக்கும் விடுவிக்கப்பட வேண்டியவை, தீர்க்கப்பட வேண்டியவை, சிக்கல் எடுக்கப்பட வேண்டியவை என்ற முறையில் ஓரினமாய் அடங்கும்.

அடுத்த விடுகதை:

> ‘ஒருவராய் இருந்தால் உணவு
> சேராது
> இருவர் சேர்ந்து இனிய நீராடி
> ஆட்டம் போட்டு
> இரவு முழுதும் இருப்பதற்கு
> உப்புராணம் சாக்கி
> காலையில் எழுந்து துயில்உடுத்தி
> குத்திக் குத்திக்
> குப்புறத் தள்ளி கூட ஒருவன்
> சபைக்குப் போய்
> சொக்கனும் போய் பொடிய
> னும் போய் சீனிவாசனும்
> போய் எல்லோரும் ஒன்றாகச்
> சந்திப்போம்’
>
> அது என்ன?

இங்ஙனம் சந்திப்போர் யார்? அச் சந்திப்பில் உருவாகும் பொருள் யாது? சிந்திப்பின் பயன் சந்திப்பில் தெரிய வேண்டும்.

பலர் சேர்ந்து, பல்லாங்குழி ஆடுவது போல், ஆட்டத்தில் இறங்கி, மாலை தொடங்கி இரவெல்லாம் உறங்கி, காலை கண்ணுறக்கம் நீங்கியவுடன், குளித்து முழுகி, உடை பூண்டு, குப்புற விழுந்து அவைக்குப் போய் அழகாயிருக்கும். இது ஆளா, அல்லது பொருளா? பொருளோடு சேர்த்துப் பாருங்கள், இட்டலி. நாடோறும் இதன் கண்ணில் தான் நாம் விழிக்கிறோம். இட்டவி என்று இருக்க வேண்டும்—என்கிறார்கள், மாவினை இட்டு அவிப்பதனால். எப்படி இட்லி ஆனது என்பது புரியாத புதிர் ஆக உள்ளது. இதுவே விடுகதையாக உள்ளது. முடிந்தால் இக்கதையை விடுவித்து விடை கூறுங்கள், பார்க்கலாம்.

★

டாக்டர் மெ. சுந்தரம்





புதுக்கோட்டை அருகில் ஒரு புரட்சிப்பண்ணை!

இந்த ஆண்டு பொங்கல் மலர் வழககத்தை விடச் சிறப்பாக அமைய வேண்டும் என்பது 'முரசொலி'யின் திட்டம். செலவு அயிட்டங்களுக்கு முதலிடம் தராமல் சிறப்பு அம்சங்களைப் பற்றி விவாதித்தோம்.

தேனீயைப் போல் பறந்து விரைந்து செய்திகளை, தகவல்களை சேகரித்து, சுவையுள்ள ஒரு தேனடையாக 'முரசொலி' மலரை வழங்குவது என்ற முடிவுக்கு வந்தோம்.

அந்தச் சேகரிப்பில் கிடைத்த தேன் துளிதான் அண்ணா விவசாயப் பண்ணைக் கட்டுரை.

விவசாயப் பண்ணைக் கட்டுரையா? அதிலென்ன சுவையும் புதிய தகவலும் இருக்கப்போகிறது? 'போர்' அடிக்குமே—என்று வேண்டாத விஷயங்களில் கூட விருப்பு வெறுப்பை எதிர்பார்க்கும் சிலர் எண்ணுவது இயற்கை. ஆனால், அண்ணா பண்ணை ஒரு அறிவார்ந்த செய்தி.

எங்கோ சில பகுதிகளில் அற்புதங்களும், அதிசயங்களும் நிகழ்வதாகக் கேள்விப்படுகிறோம். அதனைக்



“கலைஞர் கருணாநிதி” வேளாண்மை நிலைய இயக்குநர் சுப்பிரமணியம்

குடும்பத்துடன் காண விடுமுறை நாட்களை ஒதுக்கி வைக்கிறோம். புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள அண்ணா பண்ணையும்—கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையும் காண வேண்டிய — பார்க்க வேண்டிய பகுதியாகும்.

வேளாண்மைத் துறையில் ஒரு அமைதிப் புரட்சியை அந்தப் பண்ணை விளைத்துக் கொண்டிருக்கிறது.

வேளாண்மைத் துறையில் கழக அரசு செலுத்தி வரும் தீவிரக் கவனத்தைக் காணச் சென்ற நாங்கள் அதிசயங்களின், அற்புதங்களின் முழு வடிவத்தைக் கண்டோம் — மகிழ்ந்தோம் — வியந்தோம்.

விவசாய உதவி இயக்குநர் பெருமாள்

வெளி நாட்டில், வெளி மாநிலத்திலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் கொடைக்கும், ஊட்டிக்கும், ஏற்காட்டிற்கும் தேக்கடிக்கும், மாமல்லைக்கும் சென்று வனப்புமிகு காட்சி கண்டு மகிழ்தல் போல் இனி குடுமியான்மலைக்கும் சென்று அங்கு நடைபெறும் பசுமைப் புரட்சியைக் கண்டு பயன்பெற வேண்டும்.

நீங்கள் அங்கு சென்று காண்பதற்கு முன் — நாங்கள் கண்டு வந்ததை எங்கள் மனத்திற்குள்ளே



மாவட்ட விவசாய அதிகாரி சுப்பிரமணியம்

போட்டு அடைத்து வைக்கமுடியவில்லை. அந்தச் சித்திரத்தை இங்கு விரிக்கிறோம், நீங்கள் பார்த்து, படித்து பயன் பெறுவீர் என்ற நம்பிக்கையில்.

ஃ ஃ ஃ

புதுக்கோட்டையிலிருந்து பத்தாவது மைலில் குடுமியான் மலை என்ற ஒரு கிராமம் — மலையும் மலை சார்ந்த பகுதிகளும் மனதைக் கவர்கிறது. ஒரு சின்னமலை அதன் மீது ஒரு கோயில்—அதற்கு ஏன் குடுமியான் மலை என்று பெயர் வந்ததெனக் கேட்டோம் – அதற்குள்ள கர்ண பரம்பரைக் கதையை அடிப்படையாக விளக்கினார்கள். அதனால் அந்தக் கற்பனையில் எங்கள் கவனத்தைச் செலுத்தாமல் கை மேல் பலனைக விளங்கிக் கொண்டிருக்கும் பண்ணையின் மீது எங்கள் பார்வையைத் திருப்பினோம்.

குழுமியிருந்த அதிகாரிகள் அதன் வரலாற்றை விரித்தார்கள்.

பண்ணையைப் பற்றிச் சொல்லுமுன்னால் அதைக் குழந்தையைப் போல் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரும் அதிகாரிகளைப் பற்றியும் சொல்லியாக வேண்டும்.

அரசு அதிகாரிகள் எனில் இப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக விளங்குகிறார்கள், அவர்கள். என்ன ஆராய்ச்சி, என்ன வேகம், எத்தனை விளக்கம், எவ்வளவு முதிர்ச்சி—

சந்தேகங்களை நாங்கள் கேட்டுத் தெளிவதற்கு முன், அவர்கள் அதை வரவிடுவதே இல்லை. அதற்கான சரித்திரத்தையே கூறிவிடுகிறார்கள்.

“பண்ணை இருக்கும் இந்தப் பகுதிக்குப் பெயரென்ன?” இது எங்கள் கேள்வி.

“இப்பகுதிக்கு வயலோன் என்று பெயர். அருகில் அந்தப் பெயரில் ஒரு கிராமம் இருக்கிறது.” இது அவர்களின் பதில்.

“வயல்கள் அதிகமாக இருப்பதால் வயலோன் என்று பெயர் வந்ததோ?”

சிரிப்பொலி ஓய்ந்த பிறகு நாங்கள் பிரச்னைக்கு வருகிறோம்.

உதவி இயக்குனரான பெருமாளும், மாவட்ட விவசாய அதிகாரி சுப்பிரமணியமும் எங்கள் அருகிலேயே இருந்து விளக்கத்திற்கு மேல் விளக்கம் தருகிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது இங்கு வந்து இப்பகுதியைப் பார்வையிட்டு இந்த இடத்தை அவர்கள் தான் தேர்ந்தெடுத்தார்கள்.

அவர் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய எதையும் தெளிவாக — விரைவாகத் தேர்ந்தெடுப்பார் என்பதால்தானே நாட்டு மக்கள் அவர் வளர்த்த கழகத்தையே தேர்ந்தெடுத்தார்கள் என்று நான் மனத்தால் எண்ணிமகிழ்ந்த போது — அதிகாரி தொடர்ந்தார்.

“இந்த விவசாயப் பண்ணைத் திட்டத்தை ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்து துவக்கத்தான் அண்ணா திட்டமிட்டிருந்தார். ஆனால் குறைந்தது எட்டாயிரம் ஏக்கர் நிலமிருந்தால்தான் ரஷ்யா இந்தியக் கூட்டுடன் பண்ணை அமைக்க முடியும். அதற்காக அண்ணா

முதல்வர் கலைஞரும் - விவசாய அமைச்சர் அன்பிலும் அண்ணா பண்ணையில் அதிசயச் சோளத்தைப் பார்வையிடுகின்றனர்.

அவர்களே நேரில் வந்து இங்குள்ள மக்களை அழைத்து ரஷ்ய-இந்திய கூட்டுப் பண்ணைக்கு நிலம் தருகிறீர்களா? நியாயமானவிலையை அரசாங்கம் தரும் என்றார்கள். ஆனால் வயலோன் கிராம மக்கள் யாரும் முழு மனதோடு சம்மதிக்கவில்லை.

''நான் உங்களில் யார் நிலத்தையும் கட்டாயப்படுத்தி வாங்க விரும்பவில்லை. கூட்டுப் பண்ணை என்பது நல்ல திட்டம் — எதிர் காலத்தில் மிகவும் பயனளிக்கக் கூடியது. ஆகையால் முடிவு உங்களுடையது என்றார். பெரும்பாலோர் சம்மதிக்கவில்லையாதலால், ரஷ்ய இணைப்பு இல்லாமல் தமிழக அரசு மட்டும் 1200 ஏக்கரா நிலத்தில், இத்திட்டம் அண்ணா அவர்களாலேயே தொடங்கி வைக்கப்பட்டது என்று கூறிய பெருமாள் — அங்கு ஒரு ஆலமரத்தின் கீழ் இருந்த திண்ணையைச் சுட்டிக்காட்டி இங்கு அமர்ந்துதான் அண்ணா — பண்ணை பற்றி விவாதித்தார்'' என்றார்.

என் மனக் கரங்கள் அந்தப் பகுதியை நோக்கி ஆயிரம் வணக்கங்கள் செய்தன.

''இதோ இந்த இடத்தில்தான் பண்ணைத் திட்டத்திற்கான அலுவலகம் துவக்கப்பட்டது'' என்று இரண்டு சாதாரண மண் குடிசைகளைக் காண்பித்தார் மாவட்ட அதிகாரி சுப்பிரமணியம்.

'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்பது போல் அந்தக் குடில்கள் காட்சியளித்தன. அதை அடிப்படையாக வைத்து வளர்ந்திருக்கும் 1200 ஏக்கர் நிலப் பகுதியையும் நாங்கள் குடைராட்டினம் போல் சுற்றி நோக்கினோம். சிறுகக்கட்டி பெருக வாழ் என்ற தத்துவம் அங்கு இழையோடிக் கொண்டிருந்தது.

தமிழ் நாட்டின் ஒரு ஊரில் இருக்கிறோமா? அல்லது வேறு வளமிக்க — விவசாயத்தில் தலை சிறந்து நிற்கும் வேற்று நாட்டிற்கு வந்து விட்டோமா என்ற ஐயப்பாடு உண்டாயிற்று.

140 ஏக்கரா நிலப் பரப்புள்ள பழத் தோட்டத்திற்குச் சென்றோம். தமிழ் நாட்டில் அரசினருக்குச் சொந்தமான இவ்வளவு பெரிய பழத் தோட்டம் இதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவ்வளவு பெரிய தோட்டம், மாமரங்கள் அங்கு செழித்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது.

சாதாரணமாக, அந்தப் பக்கத்தில் உள்ள விவசாயிகள் புன்செய் தானியங்களில் 450 முதல் 500 கிலோ வரைதான் மகசூல் அடைகிறார்களாம். அத்தகைய விதை



அறுத்தெடுத்த சோளம் இங்கே பிரித்தெடுக்கப் படுகிறது



குடுமியான் மலையில் உள்ள இந்த ஆலமரத்தின் கீழ் அமர்ந்துதான் அண்ணு-பண்ணைபற்றி விவாதித்தார்

வளர்ந்து வரும் பண்ணை-வயலோன் கிராமத்தில் இந்தக் குடிலில் தான் பணியினைத் தொடங்கியது.



கலைஞர் கருணாநிதி பயிர் வள ஆராய்ச்சி நிலையத்திற்கு அமைச்சர் சாதிக் பாட்சா அடிக்கல் நாட்டியுள்ளார்.



கலைஞர் கருணாநிதி பயிர் வள ஆராய்ச்சி நிலையத்தின் எதிர்காலத் தோற்றம்.

யைப் பயன்படுத்தி சுமார் 50 சதவிகிதம் அதிக விளைவு கொடுக்கும்படி மாற்றி அமைத்துள்ளதோடு இல்லாமல் சுமார் 110 நாட்களில் பயன்தரும் இதனை, சுமார் 60 ாநட்களில் பயனுக்குக் கொண்டு வந்துள்ள பெருமை கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையத்தாரின் சாதனை!

கடலை ஒருபுறம், பருப்பு வகைகள் மற்றொரு புறம்' அன்றாடத் தேவைக்குப் பயன்படும் காய்கறி வகைகள்தான் எத்தனை! குளிர் பகுதியில் மட்டும் நன்கு வளரக்கூடிய முட்டைக்கோஸ், காரெட், தக்காளி, பீட்ரூட், காலிப்ளவர் முதலிய இங்கிலீஷ் காய்கறிகளும் இங்கு வளமாக செழித்து வளர்கிற காட்சியை நேரில் பார்க்கும்போது நமக்கு மட்டில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. இத்தகைய விஞ்ஞான நோக்கோடு செயலாற்றுகிற அதிகாரிகள், சிப்பந்திகள் இருக்கும்போது வெகு விரைவில் நாம் தன்னிறைவு அடைவதோடு, பிற நாட்டாருக்கும்கூட வாரி வழங்கும் தன்மையில் விவசாயத் துறையில் வளர்ந்தோங்குவோம் என்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்ற மன நிறைவோடு பண்ணையின் பல பகுதிகளுக்குச் செல்கிறோம்.

பருப்புவகை தன்னிறைவுக்காக நமது அரசு திட்டம் தீட்டி அதனை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகச் செயலாற்றும் குறுகிய காலப் பயிரிடுவதும் ஒன்று. வண்ணக் கலவைத் தெளித்தாற் போன்ற பச்சை நிறமும் மஞ்சள் நிறமுமாக நின்று அசைந்தாடும் டி 21 என்ற துவரைப் பயிர் நம்மைக் கவர்கிறது. 140 நாட்களில் பலன் தரக்கூடிய இத் துவரை இப்பண்ணையில், 110 நாட்களில் அபரிமிதமான வளர்ச்சியைத் தருகிறதாம்.

எண்ணெய் வித்து உற்பத்திபற்றி கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையமும் அண்ணா பண்ணையும் கவனம் செலுத்தி வருகிறது. நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் பல்வேறு உபயோகங்களுக்குப் போதியதாக எப்போதுமே இருந்தது இல்லை. சோப் செய்யவும் மெஷின்கள் ஓட்டவும் உணவுக்கான வனஸ்பதி முதலிய உபயோகங்களுக்கும் அந்நிய நாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்கிறோம். அதனைக் குறைக்க சூரியகாந்தி விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

சூரியகாந்திச் செடி ஒரு சில பங்களாக்களில்] வீட்டின் முன்பாக அழகுக்காக வளர்க்கப்படும் செடியாக மட்டுமே உள்ளது. ஆனால் இதை இவர்கள் எண்ணெய்ப் பஞ்சம் போக பயன்படுத்துகிறார்கள்.

சூரியகாந்தி விதையிலிருந்து கிடைக்கும் எண்ணெய், உணவாகவும், சோப்புச் செய்வதற்கும் உபயோகப்படுகிறது என்பது சிலருக்குப் புதுமையான செய்தி. நல்லெண்ணெயை விட சுவையானது இது. சூரியகாந்தி எண்ணெயை ரஷ்யாவிலிருந்து ஆண்டுதோறும் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம்.

இதைத் தவிர்க்க இங்கு உள்ள ஆராய்ச்சி நிலையமும் பண்ணையும் ஒருங்கிணைந்து செயலாற்ற முற்பட்டுள்ளது.

இங்கு பயிரிடப்பெற்று வளர்ந்துள்ள சூரியகாந்திப்பூ சுமார் 2 அடி சுற்றளவு உள்ளதாக இருப்பது ஆச்சரியமான ஒன்று.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் சூரியகாந்தி பொருளாதார நோக்கோடு பயிர் செய்யப்படவில்லை — ரஷ்யாவுக்கு அடுத்து நாம்தான் செய்கிறோம். இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் சுவையாகவும்—மலிவாகவும் இருக்கும் என்றார் பெருமாள்.

இவர்களின் குறிக்கோள் — 1200 ஏக்கராவில் அமைந்துள்ள இப் பண்ணையில் மட்டும் உற்பத்தியை அதிகப்படுத்தி எத்தேவையிலும் பற்றாக்குறையைத் தீர்த்துக் கொள்வதல்ல—

தமிழகத்திலுள்ள கிராமங்கள் அனைத்திலும் விவசாய உற்பத்தி எந்த நேரமும் பெருகிக் கொண்டிருக்க வேண்டும் அந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இங்கு ஆராய்ச்சி நடக்கிறது.

உற்பத்தியைப் பெருக்க — விவசாயத்தில் புதுமையும் புரட்சியும் காண, இங்குள்ள அதிகாரிகள் ஒரு குழுவாக அமைந்து ஆராய்ச்சி நடத்துவதில் விஞ்ஞானிகளெனச் செயல்பட்டு வருகிறார்கள்.

வளமிக்க புதிய பயிர்களுக்கான விதைகளை இவர்களே உற்பத்தி செய்கிறார்கள். வெவ்வேறு பகுதியிலிருந்து வரும் விதைகளில் ஆண், பெண் என இரு வகைகளாகப் பிரித்து— இரண்டையும் விதைத்து ஆண் பயிரையும் பெண் பயிரையும் இணைத்துக் கருக் கொள்ளச் செய்கிறார்கள். அவைகள் பிரசவிக்கும் விதைகள் முன்னதைக் காட்டிலும் சக்திவாய்ந்ததாகவும், குறுகிய காலப் பயிராகவும் அமைவதாக கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சிப் பண்ணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள், பெரும்பாலும் குடுமியான் மலைப்பண்ணையிலிருந்துதான் விதைகள் பெறுகின்றனர்.

இப்பண்ணையின் குறிக்கோள் இருபோகம், முப்போகம் விளைத்த பின்னரும் நிலத்தைத் தரிசாகப் போடக்கூடாது. எந்த நேரமும் நிலத்தில் ஏதேனும் ஒன்று பயிராகிக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் உதவி டைரக்டர் பெருமாள்.

அப்படி எந்த நேரமும் பயிர் செய்தால் நிலம் சக்தியிழந்து விடாதா எனக் கேட்டதற்கு — அதற்கேற்றவாறு உரம் போடுவதோடு — அவ்வப்போது என்ன விளையுமோ அதை அறிந்து பயிர் செய்ய வேண்டும். இதற்குப் பெயர் 'சுழற்சி விவசாயம்' என்றார் மாவட்ட விவசாய அதிகாரி சுப்பிரமணியம்.

நெல்லுக்குப் பிறகு, துவரை, அதற்குப்பின் உளுந்து, அப்புறம் பாசிப்பயிறு, அதை அடுத்து கேழ்வரகு, சோளம் இவ்வாறு பல்வகைத் தானியங்களைப் பயிர் செய்து கொண்டே இருக்க வேண்டும். இதுபோன்ற செய்திகளையும், நிலச் சிக்கனம், உரச் சிக்கனம், நீர்ச் சிக்கனம் ஆகியவைகளை விளக்கவும் விவசாயிகளை வாரம் ஒருமுறை தண்டோராப் போட்டு அழைத்து அவர்களுக்கு விவசாயப் பயிற்சி வகுப்பு நடத்துகிறார்கள். வகுப்புக்கு 50 விவசாயிகளுக்கு மேல் வருகின்றனர். விவசாயிகள் வந்து போகும் செலவையும் பண்ணை நிர்வாகமே ஏற்றுக் கொள்கிறது.

பண்ணைகளைப் பார்த்து முடிந்த பிறகு அலுவலகத்தில் அமர்ந்து அதிகாரிகளுடன் மேலும் செய்திகளைக் கேட்டறிந்தோம்.

காங்கிரிட் தரை அமைத்து அதன் மீது மண் போட்டு கடலை, ராகி, பருத்தி ஆகியவைகளைப் பயிரிடலாம். இதனால் என்ன லாபம் எனில் ''சாதாரண தரையில் விவசாயம் செய்து தண்ணீர் பாய்ச்சினால்—பாதித் தண்ணீரை பூமியின் அடிப்பாகம் உறிஞ்சியது போக நாம் ஊற்றியதில் பாதித் தண்ணீர் தான் பயிர்களுக்குக் கிடைக்கிறது. காங்கிரீட் தளம் அமைத்து விவசாயம் செய்வதால் தண்ணீர் மீதமாகிறது.

இதைப்போலத் தண்ணீரை மிச்சப்படுத்த இன்னொரு வழியும் உள்ளது. தண்ணீர் பாய்ச்சிய பின்னர் பயிர்களின் மீது வைக்கோல் அல்லது புல் ஆகியவற்றைப் போட்டு வைத்தால் சூரிய வெப்பத்தால் ஈரம் காயாமல் பாதுகாக்க முடியும். நாங்கள் இந்த முறையை இங்கு நடைமுறையில் கையாண்டு வருகிறோம் என்று கூறிய அதிகாரி ஒருவர், தண்ணீர் பாய்ச்சும் முறையில் இன்னொரு புதுமையையும் கூறினார்.

பண்ணையில் உள்ள அண்ணா சிலையை கலைஞர் திறந்து வைத்து மாலை அணிவிக்கிறார்.

புதுமை விவசாயம் பற்றி விவசாய மக்களுக்கு வகுப்பு நடைபெறுகிறது.



பண்ணையில் பயிராகும் எட்டடிக் கும் நீளமான அதிசயப் புடலங்காய்.



வேர்க்கடலையை தரம் பிரிக்கும் பண்ணை இயந்திரம்.



எண்ணெய்ப் பிரச்னையைத் தீர்க்க பண்ணையில் பயிராகும் சூரியகாந்தி



பயிர்களுக்கு வான் மழையின் தன்மையை நான் தருவேன் எனக் கூறும் நீர் தெளிப்பான்.



முப்போகம் மட்டுமல்ல எப்போதும் பயிர் விளைய இந்தப் புது முயற்சி.



பண்ணைக்கு அண்ணா வருகை தந்த போது எடுத்த படம்.

சில பயிர்களுக்கு என்னதான் நாம் நீர் பாய்ச்சினாலும் மழை நீர் விழுந்தால்தான் அவை செழிப்பாக வளரும். அதற்காக நாங்கள் எப்போது மழைவரும் என்று காத்திருப்பதில்லை. பயிர்கள்மீது செயற்கை மழையைக் கொட்டுகிறோம் என்று கூறியவர்-செயற்கை மழை செயல்படும் விதத்தையும் எங்களுக்கு இயக்கிக் காட்டினார்.

சிறு சிறு பீச்சுக் குழாய்களை நிலத்தில் தேவையான இடங்களில் பரவலாக பொருத்திவைத்து மின்சாரத்தை இயக்கியதும் பீச்சுக் குழாய்களிலிருந்து தண்ணீர் உயர்ந்து விரிந்து பரந்து மழை பெய்வதுபோன்றே கொட்டுகிறது. இப்பீச்சுக் குழாய்களைத் தேவையான இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதோடு — இக்குழாய் மூலம் செயற்கை மழை பொழிய வைப்பதால் 40 விழுக்காடு மிச்சமாகிறதாம் தண்ணீர். அது மட்டுமல்ல—மூன்று மணி நேரம் இவ்வாறு தெளித்தால் அது ஒரு அங்குல மழை பெய்ததற்குச் சமமாம்.

விவசாயத்தில் இவர்கள் கையாண்டுவரும் புரட்சி விஞ்ஞான முறைகளை அதிகாரிகள்—அவர்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள அண்ணா பண்ணையில் மட்டும் செயல்படுத்துவதோடு நின்றுவிடுவதில்லை. விவசாயிகளை அழைத்து பாடம் நடத்துவதோடும்—தீவிர விவசாயம் பற்றித் திரைப்படம் தயாரித்துக் காட்டுவதோடும் இவர்கள் பணி முடிந்துவிட்டதாக ஓய்வு கொள்வதில்லை. சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள விவசாயத் தன்மைகளை ஆராய்ந்து உழவர் பெருமக்களிடம் மேலும் செழிப்பான விவசாய முறைகளையும் சிக்கனத் தன்மைகளையும் விளக்கி வருகின்றனர்.

''தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பண்ணைக்கு வந்து எங்கள் விவசாய முறைகளைப் பாராட்டினார்,'' என்றார் ஒரு அதிகாரி.

முதல்வர் வந்த நேரம் பண்ணை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டம். இப்போது அவர்கள் பார்வையிடுகின்ற வாய்ப்பு எங்களுக்கு கிடைக்குமானால் பாராட்டுமட்டும் அல்ல; இன்னும் நாங்கள் எதிர்பார்க்கின்ற சில வசதிகளும் உடன் கிடைக்குமென எண்ணுகிறோம்'' என்றார் இன்னொரு அரசுப் பணியாளர்.

வளர்ந்து வரும் அண்ணா பண்ணையும், கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சிப் பண்ணையும் குடுமியான்மலை பகுதியில் 200 குடும்பங்களுக்கு வேலை தந்து வாழ்வளித்து வருகிறது.

''தமிழக முதல்வர் இங்கு வருகைதந்து பேசுகின்றபோது இங்கு நடைபெறும் எல்லாச் சாதனைகளையும்விட இப்பண்ணையால் 200 குடும்பங்களுக்கு வாழ்க்கை கிடைக்கிறது என்பதிலே எனக்குப் பெரிய மகிழ்ச்சி'' எனக் குறிப்பிட்டார்கள் என்று அதிகாரி பெருமாள் ஆர்வத்துடன் கூறினார்.

மணி மூன்றடித்தது.

'இன்னும் நீங்கள் மதிய உணவு அருந்தவில்லையே' என்று நாங்கள் புதுக்கோட்டை மண்ணில் கால் பதித்ததிலிருந்து எங்கள்மீது அன்புமழை பெய்து கொண்டிருந்த மாவட்ட விவசாய அதிகாரி சுப்பிரமணியம் நினைவூட்டினார்.

'பார்த்தால் பசி தீரும்' என்பதுபோல் பண்ணையின் வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டே வந்த பெருமிதத்தில் பசி தீர்ந்து விட்டது என்றேன்.

பண்ணை அதிகாரிகளிடமிருந்து நாங்கள் விடைபெற்றபோது நீண்டநாள் பழகிய குடும்ப நண்பர்கள் போன்று அவர்கள் குழுமி வந்து எங்களை வழியனுப்பி வைத்தனர்.

தயாராக நின்ற ஊர்தியில் ஏறுவதற்குமுன் மீண்டும் ஒரு முறை அந்த 1200 ஏக்கர் நிலப்பரப்பின் மீதும் பார்வையைச் செலுத்தினேன்.

தமிழக அரசின் சாதனைக்கு அண்ணா பண்ணை ஒரு எல்லைக் கல். பசுமைப் புரட்சியின் பயன் கூட்டும் சித்திரம். தமிழகத்தில் உள்ள மண் வயல்களை யெல்லாம் பொன்வயலாக்க புதுக்கோட்டைக்கருகில் ஒரு புரட்சி நடந்து கொண்டிருக்கிறது என்கிற எண்ணமே என் மனதில் நிழலாடியது.

— நீறு

சுயாட்சியின் வெற்றி

சிலம்புச் செல்வர்
ம.பொ. சிவஞானம்

பாரத — பாகிஸ்தான் போரில் உலகம் கற்க வேண்டிய பாடங்கள் பல உண்டு. அவற்றை நடு நிலைமையில் நின்று விளக்க விரும்புகிறேன்.

உரிமையும் உறவும் வேறு வேறுதான். ஆயினும் ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல. ஆனால் உறவு மட்டுமே வலியுறுத்தப்பட்டு, உரிமை மறுக்கப்படும் போது அந்த இரண்டுக்குமிடையே மோதல் ஏற்படு கிறது—அதிலே உரிமை வெல்கிறது. உறவு முறிகிறது. இது வங்கதேசம் போதிக்கும் பாடம்.

பாகிஸ்தானில் நடைபெற்ற ராணுவ ஆதிக்கம், விசித்திரமான அந்த நாட்டில் தேசீய ஒருமைப் பாட்டை வலியுறுத்தியது. அதில் தவறில்லை. ஆனால், ஏழரைக் கோடி வங்காளியரின் உரிமையை மறுத்ததே, அதுதான் தவறு.

பாகிஸ்தான் தேசம் முழுவதன் நலனை நினைவில் வைத்து தேசீய ஒருமைப்பாடு வற்புறுத்தப்படவில்லை. மேற்குப் பாகிஸ்தானியரின்—அவர்களிலும், பஞ்சாபி யரின்—ஆதிக்கம் கிழக்குப் பாகிஸ்தானியர் (வங்க தேசத்தார்) மீது கால்நூற்றாண்டுக்கு முன்பு திணிக் கப்பட்டதே, அதனை நிலைநிறுத்தவே, ஒருமைப்பாடு வலியுறுத்தப்பட்டது.

இன்னொரு வகையில் சொன்னால், வங்காளியரின் உரிமைக்கு எதிராக பாகிஸ்தானியரின் ஒருமை வலியுறுத்தப்பட்டது. அதனால்தான் வங்க தேசத்தை பாகிஸ்தான் இழக்கவேண்டி ஏற்பட்டது.

வங்காளியரின் உரிமையை விரும்பிய முஜிபுர் ரகிமான் பாகிஸ் தானின் ஒருமைப்பாட்டையும் காக் கவே விரும்பினார். அதில் அவரையாரும் சந்தேகிக்க முடியாது. கடைசிவரை — அதாவது, மேற்குப் பாகிஸ்தானின் வங்காளியரல்லாத ராணுவப் படை கள், வங்க தேசத்துள் நுழையும்வரை பாகிஸ்தானுக் குட்பட்ட மாநில சுயாட்சியையே வங்க மாநிலத் துக்குக் கோரினார். பாகிஸ்தானிலிருந்து வங்கத்தைப் பிரித்துவிட அவர் விரும்பவே இல்லை.

உரிமைக்கும் ஒருமைக்கும் உறவு காணவே கடைசி வரை அவர் பாடுபட்டார். ஆம்; பாகிஸ்தானின் தேசீய ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமென்பதிலே அதிபர் யாகி யாகானுக்கும், வாயாடி பூட்டோவுக்கும் முஜிபுர் ரகிமான் பின்வாங்கியவரல்ல. ஆனால் முஜிபுர் விரும்பிய ஒருமைப்பாடு, மேற்குப் பாகிஸ்தானுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்குமிடையே சமத்துவ அடிப் படையில்! யாகியாகான் விரும்பிய ஒருமைப்பாடு ஆண்டான்—அடிமை 'உறவு' போன்றது. மேற்குப்

பாகிஸ்தானை ஆண்டையின் நிலையிலும்; கிழக்குப் பாகிஸ்தானை அடிமையின் நிலையிலும் வைத்து ஒன்றுபட்ட பாகிஸ்தானை உறுதிப்படுத்த விரும்பினார் யாகியாகான்.

தேசீய ஒருமைப்பாட்டை விரும்புவோரும் தங்களை அறியாமலே பிரிவினைக்கு உதவி புரிவதுண்டு. இதற்கு யாகியாகானின் ராணுவ ஆதிக்கம் கடைப்பிடித்த போக்கு எடுத்துக்காட்டாகும்.

யாகியாகான் மத அடிப்படையில் பாகிஸ்தானை ஓரரசு நாடாக உறுதிப் படுத்த முயன்றார். வங்கபந்து முஜிபுர் ரகிமான், பாகிஸ்தானை மொழி அடிப்படையில்—வங்கஸ்தான், பஞ்சாபிஸ்தான், பக்தூனிஸ்தான், பலுசிஸ்தான் ஆகிய மாநிலங்கள் விரும்பிக் கலந்த சமஷ்டி அரசு நாடாக்க முயன்றார். இதனை முன்னாள் அதிபர் யாகியாகானும் பின்னாள் அதிபர் பூடோவும் அன்றே ஏற்றிருந்தால், பாகிஸ்தானின் ஒருமைப்பாடு காக்கப்பட்டிருக்கும்.

வங்கதேசத்தார் நடத்திய சுதந்திரப் புரட்சியிலே, அதன் விளைவாகத் தோன்றிய—பாரத—பாக் போரிலே தோற்றது யார்? எந்த சக்தி? பாகிஸ்தானா? இல்லை! அதில் நடைபெற்ற ராணுவ ஆட்சியா? அதுவுமில்லை. அதன் அதிபரான யாகியாகானா? அவருமல்ல. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மத அடிப்படையில் இஸ்லாமிய நாடாகப் பிரிக்கப்பட்டதே, அந்த மத வழித் தேசீயம்தான் தோல்வியுற்றது. மொழிவழித் தேசீயம் வெற்றி பெற்றது.

மொழிவழித் தேசீய இனங்களின் உரிமையை மறுக்கும் வகையில் மதவழி அல்லது பூகோள வழி, ஒருமைப்பாடு பேசுவோர் எவரானாலும் அவர்களுக்கெல்லாம் மேற்குப் பாகிஸ்தான் அடைந்த படுதோல்வி மிகச் சிறந்த பாடமாகும்.

மத வழி அரசியலுக்கும் மொழி தொடர்புடைய இனவழி அரசியலுக்கும் போராட்டம் உருவானால், முன்னது தோற்கும்; பின்னது வெல்லும். ஆம்; யாகியாகான் தோற்பார்! முஜிபுர் ரகிமான்கள் வெல்வர்!

மாநில சுயாட்சியை மறுப்பது எளிது; ஆனால் அதனை வெல்வது கடினம். சுயாட்சிக் கிளர்ச்சி ஒடுக்கப்படும்போது, அது சுதந்தரப் புரட்சியாக மாறும். அதைத் தவிர்க்க முடியாது. சுதந்தரமாக வாழ உரிமைப் படைத்த இனங்கள்தானே தங்கள் சுதந்தரத்துக்குத் தாங்களே கட்டுப்பாடு விதித்துக் கொண்டு சுயாட்சி கோருகின்றன!

பாகிஸ்தானிலே, 1970 டிசம்பரில் வயதுவந்த வாக்காளர்களைக் கொண்டு பொதுத் தேர்தல் நடத்தப்பெற்றது. அதிலே கிடைத்த தீர்ப்பு என்ன? மேற்குப் பாகிஸ்தானிலே பூட்டோவின் மக்கள் கட்சி பெரும்பான்மை பெற்றது. அந்தக் கட்சியின் சார்பில் கிழக்கு வங்காளத்தில் போட்டியிட்ட அனைவரும் தோல்வியுற்றனர். அதனால், பூட்டோவின் மக்கள் கட்சியை வங்காளியர் ஒருமனதுடன் நிராகரித்தனர் என்பது உறுதிப்படுகிறது. அது அகில பாகிஸ்தான் கட்சியல்ல, மேற்குப் பாகிஸ்தான் கட்சிதான் என்பது தெளிவாகிவிட்டது.

அதுபோலவே, முஜிபுர் ரகிமானின் அவாமிலீக் கட்சி, கிழக்கு வங்காளத்தில் மட்டும் போட்டியிட்டு 100—க்கு 98 சதவிகித இடங்களைக் கைப்பற்றியது. வங்காள தேசீய இனத்தவரின் ஒரே கட்சியாக உலகுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது. மேற்குப் பாகிஸ்தானில் அவாமி லீக் கட்சி போட்டியிடவில்லை. ஆம்; அகில பாகிஸ்தான் கட்சியாக இயங்க அது விரும்பவில்லை.

கிழக்கு வங்காளியர் கட்சியான அவாமி லீகிடமுள்ள நியாயம் என்னவென்றால், அது மேற்குப் பாகிஸ்தான் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பாததாகும்.

இதற்கு மாறாக பூட்டோவின் மக்கள் கட்சியிடமிருந்த அநியாயம் என்னவென்றால், மேற்குப் பாகிஸ்தானியருக்கு மட்டுமே பிரதிநிதித்துவமுள்ள அந்தக் கட்சி, அகில பாகிஸ்தான் கட்சியாகத் தன்னைக் கற்பனை செய்துகொண்டு கிழக்குப் பாகிஸ்தானியர் எனப்பட்ட வங்காளிகள் மீதும் ஆதிக்கம் செலுத்த முயன்றதாகும்.

பாவம்! அதிபர் பீடத்திலிருந்த யாகியாகான், அகில பாகிஸ்தானிலும் ஜனநாயக அரசை அமைக்க முடியுமென்று நம்பித்தான் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார். அந்த வகையில் தமக்கு முன்பு அதிபராக இருந்த அயூப்கானை விடவும், ஜனநாயகவாதியாக நடந்து கொள்ளவே யாகியாகான் முயன்றார். ஆனால், அவரைப் பிடித்த கெட்ட காலங் தேர்தல் முடிவு அவரைச் சம்கடத்தில் வைத்து விட்டது.

முஜிபுர் ரகிமானையும் பூட்டோவையும் ஒன்றுபடுத்தி பாகிஸ்தானில் ஜனநாயக அரசு அமைக்க யாகியாகானால் முடியவில்லை. பாகிஸ்தானை இருகூறாக்கி, கிழக்கு வங்கத்தை அவாமி லீகிடமும் மேற்குப் பாகிஸ்தானை மக்கள் கட்சியிடமும் கொடுக்கவும் அவருக்குத் துணிவில்லை.

தேர்தல் தீர்ப்புக்கு மதிப்பளித்து பாகிஸ்தான் தேசிய அசெம்பிலியில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியிருந்த அவாமி லீகினரிடம் மத்திய ஆட்சியை யாகியாகான் ஒப்புவித்திருக்கலாம். அப்படிச் செய்யவும் ஒரு கட்டத்தில் அவர் துணிந்தார். ஆனால் பாகிஸ்தானின் சகுனியாகி விட்ட பூட்டோ அவரைப் பயமுறுத்தினார். வங்காளத்துக்கு சுயாட்சி தருவதையும் பூட்டோ எதிர்த்தார். வங்காளியர் கட்சியான அவாமி லீகிடம் முந்திய ஆட்சியை ஒப்புவிப்பதையும் அவர் வெறுத்தார். இந்த இரண்டில் எதைச் செய்தாலும் மேற்குப் பாகிஸ்தானில் ரத்த ஆறு ஓடும் என்று பூட்டோ மிரட்டினார்.

இந்த நிலையில் யாகியாகான் பதவியைத் துறந்து, பூட்டோவின் தலையில் அன்றே பொறுப்பைச் சுமத்தியிருக்க வேண்டும். அதைச் செய்யாததன் பலனை அவர் இப்போது அனுபவிக்கிறார்.

பூட்டோ வாய்ச் சொல்லில் வீரர். ஆனால் மேற்குப் பாகிஸ்தானில் தன் கட்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றியை அமுல் நடத்தி வைக்கும்படி யாகியாகானைத் தூண்ட அவரால் முடியவில்லை. அதற்கும் இந்திரா காந்தி தேவைப்பட்டார்.

1970—ம் ஆண்டில் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவு பாரத—பாக். போரின் விளைவாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. கிழக்கு வங்காளத்தில் அவாமி லீக் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. மேற்குப் பாகிஸ்தானில் மக்கள் கட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. ராணுவ ஆட்சிக்கு முற்றுப் புள்ளி விழுந்து விட்டது. இதற்கு யாரேனும் ஒருவரைப் பொறுப்பாக்க வேண்டுமானால், அவர் இந்திரா காந்தியாகத்தான் இருக்க வேண்டும்.

வாழ்க இந்திரா! ★

வெற்றித் திருநாள்



மாட்சி பொருந்திய மன்னனொருவன் — அவன் சீற்றம்கொண்டு செறு முனை சென்று விட்டாலோ எதிரிகள் வீழ்ச்சி அடைவது மட்டும் திண்ணம். ஆனால் மன்னனோ எளிதில் சீற்றம் கொள்ளமாட்டான். காரணம் நெறியோடு வாழும் மன்னவன்!

குடிமக்கள் கொண்ட விருப்பங்களை ஏற்று குவலயம் போற்றும் ஆட்சி நடத்துபவன்; அம்மன்னன் முடிவுகட்கு மக்கள் செவிமடுப்பதில் வியப்பில்லை!

மன்னனிடம் படை ஒன்று உண்டு. பகை முடிப்பதில் அது தடை என்றும் கண்டதில்லை! மாற்றானை மருட்டவே படை என மன்னவன் முழங்குவதும் இல்லை. மருட்ட வந்த எதிரிகளை மறு உலகுக்கு அனுப்புவதிலும் தவறுவதில்லை!

சீரான ஆட்சி நேரான பாதையில் செல்வது கண்டு சகியாத சழக்கர்கள் சங்கடங்கள் பல கொடுக்க போர் என்னும் முறை கண்டனர்! வீரத்தில் விளைந்த படை கொண்ட மன்னவனோ தோல்வி தவிர வேறெதுவும் அவர்க்குத் தந்ததில்லை!

மன்னனின் கீர்த்தியோ மற்ற நாடுகளில் பரவியது. எதிர்பாராத நேரத்தில் மன்னனை எதிர்த்துப் போரிட்டு மாபெரும் வெற்றி ஈட்டப் படை ஒன்றைத் திரட்டி வந்தான் வேற்று நாட்டானொருவன். மன்னனோ மருளவில்லை. மாறாக எதிரியின் மன இருளைப் போக்கவே விழைந்தான். காரணம் — போர் என்று வந்தால் வெற்றிக் கனி பறிக்க அவன் புயலாக வேண்டிவரும் என நினைத்தான்!

போரைத் தவிர்த்து அமைதியை உருவாக்க விரும்பிய மன்னன் சூழ்ந்துள்ள எதிரிப் படைகட்குத் தம் வலிமையை எடுத்துரைத்து அவர்தம் மனமயக்கம் போக்க சேதி ஒன்று அனுப்பினான், தன் தூதுவன் மூலம்.

சென்ற தூதுவன் எதிரிப்படைகள் எக்காளமிட்டு அணிவகுத்து நிற்பதைக் கண்டான். நகைப்புதான் அவன் உள்ளத்தில் எழுந்தது — காரணம் தம் மன்னன் படை வலிமை முன்பு அவை எதிர்த்து நிற்க முடியாது என்பதை நன்றாக உணர்ந்தவன், அவன்! முன்னம் இவ்வாறு போர் தொடுத்து வந்தவர்கள் தம் மன்னன் படையால் அழிக்கப்பட்டு அவர்கள் கற்சிலைகள் மட்டுமே இருப்பது அவன் நினைவுக்கு வருகின்றது. ஆகவே எதிரிகளைப் பார்த்து, ''எதிரிகளே! எம் மன்னவன் முன் தோள் தட்டி நிற்கத் துணியாதீர்! முன்னம் இவ்வாறு தோள்தட்டி நின்றவர் எல்லாம் எம் மன்னவன் படைகளால் அழிக்கப்பட்டு இன்று கற்சிலைகளாகக் காட்சியளிக்கின்றனர்'' — என்று கூறினானாம்.

இக்காட்சியை திருவள்ளுவர் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்:

''என்னை முன் நில்லன்மின்
தெவ்விர்! பலரென்னை
முன்னின்று கல் நின்றவர்'' —

இன்று இக்காட்சி என் நினைவிற்கு வரக் காரணம் இந்தியா—பாகிஸ்தான் போரில் டாக்காவை விடுவிக்க இந்தியத் தலைமைத் தளபதி பாகிஸ்தான் தளபதிக்கு விடுத்த அறிக்கையில் ''சரண் அடைந்து விடுங்கள்! இல்லையேல் சமர் நடந்தால் உங்கள் படை முழுவதும் அழிக்கப்படுவது உறுதி'' என்று விடுத்த எச்சரிக்கையே யாகும்! இதற்குப் பின் பாக். படை சரண் — டாக்காவின் வீழ்ச்சி — சரித்திர முக்கியத்வம் பெற்றுவிட்ட சுதந்திர வங்காள தேசம் உதயம் — டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியது போல் இந்நிகழ்ச்சிகள் கீர்த்திமிக்க இந்தியாவின் புகழை உயர்த்திய இந்திராவின் புகழ் மகுடத்தில் பதிக்கப்பட்ட முத்துக்களாக நானிலம் போற்றுகின்றது.

இன்னும் போர் முகட்டின் எல்லையிலே நின்று தாய் நாட்டின் மானங் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இனிமை தரும் பொங்கற் புதுநாள் இவ்வாண்டு வெற்றித் திருநாளாக மலர்ந்துள்ளது.

மா. முத்துச்சாமி
எம். பி.

மலை அடிவாரத்திலிருக்கும் அந்தக் கிராமம் தாயின் மடியில் கண்ணுறங்கும் குழந்தையைப் போல் அமைதியாக இருந்தது. அவ்வூரில் அந்திக்கடைப் பொட்டல் என்று அழைக்கப்படும் சிறிய கடைத் தெருவில் கூட ஆள் நடமாட்டமில்லை. அங்குள்ள சிறிய ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர்கள் யாரும் வராததால் அன்று திறக்கப்படவில்லை. மொத்தத்தில் ஊரே அன்று 'கப்சிப்' என்று இருந்தது. பிரபல கேடி சிவன் காளை ஊருக்குள் வந்திருக்கிறான் என்றும், அவன் மீது தொடரப்பட்டிருந்த கொலை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதென்றும் கிராமத்தில் பேச்சு அடிபட்டதால் பகலிலேயே ஊர் ஒடுங்கிப் போய்விட்டது.

முப்பது வயது கூட நிரம்பாத இளவட்டமானவன் சிவன் காளை. திருமணமாகவில்லை. தாய் தந்தை யாருமில்லை. ஊரில் இருக்கும் நாட்களில் தாடிக்கார நாகையாவின் காபி கடைதான் அவனுக்குப் புகலிடம். அந்தக் காபிக் கடை, கடைத் தெருவில், பள்ளிக்கூடத்திற்கு எதிரே இருந்தது.

சிவன்காளை முதல் நாள் இரவுதான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி ஊருக்கு வந்தான். வந்ததும் வழக்கம் போல் அந்தக் காபிக் கடையின் ஒட்டுத் திண்ணையில் தூங்கினான். அதிகாலையில் கிராமம் முழுவதிலும் இந்தச் செய்தி பரவிவிட்டது.

சிவன்காளை சிவந்த கண்களுடன் பீடியைப் பிடித்துக்கொண்டு தாடிக்காரன் காபிக் கடையில் உட்கார்ந்திருக்கிறான் என்றதும், பள்ளிச் சிறுவர்கள் கூட பள்ளிக்குச் செல்லவில்லை.

ஒரு வருஷம் நிம்மதியாக இருந்தோம்; இந்தச் சண்டாளன் இப்படித் திடீரென்று வந்து விட்டானே என்று ஒவ்வொருவரும் நெஞ்சுக்குள்ளேயே புழுங்கினார்கள்.

வாய்ச் சண்டையிலிருந்து வழிப்பறிக் கொள்ளை வரை, கொடுக்கல் வாங்கல் விவகாரத்திலிருந்து கொலை வழக்கு வரை சிவன்காளை பிரகாசமாக விளங்கினான்.

அவனை மடக்குவதற்கு எப்பேர்ப்பட்டவர்கள் முனைந்தாலும் பத்து நாட்களுக்குள் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளும் தனித்திறமை கொண்டவன் சிவன் காளை. எத்தனையோ வழக்குகள் அவன் மீது! இந்த முறை சிவன் காளை நிச்சயமாகத் தண்டிக்கப்பட்டு விடுவான் என்று ஒவ்வொரு வழக்கிலும் எதிர்பார்த்து இந்தக் கிராமத்தினர் ஏமாந்திருக்கிறார்கள். 'உலகத்தில் நீதியே இல்லையா? தெய்வம் தூங்குகிறதா?' என்று அவன் விடுதலையாகி வரும்போதெல்லாம் கிராமத்துப் பெண்கள் தங்கள் வயிற்றெரிச்சல்களைக்கொட்டிக் கொள்வது பழக்கம்.

ஆனால் இந்தத் தடவை சிவன் காளை நிரபராதி என்று தீர்மானிக்கப்படுவான் என்று யாரும் கனவுகூடக் கண்டிருக்க முடியாது. அவன் மீது தொடுக்கப்பட்டிருந்தது அவ்வளவு கொடிய கொலை வழக்கு.

அதிகாலையில் கிழக்கு வெளுக்கு முன் குளத்தங்கரைக்குத் தண்ணீரெடுக்க வந்த குமரிப் பெண் அன்னம்மாவை ஒளிந்து நின்று பாய்ந்து அரிவாளால் வெட்டினான் என்பது சிவன்காளை மீது சாட்டப்பெற்ற குற்றம். வெட்டப்பட்ட அன்னம்மா அந்த இடத்திலேயே இறந்து போனாள்.

இந்தக் கொலை சம்பந்தமாகத் துப்புத் துலக்கி, போலீசார் சிவன் காளையைக் கைது செய்து சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு வழக்கு விசாரணை தொடங்கியது. சர்க்கார் தரப்பில் வலுவான சாட்சிகள் இல்லை. சிவன் காளை அன்னம்மாளை வெட்டும்போது பார்த்ததாக நீதி மன்றத்தில் யாரும் சொல்லவில்லை. இசக்கி முத்துவின் சாட்சியம் ஒன்றுதான் சர்க்கார் தரப்பில் இருந்தது.

''அன்று சிவன்காளை விடிய விடிய தாடிக்காரன் டீக்கடையில் விழித்துக் கொண்டிருந்தான். கையில் கூர்மையான பாளை வெட்டும் அரிவாள் வைத்திருந்தான். அன்று வருஷப்பிறப்பு. சம்பிரதாயப்படி வயலை உழுவதற்காக அதிகாலையில் இருட்டோடு இருட்டாக வயல் பக்கம் போனேன். சிவன்காளை கொஞ்ச தூரம் என் பின்னாடியே வந்தான். வந்தவன் ஊரைத் தாண்டியதும் மலைச் சாரல் பக்கமாகத் திரும்பி விட்டான். நான் வயலைக்கூட அடைந்திருக்க மாட்டேன். ''ஐயோ! பாவி என்னை வெட்டி விட்டானே!'' என்று ஒரு பெண் கத்தும் சத்தம் கேட்டது. நான் கலப்பையைப் போட்டு விட்டு ஓடினேன். அங்கே அன்னம்மா ரத்த வெள்ளத்தில் கிடந்தாள்.'' இதுதான் இசக்கியின் சாட்சியம்.

நீதிபதி இசக்கியின் சாட்சியத்தை எடுத்துக் கொள்ளவில்லை. சிவன்காளைக்கும் இசக்கி முத்துவுக்கும் கொடும் பகை இருந்து வந்ததாகவும், மூன்றாண்டுகளுக்கு முன்பு இசக்கி, சிவன்காளையின் சுண்டு விரலைக் கடித்து எடுத்துவிட்ட குற்றத்திற்காக ஆறு மாத காலம் சிறைவாசம் அனுபவித்திருப்பதாகவும், குறுக்கு விசாரணையில் நீதிபதி அறிந்திருந்தார். ஆகையால் இசக்கி முத்துவின் சாட்சியத்தில் உள் நோக்கம் இருப்பதாக அவர் தீர்மானித்துவிட்டார்.

தாடிக்கார நாகையா இருக்கிறானே அவன் அந்த ஊர் மலை மீதிருக்கும் வடக்கு வாசல் செல்லாயி அம்மன் மீது ஆயிரம் சத்தியங்களைச் செய்து, ''சிவன் காளையும் நானும் பக்கத்து ஊரில் நடைபெற்ற ராஜபார்ட் சக்தி வேலாசாரியின் மயான காண்டம் நாடகம் பார்த்துவிட்டு காலை எட்டு மணிக்குத்தான் எங்கள் கிராமத்திற்கு வந்தோம். வந்த பிறகுதான் எங்களுக்கு அன்னம்மா கொலை பற்றித் தகவல் தெரிந்தது'' என்றான். கூண்டிலே அவன் கொஞ்சம் கூட நடுங்கவில்லை. மனிதனின் உண்மையான உள்ளம் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் இருப்பதால் உதடுகளின் உச்சரிப்பையே உண்மை என்று எண்ணி விடுகிறோம். கனம் நீதிபதி அவர்களும் அப்படியே நம்பி சிவன் காளையை நிரபராதி என்று விடுதலை செய்துவிட்டார்.

விடுதலை அடைந்த சிவன்காளை கர்வம் கொண்ட கருநாகம்போல் கிராமத்திற்குள் நுழைந்தான். அவன் வாடிக்கையாகத் தங்கும் தாடிக்காரன் கடைக்குப்போனான்.

சிவன் காளை

எஸ். எஸ். தென்னரசு

அரண்டு போய், குழந்தைகளைக் கூடப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை. கடைத்தெருப் பக்கமே யாரும் வரவில்லை. கடைத் தெருவிலே தானே சிவன்காளை உட்கார்ந்து இருக்கிறான்!

ஃ ஃ ஃ

இசக்கிமுத்து ஒரு விவசாயி. பத்து ஏக்கருக்கு மேல் நிலங்களை வைத்திருக்கும் பெரிய விவசாயி. தாய்க்குத் தலை மகன். இசக்கி முத்துவுக்கும் சிவன்காளைக்கும் இறுகிய நட்பு இல்லா விட்டாலும் பகையில்லாமல் இருந்தது. மூன்றாண்டுகளுக்கு முன்பு கோயில் திருவிழா இருவருக்கும் பகை மூட்டி விட்டது. ஒவ்வொரு ஆண்டும் வைகாசி விசாகத்தின்போது கிராம தெய்வத்திற்கு விழாயெடுப்பது வழக்கம். திருவிழாவிற்கு மறுநாள் ஜல்லிக் கட்டு விடுவார்கள்.

ஜல்லிக்கட்டின் போது கோயில் காளையைத்தான் முதன் முதலில் அவிழ்த்து விடுவது பழக்கம். சிவன்காளை ஊர்க் கட்டுப்பாட்டை மீறி முதலில் தன் காளையை உருவினன். இசக்கி தடுத்தான். விவகாரம் முற்றியது. இருவரும் கை கலந்தார்கள். யாராவது ஒருவன் தீர்ந்து விடுவான் என்று தான் ஊரார் நினைத்தார்கள். சிவன்காளை இசக்கியின் கழுத்தை நெறிக்க முயலும் கட்டத்தில் அவனது சுண்டு விரல் இசக்கியின் வாய்க்குள் சிக்கிக் கொண்டது. இசக்கி அதைக் கடித்து எடுத்து விட்டான். அதற்குள் ஆயுதப் படை வந்து தலை கொடுத்து சண்டையை விலக்கியது. வழக்கு விசாரணையின் முடிவில் இசக்கிக்கு ஆறு மாதம் சிறைவாசம் கிடைத்தது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இருவருக்குமிடையே பேச்சுவார்த்தை கூட இல்லாமல் இருந்தது. அன்னம்மாவின் கொலை மீண்டும் ஒரு பகைக்கு அச்சாரமாக அமையும் என்று இசக்கி எதிர்பார்க்கவில்லை.

சிவன்காளை விடுதலையாகி வந்த செய்தியை இசக்கி அறிந்திருந்தான். ஆனல் அவன் மனத்தில் அதுபற்றி எந்த அரிப்பும் ஏற்படவில்லை; ஏற்பட்டதாகவும் தெரியவில்லை.

முரடர்களும் ஒரு வகையில் நாணயமானவர்கள்தான். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுகாவிட்டால் அவமானம் என்று கருதும் நாணயஸ்தர்களைப் போல், பாதகர்களும், கொலை புரிவோரும் கூட பலிக்குப் பலி வாங்காவிட்டால் அவமானம் என்று நினைத்து விடுகிறார்கள். சிவன்காளை அந்த வகையில் சிறந்த நாணயஸ்தனக நடக்க எண்ணினன்.

ஃ ஃ ஃ

சிவன்காளை ஊருக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. இன்னும் கடைத் தெருவில் மாமூல் நிலைமை வரவில்லை. தாடிக்காரன் கடைப் பக்கமாக வரும் பெண்கள் கடைக்குள் உற்றுப் பார்த்து சிவன்காளை இருக்கிறான என்று தெரிந்து கொண்டுதான் கடையைக் கடந்து வந்தார்கள்.

அன்று கிராமத்திலே பங்குனி உத்திரத் திருவிழா. கரகாட்டமும், ஒயிலாட்டமும் ஊரையே அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தன.

இசக்கி, பாதி ராத்திரி வரை வேடிக்கைகளைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பினன். வாத நோயினல் படுத்த படுக்கையாக இருக்கும் அவனது தாயின் துணைக்காக இசக்கி ஊருக்கு வெளியே இருந்த அவனது வீட்டு வாசலில், ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்து விட்டான். பின்னிரவு நேரம்! அம்மன் சாமி மலைக்கோயிலை விட்டுப் புறப்பட்டு கிராமப் பொதுச் சாவடியில் சேர்க்கையாகியிருந்தது. இசக்கிக்குத் தூக்கம் பிடிக்காமல் பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். அந்த நேரத்தில் எங்கிருந்தோ புகையிலையைக் கரிக்கும் வாடை மிதந்து வந்தது. இசக்கி கொள்ளைப் பக்கமாகப் போய்ப் பார்க்க எழுந்தான். அப்போது பின்னடி வந்த ஒருவன் இசக்கியின் முடியை இறுகப் பற்றினன். பற்றியவன் வேறு யாருமல்ல, சிவன்காளை தான். இசக்கி, திமிறிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினன் ஆயுதம் எடுப்பதற்கு. சிவன்காளையும் உள்ளே நுழைந்து விட்டான். படுக்கையில் கிடந்த இசக்கியின் தாயார் சண்டையை நிறுத்த யாரும் வர மாட்டார்களா என்று துடித்தாள். யார் வருவார்கள்? ஊரே கூடி சாவடி முன்னல் உருமிக் கச்சேரி கேட்டுக் கொண்டிருக்கிறதே!

இசக்கி, வாரத்தில் சொருகியிருந்த அரிவாளை எடுத்துக் கொண்டான்.

''டேய் சிவன்காளை, நான் உன் வம்புக்கு வர்றதேயில்லை. ஆனு, நீ மட்டும், என் பாதையில் குறுக்கிட்டுக்கிட்டே இருக்கே! இன்னிக்கித்தான் முடிவு தெரியப் போகுது! இந்த ஊரிலே நீ இருக்கணும், இல்லாட்டா நான் இருக்கணும்'' — இசக்கி ஆவேசமாகக் கத்தினன். ஒருவன் உருவம், மற்றெருவனுக்குச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத இருட்டு நேரம்.

வீட்டுக்குள் ஒரு நிமிடம் அமைதி; மயான அமைதி! பாம்புகளின் சீற்றங்களைப் போல் இரண்டு பேருடைய வேகமான நெடுமூச்சுக்கள் மட்டும் வீட்டுக்குள் கேட்டுக் கொண்டிருந்தன.

இசக்கி எதிரியின் மூச்சு வரும் திசைப்பக்கமாக நகர்ந்துகொண்டே போனன். அப்போது இரண்டு கைகள் இசக்கியின் கால்களை மெதுவாகப் பற்றின. அவ்வளவு தான்! இசக்கிக்கு வேகம் வந்து விட்டது. தன் முழுப் பலத்தையும் தன் கைகளுக்குக் கொண்டு வந்து அந்த உருவத்தைப்பார்த்து ஓங்கி வெட்டிவிட்டான்!

''ஐயோ, மகனே!'' என்ற அபயக் குரல் இசக்கியின் காலடியில் வீறிட்டு ஒலித்தது.

''அம்மா! அம்....மா!''

ஆம், இசக்கியின் தாய்தான் கொலையுண்டு போனள். யாரால் கொலையுண்டாள்? இசக்கியைத் தவிர ஊரில் வேறு யாருக்கும் தெரியாத இரகசியம் இது.

கொலை வழக்குப் பதிவாகியது. இசக்கியின் புகாரின் பேரில் சிவன்காளை கைதானன்.

அன்னம்மா கொலை வழக்கில் தாடிக்கார நாகையா ஆடாமல், அசையாமல் நெஞ்சை உயர்த்திக் கொண்டு கூண்டில் நின்று சாட்சி சொன்னனே, அதைப் போல் அதைவிட உறுதியாக, அதைவிடக் கம்பீரமாக இசக்கிமுத்து கூண்டி லேறினன்.

''எனக்கும், சிவன் காளைக்கும் நீண்ட காலமாகக் கடும்பகை. எப்படியாவது என்னை ஒழித்து விட அவன் நினைத்தான். திருவிழா அன்று நள்ளிரவில் என் வீட்டுக்கு வந்து என்னை வெட்ட முயன்றான். இருட்டு வேளை. நான் வட்டுக்குள் ஓடினேன். என்னை விரட்டி வந்து வெட்டினன். என் தாய் குறுக்கே வந்தாள். அந்த வெட்டு அவள் மேல் விழுந்து அந்த இடத்திலேயே அவள் மாண்டு விட்டாள். அவள் குறுக்கிட்டிரா விட்டால் நான் பிணமாகி இருப்பேன்!'' என்று நாக்கு பிரளாமல் சாட்சி சொன்னன் இசக்கி.

சர்வ வல்லமைப் படைத்த நீதிபதி அவர்கள் தீர்ப்பைப் படித்தார்.

''சிவன்காளை கொடிய குற்றத்தைத் திட்டமிட்டுச் செய்திருக்கிறன் என்று தீர்மானித்து அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.'' இதுதான் தீர்ப்பு.

கிராமத்தில், வாயில்லாப் பூச்சிகளைத் தன் காலடியிலே போட்டு மிதித்து நைத்து வந்த சிவன்காளையை அவன் கையிலே நீண்ட இரும்புச் சங்கிலி பூட்டிய கோலத்துடன் போலீஸ் வண்டியில் ஏற்றினர்கள். நீதி மன்றத்தில் கூடியிருந்த கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

இசக்கியின் மனதில் ஒருவிதக் குழப்பம் இருந்தது. தன்னை வளர்த்த தாயை தானே கொன்று விட்டு, சிவன்காளை மீது பழியைப் போட்டு விட்டோமே என்ற குழப்பம்தான் இசக்கிக்கு!

மத்தாப்பு மங்கை!

கண்ணேறு பட்டுக் கணத்தில் மறைந்த
விண்ணேறு பெரும்புகழ் கென்னடி பிறந்த
அமெரிக்க நாட்டின் ஆட்டக் காரிநான்!
பிளாரிடா நிலத்தில் பெரும்புகழ் வளர்க்கும்
ஆர்லந் தோநகர் ஆதி மந்தி!
மாதவி காவிரி ஆற்று மங்கை!
மடந்தைநான் காதல் ஊற்று மங்கை!
சென்ற நவம்பர் இருபதாம் தேதி
காலையில் பிறந்த செங்கதிர் நங்கை,
பேதை பெதும்பை மங்கை மடந்தை
என்னும் பருவ இளவேனில் கடந்து
காரிருள் தழுவ மேற்குவா னத்தில்
பேரிளம் பெண்ணாய்ப் பிறங்கிய நேரம்!
கோழி இறகைக் கொண்டையில் அணிந்து
செவ்விந் தியர்போல் திரிந்தனர் மக்கள்!
அவர்களின் நடுவிலோர் ஆடவர் அங்குத்
தவறிவந் தவர்போல் தனிமையில் நின்றார்.
முழங்காலைத்தொடும் முழுக்கைச் சட்டையும்
கட்டு விரியன்போல் கரைபோட்ட துண்டும்
முற்றிய ஆப்பிள் பழத்தின் நிறத்தைக்
கற்றுச் சிவந்த களைதரும் முகமும்
பூங்கா நடுவில் போட்ட பாதைபோல்
நெற்றிக்கு மேலே நீண்ட வகிடும்
கொடுக்கு மீசையும் கொண்ட அவரைக்
கண்டுநான் மயங்கினேன்; அவரும்மயங்கினார்.
ஆடை நெகிழ அழகிய ஏரியில்
குளித்துக் கிளம்பிய கோதை என்னை
வைத்தகண் வாங்காது பார்த்தார்; அதனால்
வெட்கத் தாலே மேனி சிவந்தேன்!
என்னுடல் மீது மாலைக் கதிரவன்
பொன்னை அள்ளிப் போட்டதால் மேனி
பொன்னிற மானேன்; என்னைப் பார்த்தவர்
கண்ணை வேறு பக்கம் திருப்பினார்.
அன்னவர் பார்வை என்னைவிட் டகன்றதால்
ஏக்கங் கொண்டு பறங்கிப் பூப்போல்
என்னுடல் பசந்தேன்; வண்ணம் மாறி
ஆடிய என்றன் ஆட்டம் கண்டே
மெத்த மகிழ்ந்து 'வானவில் வண்ண
மத்தாப் பழகி' என்று பாடினார்.
பாடிய கலைஞர் அருகினில் வந்து
கூடுவார் என்று குமரிநான் எண்ணினேன்.
பிறந்த மேனிப் பேதைநான், அவரை
ஆடை கேட்பேன் என்பதற் காக
அச்சப் பட்டே அகன்றுவிட் டாராம்!
ஆடைக் கஞ்சி அகன்ற கலைஞரே!
ஆடை வேண்டாம்! நீங்கள் என்றன்
அருகில் இருந்தால் அதுவே போதும்!

கவிஞர் முருகு சுந்தரம்—

உழவுக்கும்

தொழிலுக்கும்



வந்தனை
செய்வோம்!

நரிக்குறவர்கள் யார்?

பிலோ இருதயநாத்

"ஓ ஆயா! ராம—ராம'' என்று கூறிக்கொண்டு இன்று இந்தியாவில் பல பகுதிகளில் குரங்கை வைத்துக் கொண்டு கூத்தாடும் நரிக் குறவர்களைக் கண்டு ரசிக்காதவர்கள் யாருமில்லை. மேலும், இன்று பெரிய பெரிய அலுவலகத்தில் ஏதாவது விழாக்கள் நடைபெற்றால், அங்கு நடைபெறும் மாறுவேடப் போட்டி வேடிக்கைகளுக்கு, இந்த நரிக்குறவர் உடைகளை அணிந்து கொண்டு மேடையில் வேடிக்கை காட்டுவார்கள். இந்தியாவில் வாழும் இந்த நாடோடி மக்களுக்குத் தனி மன்றம் ஒன்றுமில்லை. ஆனால் மேலை நாடுகளில் வாழும் நாடோடி மக்களுக்குத் தனி மன்றங்கள் இருக்கின்றன. மேல் நாடுகளில் இந்த நாடோடி மக்களுக்கு, ''ஜிப்சிகள்' என்று பெயர். ஆனால் ஜிப்சிகளைப் பற்றி ஏராளமான கதைகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. மேல் நாடுகளில் வாழும் எல்லா ஜிப்சிகளுக்கும் தாயகம் இந்தியா என்பது சரித்திர உண்மையாகும்.

அறிஞர்கள் மேல் நாடுகளிலிருக்கும் ஜிப்சிகளின் மொழியினையும், கலாச்சாரத்தையும் ஆராய்ந்த பிறகேதான் ஜிப்சிகளின் ஆதி காலத் தாயகம் இந்தியா என்று ஒப்புக் கொண்டார்கள்.

இந்த நரிக்குறவர்களைப்பழைய காலத்தில் ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு செய்தார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்க மறுத்து விட்டார்கள்.

'ஜிப்சி' நடனம் என்பதுஎன்ன? நாடோடிகளாகிய நரிக்குறவர்கள் ஆடும் கூத்தை, நடிகர்கள் மேடையில் ஆடினால், அதுவே 'ஜிப்சி டான்ஸ்' என்பார்கள். தங்களுடைய பாட்டாலும், நடனத்தாலும், இந்தியக் கலாச்சாரத்தை மட்டுமல்லாமல் மேல் நாடுகளின் கலாச்சாரத்தையும் ஊட்டி வருகின்றனர். நரிக்குறவர்களால் ஓர் இடத்தில் நிலையாக இருக்க முடியாது. காரணம் அது அவர்களின் பழக்கமாகும். இந்த நாடோடிக் குறவர்கள் மேலை நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து எப்பொழுது போனார்கள் என்பதைக் குறிப்பிட அவர்களிடம் போதுமான குறிப்புகள் கிடையாது. ஆனால் இந்த இந்திய ஜிப்சிகளைப் பற்றிப் பல கவிஞர்கள் பாடிய பாடல்களில் இவர்கள் இடம் பெற்று இருப்பதால் இவர்கள் எப்பொழுது அமெரிக்கா, ஜெர்மனி, இரஷ்யா முதலிய நாடுகளுக்குச் சென்றார்கள் என்பதை நிர்ணயிக்கலாமன்றோ?

மேலும் இந்த நாடோடி ஜிப்சிகள் மேல் நாடுகளுக்குச் சென்றாலும், இன்னும் இந்தியாவின் கதையையும், கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும், இந்திய மொழிகளில் 40 சதவிகிதத்தையும் கைக்கொண்டுள்ளனர். மேலும் இந்த நரிக்குறவர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் பல இன மக்களாக வாழ்வதை, நாம் தினம் தினம் பார்த்தாலும் அவர்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமை நமக்கே தெரியவில்லை அல்லவா?

1. மயில் இறகைக் கையில் ஏந்தி நாடோடிகளாகத் திரியும்முகம் மதியர்கள்; இவர்களைப் பாமர மக்கள், ''மயில் துலுக்கர்' என்பார்கள்.



2. ''அரிகுறிக்கார்'' இவர்கள் நாடோடிகளாய் 'குறி' சொல்லும் மக்கள்.

3. 'நாடோடி மராட்டியர்' இவர்கள் இந்தியாவில் பல பகுதிகளில் கூடாரம் அடித்துக் கொண்டு, வைத்தியம், 'சாமா—பிசினி' லேகியம் முதலியவைகளை விற்பனை செய்கின்றனர்.

4. பொந்துலூர்

5. மகதூர் இந்த இரு நாடோடி இனத்தார்கள் எல்லா வேலைகளையும் செய்வார்கள்.

6. 'சிங்கு' என்பவர்கள் குடுகுடுப்பைக் கருவி வைத்துக் கொண்டு முதல் ஜாலத்தில் 'நல்ல காலம்' சொல்லும் நாடோடியர்.

7. நாடோடி இராஜ புத்திரர்: இவர்கள் நாடோடியர்களாகப் பல பகுதிகளில் வாழ்ந்தாலும், இவர்களுடைய தாயகம் இமயமலைப் பகுதி என்று கூறுகின்றனர்.

இவர்கள் எல்லோரும் ஒரே நாடோடி இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பல பெயரில் ஊர்களில் வாழ்ந்து பல மொழிகளைக் கலந்து பேசுகின்றனர். ஆனல் காலப்போக்கில், போக்குவரத்து சாதனங்கள் சரியாக இல்லாத பண்டைக் காலத்தில் இவர்களிடையே ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் பழக்க வழக்கம், மொழி எல்லாம் மறைந்து, புதியவை நுழைந்து விட்டன. ஆனல் பொதுவாக இவர்கள் எல்லோரிடத்திலும் தொழில்கள் மட்டும் ஒரே விதமாக இருப்பதைக் கண்டேன்.

முயல், பூனை, மான், குள்ள நரி, காடை முயலியவைகளை வேட்டையாடுவது, வைத்தியம் செய்து மருந்துகள் கொடுப்பது, வாசனைத் திரவியங்கள் விற்பனை செய்வது முதலிய பழக்கங்கள் எல்லாம் ஒன்ருகவே இருக்கின்றன.

ஐரோப்பாவில் வாழும் ஜிப்சிகள் தங்கள் தாயகம் இந்தியா என்பதை மறந்து, எகிப்துதான் தாய் நாடு என்று எண்ணியிருந்தனர். ஆனல் 1763-ம் ஆண்டுக்குப் பிறகு இவர்களுக்கும் தாயகம் இந்தியாதான் என்று பல அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

இவர்களின் சரித்திரங்களை அறிவதற்கு எல்லா நாடுகளிலும் இவர்களின் நாடோடிப் பாடல்கள் உதவி செய்கின்றன. அப்படிப்பட்ட நாடோடிப் பாடல்களிலொன்று தமிழகத்தில் இன்றும் பழக்கத்தில் இருநது வருகிறது. குறவன குறத்திகளுடைய வாழ்க்கையைப் பறறிய பாடல்கள் தமிழில் பல உளளன. பின் வரும் குறத்தியின் நாடோடிப் பாடல் ஒன்று.

''கறுத்த மச்சான் பக்கத்திலே,
மாடப்புரு குஞ்செடுக்க மை
யுண்டோ உன்னிடத்தில்'' —
என்று அவள் பாடுகிருள்.
அதற்குப் பதிலாக இவன்,

''மாடப்புரு குஞ்செடுக்க, மை
யில்லை என்னிடத்தில்; மான்
குட்டி உன்னைக் குத்த, மை
யுண்டு என்னிடத்தில்'' என்று
கூறுவதைக் காணபீர்.

இதைப் போல் நாடோடி ஆதிவாசிகளிடத்தில் துருவித் துருவி ஆராய்ந்தால் பல நாடோடிப் பாடல்களைக் காணலாம். மேலும், இன்று சென்னையின் சுற்றுப்புறங்களிலிருக்கும் மைதானங்களில் சில நாடோடியர்கள் சில சமயங்களில் வந்து கூடாரமடித்துக் கொண்டு தங்குவதைக் காணலாம். அவர்கள் ஒரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப் பிரயாணம் செய்யும் பொழுது அவர்களுடைய சமான்கள், கூடாரம் முதல் கொம்பு வரையிலும், சமையல் சாமான்கள் முதல், துணிமணி எல்லா சாமான்கள் வரையிலும், நாய் முதல் முயல், கோழி, ஆடு வரையிலும் எல்லாவற்றையும் அதற்கென்று வளர்க்கும் கழுதையின் மேல் அழகாகச் சுமத்திக் கட்டிக் கொண்டு போவார்கள்.

மாட்டு வண்டி முதல், ஆகாய விமானம் வரையில் பிரயாண வசதிகள் இருக்கும் இக்காலத்தில், இந்த நாடோடிக் கும்பல் மட்டும் நடந்தே பிரயாணம் செய்கின்றதைக் காணும்போது இப்பழக்கம் இன்று நேற்று உண்டானதில்லை. சுமார் பல்லாயிரமாண்டுகளாக இவர்களிடம் இருந்து வருவதற்குச் சரித்திரமே சான்று கூறுகின்றது.

''ஐந்தாவது நூற்ருண்டில் பஹ்ராம்குர் பாமர மக்களுக்குப் பொழுதுபோக்கு ஒன்றுமில்லை என்று நினைத்து அவர்களின் குறையை நீக்க, ''இந்தியாவிலிருந்து பல இனப் பிரிவாகவாழும் சுமார் பத்தாயிரம் நாடோடிப் பாடகர்களையும் நடனக்காரர்களையும் வரவழைத்து அவர்களுக்குப் பல கால்நடைகள், தானியம், நிலம், (எருதுகள், எருமைகள்) சவாரிக் கழுதைகள் முதலியவைகள் கொடுத்து அவர்களுக்கு இடவசதியும் செய்து கொடுத்து ஏழை எளியவர்களின் பொழுது போக்குக்காகச் சங்கீதம், கழைக் கூத்து, தெரு சர்க்கஸ் முதலியவைகள் செய்து காட்டும்படி ஏற்பாடுகள் செய்தார். ஆனல் அந்த நாடோடிகள் என்ன செய்தார்கள் தெரியுமா?

கால்நடைகளை வெட்டித் தின்ருர்கள், தானியங்களையும் தின்று தீர்த்தார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா வசதிகளையும் விற்றும், தின்றும் தீர்த்த பிறகு பழைபடி நாடோடிகளாகவே ஓட ஆரம்பித்து விட்டார்கள் — என்று ஷா-நாமாவில்— பிர்தூசி எழுதியுள்ளார்.

அன்று முதல் இன்று வரையிலும் இந்த நாடோடிப் பழக்கமுள்ள ஆதிவாசிகளை ஓரிடத்தில் தங்க வைக்க இயலாது என்பது நான் அநுபவத்தில் கண்ட உண்மை. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஹிட்லரின் ஆயுதங்களுக்கும் வெடிகளுக்கும் இரையான ஜிப்சிகள் ஆயிரமாயிரமாவர். குறவர்களிடம் ஓர் அழகான பெண் இருந்தால் அவளை மற்றவர்களுக்கு அடிமையாக விற்று விடுவார்கள். இப்பழக்கம் இன்றும் சென்னையிலும், மற்ற நகரங்களிலும் இருக்கின்றது. ஆனல், இப்படி அடிமைகளை விற்பனை செய்யும் பழக்கம், இன்று நேற்று உண்டானது அன்று. சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அடிமைகளை விற்பனை செய்யும் பழக்கம் உலகில் பல பகுதிகளில் இருந்து வருகிறது. ஆனல் முதன் முதலில் அப்பழக்கம் ஐரோப்பாவில்தான் தொடங்கியது. பிறகு அரேபியா, பாக்கிஸ்தான் வழியாக இந்தியாவுக்கும் பரவி, அன்று முதல் இன்று வரையில் மறையாமல் இருப்பதைக் கண்டால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

பண்டைக் காலத்தில் அடிமைகளையும், நாடோடிகளையும் விற்பனை செய்யும் மன்றங்களே, உலகில் பல இடங்களில் இருந்தன என்று விவிலிய சரித்திரம் சான்று கூறுகின்றது. இந்தக் குறவர்கள் இனம் இன்று தமிழ் நாட்டில் குருவிக்காரர்கள், அல்லது நரிக் குறவர்கள் என்றும், கேரளாவில் 'செருமர்' என்றும், பனமா கடற்கரையில் வாழும் ஆதிவாசிகளைப் போல் நாடோடி இனமாக விளங்குகிறது.

மூடநம்பிக்கை என்பது நம் நாட்டில் மட்டுமன்று. மேலை நாடுகளில், நம் நாட்டை விட மோசமாக இன்றும் இருக்கின்றது. மேற்கு ஜெர்மனியில் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் உள்ள, ''ஓபர்டார்ப்' என்ற இடத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை, 'விலங்கு மனிதர்களின களி நடனம்' நடைபெறும். அந்த மலைப் பிராந்தியத்தில் வளரும் ஒருவித மரங்களின் மூலம் செய்யப்பட்ட மர ஆடைகளை அணிந்துகொண்டு பலர் ஆனந்த நடனம் செய்வார்கள். 1635-ம் ஆண்டு அப்பகுதி மலைப் பிராந்தியங்களில், 'பிளேக்' நோய் பயங்கரமாகப் பரவிய போது, புராதன காலத்திலிருந்து இவர்களின் முன்னோர்கள பேய், பிசாசுகளை விரட்டுவதற்காக ஆடிய 'விலங்கின் மனிதர் நடன' முறையை மீண்டும் கொண்டுவந்து வழக்கமாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஆடி வருகின்றனர்.

சாதாரணமாய் இந்த நரிக் குறவர் இனத்தைச் சேர்ந்த நாடோடி மக்கள் இரவில் கனவில் காண்பது எல்லாம் மிகவும் உண்மையாக நடைபெறும் என்று நம்புகின்றனர். கனவில் எலியைக் கண்டால் விரோதிகள் ஏற்படுவர் என்றும், கிழவனைக் கண்டால், செல்வம் ஓடிவரும் என்றும், தன்னை நோக்கிப் பாம்பு வந்தால் காரியம் வெற்றி என்றும், தன்னைப் பிச்சைக்காரனைப் போல் கண்டால், எதிர் காலத்தில் பணக்காரனாகலாமென்றும் இன்றும்நம்பி வருகின்றனர். ஆனால் இந்த நாடோடி மக்கள் பண்டைக் காலத்தில் எப்படி இருந்தார்கள் என்று ஆராய்ச்சி செய்தால், இவர்கள் எல்லோரும் ஒரு நாட்டின் மன்னர்களாக இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

''சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின் தேன்றோர் குறவர் தேயம் நன்று'' என்று பண்டைக் காலத்திலேயே பாடி வைத்தனர்.

மேலும், சில பகை அரசருக்குப் பயந்து ஊரை விட்டு ஊராக மக்கள் காடுகளிலும், மலைகளிலும் குடிபுகுந்து அகதிகளாகவாழ்ந்து இனப் பெயரையும், குடும்பப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டார்கள் என்பது சரித்திரச் சான்று. அது ஒரு பக்கமிருக்க இன்று கிழக்குப் பாகிஸ்தான், பர்மா, இலங்கை முதலிய நாட்டு அகதிகள் வருகையே இதற்குக் கண்கூடான சான்றாகுமன்றோ!

ஃ

சொல்லேன்! சொல்லேன்!

கவிஞரேறு வாணிதாசன்

காதலிப்பது காசுக்கா? அன்றிக்
கண்ணழகுக்கா? உலகில்
காதலுக்கு வகையேதும்
கண்டிருந்தால் நீயெனக்குச்
சொல்லேன்! சொல்லேன்!

மோதுகின்ற கடலலையும் — கரை
முன்தாழ்ந்த புன்னைகளும்
ஏதுக்குக் கெக்கலிக்கும்?
இடைநிலையைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்!

பழுத்திருக்கும் கோவைக்கும் — வான்
பறந்திருக்கும் கிள்ளைக்கும்
வழித்துணையாய் வந்தவர்யார்?
வந்தவரைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்!

கரைமோதும் கடலுக்கும் வான்
கதிர்பரப்பும் நிலவுக்கும்
வரவுபேச வந்தவர்யார்?
வந்தவரைக் கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்!

பூத்திருக்கும் பூக்களுக்கும் — கரும்
பொறிவண்டுக் கூட்டத்திற்கும்
காத்திருக்கச் சொன்னதுயார்?
கண்டிருந்தால் நீயெனக்குச்
சொல்லேன்! சொல்லேன்!

தொடுவானப் பரிதிக்கும் — காலைத்
துள்ளிவரு வெள்ளிக்கும்
விடிகாலைத் தூதனுப்பி
விட்டவர்யார்? கண்டிருந்தால்
சொல்லேன்! சொல்லேன்!

நேசமலர் நீர்நிலையை — என்றும்
நெருங்காத மீன்வண்டும்
ஏசலினால் பூசலினால் — ஒன்றி
இணைந்தவர்கள் பிரிந்ததுண்டோ
சொல்லேன்! சொல்லேன்!

முன்னழகைப் பின்னழகை — அன்றி
முகத்தழகை வேறழகை
என்னழகைக் கண்டுகாதல் கொண்டேன்
ஏன்தயங்கு கின்றாய்நீ?
சொல்லேன்! சொல்லேன்!

எங்கிருந்தோ எப்படியோ வந்தாய்
இணைந்திருந்தாய் சிலகாலம்
மங்குபக லாகிவிட்டாய்
மறந்திடுமோ காதலுள்ளம்
சொல்லேன்! சொல்லேன்!

WEAVE WELL WITH
"RAMAKRISHNA YARNS"

MANUFACTURERS:

SRI RAMAKRISHNA MILLS (COIMBATORE) LTD.

GANAPATHY POST, COIMBATORE - 6

—★—

BUY COTTON YARN

CARDED	60s & 80s
COMBED	60s & 80s

AVAILABLE BOTH IN HANKS & CONES

—o—

PLEASE FORWARD ALL ENQUIRIES To

MANAGING DIRECTORS

SRI GOPALAKRISHNA MILLS PRIVATE LIMITED

POST BOX No. 883

GANAPATHY POST :X: COIMBATORE-6

MANUFACTURERS OF PURELY STAPLE FIBRE YARN.

FAMOUS ALL OVER INDIA FOR QUALITY.

—o—

BOARD OF DIRECTORS:

S. N. R. CHINNASAMY NAIDU & BROS.

பிரிட்டனில் ஒரு டாக்டர் கலைஞர்

ஏ.பி. சனார்த்தனம் எம்.ஏ; எம்.எல்.சி.

இரண்டாயிரம் ஆண்டு காலமாகப் பிறவி ஆதிக்கக்காரர்களால், பெரு முதலைகளால் மீளாத் துயரில் தள்ளப்பட்டு, ஆமைகளாய், ஊமைகளாய், கடைச் சாதியினராய் அல்லலப்பட்டு வந்த பெருங்குடி மக்களுக்கு நீதி தேவை, வாழ்வு தேவை, கல்வி தேவை என்ற பெரு முயற்சி கடந்த ஐம்பது ஆண்டுகளாக நீதிக் கட்சி, திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் இவற்றின் பேரால் நடைபெற்று வருவதை நாம் அறிவோம்.

இன்று டாக்டர் கலைஞர் தலைமையில் மக்களின் நெடு நாளைய கனவுகள் பலித்து வருகின்றன. பாராட்டுக்கள் குவிகின்றன.

மேட்டுக் குடியினர் எவ்வளவு தடைக் கற்களை அடுக்கினர், இன்றும் எவ்வளவு அங்கலாய்க்கின்றனர் என்பதை நாம் அறிவோம். பரம்பரை பாத்தியதையை விட்டுக் கொடுக்க, சுரண்டல் மனப்பான்மையை விட்டுவிட, கால ஓட்டத்திற்குத் தலை வணங்க ஆதிக்கக்காரர்கள் என்றும் எங்கும் இசைந்ததில்லை.

சலியாத முயற்சி, எதற்கும் துணியும் நிலை, என்ன தியாகம் செய்யவும், அல்லல்படவும் பக்குவப்பட்ட உள்ளம், கண்ணீரை, சென்னீரை பாய்ச்சப் பக்குவம், சிறை, தடியடி, தூக்கு மேடை இவைகளுக்கெல்லாம் தன்னையும் தோழர்களையும் தயார் செய்து கொள்ளல், இவைகளுக்குப் பிறகு தான் ஆதிக்கக்காரரின் பிடி தளர்ந்திருக்கிறது. அங்குலம் அங்குலமாகப் போரிட்டோம்.

ஏழை எளியவர்கள் நடுத்தர மக்கள், இவர்களிலிருந்தே நம் முன்னணியினர் உருவாயினர். டாக்டர் கலைஞர் திருவாரூரிலிருந்து சென்னை கோட்டை வந்து சேர்வதற்குள் எத்தனை தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது? பணப் பெருமை, குலப் பெருமை, பட்டப் பெருமை ஏதும் இல்லாமல் ஏழ்மையில் துவங்கி எதிர் நீச்சல் போட்டு வெற்றி யடைந்திருக்கிறார்.

நமது கலைஞரைப் போலவே இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிரிட்டனில் வேல்ஸ் பகுதியில் ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்த இலாயிட் ஜார்ஜ் எதிர் நீச்சல் போட்டு பிரதமரான கதையும், முதலாம் உலகப் போரில் வெற்றி வீரராகத் திகழ்ந்ததும் என்னை மிகவும் கவர்ந்தது. அவரது வரலாற்றில் சில கட்டங்களை இங்கே தருகிறேன். ஆதிக்க புரியினரை அலற வைத்தவர்கள்-ஏழைகளுக்கு ஏற்றம் தந்தவர்கள் பல நாடுகளில் தோன்றியுள்ளனர். அந்த எழுச்சிக் காவியங்கள் நமக்கு உறுதியும், உவகையும் ஊட்டுவன. வரலாறு நம்மைப் படைக்கிறது, நாம் வரலாற்றைப் படைக்கிறோம். என்ற உண்மையை உணர்த்துகிறது. கலைஞர் கண்ட தடைக் கற்களைப் போலவே இலாயிட் ஜார்ஜ் அவர்களும் கண்டார்கள். பிரபுக்கள் எதிர்ப்பு, ஏளனம், கொக்கரிப்பு, முட்டுக்கட்டை, இவைகளைத் தவிடுபொடியாக்கி பிரிட்டனை சேமநல ஆட்சியாக்க அஸ்திவாரமிட்டவர் இலாயிட் ஜார்ஜ்!

பெரும் பண்ணைக்காரரின் இரும்புப் பிடியில் பிரிட்டன் சிக்கியிருந்தது. லிபரல் கட்சிக்கு ஓட்டுப் போட்டதால் மக்களை விரட்டியடித்த கொடுங்கோலர்களை இலாயிட் ஜார்ஜ் கடைசிவரை மறக்கவில்லை, மன்னிக்கவில்லை.

ஏழ்மையில் வளர்ந்த அந்தச் சிறுவனுக்கு தன் மாமனாரின் காலணிப் பட்டறைதான் பள்ளியாக, மன்றமாக, களமாக அமைந்தது.

நான்காவது வயதிலேயே தம்பிக்கும், தங்கைக்கும் படிகளின் மீது நின்று பிரசங்கம் செய்யத் தொடங்கி விட்டான்!

அமெரிக்க ஆபிரகாம் லிங்கன் அவனுக்கு வழிகாட்டியாக அமைந்தார்.

16வது வயதுக்குள்ளாகவே பல கருத்துக்கள், உணர்ச்சிகள், அவன் உள்ளத்தை உலுக்கிவிட்டன.

தன் எண்ணங்களை எந்தப் பத்திரிகையிலாவது எழுதா விட்டால் தலை வெடித்துவிடும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது! நிலப்பிரபுக்கள் ஏற்படுத்திய புண்கள் என்பதைப் பற்றி எழுதினான். பணக்காரர்களின் ஆடம்பரங்களுக்கு வசதி செய்வதை விட ஏழைகளின் துயர் துடைப்பதே அரசியல் தலைவர்களின் தலையாய கடமை, துருப்பிடித்த ஆதிக்க உணர்ச்சி, பரம்பரை ஏமாற்றுக்கள், ஆகியவைகளின் கிடங்குதான் பிரபுக்கள் சபை என்றெல்லாம் எழுதினான்.

அரும்பாடுபட்டு வழக்கறிஞராகும் தகுதி பெற்றார் இலாயிட் ஜார்ஜ்! அதற்குரிய ஆடைகளை வாங்கக்கூட அவரிடம் பணம் இல்லை!

17, 18–வது வயதிலேயே அவர் பெரிய மேடைப் பேச்சாளர்! ஆதிக்க புரியினரை, டோரிக் கட்சியினரை எதிர்த்து அனல் பறக்க முழக்கமிட்டார்.

மாமனார் கடையில் தயாரான காலணிகளை ஒரு கழுதை வண்டியில் எடுத்துச் சென்று தந்து வந்தார். ஒரு கூட்டத்தில் எதிரி, அவரை மடக்கி விட்டோம் என்ற மமதையில், 'ஆமாம், அந்தக் கழுதை வண்டி எங்கே?' என்று கேட்டார்.

உடனே இலாயிட் ஜார்ஜ், ''ஆமாம், எனக்கு அந்த வண்டி எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஆனால், அந்தக்

சோற்றில் சொக்கர்!

எனது நண்பர் கருந்திருமன் அவர்கள் தன் உரையை முடிக்கும்போது ‘இது அவ்வளவும் அரிசியும் அரசியலும் தான்” என்று முடித்தார்கள்.

ஒரு நாட்டினுடைய மக்கள் அடிப்படையாகக் கேட்பது சோறு.

யாரோ ஒரு சைவர் சொன்னதாக நினைவு - அந்தச் சைவரிடம் சொக்கர் எங்கே இருக்கிறார் என்று கேட்டதற்கு “சோற்றில் இருக்கிறார்” என்று சொன்னாராம்!

சோற்றில் சிவலிங்கமே இருக்கும்போது, அரசியல் வாதிகள் இருப்பதில் ஒரு தவறும் இல்லை.

ஆகையால் - சோற்றுப் பிரச்னையைத் தீர்ப்பதை இந்த அரசு தன்னுடைய முக்கியமான கருத்தாகக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஒரு விளக்கம்!

எப்போதுமே ஒரு நாட்டின் நிர்வாகத்தில் ஒரு சர்க்கார் மாறி இன்னொரு சர்க்கார் வருவது என்பது ஒரு புத்தகத்தில் 66-வது பக்கம் படித்து முடித்த பிறகு 67-வது பக்கத்திற்குப் போவது போன்றதே தவிர ஒரு புத்தகத்தை மூடி வைத்துவிட்டு இன்னொரு புத்தகத்தை எடுத்துக்கொள்வது என்று அர்த்தமல்ல!

—அறிஞர் அண்ணா

ஃ ஃ ஃ

கழுதை!’’ என்று சொல்லி சிறிது நிறுத்தினார். கூட்டத்தின் சிரிப்பில் கேள்வி கேட்டவர் வெட்கப்பட்டார்!

தனது 24–ம் வயதில் மார்கரேட் ஓவன் என்ற நங்கையைக் காதலித்தார். ஏழை இலாயிட் ஜார்ஜுக்கு அவளை மணமுடிக்க அவளது பெற்றோருக்கு விருப்பமில்லை. இறுதியில் அவளது உறுதி வென்றது! திருமணம் நடந்தது!

27–ம் வயதில் இலாயிட்ஜார்ஜ் பாராளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடக்கத்தில் கூச்சப்பட்டாலும் படிப்படியாக விவாதங்களில் வல்லுனராகி விட்டார்!

அனல் பேச்சால், அதிர்வெடிப் பேச்சால் பலத்த எதிர்ப்பு உருவாயிற்று! ‘போயர் போர் (Boer War) தேவையற்றது’ என்று பேசி தேசத் துரோகி என்ற பட்டத்தை வாங்கிக் கொண்டார். ஆனால் அடிக்க அடிக்க உயரும் பந்து போல் அவரது உற்சாகம் வளர்ந்துவந்தது.

மாற்றுக் கட்சித் தலைவரான ஜோசப் சேம்பர்லேன் அவர்களை ‘மாவுக் குரங்கு’ என்று வர்ணித்ததால் பிர்மிங்காம் நகரில் இவரது கூட்டத்திற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ‘வந்தால் கொன்று விடுவோம்’ என்று மிரட்டல்கள் குவிந்தன. மனைவியைக் கலந்தார். ‘அவசியம் பேசியே ஆக வேண்டும்’ என்று அவர் ஊக்கமூட்டினார். கலகம் உச்சக்கட்டத்தை அடைந்தது. இவர் மீது வீசுவதற்கு மூன்று கல் ஒரு பென்சுக்கு விற்கப்பட்டது. காலித்தனம் எல்லை மீறிவிடவே போலீஸ்காரர்கள் போல் மாற்றுடையணிந்து மண்டபத்தை விட்டு வெளியேறினார்!

2, 3 ஆண்டுகளுக்கு எதிர்ப்பு வெறி தணியவில்லை. சிறிதும் அஞ்சாமல் இவர் முழங்கி வந்தார்! முட்டை, வெங்காயம், உருளைக் கிழங்கு, கல், பாட்டில், இவைகள் அடிக்கடி வீசப்பட்டன.

அவரது 44–ம் ஆண்டில் 17 வயதான அவரது அருமைப் புதல்வி இயற்கை எய்தினார். இலாயிட் ஜார்ஜ் பெரும் அதிர்ச்சியடைந்தார்.

படிப்படியாக உயர்ந்து 1909–ல் பிரிட்டனைக் குலுக்கியெடுத்த மக்கள் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தார். ஆதிக்கக்காரர்களும் பிரபுககளும், இது பெரிய புரட்சி! சமுதாயத்தையே தலை கீழாக்கும்! என்று பதை பதைத்தனர்! இலாயிட் ஜார்ஜ் அசைநது கொடுக்கவில்லை! புதிய பிரபுக்களை உற்பத்தி செய்வதாக மிரட்டி அவர்களது எதிர்ப்பை ஒடுக்கினார். ‘கலகக்காரர், கொள்ளைக்காரர், நாசகாலர்’ என்ற கூச்சலைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

‘முதுமை, விபத்து, நோய், வேலையின்மை’ ஆகியவை ஏழைகளை வாட்டும் பிரச்னைகள். அவைகளை விரட்டி வறுமையை ஒழிப்பதே எங்கள் இலட்சியம் என்று முழங்கினார்!

முதலாம் உலகப் போரில் தன் அத்தனை ஆற்றலையும் வெளிப்படுத்தினார். 1916–ல் முதலமைச்சரானார். சிறிதும் கலங்காமல், பலத்த எதிர்ப்புகளைச் சமாளித்து இறுதியில் 1919–ல் வெற்றியைக் கண்டார்.

1922–ல் இராஜிநாமா செய்தார்.

பல நாடுகளுக்குச் சென்றார். பம்பாயில் கூட சொற்பொழிவாற்றியுள்ளார். தன் நினைவு அலைகளை நூலாக்கினார். 1936–ல் அது வெளியாயிற்று. தயவு தாட்சண்யமின்றி பலரை அதில் தாக்கியிருக்கிறார்.

அவர் 14 முறை பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்றார். ஐம்பது ஆண்டுகள் அந்த மாமன்றத்தில் பணியாற்றினார்.

1941–ல் அவரது மனைவி இறந்தார்.

1943–ல் தன் 80–வது வயதில் தன் காரியதரிசியை இரண்டாம் மனைவியாக்கிக் கொண்டார்.

1945–ல் அவர் இயற்கை எய்தினார்.

உலகம் உள்ளவரை அவரது புகழ் நிலைக்கும். ஆதிக்கபுரியினரின் கொட்டத்தை அடக்கி, பிரபுக்களின் முட்டுக் கட்டையைத் தகர்த்து, ஏழையால் உயர முடியும், உலகப் புகழ் பெற முடியும், என்பதை அவர் நிரூபித்தார். ஏழ்மையை விரட்ட திட்டமிட்ட முதல் பிரிட்டிஷ் தலைவர், பிரதமர் என்ற புகழ் என்றும் நிலைத்திருக்கும்!

★

வேலிலே பழுத்த பலா

கோவை மணிசேகரன்

மாலே மயங்கி இரவுக்கன்னி நட்சத்திர நடம் பயிலத் தொடங்கிவிட்டாள். பின்னிரவுக் காலமாதலால் நில வழகி கீழ்வானத்தின் அடியில் ஆங்கில மொழி பயின்று கொண்டிருந்தாள்.

யார் எதைப் பயின்று என்ன பயன்? வாழ்வைப் பயில மறந்தவர்கள் முடிவாகத் தேடும் புத்த கம் 'தற்கொலே'! சுகந்தியும் அதைத் தான் தேடி அலேந்தாள். நச்சுக் கடை நாடிச் சென்ருள்; அங்கே அவளுக்கு அந்தப்புத்தகம் கிடைக்க வில்லே. கயிற்றுக் கடையில் அந்தப் புத்தகம் மலிவாகக் கிடைத்தது. வாங்கிக்கொண்டு புகைவண்டி நிலேயம் நாடி நடக்கிருள்! கண்கள் நீர் மாலே கட்டத் தொடங்குகின்றன.

நன்ருக வாழ்கிற குடும்பத்துக்கு ஒரே பெண்ணுகவோ அல்லது ஒரே பிள்ளேயாகவோ பிறப்பது என்பது பெரிய அதிர்ஷ்டம். சுகந்தியும் அப்படித்தானே பிறந்து தொலேத்தாள்! வாழ்க்கை என்

பது விட்டமல்லவே? அது ஒரு வட்டம்! ஒரு விட்டத்தை அடுத்து வட்டத்தின் மறு விட்டத்தைத் தொட்டுச் செல்கிறதுதானே உண்மையான அதிர்ஷ்டம்?

சுகந்தியின் வாழ்க்கை விட்டத்துடன் முடிந்து விட்டது. மறு விட்டத்தைக் கடக்க முடியாமல்தான் அவள் கயிற்றை வாங்கு முனைந்து விட்டாள்,

ஃ ஃ ஃ

பூத்துக் குலுங்கிப் புன்னகை புரியும் புதுவை மாநகரில் தான் சுகந்தி பிறந்தாள்; வளர்ந்தாள். தகப்பனார் தங்கராசு பிரபலமான ஆலையில் மேஸ்திரி வேலைபார்த்து வந்தவர். சுகந்தி பருவம் அடைகிற வயது வந்ததும், ஆலையின் தறி விசையால் தாக்குண்டு மாண்டு போனார். நல்லவர்கள் தான் அதிக நாட்கள் வாழ்வதில்லையே! மனிதர் உயிரோடு இருக்கும்போதே பெண்ணுக்கு என்று ஏதோ சேர்த்து வைத்தார். என்ன செய்வது? தாயார் ரத்தினம்பாள் பெருத்த செலவாளி. எதையும் தாம்பீகமாக நடத்திப் பழகிவிட்டவள். வாய் ருசி மிக்கவள். தாய் வீட்டுப் பற்று கொண்டு உறவினர் முற்றுகைகளுக்கு இடமளித்து மகிழ்ந்து விட்டவள். இவற்றால் வந்த விளைவு, கணவனுடைய இறப்புக்குப் பிறகு காதறுந்த ஊசியானாள்; கைவிடப்பெற்ற வங்காள தேச அகதிக்கு ஒப்பாகிவிட்டாள்! என்றாலும் இருப்பதை வைத்துக் கொண்டு மகளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால் தனக்குள்ள பெரிய பாரம் நீங்கிவிடும் என்று கருதிச் செயல்படவும் தொடங்கினாள். உறவினர்களுடைய உதவியோ அற்றகுளத்து அருநீர்ப் பறவைகளின் கதியானது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குடியிருந்த பெருமாள் கோயில் வீதியில்தான் சுகந்தியும் குடியிருந்தாள். பள்ளிக்கூடம் இருக்கும் வீதி முழுதும் கல்வி மணமா பரவி வருகிறது?

சுகந்தி ஏழாவது வகுப்பைக்கூடத் தாண்டவில்லை. அவள் படித்திருந்தால் இப்போதைக்கு உதவியாக இருக்குமே என்றும் எண்ணமிட்டாள் தாயார் ரத்தினம்பாள். மகள் வேலை செய்து சம்பாதிக்காவிட்டால் போகிறது; ஒழுங்காகத் திருமணம் செய்து கொண்டு ஒருவன் வீட்டுக்குப் போனால்போதும் என்ற நினைப்புடன் மாப்பிள்ளை தேட முயன்றாள்.

ஒரு நாள்—

இரண்டு வாரங்கள்—

மூன்று மாதங்கள்—

உருண்டோடின. மாப்பிள்ளை வேட்டை இப்போது மும்முரமாக இருந்தது. சுகந்திக்குப் புரிய மூன்று மாதங்களாயின. ஒரு நாள்—

''அம்மா...'' சொற்கள் நடுக்கத்தால் புரண்டு நிமிர்ந்தன.

''ஏம்மா, சுகந்தி! வளவனூர் மாப்பிள்ளை அநேகமாகப் படிந்துவிடுவான்.''

''அதுக்கில்லேம்மா. நான் ஒண்ணு உங்ககிட்டே சொல்லணும்னு நினைக்கிறேன்.''

''சொல் சுகந்தி''

''வந்து.. வந்து...''

''வந்தாவது, போயாவது. தயங்காம சொல்லு. நான் உன்னோட அம்மா''

''இல்லேம்மா... நான் ஒருத்தரை ஏற்கனவே விரும்பி விட்டேன்.''

''அடிப்பாவி மகளே, இது எத்தனை நாளா?''

அரண்டே போனாள் சுகந்தி. ''கோவிச்சுக்காதீங்கம்மா! தெரியாம செஞ்சிட்டேன்.''

நடுக்கத்தால் மேலிட்ட அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது சுகந்திக்கு. மகளின் நிலை கண்டு சுருதியிரக்கம் கண்டாள் ரத்தினம்பாள்.

''சுகந்தி அழாம, பயப்படாம சொல்லு. யார் அந்தப் பையன்?''

''ஒதியஞ்சாலையில் இருக்கிறாரு.''

''ஓகோ! என்ன வேலை செய்யறான்?''

''ஆலையிலே ஜப்பான் தறி மேஸ்திரி.''

''இந்தச் சின்ன வயசிலா?''

''ஆமாம்மா, படிச்சவரு; ரொம்பத் திறமைசாலி; அப்பாவுக்கும் அவரைத் தெரியும்.''

பெருமூச்சு விட்டாள் ரத்தினம்பாள். ''நான்தான் ஒரு ஆலை மேஸ்திரிக்கு வாழ்க்கைப்பட்டேன். நீயாவது ஒரு ஆபீஸ் குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்படுவேன்னு நினைச்சேன். ம்... விதி என்பது ஒருவித சங்கிலித் தொடர் மாதிரிதானே''

வளவனூர் பிள்ளையாண்டானிடமிருந்து செய்தி வருவதற்குள், ஒதியஞ்சாலை பையனைப் பேசி முடித்துக் கொண்டாள் ரத்தினம்பாள். பையன் — மீனாட்சி சுந்தரம் பார்ப்பதற்கு அழகாகவும் அடக்கமாகவும் இருந்தான். வயது தான் சற்றுக் கூடுதல். அதனால் என்ன? முதல் தாரம்தானே?

மீனாட்சிசுந்தரத்துக்குத் தாய் இல்லை. தந்தை மட்டும் இருந்தார். ரொம்பவும் வயதானவர். மகளுடன் தானும் ஒட்டிக் கொள்வதில் எந்தவித மறுப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ரத்தினம்பாளுக்குப் பரிபூரண நிறைவு கண்டுவிட்டது. ஒரு நல்ல நாளில் பரியமும் — நிச்சயதார்த்தமும் நடந்து முடிந்துவிட்டது. வருகிற தைத் திங்களில் — எண்ணிப் பார்த்தால் நாற்பத்து எட்டே நாள் — திருமணம் நிச்சயமாகிவிட்டது.

இன்னும் பன்னிரண்டே நாட்கள்—ஒரு வாரம் ஐந்து நாட்கள். முடிந்ததும் முழுமதி இனிக்கும்; மோகனம் சிரிக்கும். கனவுகளில் எண்ணங்களை உரசிப் பார்க்கத் தொடங்கிவிட்டாள் சுகந்தி. கனவுகளெல்லாம் பலித்து, எண்ணங்களெல்லாம் நிறைவேறிவிட்டால் பிறகு கோயில்களுக்கு வேலையில்லாமல் போய்விடும் என்பது ஒருபுறமிருக்கட்டும்; எந்த மனைவியும் கணவனையோ—அல்லது எந்தக் கணவனும் மனைவியையோ மதிக்காமல் போய்விடுவார்களே! காலம் காந்தமாகி உலகைச் சுழல வைப்பதே மனிதர்களைத் தலை கீழாக்குவதற்காகத்தானே!

மறுநாள்—

தலையில் இடிவிழுந்த செய்தி கிடைத்தது சுகந்திக்கு. மீனாட்சி சுந்தரம் தறி விசையில் அகப்

பட்டுக்கொண்டு பெருத்த காய மடைந்துவிட்டான். ஒப்பித்தோலில்—(ஆஸ்பத்திரியில்) ரத்தம்செலுத்துகிறார்கள்!

ஓடினாள், ஓடினாள் வீதிகள் என்றும் பாராமல், எதிரில் வருகிறவர்கள் யார் என்றும் பாராமல் ஓடினாள் ஆஸ்பத்திரி நோக்கி சுகந்தி. அவள் மட்டுமா?

ரத்தினம்பாளும்அலறி புடைத்து வீட்டைப் பூட்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

உயிர்த் துடிப்பைக் காதல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்ததோ என்னமோ; சுகந்தி வருகிறவரை காத்திருந்த மீனாட்சிசுந்தரம், வெறுமனே புன்னகையால் விடை கொடுத்து மறுகணம் மீளாத நித்திரையைப் பின் தொடர்ந்து விட்டான். அடுத்த விநாடி—

ஆஸ்பத்திரியே அதிரும்படியாகப் பெருத்த கூச்சலுடன் தரையில் நெடுமரமாய் சாய்ந்தாள் சுகந்தி. அவளைக் கவனிக்க டாக்டர்கள் ஓடி வந்தனர். இந்த அவலமான காட்சியைக் கண்ட தாயார் ரத்தினம்பாள், மகளும் இருதய வெடிப்பு கண்டுவிட்டாள் என்ற கிலியால் நரம்புத் தளர்ச்சிகண்டு ஒரு மருங்கே உட்கார்ந்து விட்டாள். அவளால் சத்தமிட்டுக் கத்த முடியவில்லை. ஒருபுறம் மருமகனை வரக்கூடிய மீனாட்சிசுந்தரம், சுகந்திக்குப் பரியம் போட்டுவிட்டு மரித்துவிட்ட நிலை; மறுபுறம் மகள் சுகந்தி மாரடைப்பு கண்டு தூக்கிச் செல்லுகிற காட்சி—

கவலைகள் பயங்கரமாகக் கவிழ கண்மூடினாள் ரத்தினம்பாள். என்ன பரிதாபமான நிலை! பிறகு அவள் கண்களைத் திறந்துபார்க்கவே இல்லை. ஆனால் சுகந்தி?

அவள் பிழைத்துக் கொண்டாள்! ஏன் பிழைத்தாளோ?

ஆயிற்று ஒரு வாரம்—

'என் பிழைத்தோம்?'—இதே கேள்வி எப்போதும்!

விடை?

அன்று மாலை கயிற்றை வாங்கிக்கொண்டு தற்கொலை நாடி நடந்து கொண்டிருக்கிறாள்—தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டே இருக்கிறாள்....

எதற்காக வாழ்வாள்?

யாருக்காக வாழ்வாள்?

பரியம் போட்டாய்விட்ட கதை!

சிந்துவார் யார் என்பது ஒரு புறமிருக்கட்டும்; சிந்த விடுவது தான் அறமா?

அவள் எதைப்பற்றி என்ன நினைத்தாளோ.... தற்கொலையை மனத்தில் தேக்கிப் புகை வண்டி நிலையம் நாடி நடந்து கொண்டே இருக்கிறாள்!

ஏழு மணியளவில் விழுப்புரம் நோக்கிச் செல்கிற புகைவண்டி அது. பயணச் சீட்டைக்கூட வாங்க மறந்துவிட்டாள். வண்டியில் ஏறி ஆளில்லாப் பகுதியாகப் பார்த்து அமர்ந்து கொண்டாள். வண்டியும் புறப்பட்டது. என்ஜின் சக்கர வேகத்துடன் சுகந்தியின் எண்ணமும் போட்டியிட்டது.

வில்லியனூர் தாண்டியது. எட்டிப் பார்த்தாள். இறங்கிக் கொள்ளலாமா?

நிலையத்துக்கு நிலையம் இறங்கலாமா என்கிற போராட்டம்!

வளவனூர் வந்தது.

வாழ்வின் இடைவெளியில் குறுக்கிட்ட ஓர் ஊரின் பெயர். என்ன

நினைத்தாளோ, இறங்கிக் கொண்டாள்; முன்புறமாகவல்ல, பின்புறமாக! முன்புறம்தான் வாழ்வில் அடைபட்டுவிட்டதே! வட்டத்தின் முதல் விட்டத்தோடு கதை முடிந்துவிட்டதே!

வண்டி இன்னும் புறப்படவில்லை.

அதற்குள் வேகவேகமாக நடந்து கொண்டே இருந்தாள். குறுக்கிட்ட அடர்ந்த தோப்புக்குள்இடிபாடுகளுடன் நடக்க நடக்க—

எதிரே மலைப்பாம்புபோல் வளைந்து மேடுகட்டியிருந்த பலா மரத்து வேர் தடுக்கி விழுந்தாள் அப்படி வீழ்ந்தபோதே சாவு அணைத்துக் கொள்ளக் கூடாதா?—விழுந்த அதிர்ச்சியில் நோய் தெரியவில்லை; நெஞ்சு எண்ணியது அங்கேதான் சாவு முத்தமிட்டுக் கொண்டிருக்கிறதே!

எழுந்தாள்; அண்ணாந்து பார்த்தாள். இனிப்பே வடிவான பலா மரம். நினைவு கசந்தது. கீழே பார்த்தாள். தன்னைத் தடுக்கி விழச் செய்த வேருக்குச் சற்றே தள்ளி நிறை கர்ப்பிணியின் வயிற்றைப் போல பலாப்பழம் மணத்துக் கொண்டிருந்தது. தன்னுடைய வீதியில் குடியிருந்த புரட்சிக் கவிஞரின் 'வேரில் பழுத்த பலா' என்ற கவிதை வரி நினைவுக்கு வந்தது. சூன்யமான ஒரு கீற்று நகை அந்த இருளில் தோன்றி மறைந்தது.

மேலும் மேலும் நேரத்தைக் கடத்த விரும்பாமல் அருகாமையிலிருந்த தாழ்ந்த கிளையில் கொண்டுவந்த கயிற்றைக் கட்டிச் சுருக்கிட்டாள். தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்ற பிரமையுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். இருள் மண்டிக்கிடந்த அந்தத் தோப்பில் பிறர் கவனித்தாலும் அவளுக்குத் தெரிய நியாயமில்லை. ஆனாலும் இரண்டு கண்கள் அவளை கவனிக்கத்தான் செய்தன.

சுருக்கைச் சரிபார்த்துக்கொண்டு வளைந்து மேடாக எழும்பி இருந்த வேரின் மேல் நின்று, பின்னர் அதுவும் போதாமல் சற்றே தள்ளி மரத்தினடியில் ஆனால் கொஞ்சம் உயரக் காய்த்துப் பழுத்திருந்த பலாப்பழத்தின் மேல் ஏறி நின்று சுருக்கைத் தலையினுள் நுழைத்துக் கொண்டு எட்டி ஓர் உதை விட்டுத் தொங்கத் தொடங்க——

உதைபட்ட வேகத்தில் அந்தப் பலாப்பழம் காம்பு முறிந்து விழுந்து உருள—

''ஐயோ! பலாப்பழம் திருட வந்தவள்னு நினைச்சிக் கவனிச்சிக் கிட்டிருந்தா, அந்தப் பொண்ணு தூக்கு மாட்டிக்கிச்சே'' என்று அலறியவண்ணம் ஓடிவந்தான் ராமலிங்கம்.

வேகமாக ஓடிவந்த அவன் புழுபோல் நெளிந்து கொண்டிருந்த சுகந்தியைக் காப்பாற்றுகிற துடிப்புடன் மரத்தின்மேல் ஏறி கயிற்றை அவிழ்த்துவிட்டான். தொப்பென்று பலாக்காய் விழுவதுபோல் விழுந்து சுருண்டு கிடந்தாள் சுகந்தி.

புதிய அடுப்புகள்! புதிய பானைகள்!
இதய வீட்டிலோ எழும்சினப் பொங்கல்!
அதோஓ முழங்கிடும் அபாயச் சங்குகள்!
விதவித மான போர் விமானங்கள்!

விடியல் குழந்தையின் விளையாட்டுப் பொம்மையாய்க்
கடல்தாய் ஏந்திய காலைப் பரிதிமுன்
வாசலில் கோலங்கள்! மஞ்சள் கொத்துகள்!
கலைஞர் பேச்சென இனிக்கும் கரும்புகள்!
எங்கும் சிறுவர்கள் ஏந்தித் திரிந்திடும்
வெஞ்சமர்க் காய்களாய் விமான மோதல்கள்!

புதிய புதிய சுதந்திரப் பூமிகள்!
புதிய புதிய சரித்திரத் தலைவர்கள்!
பொங்கும் கடல்மேல் போர்க் கப்பல்கள்!
சிங்க மறவனின் முன்னால் சீறிடும்
சல்லிக் கட்டுக் காளையின் தோற்றங்கள்!

புதிய அடுப்புகள்! புதிய பானைகள்!
உதயக் கதிருக்கு உயர்வழி பாடுகள்!
ஆர்லந்தோவில் அருந்தமிழ்க் கவிஞர்
பாரினர் வியக்கப் பாடிய பாட்டெனப்
பொங்கிடும் பொங்கலைப் புவிமகள் கண்டாள்!
கருணை பொங்கிடும் கால வெளிகளில்
இருகர மலரில் பொங்கலை ஏந்தித்
தமிழன் நெஞ்சைக் கவர்ந்தஅத் தைமகள்
சுடர்பற்றிக் கொண்ட சோகப் பொழுதுகள்
விடைபெற்றுச் செல்ல நடையிட்டு வந்தாள்!

மரத்தை விட்டிறங்கிய ராமலிங்கம், ஓடிச் சென்று பக்கத்திலிருந்த குட்டையில் மேல் துவாலை ஈரம் சொட்டச்சொட்ட நனைத்து வந்து சுகந்தியின் முகத்தில் அப்பினான்.

சற்றைக்கெல்லாம் மெல்ல மூச்சு விடத் தொடங்கிய சுகந்தி கண் விழித்தாள். ராமலிங்கத்துக்கே அப்போதுதான் உயிர் வந்தது போல இருந்தது.

கழுத்தை நெளித்த வண்ணம் ''ஏன், என்னைக் காப்பாத்தனீங்க?''

அவள் குரலில் காற்று அழுத்தியது.

ராமலிங்கம் சிரித்தான். ''நல்ல கேள்வி கேக்கறியே நீ! இருட்டிப் போன வேளை. எழுந்திரு. என் வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்''

''உங்க வீட்டுக்கா? எதுக்கு?''

''இப்ப எதுவும் பேசிக்க வேண்டாம்; பேசாம எழுந்திரு. இல்லேன்னு தற்கொலை செஞ்சிக்க முயற்சித்த குத்தத்துக்குப் போலீஸ்லே பிடிச்சிக் கொடுத்துடுவேன்''

சுகந்திக்குப் பயம் கண்டுவிட்டது. ஒன்றையும் பேசிக்கொள்ளாமல் எழுந்து ராமலிங்கத்தைப்பின் தொடர்ந்தாள்.

உதைபட்டு உருண்டு கிடந்த பலாப்பழத்தை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான் அந்தத் தோப்புக்குச் சொந்தக்காரனான ராமலிங்கம்! 'நல்ல வேளையாகத் தோப்பைப் பார்வையிட வந்தோமோ, ஓர் உயிரைக் காப்பாற்ற முடிந்ததோ' என்றமுனகல் அவனுடைய மனத்தில் கேட்டது.

வளவனூர் பாண்டி ரோடில் தான் ராமலிங்கத்தின் வீடு. மொட்டை மாடி வைத்துக் கட்டிய பழங்காலத்து வீடு. வீட்டில் வேலைக்காரனைத் தவிர வேறு யாரும் கிடையாது. பதினைந்தாவது வயதிலேயே பெற்றவர்களை இழந்துவிட்டவன். ஆயிற்று பன்னிரண்டு ஆண்டுகள். இதுவரையிலும் அவன் கட்டைப் பிரமச்சாரியாகவே காலம் கழித்து வந்தான். அதற்கான காரணமே வேறு—

விளக்கைப் பொருத்திவிட்டு, கூடத்திலிருந்த நாற்காலியில் சுகந்தியை அமரச் சொன்னான். அவளோ தரையில் உட்கார்ந்தாள்.

''முனியா!'' என்று குரல் கொடுத்தான் ராமலிங்கம்.

வேலைக்காரனான முனியன் ஓடோடி வந்தான்.

''பாண்டி ஓட்டலுக்குப் போய் ஒரு பிளேட் பிரியாணி வாங்கிவா!''

எசமானின் உத்திரவைச் சிர மேல் கொண்டு ஓடினான் முனியன்.

''பிரியாணியெல்லாம் இப்ப எதுக்கு?''

''அது கிடக்கட்டும்; நீ யாரு? ஏன் இப்படித் தூக்குப் போட்டுக் கிட்டுச் சாகத் துணியணும்?''

''நான் ஒரு அனாதை; வாழ வழியில்லை; தூக்கு மாட்டிக்கத் துணிந்தேன்.''

''எந்த ஊர்?''

''விழுப்புரம்''— பொய்யைச் சொன்னாள்.

''கலியாணமாயிட்டதா?''

''இல்லை; நிச்சயதார்த்தம் முடிந்ததும், எனக்காகப் பேசின மாப்பிள்ளை விபத்துலே செத்துப்போயிட்டாரு. அந்த அதிர்ச்சியிலே எனக்காக உயிரை வச்சிக்கிட்டு இருந்த அம்மாவும் மாரடைப்புலே செத்துப் போயிட்டாங்க''

''ரொம்பவும் பரிதாபமாயிருக்கே?''

''என்னை நீங்க காப்பாத்தனது இதைவிடப் பரிதாபம்.''

''எதுக்குச் சாகணும்? வேற கலியாணம் பண்ணிக்கறது?''

''செத்துப் போயிட்டவரு, நான் மனசாரக் காதலிச்சவரு. அவருக்குத் துரோகம் பண்ண நான் விரும்பலை.''

''வேடிக்கையான பெண்; உன் பேரு?''

''வசந்தி.'' — இரண்டாவது பொய்யைச் சொல்லுகிறாள். தன்னை விடுவித்துக் கொண்டு போய்விட, குடும்பப் பெயர் கெடாமலிருக்க நெஞ்சாரப் பொய்யைச் சொல்லுகிறாள்!

வெகுநேரம் சிந்தித்த வண்ணம் மலைத்து உட்கார்ந்து விட்டான் ராமலிங்கம்.

''ஆமாம், நீங்கள் யார்? உங்கள் மனைவி எங்கே?'' — சுகந்தி கேட்க வேண்டுமே என்று கேட்டு வைத்தாள்.

ராமலிங்கம் சிரித்தான். சிரிப்பில் வெறுமை எதிரொலித்தது.

உழவும் உழைப்பும்

'முரசொலி' எங்கும் முழங்குகவே
முத்தமி ழின்பம் வழங்கிடவும்
அரசியல் நெறிமுறை எடுத்துரைக்கும்
அவசிய மானால் இடித்துரைக்கும்

தமிழ்மொழி பெருமை சாற்றிடவும்
தமிழரின் உரிமை போற்றிடவும்
அமைவுள எதையும் உரைசொலவே
அதன்கடன் என்பது 'முரசொலியே'

மக்கள் நலமே பெரிதாக
மற்றுள எதையும் கருதாமல்
தக்கன அறிவுகள் பரப்பிடவே
தரணியின் 'முரசொலி' சிறப்படையும்

உழவும் உழைப்பும் உண்டுபண்ணும்
உணவுப் பொருள்களைக் கொண்டுவரும்
விழாவே பொங்கல் திருநாளாம்
விருந்துடன் களித்திடும் பெருநாளாம்

பொங்கல் திருநாள் நற்போதை
பூரித் தெண்ணும் இப்போது
வங்கப் படுகொலை பாக்கிஸ்தான்
வம்புச் சண்டையில் தாக்கிற்றே

வீரத் தமிழன் விரைந்தோடி
விரட்டி யடிப்பான் கரந்தோட
மூடத் தலைவன் யாஹ்யாவை
'முரசொலி' முழங்க முறியடிப்பான்

போர்வெறி எங்கும் நீங்கிடவும்
பூமியில் அன்பறம் ஓங்கிடவும்
கார்மழை என்றும் குறையாமல்
கழனிகள் விளைபொருள் நிறைவாகி

பொங்குக பொங்கல் இனிதாக
பொங்குக மங்களம் மனைதோறும்
எங்கணும் மக்கள் நட்போடு
இயங்கிட வேண்டும் எப்போதும்

வாழிய சத்திய சன்மார்க்கம்
வழங்கிட நிம்மதி எல்லார்க்கும்
வாழிய தமிழும் தமிழ்நாடும்
வாழிய 'முரசொலி' தமிழ்ஏடும்.

நாமக்கல் கவிஞர் —

வெ. இராமலிங்கம் பிள்ளை

''நான்...நானும் ஒரு அபலை; நித்திய பிரம்மசாரி ''

''நித்திய பிரம்மசாரின்னு?''

''எனக்கு வாழ்க்கை நடத்த ஒரு மனைவி தேவையில்லை;சமைத்துப்போட ஒரு மனைவி தேவை. வசந்தி! ஒரு பெண்ணை அநியாயமாகப் பலியிடக் கூடாதேன்னு நான் எத்தனையோ சம்பந்தம் வந்தும் உதறித்தள்ளினேன். எல்லாருமே என் சொத்துக்கு ஆசைப்பட்டே பெண் தர முன்வந்தாங்க. ரெண்டு மாசத்துக்கு முன்னேகூட புதுச்சேரி பெருமாள் கோயில் தெருவில் ஒரு பெண் இருப்பதாகச் சொல்லி ஏற்பாடாகிக் கடிதம் வந்தது. யாருக்குப் பதில் போட்டேன்; அவர்களுக்குப் பதில் போட?''

சுகந்திக்குப் புரிந்துவிட்டது. அம்மா ஏற்பாடு செய்த மாப்பிள்ளை இவர்தான்.

நன்றாகவே ஏறெடுத்துப் பார்த்தாள்.

''வசந்தி! நான் ஒண்ணு சொல்வேன்; கோவிச்சிக்கமாட்டியே?''

''சொல்லுங்க.''

''நீயும் அனாதை; நானும் அனாதை. இருவருமே வாழ்ந்து தொலையே வேண்டியிருக்கிறது. நீ யாவது தற்கொலைக்குத் துணிந்திட்டே! நான் ஏன் துணியலை தெரியுமா? மானத்துக்கும் சட்டத்துக்கும் பயந்துதான். அதனால..''

''அதனால....''

''நீ என்னைக் கலியாணம் செய்து கொள்.''

''மனசாரக் காதலித்து நிச்சயம் செய்துவிட்ட அவருக்கு நான் துரோகம் பண்ண விரும்பலைன்னு தான் முன்னாடியே சொல்லிட்டேனே?''

நீங்களே எதிர்க்கட்சி

ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் ரூபாயின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. ராஜா ஒரு பக்கம் இருக்கிறது. பூ ஒரு பக்கம் இருக்கிறது. ஒரு பக்கம் பூவும் மற்றொரு பக்கம் தலையும் இருப்பதுதான் நாணயத்திற்கு அழகு. அந்தப் பூ வில்லாமல் தலையிருந்தால் அது பொலிவாக இருக்காது.

அதேபோல் எதிர்க்கட்சி இல்லாது ஆளுங் கட்சிக்குப் பொலிவு வராது. நாங்கள் ஆளும் கட்சியாக வந்தாலும் நீங்கள்தான் (காங்கிரஸ்) எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

''உன்னை யாரு துரோகம் செய்யச் சொன்னது. எனக்கு வீட்டில் சமைத்து விளக்கேற்ற ஒரு மனைவி தேவை; உனக்கு வாழ ஒரு கணவனல்ல; துணை தேவை. இதோ நித்திய பிரம்மசாரியான நான் இருக்கிறேன்.''

''நல்ல யோசனைதான்; உங்கள் பிரம்மசாரி வேஷம் ஒருநாள் இல்லாவிட்டால், ஒருநாள் கலையும் அல்லவா?''

''கட்டையில் போகிறவரை கலையாது என்று கூறிய ராமலிங்கம் வாசற்படியை நோக்கிவிட்டு சுகந்தியின் காதருகே சென்று மெல்லிய குரலில், ''நான் பிறவியிலேயே ஆண்மையிழந்து போனவன்'' என்று கூறும்போது அவனுடைய கண்கள் கலங்கிப் போய்விட்டன. அந்தக் கலக்கத்தை கண்டு பெரிதாக வருந்திவிட்டாள் சுகந்தி. ஆண்டவன் படைப்பில் இப்படி ஒரு விசித்திரமா?

அதற்குள் முனியன் பிரியாணியை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்; மேசைமீது வைத்தான்; மீண்டும் வெளியே நடந்தான்.

''முனியா ரேடியோவைப் போட்டுட்டுப் போ ''

முனியன் வானொலியை முடுக்கிவிட்டு வெளியேறினான். மிகப் பொருத்தமாக ஒரு திரைப்பாடல் ஆரம்பமானது.

'கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே
வேரில் பழுத்த பலா'—

பாவேந்தர் பாரதிதாசனின் ஏக்கம் நிறைந்த பெருமூச்சைக் கேட்டு அசந்து போனான் ராமலிங்கம்! அவனுடைய கண்கள் சுகந்தியை நோக்கின. சுகந்தியோ, எதிரில்கொண்டு வந்து வைக்கப் பெற்ற பலாப் பழத்தை நோக்கினாள்.

''இன்று பெருவெளியில் கரைந்து போக எடுத்து வந்த தாம்புக் கயிறு பயனற்றுப் போய்விட்டது. நாளை ஓர் இடைவெளியாக மட்டும் நின்றுதவப் போகிற தாலிக்கயிறு நினைவுக்கு வருகிறது ''—என்று தன்னுள் தானாய் முனகிக் கொண்டாள் சுகந்தி!

சுவைத்து அனுபவிக்க முடியாத பழம் கொம்பில் பழுத்தால் என்ன? வேரில் பழுத்தால் என்ன?

★

இதயம் ஏழைகளின் பக்கமே!

சந்தனத்தேவன்

வன்செயலுக்கு வணங்காத்தலை!

அருளன்றி ஒன்றும் உமிழாத் திருமுகம்!

ஏறிய நெற்றி; எடுப்பான நாசி!

எதையும் தாங்கவல்ல திருமார்பு!

தீயவழி நடவாத் திருப்பாதங்கள்!

இன்று அவர் நம்மிடையே இல்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த தஞ்சைத் 'தளபதி'யை சந்திக்கும் பேறு நான் பெற்றேன்.

ஆவுடையார் கோவில்—தஞ்சைத் தரணியின் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. கோவிலில் உள்ள கற்சங்கிலி அந்தக் காலத்து சிற்பக் கலையின் வியத்தகு சாதனையாகும். ஆவுடையார் கோவிலில் சேர்வைக்காரர் குடும்பம் என்றாலே அழுத பிள்ளை வாய்மூடும் மீசை மட்டுமல்ல; அவர்கள் வயலிலே விளைந்து களத்திலே அறுவடை செய்து போட்டிருக்கும் கதிர்களை, இரவு நேரத்தில் பார்த்தாலே யாருக்கும் குலை நடுங்கும். பரம்பரை பரம்பரையாக அவர்கள் காங்கிரஸ்தான்; அதாவது இருக்க வேண்டிய இடத்தில் மிகப் பாதுகாப்பாக இருந்தனர்.

அதில் இளையவர் மட்டும் பாதை தப்பிய பயணம். ஊறிப்போன காங்கிரஸ் குடும்பத்தில் இப்படியொருவர் திராவிடரியக்கத்தின்பால் பற்றும் பாசமும் கொள்வதெனின் அதற்கும் கொஞ்சம் நெஞ்சுரம் வேண்டும். அவரது பெயர் ஏகாம்பரம் சேர்வை. குழந்தை உள்ளம்; எவரும் தூக்கி வைத்துக் கொள்ளலாம். பட்டுக்கோட்டை அழகிரி அவர்களின் நெருங்கிய நண்பர். அரசியல் அனலாகத் தகிக்கும்போது பட்டுக்கோட்டையாரும் குளுமையைத் தேடி இங்கு வந்து தங்குவதுண்டாம். ஏகாம்பரம் சேர்வையும் திராவிட இயக்கத்தின் கொள்கைகள் அனைத்தும் புரிந்து, ஒப்புக் கொண்டு கழகத்தின் பக்கம் வந்தார் என்பதை விட பட்டுக் கோட்டையாரின் உரையாடலில் மயங்கியே இவ்விடம் வந்தார் என்பது தான் உண்மை. அவரது அரசியலே, தலைவர்கள் வந்தால் தன் வீட்டிலே உபசரிப்பது, எங்கேனும் கழக மாநாடு நடந்தால், தன் செலவில் வருவோரையெல்லாம் அழைத்துப் போவது என்பது தானே தவிர, எவ்விதத் தியாகத்திற்கும் போராட்டத்திற்கும் அவரது உடம்போ உள்ளமோ தயாரில்லை.

அப்படிப் பட்டவரிடம் தஞ்சம் புகும் நிலை எனக்கு வந்தது. பொருளாதாரத்தில் நொடித்துப் போன தந்தை, கல்லூரிப் படிப்பின் கழுத்தைத் திருகிப்போடச் சொன்னதோடு, எதிர் காலத்திற்கு பெட்டியடிக் கணக்கப்பிள்ளை என்று வட்டிக் கடையை காண்பித்தபோது நான் மிரண்டுபோய் ஏகாம்பரம் சேர்வையிடம் அடைக்கலம் புகுந்தேன்.

விடிந்ததும் வீட்டுக்கு வரும் செய்தித் தாள்களைப் படித்து அதன் சாரத்தைப் பிழிந்து சேர்வைக்காரர் முன்வைப்பது; வயலுக்கு உரமாக கடலைப் புண்ணுக்கு வாங்க ஓரிரு முறை லாரி

பயணம் — இப்படியாக உப்புச் சப்பற்று கழிந்தது ஒரு மாதம்.

அன்றைய தபாலில் வந்த கடிதங்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த சேர்வை, துள்ளிக் குதித்து எழுந்தார், ''அப்பா, அடுப்படி! நாளை பட்டுக்கோட்டையிலிருந்து அண்ணன் வருகிறாரடா! இரவுச் சப்பாடு 'ஏ' ஒன்னு இருக்கணும். நாளைக்குத்தான் உன் கை வரிசையைப் பார்க்கணும்''— என்று சமையல்காரரிடம் சொல்லிவிட்டு, ''என்ன தம்பி! அழகிரி அண்ணன் நாளை இங்கு வருகிறார். என்னமோ, பொழுது போகலையேன்னு தவிச்சியே; நாளைக்குப் பாரேன் — மன்னன் சளைக்காமல் பேசுவார்'' என்று என் பக்கம் திரும்பினார்.

அந்த நாளும் வந்தது. எனக்கோ தாங்க முடியாத தவிப்பு பொதுக் கூட்டத்தில் — மாநாட்டில் முழக்கமிடும் தலைவரை எங்கோ ஒரு மூலையில் நின்று கண்ணிமைகள் கொட்டாது பார்த்தும் முழுத் தோற்றத்தையும் காண இயலாத எனக்கு, அவர் அருகிலேயே, அதுவும் ஒரே பந்தியில் உண்ணப் போகும் நிகழ்ச்சியை நினைத்து நினைத்து எனக்கு பூரிப்பான பூரிப்பு. ஆர்ப்பாட்டமும் ஆடம்பரமும் சேர்வைக்காரர் வீட்டில்தான் இருந்ததே தவிர, வந்தவரோ மிகச் சமான்யமாக வந்தார். உடலை தொளதொளவென மறைத்துக் கொண்டிருந்த வெள்ளை ஜிப்பா, அதனை தழுவிய வண்ணம் மூக்குப்பொடி நிறத்தில் மேல் துண்டு; அதுவே போர்வையாகவும் மாறுவதுண்டு. நான்கு முழத்தில் பட்டைக் கரை வேட்டி, கனிவு முகத்திலா அல்லது அவர் போட்டிருக்கும் தாம்பூலத்திலா என்று கண்டுகொள்ள முடியாதபடி தடுமாற்றம் எனக்கு.

பட்டுக்கோட்டையாரும் சேர்வையும் உரையாடத் தொடங்கினர். ''அறந்தாங்கியில் இன்று கழகக் கூட்டம்; வந்ததுதான் வந்தோமே ஆவுடையார் கோவில் சுகவாசியையும் பார்த்து விட்டுத்தான் போவோமே என்று வந்தேன். சுகத்தை அனுபவிக்கத்தான் பிரமன் என் தலையில் எழுதவில்லை. சுகவாசியை பார்க்கக் கூடவா அவனால் 144 போட முடியும்?'' என்று கிண்டலும் கேலியும் மிதந்தன, அழகிரியண்ணன் பேச்சில்.

''மாடப்புருவுக்கு ஆளனுப்பிட்டேன். எப்படியும் இரவுச் சாப்பாட்டுக்கு இங்கு வந்துவிடவேண்டும். அறந்தாங்கிக்காரன் தரும் 'சாயா'வைச் சாப்பிட்டு வீணாக உன் உடம்பைக் கெடுத்துக்க வேணும். பொதுக் கூட்டம் முடிந்ததும் அடுத்த காலடி ஆவுடையார் கோவில் பக்கம் இருக்கட்டும்'' — என்றார் ஏகாம்பரம் சேர்வை.

''இதைத் தவிர ஒரு மிராசுதாரால் வேறென்ன செய்ய முடியும்?'' அழகிரியண்ணனிடம் இப்படி வாங்கிக் கட்டிக் கொள்வதில் சேர்வைக்கு மெத்தமகிழ்ச்சி.

மாலை நெருங்கியதும் அறந்தாங்கியின் நினைவு அழகிரி அவர்களை வாட்டியது. கூட்டத்திற்கு குறித்த நேரத்தில் போக வேண்டுமென்ற கவலை. இருந்ததும் வந்ததும் ஒரேயொரு பஸ்தான். அதிலும் இடமில்லை. ''ஏண்ணே நம்ம வில் வண்டி இருக்கவே இருக்கு. கட்டச் சொன்னா போச்சு'' என்றார் சேர்வை.

''ஏகாம்பரம் நானென்ன மிராசுதார் மாநாட்டிற்கா போகிறேன். ஏதாவது சைக்கிள் கிடைக்குமான்னு பாரு. பத்து மைல் தானே'' என்கிறார் 'தளபதி' ஒரே பிடிவாதமாக!

என்ன சொல்லியும் அழகிரியண்ணன் வில் வண்டியில் ஏற மறுத்து விட்டார். கடைசியில் சைக்கிளே வந்தது. ஓட்டுவது சேர்வையின் பண்ணையாள். பட்டுக்கோட்டையார் பின்னே இருப்பது என்று பயண ஏற்பாடு முடிவாகியது. நானும் இருப்புக் கொள்ளாமல், பட்டுக்கோட்டையாரின் பேச்சைக் கேட்கும் ஆவலில், வேறொரு சைக்கிளில் பின் தொடர்ந்தேன்.

அறந்தாங்கி சந்தைத் திடல். திசை கொள்ளாக் கூட்டம். திராவிடர் இயக்கம் அப்பகுதியில் புதுப் பிரவேசம் செய்வதால், எதிர்ப்பு வருமோ என்ற அச்சத்தால், கருஞ் சட்டையினர் தயார் நிலையில் இருந்தனர். போர்க்களத்திலே குதிக்கும் படை வீரனைப் போல அழகிரி அவர்கள் மேடை மீது ஏறினர்.

''இன்றையச் சமுதாய சங்கடங்களுக்கு புரோகிதக் கருத்துகள் எவ்வளவு காரணமோ, அவ்வளவு பழி பாவம் இந்தப் பண முதலைகளுக்கும் உண்டு. புரோகிதமும் மிராசுத்தனமும் ஒன்றையொன்று திருட்டுத் தாலி கட்டிக் கொண்டவைகள். ஒன்றைத் தொட்டால், மற்றது அழும்; ஆங்காரமாகவும் பாயும்; கூடுவிட்டுக் கூடு பாயும்; அவ்வளவு இணைப்பு — பந்தபாசம்! இதை உடைப்பது எளிதல்ல. ஆனால் ஏழையால் முடியாதது எதுவுமில்லை.'' — அறந்தாங்கி சந்தைத் திடலே போரிடக் கிளம்பிற்றுகாண்!

நான் மட்டும் மனம் புழுங்குகிறேன். சற்று நேரம் கழித்தால், மிராசுதார் வீட்டில் மாடப்புரு சமையலை ருசி பார்க்கப் போகிறவர் வாயில் இந்த மணி வாசகங்களா?

கூட்டம் முடிகிறது. அவரை அழைத்துச் செல்ல நானும் பண்ணையாளும் காத்திருக்கிறோம். அவரோ, அந்தக் காலத்தில் நம் இயக்க இதழ்களுக்கு இனமாகப் படம் வரைந்து தரும் அறந்தாங்கி ஓவியர் 'கருணா'வும் சிகை அலங்கரிக்கும் மருத்துவத் தோழரும் புடை சூழ டீக்கடையில் நுழைகிறார். அங்கு இருந்ததெல்லாம் டீயும் பன்னும்தான். அதுவே அவருக்கு அமுதமாகிறது.

''என்னண்ணே! புறப்படலாமா?'' என்றேன்.

''நீங்க போகலாம் தம்பி! அது எப்போதாவது வருவது! இது எப்போதும் இருப்பது! அதை நம்பி, இதைக் கைவிட முடியுமா?'' என்று என்னிடம் சொன்னவர், ''இந்தா பண்ணே! இதைச் செலவுக்கு வைத்துக் கொள்'' என்று ஐந்து ரூபாயை பண்ணையாளிடம் நீட்டினார். அன்றைய பேச்சுக்கு வழிச் செலவுக்காகத் தந்த பத்தில் பாதி இப்படி போயிற்று.

வழியெல்லாம் எனக்கு இது தான் சிந்தனை! கைலாகு கொடுத்ததினால் இதயத்தையே தந்துவிட்டதாகாது!

அது பண்பு!

இது நீதி!

—இதுதான் பட்டுக் கோட்டையார் தந்த பாடம்! நாளடைவில் ஏகாம்பரம் சேர்வையும் போக வேண்டிய இடத்தில் புகுந்து பஞ்சாயத்து தேர்தலில் கழகத் தோழரை எதிர்த்தது, பட்டுக் கோட்டையாரின் அரசியல்தொலை நோக்கினை உறுதிப்படுத்தியது.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்பது இன்று நேற்று முளைத்த மாம்பலத்து திடீர் பிள்ளையார் அல்ல. இதற்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. சரித்திரம் சாட்சி சொல்லும்!

★



நேற்று

இன்று

பேரறிஞர் அண்ணு அவர்கள் உயிரோடிருந்தபோது நான் முதன் முறையாக 1968—ல் சிங்கப்பூர்—ஹாங்காங் — ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்றிருந்தேன். ஒருகோடி மக்கள் வாழும் டோக்கியோ பெரு நகரத்தின் வீடமைப்பு — பெரும்பாலும் கடல் படகுகளிலேயே தங்கள் திருமணம், சாவு, முதலிரவு முதலியவைகளை நடத்தி வாழும் ஹாங்காங் வாழ் மக்களுக்குச் செய்யப்படும் மரக் குடியிருப்பு—சின்னஞ்சிறு நாடான சிங்கப்பூரில் பழைய 'குடிசை வீடு' களைப் புதுப்பித்துக் கட்டப்படும் மாடிக் குடியிருப்பு ஆகியவைகளைக் கண்டேன். டோக்கியோவில் பல்லடுக்கு மாடிகள் — சிறு சிறு அறைகள் உள்ள வீடுகள்தான் எங்கும். அதே நெருக்கடிதான் ஹாங்காங்கிலும், சிங்கப்பூரிலும். பூ ம்பத்தை எதிர் பார்க்கும் ஜப்பானில் கட்டப்படும் வீடமைப்பு நம்மவர்களால் ஏற்கப் படமாட்டாது. பெரும்பாலும் மரமும் தயாரிக்கப்பட்ட சிமிண்டு அட்டையாலும் ஆனவை அவை. ஆனல் ஹாங்காங்கிலும், சிங்கப்பூரிலும் கிட்டத்தட்ட 'ஒரே மாடலில்' பல்லடுக்கு வீடுகளைக் கட்டுகிருர்கள். ஓரளவுக்குச் செங்கலும், கான்கிரீட் அட்டை (Pre-

இராம. அரங்கண்ணல்
எம்.எல்.ஏ

நாளை







Slabs) யாலும் இங்கு கட்டுகிறார்கள். ஆனால் ஹாங்காங்கை விடச் சிங்கப்பூரில் விரைவாகவும் வேகமாகவும் குடியிருப்புப் பிரச்னை தீர்க்கப்படுகிறது. இவைகளைப் பார்த்தபோது, சென்னை மாநகரக் குடிசைகளையும் மாற்றி இதே போலப் பல்லடுக்கு வீடுகள் கட்டினால் என்ன! என்று நான் மனதுக்குள் எண்ணியதுண்டு. சிறு ஊரானதால் சிங்கப்பூரில் பல் அடுக்கு மாடிகள் தேவைப்படுகின்றன. நம்மூரிலும் சிறு இடத்தில் ஆயிரக்கணக்கான குடிசைகள் உள்ளன, அங்குள்ள குடிசை வாழ் மக்களை அதே இடத்தில் குடியிருக்கச் செய்ய சிங்கப்பூர் அளவுக்கு 20, 30 மாடிகளில்லாமல் 4, 5 மாடிகளில் கட்டலாமே என்று எண்ணினேன். நான் குடிசைவாரியத் தலைவரானதும் இந்த எண்ணமே இன்று செயலாகி வருகிறது!

இன்னுமொன்று—சிங்கப்பூர் குடிமக்கள் ஒவ்வொருவரும் தங்கள் புகைப்படத்தோடு பெயர் முகவரி கொண்ட ஒரு 'சர்டிபிகேட்'டை தத்தம் பைகளில் வைத்திருப்பதைப் பார்த்தேன். போலீசார் கேட்டாலோ, பரிசோதித்தாலோ, எப்பொழுதும் காட்ட வேண்டும் என்பது அங்கு சட்டம். அதே போல ஒவ்வொரு குடிசைவாழ்ப் பகுதியிலும் 'போட்டோ'க்கள் எடுத்து விட்டால் புதிய ஆள் அந்தப் பகுதியில் குடிசை போட முடியாமல் தடுக்கலாமே என்று ஒவ்வொரு பகுதியிலும் கட்டப்பட்டு குடியிருப்போர் பகுதியிலும் 'போட்டோ'க்கள் எடுத்து அவரவர் முகவரி கொண்ட 'கைச்சீட்டை' (Passport) கொடுக்கும் முறையைக் குடிசைவாரியத்தில் புகுத்தினேன்!

ஆகவே, என் செயல்களுக்கு வித்திட்ட சிங்கப்பூரையும், அங்கு வீடுகள் கட்டப்படும் அமைப்பையும், கட்டப்பட்ட 'எஸ்டேட்டுகள்' நிர்வாகம் செய்யப்படும் முறைகளையும் நானும் நமது பிரதம இன்ஜினியரும் அரசுச் செயலாளரும் கட்டிடக் கலைஞரும் காண்பது நல்லது என்று எண்ணினேன். கட்டிடங்கள் கட்டி நிர்வாகம் செய்யப்படும் கட்டத்துக்குள் குடிசைவாரியம் அடியெடுத்து வைக்கும் இந்த நேரம் சென்று வருவது உகந்தது என்று புறப்பட்டோம்.

ஒரு பகுதியில் குடியிருப்புகள் கட்ட எண்ணினால் நாம் அங்கு வாழும் மக்களை அதற்கருகில் தற்காலிகமாகக் குடியமர்த்திவிட்டுக் கட்டிடங்கள் கட்டி அவைகளில் அதே மக்களைக் குடிவைக்கிறோம். ஆனால் அவர்கள், நகருக்கு வெளியே கட்டிடங்கள் கட்டி அங்கே கொண்டுபோய்க் குடி வைக்கிறார்கள். ஆங்காங்கே வாழ்வோருக்கு ஆங்காங்கே எப்படிக் கட்டுவது என்பதை நம்மிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ளலாம்! அவர்களிடமிருந்து நாம் கற்க வேண்டியது, எப்படிச் சுத்தமாக வைத்திருப்பது, வாடகையை ஒழுங்காகக் கட்டுவது, ஆகியவைகளைத்தான். கட்டிட அமைப்பைப் பொறுத்தவரையில் அவர்களைவிட நாம் கட்டுவது, நமது மக்களுக்கேற்றவாறு என்பதால், அவர்கள் முறையைப் பின்பற்ற இயலாது. நமக்கு 20, 30 அடுக்கு மாடிகளும் தேவையில்லை. ஆனால் அவர்களது நிர்வாக முறைகளும், திட்டமிட்ட செயலும், நாம் கற்றுக் கொள்ள வேண்டியதே. நான்கு ஆண்டுகளுக்கு முன் ஆழ்கடலாக இருந்த இடத்தை நிரப்பி 1100 ஏக்கர் மனைகளில் வீடு கட்ட ஏற்றதாகச் செய்திருக்கும் விஞ்ஞான அறிவோடு கூடிய திட்டம் போட்டுச் செய்யும் பக்குவம் மிக மிகப் பாராட்ட வேண்டியதே!

சென்னையில் வீட்டுப் பிரச்னை என்பது மிக முக்கியத் தேவையாக வளர்ந்து வரும் ஒருபிரச்னை. அதுவும் குடிசைகள் இருந்த இடத்தில் புதிய வீடுகள் கட்டி குடிசைகளில் வாழ்ந்தவர்களை அதிலே குடியமர்த்த என் தலைமையில் இயங்குகின்ற குடிசை மாற்று வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிற ஆர்வமும், உழைப்பும் என் அனுபவத்தில் மிகப்பெறும்பொறுப்பாக உள்ளது.

61—ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரக் கணக்குப்படி சென்னையில் மட்டும் 578 குடிசைப் பகுதிகள் இருந்தன. இப்போது அவைகள் 602 ஆக உயர்ந்திருக்கின்றன.

மேலும் புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படா வண்ணமும்குடிசை மாற்று வாரியம் கவனித்துக் கொண்டு வருகிறது. சட்டப்படி குடிசைவாழ் பகுதிகள் உருவாகாதிருப்பதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நம்முடைய தமிழக சட்ட மன்றத்தில் குடிசை வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதற்கான விதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் மட்டுமல்லாமல் இத்திட்டம் விரிவடைவதற்கும் ஏழை, நடுத்தர மக்கள் வசதியான இருப்பிட அமைப்பினைப் பெறுவதற்கும் குடிசை மாற்று வாரியம் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் சிக்கனமாகவும், சீக்கிரமாகவும் நிறைவேறுதற்குப் பொறியாளர்களும் அதிகாரிகளும் சிறந்த முறையில் தங்கள் உழைப்பினை நல்கி வருகிறார்கள் — இது போன்று — குடிசை வாழ் பகுதி மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

ஏழைக் குடிமக்கள் நலம் பெறுதற்கு, கழக அரசின் சீரியமுயற்சியால் துவக்கப்பட்டுள்ள இத்திட்டம் எதிர் காலத்தில் உலகு கண்டு வியக்கக் கூடிய ஒப்புயர்வற்ற திட்டமாகும்.

குடிசைகளைப் பிரித்துவிட்டு வீடுகளாக மாற்றுவது என்ன பிரம்மாண்டமான காரியம் என்று நினைப்பது கூடத் தவறு—பழைய குடில்களை அகற்றி அதில்வாழ்ந்த அனைவருக்கும் பிரச்னைகள் இன்றி அழகிய வசதியான வீடுகள் அமைத்துத் தரும் பணி — ஒரு பெண் தாய்மைப் பேறடைந்து சுகப் பிரசவம் ஏற்படும்வரையுள்ளபொறுப்பும் — வேதனையும் — மகிழ்ச்சியும் இப்பணியில் இருக்கிறது.

குடிசை மாற்றுவாரியம் என்ன செய்துள்ளது — எந்தெந்த வகையில் பணியாற்றியுள்ளது என்பதை உங்களுக்குத் தெளிவாக்குவது என்னுடைய முதற் கடமையாகும்.

ஏதோ புள்ளிவிவரக் கட்டுரை என்று அலுப்புக் கொள்ளாமல்— இது நம்முடைய நாட்டினுடைய அடிப்படைப் பிரச்னைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று எனக் கருதி, அக்கறையோடும், ஆர்வத்தோடும் புரிந்து கொள்வதில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டும்.

சென்னை நகரில் மட்டும் 39 இடங்களில் 4,587 குடியிருப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. 1972 மார்ச் இறுதிக்குள் இத்திட்டம் முடிவடைந்துவிடும். 42, இடங்களில் இன்னும் மூன்றாண்டுக் காலத்திற்குள் 17,014 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். குடிசை மாற்று வாரியம் துவக்கப்பட்டு ஓராண்டு காலம்தான் ஆகிறது. இந்த ஓராண்டுக் காலத்தில் 9 இடங்களில் 1,343 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு முடியும் தருவாயில் இருக்கின்றன. சில இடங்கள் முடிந்து குடிபுகும் நிலையில் தயாராகவும் உள்ளன. தியாக

ராயநகர் ஏரிக்கரை 2. தி. நகர் ஏரிக்கரை அண்ணா சாலை, 3. சுபேதார் தோட்டம், 4. அப்பாவு நகர், 5. பிருந்தாவனம், 6. ஆண்டிமானியம், 7. டொம்மிங் குப்பம், 8. வெங்கடாபுரம், 9. நொச்சிநகர், ஆகிய பகுதிகளில் எழில்மிகு இல்லங்கள் உருவாகி வருகின்றன.

இதுவரை 25 இடங்களில் குடிசைகள் அகற்றப்பட்டுள்ளன. பெரும்பாலும் அப் பகுதியிலேயே வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. பழைய குடிசைகள் இருந்த இடங்கள் பாதை ஓரமாகவும், முக்கிய இடமாகவும் இருந்தால் வேறு இடத்தில் புதிய மனைகள் அமைத்துத் தரப்படுகின்றன.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரக் கணக்குப்படி, சென்னை மாநகரில் மட்டும்—1000—க்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவைகளில் 1,50,000 மக்கள் வசித்து வருகின்றனர். அத்தனைப் பேருக்கும் குடியிருப்பு வசதி செய்துகொடுக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் திட்டம் — மிகக் குறுகிய காலத்தில் இத்திட்டம் நிறைவேறி மக்கள் பயன்பெறுவர் என நம்புகிறேன்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டித் தரப்பட்டுள்ள வீடுகளுக்கு மாதம் 10 ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது. ஆனால் முன்பு அவர்களுக்குத் தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்ற வசதிகள் இல்லாமல் இருந்தன. இப்போது அந்த வசதிகளும் செய்து தரப்படுகின்றன. ஆகையால் கூடுதல் வசதிக்காகவும், கூடுதலாக ஆகும் செலவைச் சரிக்கட்டவும் 15 ரூபாய் வாடகை வசூலிக்க முடிவு செய்துள்ளோம்.

வீடுகள் சொந்தமாகும் வகையில் கட்டித்தரும் திட்டம் உண்டா என்று அஞ்சல் மூலமும், தொலைபேசியிலும் நேரிலும் ஏராளமான பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'முரசொலி' பொங்கல் மலர் வாயிலாக அவர்களுக்குக் கூறிக் கொள்வேன். குடிசை மாற்று வாரியத்தில் அப்படி ஒரு திட்டம் உண்டு. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

இன்னும் ஏழாண்டுகளுக்குள் குடிசை மாற்று வாரியத்தின் கொள்கைப் பணி பூர்த்தியாகும் என நம்புகிறேன். இத்திட்டத்தை விரைவாக முடிக்க தமிழக அரசு 40 கோடி ரூபாய் செலவு செய்ய எண்ணியுள்ளது. இன்றையதினம் பொறியாளர்களும் ஒத்துழைக்கின்ற நண்பர்களும் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியைப் பார்த்தால் என் கணக்குப்படி இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் குடிசைப் பகுதிகள் சீரமைக்கப்பட்டு விடும் என நம்புகிறேன்.

இத்தனை தீவிரமாகவும், நல்லெண்ணத்தோடும் செயல்படும் திட்டத்திற்குச் சில இடங்களில் குடியேறும் மக்கள் தூய்மையான எண்ணத்தோடு ஒத்துழைப்பைத் தருவதில்லை. வீடுகளுக்கு வாடகைப் பணத்தை மாதா மாதம் தருவதில்லை. நேரில் வசூலிக்கச் சென்றாலும் கொடுப்பதில்லை. அவர்களுக்கு தவணையும், எச்சரிக்கையும் தருகிறோம். அதற்குப் பின்னும் அவர்கள் கட்டத் தவறினால் அவர்கள் குடியிருப்பு காலி செய்யப்பட்டு வீடு பூட்டப்படுகிறது. இந்நிலையினை ஏற்படுத்தாமல் இருந்தால் இன்னும் வசதிகள் பெருக நாங்கள் கவனம் செலுத்த முடியும்.

வாரியத்தின் கவனத்திற்கு வராமல் ஒருவர் பெயரில் உள்ள வீட்டை வேறு ஒரு நபருக்கு மாற்றிக் கொடுத்திருந்தால் அவர்கள் யாராக இருப்பினும் குடியிருப்பைவிட்டு வெளியேற்றப் படுவார்கள். யார் பெயருக்கு அந்த வீடு ஒதுக்கப்பட்டிருந்ததோ அதுவும் ரத்துச் செய்யப்படும்.

குடிசை மாற்று வாரியத்தின் பணிகளைக் கூறும்போது இவைகளையும் நான் தெரிவிப்பதற்குக் காரணம் தவறு செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட மட்டுமல்ல — தவறு இனியும் நிகழக் கூடாது என்பதற்காகவும் —வாரியத்திற்கு ஏற்படும் தேவையற்ற தொல்லைப் பணிகள் குறையவேண்டும் என்பதற்காகவும்தான்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குடிசை மாற்றுவாரியத் திட்டம் துவக்கப்பட்டு வெற்றிகரமாகவும் செயல்பட்டு வருகிறது. இன்னும் சொன்னால் இத்திட்டத்திற்கு மத்திய அரசுஉதவி கொஞ்சமும் இல்லாமல் தமிழக அரசின் சொந்தச் பொறுப்பிலேயே இப்பணி நடைபெற்று வருகிறது.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுவோம்'' என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயகீசம் — அதனை ஒவ்வொரு பிரச்னையிலும் நடைமுறைப்படுத்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

உடை, உணவு, இடம் இம் மூன்றும் நிறைவுபெறுமானால் மகிழ்ச்சியான வாழ்வு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். அத்தகு நிலையை நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஏற்படுத்தத்தான் கலைஞர் தலைமையில் அமைத்துள்ள கழக அரசு செயல்பட்டு வருகிறது.

அதில் ஒரு முக்கிய அங்கம்தான் குடிசை மாற்று வாரியம். வாரியத்தின் பணி திட்டமிட்ட நாட்களுக்குள் நிறைவுபெறும், சாக்கடை ஓரத்திலும், சுகாதாரமற்ற குடிசைப் பகுதியிலும் வாழ்ந்த ஏழை எளிய மக்கள் அனைவரும் எழிலான குடில் பெறுவர், இதயம் குளிர்வர்!

வாரியத்தால் அமைத்துத் தரப்படும் புது வீடுகளில் குடியேறி புன்னகையுடன் வாழ்வோருக்கு இறுதியாக ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வீடுகளைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும், வைத்துக் கொள்வீர்! சுற்றுப் பகுதிகளிலும் எழில் தன்மை ஏற்படுத்துவீர்! வாரியத் திட்டத்திற்கு வனப்புத் தருவீர் ! ★

இளங் கன்று
பயமறியாது

அன்றும் இன்றும்

ஓலைக்குடிசைகள் அன்று



உயர்ந்த வீடுகள் இன்று



மண்ணிலும் புழுதியிலும் அன்று



மாடியிலும் கூடத்திலும் இன்று



அன்றும்

விருந்தும், களிப்பும் வீதியில் அன்று



இன்றும்

விருந்தினர் வரவேற்பு மாடியில் இன்று!



அழுக்கு நீக்கித் துவைக்க
குளிக்க அறை ஒன்று
தனியே இல்லாத நிலை
அன்று.



அனைத்து வசதியும் ஒருங்கே
அமைந்த அருமை வீடுகள்
ஆயிரம் இன்று.!



அன்றும் இன்றும்

தொத்து நோய்கள் தொடர்ந்திடும்
வாழ்க்கை நிலை அன்று

சுத்தமான காற்றும், சுகாதார
வசதியும் அமையும் வாழ்க்கை
இன்று!

எரியாத இல்லங்கள் தந்து
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்பதே

ஓலைக்குடிசையை அழித்து
ஒய்யார வீடுகள் அமைத்து



முத்து

குடிசை மாற்று வாரியக் கொள்கைப் பணி!

மு.க.முத்து
கதாநாயகனாகத் தோன்றும்
அஞ்சுகம் பிக்சர்ஸ் அளிக்கும்
கலைஞரின்
கருத்தோவியம்
பிள்ளையோ பிள்ளை
ஈஸ்ட்மென் கலர்
இயக்குனர்
கிருஷ்ணன் பஞ்சு
அமிர்தம் எம்எஸ் விஸ்வநாதன் கண்ணதாசன்-வாலி செல்வம்

கண்கவரும் கலைத்தொழில்



மனித மனதில் உற்சாக உணர்வை ஊட்டிடும் ஆற்றல் அழகுக் கலைகட்கு உண்டு. தனது அறிவு, அனுபவம், சிந்தனை சக்தி மூன்றிலும் மனிதன் அக்காலம் முதலாகவே அழகுக் கலைகளை அமைத்து மகிழ்ந்திருக்கிறான். வரலாறு தோன்றிய காலம் முதலாகவே நாகரிகம் படைத்த மனிதன் கலையில் அழகைப் போற்றி நாகரிகத்தை வளர்த்திருக்கிறான். தமிழ் நாட்டைப் பொருத்தவரை அழகுக் கலைக்கு அடித்தளமாக—அஸ்திவாரமாக விளங்கி வருகிறது தமிழகம்.

பொதுவாக—தமிழகத்தில் கலைகளில் சிறந்ததெனக் கருதப்படுவது சிற்பக் கலை. தமிழகத்தில் சிற்பக் கலை தழைத்தோங்கத் தலைப்பட்டது பல்லவப் பெருவேந்தனை முதலாவது மகேந்திரவர்மனது காலத்திலாகும். தென்னாற்காடு மாவட்டத்தில் 'மண்டகப்பட்டு' எனும் சிற்றூரில் அவ்வரசன் உருவாக்கிய 'லட்சித யதனம்' என்ற குகைக்கோவிலில் அமைத்த சிற்பங்களே அவை.

தமிழகத்தில் தோன்றிய முதலாம் சிற்பக் கோலங்களாகும் அவை. அவன் அவ்வாறு உருவாக்கிய சிற்பம் வனப்பு மிகு 'வாயிற் காப்போன்' (துவாரபாலகர்) சிற்பமாகும். தமிழகத்தில் எவ்வாறு ஏழாவது நூற்றாண்டிலிருந்து கோவில்களின் எண்ணிக்கை பெருகிப் பரவியதோ அது போன்றே சிற்பக் கலையும் சீரிய முறையில் வளர்ந்து, வான்புகழ் வீச ஆரம்பித்தது.

வடக்கே உருவான அஜந்தா, எல்லோரா, ஜாஹறாளே, புவனேசுவரம் போன்ற கலைச் செல்வங்கள் உருவானதற்கு இணையாகத் தென்னகத்திலும் மாமல்லபுரம், காஞ்சி, மதுரை, ராமேசுவரம், அமராவதி, நாகார்ஜுன கொண்டா, பேலூர், ஹலியபேடு ஆகிய இடங்களில் பார்புகழ் கலைக் கோவில்கள் தோன்றின.

பல்லவப் பெருமன்னர்களும், சோழ அரசர்களும், பாண்டிய அரசர்களும், விஜயநகர வேந்தர்களும், நாயக்க மன்னர்களும் தமது கலைப்பணியிலும் கட்டிட முறையிலும் கண்கவர் சிற்பங்களைச் சமைத்துக் களிப்பெய்தினர். அதனை அடுத்து அழகே உருவான வெண்கலச் சிலைகளும், செப்புப் படிவங்களும், வேலைப்பாடு அமைந்த மரச் சிற்பங்களும், தந்தத்தினாலான சிற்பங்களும் உருவாக்கப்பட்டன.

பின்னர் அவற்றில் நேர்த்தியான அலங்காரமும், நுட்ப—நுணுக்க—விசித்திர வேலைப்பாடுகளும் சேர்க்கப்பட்டு கண்டோர் வியக்கும் வண்ணம் கவர்ச்சி பெற்று ஒளி வீசிச் சிறப்புச் சேர்த்தன. இந்த அலங்கார ஆர்வம் மக்களிடையே நாளடைவில் பெருகி—அன்றாடம் மனிதன் பயன்படுத்தும் சாதாரணப் பண்டங்களில்கூட அழகுக் கலை இடம் பெறலாயிற்று. அதுவே மேலும் மெழுகு, அரக்கு, பீங்கான் போன்றவற்றுக்கும் பரவி, பார்ப்போரின் கண்ணையும், கருத்தையும் கவர்ந்தது.



இத்தகைய கலைச் சிறப்பின் அடிப்படையில்தான் பிற்காலத்தில் கைத்தொழிற் பொருட்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள் ஆகியவையும் அமையத் தொடங்கின. படிமங்களிலும், அணிவகைகளிலும் நுணுக்க வேலைப்பாடு நுழைந்தன. இல்லங்களில் அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரம்—பண்டங்கள் தாம்பாளம்—தட்டு வகையறுக்கள், வீட்டுக் கதவுகள் பீங்கான் பாண்டங்கள், பிரம்புக் கூடைகள் போன்றவை அடுத்த கட்டத்தில் அமைந்தன. இந்த ஆர்வமே படிப்படியாக வளர்ந்து, ஆற்றலும் கூடி—கைத்தொழில் பாண்ட உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டது. இன்று நாட்டில் அதிக அளவில் மக்களை மகிழ்விக்கும் தொழில் கைத்தொழிற் பாண்ட உற்பத்தித் தொழிலே. லட்சக் கணக்கான தொழிலாளர் இத் தொழிலில் ஈடுபட்டிருப்பதோடு அந்நியச் செலாவணியும் கணிசமாகக் கிடைக்கிறது.

சிற்பக்கலைக்கு அடுத்ததாக ஓவியக்கலை, இசைக்கலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பண்டையத் தமிழகம் ஓவியம், இசை இரு துறைகளிலும் வல்லமை பெற்று விளங்கி வந்தமைக்கு முறையே சித்தன்னவாசல் (புதுக்கோட்டை அருகே) ஓவியங்களும், குடுமியாமலை குகைக் கோவிலிலுள்ள இசையைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பும் அழியாத அத்தாட்சிகளாகும்.

— வி. இராமமூர்த்தி

THE METTUR CHEMICAL AND INDUSTRIAL CORPORATION LIMITED

With the Best Compliments of:

THE METTUR CHEMICALS & INDUSTRIAL CORFORATION LIMITED

Registered Office:

METTURDAM R. S.
TAMIL NADU.

Manufacturers of:

CAUSTIC SODA
STABLE BLEACHING POWDER
METHYL CHLORIDE
METHYLENE CHLORIDE
CHLOROFORM
LIQUID CHLORINE
CHLORINATED PAR'FFIN WAX
HYDROCHLOR'C ACID
FOTASSIUM CHLORATE
CALCIUM CHLORIDE
SULPHATE OF ALUMINA
CHEMICAL LIME
PAINT REMOVER
COMMON SALT
VANASPATI
REFINED VEGETABLE OILS &
TOILET & WASHING SOAPS.

ஸ்நானத்திற்கு
அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்
காரைக்குடி

ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI.

TRICHY DISTILLERIES & CHEMICALS LIMITED

Post Box No. 3327

17-4, Nungambakkam High Road,
MADRAS-34.

Manufacturers of:

INDUSTRIAL ALCOHOL AND GO^2 GAS

FACTORY AT:

Senthannipuram, Tiruchirapalli-4

Telephone: 810383 Telegram: "FINESUGAR"

THIRU AROORAN SUGARS LIMITED

VADAPATHIMANGALAM (Thanjavur Dt.)

Manufacturers of

Best Quality

WHITE CRYSTAL SUGAR

Registered Office:

17/4, Nungambakkam High Road

MADRAS-34

Grams: "FINESUGAR" Madras Telephone: 810383

Telegraph: "CEYESTY"

Telephone No. 6

COIMBATORE-SALEM TRANSPORT (PRIVATE) LIMITED,

226, Cauvery Road, ERODE.

Southern Railway Out Agency Contractors

at

GOBICHETTIPALAYAM

&

SATHYAMANGALAM

It will be a pleasure to travel in our upto-date Leyland Buses

Special Buses can be arranged for Tourists, & Picnic and Marriage Parties on appointment.

உங்களுக்கு பணி புரிய இரட்டையர்

LUCAS-TVS

LUCAS
INDIAN SERVICE

லூகாஸ் - டிவிஎஸ்
தரமான
மின் உறுப்புகளை
தயாரிக்கிறது

லூகாஸ் இந்தியன்
ஸர்விஸ் அத் தரத்தை
பாதுகாக்கிறது

லூகாஸ் - டிவிஎஸ் லிமிடெட்
பாடி, மதராஸ் 50.
லூகாஸ் இந்தியன் சர்விஸ் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா.

LTVS-5333

ஜாமா ரப்

அதிக சக்திவாய்ந்த
பெயின் பாம்

60 ஆண்டுகளுக்கு
அதிகமாக
கோடிக்கணக்கானவர்கள்
உபயோகித்து வருவது

நோவுகள்!
ஜலதோஷம்!
தலைவலி!
ஆகியவற்றிலிருந்து
விரைவாகவும்
நிச்சயமாகவும்
ஆறுதல்
அளிக்கும்

சக்தி வாய்ந்த 12 மருந்துகள்
கொண்டது ஜாமா ரப்
ஜலதோஷம் ஆகியவற்றிற்கு
ஜாமா ஆயில், ஜாமா இன்ஹேலர்
உபயோகியுங்கள்
அமர் சோபா
95, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3 போன்: 33482

ஜலதோஷம், தலைவலி,
வீக்கங்கள், சுளுக்குகள்,
உடல்வலிகள்
ஆகியவற்றிலிருந்து,
குறைந்த செலவில்
விரைவில் நிவாரணம்
அளிப்பது ஜாமா ரப்.

EP

அண்மையில் தில்லியில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், ''உடலுக்குத் தீங்கு பயக்கும் கிருமிகள் அல்லது ரசாயன உப்புக்கள் கலந்த நீரைப் பருகுவதால், உடல் நலிந்து ஆயுள் குன்றிப்போகும் மக்கள், இந்தியாவின் கிராமப்புறத்தில் வாழும் மக்களில் சரிபாதி இருக்கக்கூடும்'' என்று கருத்து வெளியிடப்பட்டது. ஆனால் பருகுவதற்கு அந்தக் கெட்டநீர் கூடக் கிடைக்காமல் — குறிப்பாகக் கோடைக்காலத்தில் தவிக்கும் மக்கள் கூட்டம் இதினினும் அதிகமாக இருக்கக்கூடும். இது அகில இந்திய ரீதியில் மாதிரி ஆய்வுகளை வைத்துச் சொல்லப்படும் ஒரு குத்து மதிப்பு.

தமிழகத்தைப் பொறுத்து 1947 சூன் மாதம் 2–ம் தேதி அப்போதிருந்த சென்னை மாநிலத்தின் குடிநீர் வடிகால் தேவைகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கையைத் தொடர்ந்து மாநில அரசு சில முயற்சிகளை மேற்கொண்டதெனினும் அவை முனைப்பாகச் செயல்படுத்தப்படவில்லை. இந்தக் குழுவுக்கு முன்னதாக 1943–லேயே இந்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது. நிலக்கோளின் வெப்பப் பகுதியில் அமைந்துள்ள காரணத்தால், இந்திய நாட்டில் குடிப்பதற்குத் தூய நீரை நாட்டு மக்கள் யாவர்க்கும் வழங்க வேண்டுவது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு அடிப்படைத் தேவை என்பதை அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் நம் நாட்டில் வகுக்கப்பட்ட நேரத்தில் இதன் முக்கியத்வம் வலியுறுத்தி எழுதப்பட்டதே தவிர, செயல் முறையில் இதற்கு முதன்மை தரப்படவில்லை.

கழகம் பொறுப்பேற்கும் வரை தமிழகமும் இந்த வகையில் மந்த கதியிலேயே சென்றுள்ளது. 1967 விருந்து படிப்படியாக இந்தப் பணிகள் விரிவும் விரைவும்

அடைந்து இன்று — நம் ஒப்பற்ற டாக்டர் கலைஞர் காலத்தில்—குடிநீர் வடிகால் வாரியமாகப் பரிணமித்து உள்ளது. குடி தண்ணீர் வழங்குதலைச் சமுதாயம் என்னும் உடம்பின் சுத்த ரத்தக் குழாய்களுக்கு ஒப்பாகவும், வடிகாலை கெட்ட ரத்தக் குழாய்களுக்கு இணையாகவும் இந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் சிலர் கருதுகின்றனர். இந்த இரண்டும் போதிய அளவு வளர்ச்சி பெறாத குறையுடம்பாக இன்று நம் சமுதாயம் காட்சியளிக்கிறது. இரு வகை ரத்த நாளங்களையும்போதிய அளவுக்கு வளர்ச்சி அடையச் செய்து, இந்தப் பணிக்கு அவர் தோற்றுவித்துள்ள அமைப்புத் தான் — இந்தியாவுக்கே முன்னோடியாக நம் தமிழகத்திற்கு மட்டுமே அமைந்துள்ள குடிநீர் வடிகால் வாரியம்.

கிராமக் குடிநீர்த் திட்டம்

நாட்டுப்புறங்களில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் சேர்த்து 26,072 குடிநீர்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 1936 மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. நமது ஆட்சி அமைந்த பின்னர் நாலாண்டுகளில் 15,190 புதிய குடிநீர்க் கிணறுகளும், 2491 மேல்நிலைத் தொட்டிகளும் உருவாக்கப்பட்டு உள்ளன. பதினைந்து ஆண்டுகளுக்கும் சேர்த்து அவர்கள் செலவழித்துள்ள தொகை ரூ.10.98 கோடி. நாலாண்டுகளில் நாம் செலவழித்துள்ள தொகை ரூ. 655.16 லட்சம். இதற்கு முன் வேறெப்போதும் இல்லாத வேகத்தை நடப்பு ஆண்டில் சிறப்பாகக் குடிநீர்த் திட்டம் பெற்றுள்ளது. புதிய கிணறுகள் தோண்ட, உள்ளவற்றை ஆழப்படுத்த, மேல்நிலைத் தொட்டிகள் கட்ட எனப் பல முனைகளில் இது வேகம் அடைந்துள்ளது. இதற்கென ரூ. 2.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குக்கிராமங்கள் உட்பட கிராமங்கள் எல்லாவற்றிற்கும் நீர்த் தொட்டிகள் வாயிலாக நல்ல தண்ணீர் வழங்க எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்பதை வரையறுக்கும் பணியில் வாரியம் ஈடுபட்டுள்ளது. விரைவில் இதற்கொரு திட்ட நகல் தயாரிக்கப்

துளைக் கிணறுகள்

படும். இதற்கிடையில் கோடை காலத்தில் சில பகுதிகளில் ஏற்படும் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை, குடிநீர் காரணமாக தொத்து நோய்களுக்கு இரையாகும் பகுதிகள் ஆகியவற்றைச் சீர் செய்யும் பணியை சில ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதற்கெனத் தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வழி வகைகளை வாரியம் ஆய்ந்துவருகிறது.

தரைக்கு மேலே ஓடும் நீரில் 94 விழுக்காடு நம்மால் முழு அளவில் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள நீரையும் தொடர்ந்து கட்டப்படும் பல சிறு நீர்த் தேக்கங்கள் முழு அளவ்ல் பயனுக்குக் கொண்டு வந்துவிடும். எனினும் மக்கள் பெருக்கத்தை, தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளும்போது எதிர் காலத்தில் தண்ணீர் தேவைக்கு நாம் அதிகமாக நிலத்தடி நீரைத் தான் நம்ப வேண்டியிருக்கும். நிலத்தடி நீரின் அளவு, அது கிடைக்கும் ஆழம் ஆகியவற்றைக் கணக்கிட நம் அரசு தோற்றுவித்துள்ள ஆய்வுப் பிரிவினரின் துணை கொண்டு ஏற்கனவே சில துளைக் கிணறுகள் வெற்றிகரமாகப் போடப்பட்டுள்ளன. இதைப் பெருமளவில் மேற்கொள்ள யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியோடு தமிழக அரசு அருமையான ஒரு திட்டத்தைத் தயாரித்து இருக்கிறார்கள்.

நகர்ப் புறங்களுக்குக் குடிநீர்

சுமார் 8850 துளைக் கிணறுகளைத் தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளில் தோற்றுவிப்பதன்மூலம் கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு பெருமளவுக்கு நீங்க வழி ஏற்பட்டுள்ளது. யூனிசெப்ஃ நிறுவனத்துடன் துவக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நமதரசு சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. விஞ்ஞான ரீதியாக நிலத்தடி நீரைக் கண்டறிந்து பயன்படுத்தும் முயற்சி, இந்தியாவில் வேறெங்கும் முறையாக மேற்கொள்ளப்படாத, தமிழகமும் நம் அரசு அமைவதற்கு முன் கண்டிராத ஒரு நல்ல திட்டமாகும். பெருஞ் செலவு செய்து கிணறுகளைத் தோண்டிய பின் நீரூற்றின்மையால் வறண்டு கிடக்கின்ற இடங்களைக் கணக்கிலெடுத்தால் எவ்வளவு பொருட்சேதம் இதனால் தவிர்க்கப்படுகிறதென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1971–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் நகர்ப்புற மக்கள் தொகை சுமார் ஒன்றேகால் கோடியாகும். இதில் சுமார் 70 விழுக்காடு மக்கள் தற்போது பாதுகாக்கப்பட்ட நல்ல குடி தண்ணீரைப் பெறுகின்றனர். முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சராசரி ஒரு கோடி ரூபாய் ஓராண்டுக்குச் செலவழிக்கப்பட்டிருப்பதை (குடிநீர் வடிகால் இரண்டிற்கும் சேர்த்து) கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் நாம் செலவிட்டுள்ள சுமார் 12 கோடி ரூபாயோடு ஒப்பு நோக்கினால் இது வகையில் நமதரசு செலுத்தியுள்ள கவனத்தை

வடிகால்

உணர முடியும். தற்போது வேலை நடந்துவரும் குடிநீர்த் திட்டங்கள் 81; வடிகால் திட்டங்கள் 9. புதிய திட்டங்களை மேற்கொள்ள ஆய்வுகள் நடத்தப்படும் கட்டத்தில் இருப்பவை 81. இன்னும் இரண்டு ஆண்டுகளில் நகர்ப்புற மக்கள் யாவரும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரைப் பெற்று விடுவர் என எதிர்பார்க்கலாம்.

சென்னை நகருக்குக் காவிரி நீர் 1972–73–ல் கிடைத்து விடும். நீண்ட நெடுங்காலக் காங்கிரசின் தயக்கத்திற்குப் பிறகு கழக அரசினால், கலைஞர் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தநேரத்தில் துணிந்து துவங்கிய வீராணம் திட்டம் சென்னை நகருக்கு எப்போதும் தாகம் ஏற்படாது காக்கும் ஓர் அருட் கொடையாக விளங்கும். சுமார் 21 கோடி ரூபாய் தமிழக அரசு இதற்குச் செலவிடுகிறது.

வடிகால் திட்டங்கள் இன்னும் போதிய வளர்ச்சியைப் பெற

வில்லை. கடந்த காலத்தோடு ஒப்பிடும்போது நம் காலத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது என்றாலும், தேவையை நோக்குகிற போது செய்யப்பட வேண்டியவை நிரம்ப உள்ளன. சுமார் பத்து விழுக்காடு நகர்ப்புறங்களே வடிகால் வசதிகளை இன்று பெற்றுள்ளன. நம்முடைய நகரங்கள் திட்டமிட்டு அமைக்கப்படாத காரணத்தால், எல்லா வீடுகளின் கழிவையும் சேர்த்து பூமிக்கடியில் இணைப்பதற்கு அதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது. மேலும் தண்ணீருக்குத் தாகம் எடுக்கின்ற அளவுக்கு சுகாதார தாகம் நம் மக்களுக்கு இன்னும் ஏற்பட்டபாடில்லை. அத்தோடு நகராட்சி மன்றங்களும், பேரூராட்சிகளும், செலவை ஈடுகட்டுமளவுக்கு, வருவாயைப் பெருக்க குடிநீர்த்திட்டத்தில் வாய்ப்பு உள்ளது போல வடிகால் திட்டத்தில் இல்லாமையால், இதனை மேற்கொள்ளப் பொதுவாகத் தயக்கம் காட்டுகின்றன.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள இடங்களில் கழிவுநீரைக் கொண்டு தீவன உற்பத்தி மட்டுமே ஓரளவு தற்போதைக்குச் செய்யப்படுகிறது. இதைப் பெருமளவுக்குச் செய்ய முடியும். சென்னையில் மட்டும், மாநகராட்சியின் கொடுங்கையூர் புல் பண்ணையில் பயன்படுத்தியது போக ஒரு நாளைக்குச் சுமார் 40 மிலியன் காலன் கழிவு நீர் வீணாகக் கடலில் கலக்கிறது. வீராணம் நீர் கிடைத்த பிறகு இந்தக் கழிவு நீரின் அளவு இரட்டிப்பாகும். இதைச் சுத்திகரிப்புச் செய்து பாசனத்திற்குப் பயன்படுத்துவதானால் சுமார் 7500 ஏக்கர் நிலம் ஆண்டு முழுமைக்கும் பாசனம் பெறும். தொழிற்சாலைகளின் தேவைகளுக்கும் இதைப் பயன்படுத்த முடியும். வளர்ந்தோங்கிய மேலை நாடுகளில் இந்த வகையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளார்கள். எதிர் காலத்தில் நாமும் வாரியத்தின் மூலம் இந்தப் பணிகளை மேற்கொள்ள இயலும்.

பல்வேறு திட்டங்களுக்குமாக இந்த ஆண்டு வழிவகை காணப்பட்டுள்ள நிதியளவு ரூ. 18.31 கோடியாகும். மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீண்ட நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்ட இந்தத் துறைக்கு நமது முதல்வர் தந்துள்ள முதன்மையும் அதைச் செயல் படுத்துவதற்கு அவர் தோற்றுவித்துள்ள அமைப்பும் இன்று பிற மாநிலத்தவரின் கவனத்தையும் மத்திய அரசின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. எனினும் பிற மாநிலத்தவரும் இந்திய அரசும் இன்னும் முழுமையாக உணராமலிருக்கின்ற — ஆனால் உணர்ந்து தீர வேண்டிய ஒன்று தமிழகத்தின் தண்ணீர்ப் பற்றுக்குறை. காவிரியன்னை கருநாடகத்தில் மூளியாகி விடாமல் தமிழ் மண்ணிற்கு வந்து தவழ்ந்தாக வேண்டும்; அத்தோடு கங்கையும் அதனுடன் கூடிக் குலவிடல் வேண்டும். அன்று சிவன் முடியிலேயிருந்து கங்கையைப் பகீரதன் கொணர்ந்தான் என்பது புராணம்; ஆனால் இன்று தில்லிச் சக்தியிடமிருந்து அதனைத் தெற்கே கொணரும் முயற்சியில் கலைஞர் ஈடுபட்டிருப்பது யாவரும் அறிந்துள்ள ஒரு செய்தி. சிவனைவிடச் சக்தி ஆற்றல் மிக்கது என்கிறார்கள். அந்தச் சக்தியைப் புறங்காணும் ஆற்றல் இந்த நாட்டில் ஒருவருக்குத்தான் உண்டு. அந்த ஒருவர் பின் நிற்க உறுதி பூணுவோம்.

★

நாகரிகத்தின் தந்தை!

சமதர்மம் வெற்றிபெற வேண்டுமானால் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் முதலாளித்துவ அமைப்பில் இருப்பதைவிட அதிகமாக இருக்கவேண்டும்.

— ஸ்டாலின்

வேளாண்மை துவங்கியவுடன் பிற தொழில்களும் தோன்றுகின்றன. எனவே உழவர்கள்தான் நாகரிகத்தின் தந்தைகள்.

— டேனியல் வெப்ஸ்டர்

எங்கள் உணர்வு

சிலபேருக்கு நினைப்பு உயர்ந்தால் நிலை மாறிவிடும். ஆனால் நாங்கள் முன்பு எந்த நிலையில் இருந்தோமோ அந்தநிலை மாறாமல் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

மிதிலையை ஜனகன் ஆண்டு கொண்டிருந்த நேரத்திலே, அவன் தன்னை எல்லோரும் ராஜாதிராஜன், ராஜமார்த்தாண்டன் என்று அழைப்பதை விரும்பவில்லை. ராஜரிஷி என்று அழைக்கப்படுவதைத்தான் பெருமையாகக் கொண்டான். அவன் வேதாந்தி என்று அழைக்கப்படுவதில்தான் வேந்தன் என்று அழைக்கப்படுவதைவிட அதிகமான பெருமை கொண்டான்.

நாங்கள் அமைச்சர்கள் என்ற உணர்வைவிட, அலைந்துதிரிந்தவர்கள் என்ற உணர்வைத்தான் கொண்டிருக்கிறோம்.

— பேரறிஞர் அண்ணா

இன்பம்

யானோர் தமிழன் என்பதால் விம்மி,
ஏனோ நெஞ்சம் இறும்பூ தெய்தும்
உலகில் முதன்முதல் உயிர்த்த மொழிகளுள்
சிலவே இன்றும் நிலவுந் திறத்தன.
தென்மொழி, அவற்றுள் துடிப்புடன் விளங்கும்
என்மொழி, தமிழ்தான்! எனவே மகிழ்வேன்
நோய் நொடி ஆயிரந் தூய்மையைத் தகர்க்கினும்
தாய்மொழி அவற்றைத் தாங்கிடுந் தகையது!

தன்னிற் பிரிந்து தனிக்குடி யாகிய
கன்னடந் தெலுங்கு துளுமலை யாளம்
தழைத்திடத், தானும் பிழைத்திடுந் தன்மையால்
கிளைத்திடும் ஆறுகள் கேண்மையாய் நிரம்பித்
தன்புகழ் குறையாத் தட்நதி யாகிய
அன்புசால் காவிரி ஆற்றினைப் போன்றது!

ஆன்றவிந் தடங்கியோர் அவைதனிற் கூடிடச்
சான்றோர் பலருந் தமிழா ராய்ந்தனர்.
பெண்பாற் புலவரும், ஆண்பாற் புலவரும்
கண்போல் தமிழைக் காத்து வளர்த்தனர்.
ஓலையில் தீட்டிய உயர்ந்த இலக்கியச்
சோலையில் புகுந்து சூழ்ச்சிப் பகைவர்
நெருப்பிலும் நீரிலும் விருப்புடன் அழித்தனர்!

இருப்பவை சிலவே; எனினும், ஒருவன்
அயுள் முழுவதும் அரிதிற் கற்கிலும்,
ஓயுதல் அன்றி உணரவொண் ணாதே!

வீரமும் காதலும் வெற்றியும் மணமும்
ஈரமும் ஈகையும் இணைந்த வாழ்வினில்
வேந்தரும் மக்களும் விழைவுடன் திளைக்க—
ஏந்திய புகழில் நீந்திய தமிழகம்—
இடையினில் நுழைத்த வடவரின் சமய
நீதியும் மதமும் பேதம் நிகழ்த்திட,
இடர்தனில் மூழ்கி, எழும்வழி யறியாது.
சாதிச் சமூக நிம்மதி யழிந்து
ஒற்றுமை குலைந்து, கற்றது மறந்து,
குற்றுயி ராகிக், கூனிக் குமைந்திட
முரசிலே மூன்றும், தமிழிலே மூன்றும்,
தோன்றிய தூய்மைச் சங்கமோர் மூன்றும்
ஊன்றிப் பல்கிய உயர்தமிழ் நாட்டில்
குடிதழுவி நின்ற கோனாட்சி மறைந்து,
கடிதோச்சும் மாற்றார் படைநடத்தி வந்து,
வேற்று மொழிகள், விரவு நாகரிகம்
தோற்று வித்ததால் துவண்டது தமிழகம்!

ஐம்பெரும் காப்பியம், அகம்புறங் கூறும்
செம்பொருள் எட்டுத் தொகையும், சீரிய
பத்துப் பாட்டும், பதினெண்கீழ்க் கணக்கும்
எத்தனை! இலக்கியம், இதிகாச புராணம்,
சித்தர் பாடலும், சிவன்புகழ் பேசியே
பத்தியை வளர்க்கும் பாசுரம் மல்கிய

பொங்குக!

திருவா சகமுதல் தேவா ரங்களும்,
திருவாய் மொழியுடன் திவ்யப்ர பந்தமும்,
பெரிய புராணம், திருவிளை யாடல்,
அரிய திருப்புகழ், உரிய பெருமைசேர்
கம்பரா மாயணக் காவியம், பாரதம்,
அன்பே சிவமெனும் திருமூலர் மந்திரம்,
அருட்பெருஞ் சோதியால் இருட்பகை ஓட்டிட.
அருட்பா நல்கிய அடிகளார் வாக்கும்
மக்களின் வாழ்க்கைச் சிக்கலை அறுக்கத்
தக்க அறிவுரை மிக்க வழங்கின!

எனினும், என்றும், இனிதாய், எளிதாய்,
மனித குலத்தினர் மனத்துட் கொள்ளவும்,
இல்வாழ் வார்முதல் பல்வேறு துறைகளில்
செல்வோர் அனைவரும் செயல்பட் டெழுதவும்,
மன்னர், அமைச்சர், நாட்டோர், பகைவர்,
நன்னடைச் சிறியோர், நயத்தகு பெரியோர்,
காதலர், காமுகர், கோதிலாத் துறவியர்,
சீதளச் செம்முக மாதரார்—யாவரும்
படித்துணர் தற்காம் இடித்துரை நிரம்பிட—
வடித்த ஈரடிப் படித்தேன் குறட்பா
அருளிய வள்ளல் திருவள் ளுவர்போல்
மருளகற்ற வல்ல பெருமான் பிறரிலர்!

ஏசு பிறந்து மாசிலா நெறியைக்
காசினி யோர்க்குக் கழறிடு முன்னரே
வாழ்வு முறைகளை வகுத்துத், திட்டமாய்
ஆழ்பொருள் நிறைந்திட, அனுபவ உண்மைகள்
ஈரா யிரமாண் டிழிந்த பின்னரும்
சீரா யின்றும் சேர்ந்திடும் வண்ணமாய்த்
தந்து சிறந்த எந்தைமூ தாதைச்
செந்தமிழ்ப் பெரியோன் சீர்வள் ளுவனின்
பிறப்பும், வளர்ச்சியும், சிறப்பாய் உணர்ந்திலோம்!

அறப்பால், பொருட்பால், இன்பத் தின்பால்—
எத்துணை அறிவோம்? ஏதும் அறிகிலோம்!
நற்பே ருகப், பொற்புறு பாக்கள்
அற்பரால் அழியா திருந்தன! கற்பவர்
தமிழராய் மட்டும் தனித்திடா வண்ணம்,
இமிழ்கடல் உலகின் எண்ணற்ற மொழிகளில்
ஆக்கினர் நல்லோர்! அறிவு கமழ்ந்திடத்
தேக்கிய தொண்டினல் திருக்குறள் வாழ்ந்தது!

வள்ளுவன் காட்டிய வாழ்வு நெறிதனைத்
தெள்ளு தமிழினில் தீங்கற உணர்ந்தோர்
மக்கள் தொகையில் மிக்க சொற்பமே!

தக்க வழிகளில் தாங்கிப் பரப்பிட
முனைப்பும், முயற்சியும், நினைப்பும், நேரமும்
இனிப்பாய் எண்ணமும், ஈடேற்றச் செயலும்,
பாமரர் அறியப் பக்குவச் சொல்லும்,
தாமறிந்த யாவும் தமிழருக் குரைத்திடும்
தண்ணளி சுரக்கும் தகைசால் மனமும்
எண்ணிலா ஆண்டுகள் யார்க்கும் இல்லையே!



கவிஞர் ஆனந்தம்

கலைஞர் கூறிய கற்பனைக் கொப்பவே—
நிலைமை மாறிட நேர்வழி இலாமையால்,
பொறுமை மீறினள் அருமைத் தமிழ்மகள்!
பெருமைசேர் வள்ளுவப் பெருந்தகை தன்னை
அன்புடன் விளித்துமே, அகமிக மகிழ,
''இன்பச் செல்வனே! இனிநீ உலகினிற்
பிறந்து குறள்நெறி பேணிடுங் காலம்
விரைந்த தாதலின் நிரந்தினிது சொல்லத்
தோன்றுக மகனே! தொல் புகழ்க் காஞ்சியில்
ஈன்ற பயனையான் எய்திட!'' என்றனள்!

அவ்வா றுதித்த அண்ணன் வழிதனைச்
செவ்விய முறையில் திறமுடன் பற்றி
நடக்கிறோம்; வாழ்கிறோம்; நற்றமிழ் நாட்டில்
இடக்கரை முடக்கினோம்; இனிமை பொங்கவே!

இரட்டைக் காளைகளில் ஒண்ணுதானே இருக்கு ! இன்னொண்ணு எங்கே ?

தீர்ப்பும் - நீதியும்

தீர்ப்பு என்றாலே நியாயந்தான் என்று எண்ணிக் கொள்கிறோம். தீர்ப்பு என்பதே நியாயமாக இருக்குமானால் ஒரு கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பும் அதற்கு மேல்கோர்ட்டில் அளிக்கப்படும் தீர்ப்பும் ஒரே விதமாக இருக்கவேண்டும். ஐம்பது வருஷங்களுக்கு முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கும், அறுபது வருஷங்களுக் முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கும் மாறுபாடுகள் இருக்க நியாயமில்லை. ஏனென்றால், நீதி என்பது நிலையானது.

ஆகையினால் தீர்ப்பு என்பது அந்த நேரத்தில் நீதி மன்றத்திற்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல்கள் அடிப்படையில் அவர்கள் எடுக்கின்ற முடிவே தவிர - அதுதான் நீதி, அதற்குஅப்பாலே நீதி கிடையாது என்று நம்மை நாமே குழப்பிக் கொள்ளக்கூடாது.

★

நீங்கள் 20 வருடம் செல்லப் பிள்ளையாக இருந்தீர்கள். இப்போது அந்த நிலையில் இல்லாததை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பெரிய வீட்டில் இருந்துவிட்டு அந்த வீடு ஏலத்தில் போக, வேறு ஒரு வீட்டில் குடியிருக்க நேரிடுகிற போது சுற்றிச் சுற்றிப்பார்த்து ''சீ! இந்த இடத்திலா இருப்பது'' என்றுதான் தோன்றக் கூடும்.

— அறிஞர் அண்ணா

நினைவுச் சின்னம்

டோக்கியோ, ஜப்பானின் தலைநகரம். இம்மாநகரில் உள்ள சிபுயா இரயில் நிலையத்தில் ஒரு வெண்கல நாய் உருவச் சிலை உள்ளது. இந்தச் சிலையின் வரலாறு நெஞ்சை உருக்க வல்லதாகும். சிலையாக வைக்கப்பட்டுள்ள நாயின் பெயர் ஹசிகோ. 1924–ல் டோக்கியோ இம்பீரியல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் டாக்டர் உளேனேவுக்கு அவரது மாணவர்களால் பரிசாக வழங்கப்பட்டது. டாக்டர் உளேனே பல்கலைக் கழகம் போவதற்கு சிடியா ரயில் நிலையத்திற்கு வந்துதான் ரயில் ஏறுவார்; இறங்குவார். தன்னுடன் தன் அன்பு நாயை உடன் அழைத்துப் போவது இவர் வழக்கம்.

முதிய வயதில் பேராசிரியர் இறந்து போனார். அவர் இறந்த பின்னும் நாய் தொடர்ந்து ரயில் நிலையத்திற்குப் போய்க் கொண்டிருந்தது. அவர் இறந்ததற்குப் பின் பத்தாண்டுகள் வரை நாய் ரயில் நிலையத்திற்குப் போவதும், அங்கு இரவு வரை காத்திருப்பதும் வழக்கமாகிவிட்டன. வீட்டார்கள் எவ்வளவோ முயன்றும் அதனைத் தடுத்துப் பார்த்தார்கள். நிலையத்திற்கு வருவோரும்போவோரும் தன் எஜமானனைப் பார்த்து ஏங்கும் இந்த நாயைப் பார்த்தார்கள். சில காலத்திற்குப் பின்னர் நன்றியின் சிகரமான இந்த நாய் இறந்தது. அதன் நினைவாக அங்குள்ள பயணிகள் எழுப்பிய நினைவுச் சின்னந்தான் இன்றும் அங்கே இருந்து வருகிறது. இந்த ஹசிகோ என்ற நாயின் கதை, ஜப்பான் நாட்டுப் பள்ளிப் புத்தகங்களிலும், திரைப் படங்களிலும் நீங்கா இலக்கியமாக நிலை பெற்றுவிட்டது.

பிரிட்டனில் இன்னொரு உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி நடந்துள்ளது. இந்த உண்மை வரலாற்றின் நாயகன் 'ஸவான் சீ ஜாக்' என்ற நாயாகும். இந் நாய்க்கு 'ஸ்வான் சீ' மாநகராட்சியினர் அழகான நினைவுப் படிமம் ஒன்றை 1934–ல் எழுப்பி உள்ளார்கள். உள்ளூர் மருத்துவமனை கட்டுவதற்காக, ஊர் ஊராகச் சுற்றித் தன் கழுத்து உண்டியலில் நிதி நிரப்பிக் கொண்டு வருமாம் ஜாக். பனிபடர் காலத்தில் உறைந்து போன ஆற்றின் மேல் விளையாடிக் கொண்டிருந்த இருபத்தேழு பேர், பனியிடுக்கில் மூழ்கி விட்டனராம். அவர்களைக் காப்பாற்றும் தீரச் செயலை ஜாக் சாதித்ததாம். இந்த அரிய சாதனையின் நினைவாக ஜாக்கிற்கு அவ்வூர் மாநகராட்சி ஓர் அழகிய நினைவுச் சின்னம் எழுப்பி உள்ளனர்.

இவை இரண்டும் இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்தவை. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் நாயின் அரிய தியாகத்திற்காக நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த நாய்க்குரிய நடுகல் சின்னம் வடாற்காடு மாவட்டம் செங்கம் வட்டம் எடுத்தனூர் என்னும் ஊரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினரால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

தொழுவத்தில் கட்டப்பட்டுள்ள எருமைகளைக் காத்து நிற்கிறான் கருந்தேவக் கத்தி என்ற பெயருடைய வீரன். இவன் பக்கத்தில் இவனது நாய் 'கோ இவன்' நின்று கொண்டிருக்கிறது. அப்போது சில திருடர்கள் எருமைகளைக் களவாட வருகிறார்கள். வீரனுக்கும் திருடர்களுக்கும் இடையே கைகலப்பு. பக்கத்தில் குரைத்துக் கொண்டிருந்த 'கோ இவன்' பகைவர்களைப் பார்த்துச் சீறுகிறது. கள்வர்களைக் கடித்துக் குதறுகிறது. வீரனையும், நாயையும் திருடர்கள் கொன்று விடுகிறார்கள். பொழுது விடிந்தவுடன் பொதுமக்கள் புண்பட்ட வீரனின் சடலத்தினையும், வேல் குத்துண்ட நாயின் சடலத்தையும் பார்க்கிறார்கள். எருமைகளைக் காப்பதற்காக உயிர் நீத்த இருவரது வடிவையும், ஒரு பாறையில் செதுக்கிச் சாதனையையும் பொறித்து நடுகல் நட்டு வழிபடத் தொடங்குகிறார்கள். இந்த நடுகல் 'வேடியப்பன்' எனும் பெயரில் இன்னும் இவ்வூரில் வைத்து வணங்கப்படுகிறது. அந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்ட வாசகம் இதுதான்:

''கோவிசைய மயிந்திர பருமற்கு
முப்பத்து நான்காவது வாணகோ
அரைசரு மருமக்கள் பொற
எருக்கைஆர் இளமகன் கருந்
தேவக்கத்தி தன்னெருமைப்
புறத்தே
வாழப் பட்டான் கல்
கோவிவன் னென்னுந் நாய்
இருகள்ளனைக் கடித்துக்
காத்திருந்த வாறு''

க.ப. அறவாணன் எம்.ஏ,

வள்ளுவரின் சிந்தனையால் உலக மெல்லாம்
  வளமார்ந்த குறள்நூலைப் பெற்றோம்! வீழும்
வெள்ளருவி வேகத்தில் மின்சா ரத்தை
  விஞ்ஞானி சிந்தனையால் பெற்றார்! கீழோர்
எள்ளிநின்ற சாக்ரடீஸ் 'ஏன்?ஏன்?' என்ற
  எழுச்சிமிகு சிந்தனையால் புரட்சி செய்தார்!
வெள்ளிநிலாக் குளிர்உலகில் குடியி ருக்க
  வித்தகர்கள் சிந்தனையால் வாயில் செய்தார்!

மனிதன்ஒன்றே சிந்திக்கும் விலங்கு; வாழும்
  மாடுகட்கும் ஆடுகட்கும் அதுதான் உண்டா?
கனிதானே மரத்துக்கோ அழகே! எண்ணும்
  கற்பனைகள் விளைகின்ற மூளை யொன்றே
மனிதனுக்கே அழகன்றோ? இதனைக் கொண்டு
  மண்ணகத்து விலங்கெல்லாம் அடிமை செய்தான்!
கனிஆரஞ் சுக்கோள உலகை மாற்றிக்
  கவின்கொஞ்சும் எழில்வண்ணம் படைத்து
விட்டான்!

பறவையைப்போல் பார்ப்பதற்கே இறக்கை வைக்க
  படைப்பாளன் ஏன்மறந்தான்? மனித னுக்குச்
சிறகின்றிப் போனாலும் அறிவைக் கொண்டு
  சீர்மிக்க வான்கப்பல் படைத்தான் அன்றோ?
தெறிக்கின்ற அணுவுள்ளே சக்தி யெல்லாம்
  தெரியாமல் ஒளித்தானே படைத்தோன்; மூளைக்
குறிகாட்டும் சிந்தனையால் அதைப்பி ளந்து
  குவித்தவன்யார் விந்தையெலாம்? மனிதன்
அன்றோ?

ஓவியனின் சிந்தனைப்பூ மலரு மானால்
  ஒண்திரையில் பொற்காட்சி உருவெ டுக்கும்!
காவியத்துக் கவிஞனவன் கற்பனைத் தேர்
  காலத்தால் அழியாத பாதை செய்யும்!
வாவியிலே ஏதேதோ விளையும்; ஆனால்
  வனப்புமிகு தாமரைதான் எழிலைச் சேர்க்கும்!
நாவென்றும் நாசியென்றும் உறுப்போ உண்டு!
  நமக்கிங்கே மூளையொன்றே அழகைக் கூட்டும்!

வானகத்தின் மின்னல்ஒளி மழையைச் சேர்க்கும்!
  வாயகத்துப் புன்னகையோ மகிழ்ச்சி சேர்க்கும்!
தேனிதழாள் காதல்விழி மயக்கம் சேர்க்கும்!
  தினைக்காட்சி கிளிகட்கோ களிப்பைச் சேர்க்கும்!
கானகத்தின் அகில்தோப்பு மணத்தைச் சேர்க்கும்!
  காவிரியின் நடைப்போக்கோ வளமை சேர்க்கும்!
சேனைகளின் மானவெறி வெற்றி சேர்க்கும்!
  சிந்தனையே மனிதனுக்குப் பெருமை சேர்க்கும்!

கா.வேழவேந்தன் எம்.எல்.ஏ.

யாகியாகான் நல்லெண்ணத்தை நாம் புரிந்துகொள்ளவில்லை என்று பெரியவர் எழுதிவிட்டார். நாடு எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று 'இவாள்' குறட்டை விடுருளோ ?



உஸ்... இப்படித்தான் முத்தம் கொடுக்கிறதா ? யாரும் பார்த்தா என்ன நினைப்பாங்க - தள்ளி நில்லு !

காலத்தின்
அடிச்சுவட்டிலே....!
பி.சி.கணேசன்



"டொக்...டொக்..."

அந்த நள்ளிரவில் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டு வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான் வயோதிக ஹமீது. சரசரக்கும் 'பூட்ஸ் சப்தம்' காதில் விழுந்தவுடனேயே அவனுடைய விழிகள் ஆயிஷாவைப் பார்த்து மிரள மிரள விழித்தன. சந்தேகமில்லை. பாகிஸ்தானின் ஆக்ரமிப்புப் படையினர் தங்களுடைய இரவு வேட்டைக்குப் புறப்பட்டுவிட்டார்கள் என்பது சில விநாடிகளிலேயே ஹமீதுக்குப் புலனாயிற்று. கதவைத் திறக்க சற்று தாமதித்தாலும் வீட்டை அந்தப் பாதகர்கள் தீக்கிரையாக்கி விடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும். கதவைத் திறந்தாலோ—அதை நினைத்த போதே அவன் நெஞ்சம் நடுங்கியது.

வெளியே படை வீரர்கள் ஆக்ரோஷத்துடன் இடி முழக்கம் போல் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஹமீது மெதுவாக மகள் ஆயிஷாவிடம் நெருங்கி அவளைத் தட்டி எழுப்பினான். கலவரங்கண்டு விழித்தவளைப் போல் எழுந்த ஆயிஷா "என்ன தாதா? என்ன ஒரே சத்தமாக இருக்கிறது?" என்று கேட்டாள்.

"உஷ்..." என்று அவள் வாயில் கையை வைத்து அவளைப் பேச விடாமல் செய்த ஹமீது பரபரவென்று அவளை இழுத்துப்போய் சமயலறையின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோணிப் பைகளுக்குப் பின்னால் மறைய வைத்து விட்டு, "வெறி நாய்கள் வேட்டைக்குப் புறப்பட்டு விட்டன. அந்த நாய்கள் இங்கிருந்து போகும்வரை நீ மூச்சு விடுவது கூட வெளியே கேட்கக் கூடாது." என்று எச்சரித்துவிட்டு,

‘அல்லா அல்லா’’என்று கைகளைப் பிசைந்தபடியே கதவைத் திறக்க வந்தான்.

அதற்குள் ‘பட் பட்’ என்று துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசையும் கேட்டது. ஹமீதின் நடுங்கும் கரங்கள் தாழ்ப்பாளை விலக்கின. வெளியே இருந்த பாகிஸ்தான் சிப்பாய்கள் பலமாகக் கதவைத் தள்ளியதால் அது ஹமீதின் மண்டையில் மோதி காயப்படுத்தியது. ஒரு கரத்தால் அப்படியே தலையை அழுத்திப் பிடித்தபடி உள்ளே ‘திபு திபு’ என்று நுழைந்த ஐந்தாறு பாகிஸ்தானிய சிப்பாய்களுக்கும் வழிவிட்டு நின்றான் ஹமீது.

‘‘எங்கே உன் மகன் சலீம்?’’ என்று கர்ஜித்தான் ஒருவன்.

‘‘காலையில் வேலைக்குப் போனவன் இன்னும் திரும்பி வரவில்லை’’ என்று நடுங்கும் குரலுடன் பதிலளித்தான் ஹமீது.

‘‘திருட்டு நாயே! உன் மகன் என்ன வேலைக்குப் போகிறான் என்று எங்களுக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்? நீ ஒரு மதத் துரோகி! அவன் ஒரு தேசத் துரோகி. அவன் இருக்குமிடத்தைச் சொல்லா விட்டால் உன் வீட்டையே தீ வைத்துக்கொளுத்தி விடுவோம்’’ என்று சத்தமிட்டான் மற்றொரு சிப்பாய்.

அதற்குள் வேறு சில சிப்பாய்கள் வீடு முழுதும் தேடத்தொடங்கினார்கள். அருகிலிருந்த அறைக்குள் சென்ற ஒரு சிப்பாய் ‘ஹா ஹாஹா’ என்று உரத்துச் சிரித்தபடியே கையில் ஒரு படத்துடன் வெளியே வந்தான்.

வந்தவன் அந்தப் படத்தை மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்த அரிக்கன் விளக்கின் வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்து,‘‘பார்த்தீர்களா படத்தை? இவன் ஒரு தேசத் துரோகி என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?’’ என்று கேட்டு விட்டு மற்றவர்களைப் பார்த்து இடி முழக்கம் போல் உரத்துச் சிரித்தான்.

‘‘ஐயோ! அந்தப் படத்தை மட்டும் ஒன்றும் செய்யாதீர்கள். அதற்கு விலையாக என்னுடைய உயிரையே பறித்துக் கொண்டாலும் எனக்குச் சம்மதம்,’’ என்று கூறிக் கொண்டே ஹமீது அந்தப் பாகிஸ்தான் போர் வீரனின் கால்களை இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

‘‘துரோக நாயே...’’ என்று தனது அழுத்தமான பூட்ஸ் கால்களால் ஹமீதை எட்டி உதைத்துத் தள்ளிய அந்தப் போர்வீரன் அந்தப் படத்தின் மீது மூன்று முறை காறி உமிழ்ந்து விட்டு ஆவேசமாகத் தரையில் அதை வீசி அடித்தான். படத்தின் கண்ணாடி சுக்கல் நூறாக நொறுங்கி உள்ளேயிருந்த படம் தனியாக ஒரு மூலையில் போய் விழுந்தது.

அதற்குள் மற்றொரு பாகிஸ்தானியப் போர் வீரன் அந்தப் படத்தைத் தனது பூட்ஸ் கால்களால் மிதித்தபடி ‘‘இந்தத் திருட்டுக் கழுதை தன்னுடைய மகன் எங்கே போயிருக்கிறான்— என்ன செய்கிறான் என்பதைச் சாமான்யமாகச் சொல்ல மாட்டான். நான் இப்போது அவனைச் சொல்ல வைக்கிறேன் பாருங்கள்,’’ என்று கூறிக் கொண்டு வயோதிக ஹமீதின் தாடியை ஒரு கையிலும் தலை மயிரை மற்றொரு கையிலும் பற்றி இழுத்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் பலங் கொண்ட மட்டும் கால்களால் உதைத்தான். ‘அல்லா, அல்லா’ என்கிற முனகலைத்தவிர, ஹமீதின் வாயிலிருந்து வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை.

..உள்ளே நுழைந்த போர் வீரர்களுக்குத் தலைவன் போலிருந்த ஒருவன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, ‘‘வீட்டைச் சோதனை இடுங்கள். இந்தத் துரோகிகளின் நடவடிக்கைகள் பற்றிய தஸ்தாவேஜுகள் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்க்கலாம்’’ என உத்தரவிட்டான்.

ஓய்வுக்கு நிழல் காணப் பெண்டிர் பின்னே ஓடிவரும் நிழல் அருமை!

இன்னொரு போர் வீரன் ஹமீதைப் பிடித்து அருகிலிருந்த தூணில் இரண்டு கைகளையும் பின்னால் சேர்த்துக் கட்டிப்போட்டான்.

ரத்தக் காயங்களுடன் துடி துடித்துக் கொண்டிருந்த ஹமீது ''பாவிகளே! நீங்கள் எங்களை மட்டும் கொடுமைப் படுத்தவில்லை. சகோதர பாசத்தை போதித்த இஸ்லாமிய தர்மத்திற்கே களங்கம் ஏற்படுத்துகிறீர்கள்,'' என்று முக்கி முனகிச் சொன்ன வார்த்தைகள் அந்தப் போர் வீரர்கள் எவருடைய செவியிலும் விழவில்லை.

தலைவன் போல் இருந்தவன் சிகரெட்டை சுவாரஸ்யமாகப் புகைத்துக் கொண்டே அருகிலிருந்த கட்டிலில் அமர்ந்தான். மற்ற நான்கைந்து போர் வீரர்களும் வீடு முழுவதும் சோதனை போடத் தொடங்கினார்கள்.

ஹமீதின் நெஞ்சம் படபடத்தது. அடுத்து நடக்கப் போகும் பயங்கர நிகழ்ச்சியை எண்ணிய போது அவனுடைய இதயமே வெடித்து விடும் போல் இருந்தது.

திடீரென்று சமையலறைக்குள்ளிலிருந்து 'வீல்' என்ற சப்தம்.

ஆத்திரத்தால் நடு நடுங்கிய ஹமீது கட்டிலில் வீற்றிருக்கும் படைத் தலைவனைப் பார்த்து ''ஹுசூர்! உங்களுக்கும் பெண்டு பிள்ளைகள் இருக்குமென்று நம்புகிறேன். உள்ளே என் மகள்... அவளை மட்டும் விட்டு விடுங்கள்'' என்று கூறி முடிப்பதற்குள்ளாக வெறிச் சிரிப்பு சிரித்த படைத் தலைவன் இரையைக் கண்டுவிட்ட புலி மோப்பம் பிடித்துப் பாயத் தயாராவதைப் போல சமையலறைக் கதவை நோக்கிப் பாய்ந்தான்.

''ஐயோ அல்லா அல்லா... தாதா தாதா'' — ஆயிஷாவின் குரல் அந்த நள்ளிரவில் பயங்கரமாக எதிரொலித்தது.

''அயோக்கியர்களே! அவள் உங்கள் சகோதரி'' எனக் கூச்சலிட்ட ஹமீது கட்டுகளை அறுத்துக்கொள்ளும் வேகத்துடன் தனது முழு பலத்தோடும் திமிறினான்.

ஆயிஷாவின் கூச்சல் உச்சக் கட்டத்தை அடைந்து, பிறகு, படிப்படியாகத் தாழ்ந்து, முனகலாகி முடிவில் அமைதியாயிற்று.

'அல்லா அல்லா' என்று ஹமீது ஆண்டவனை ஸ்மரணை செய்தபடியே மயக்கத்தில் ஆழ்ந்தான். வெளியே வானத்தில் ஐந்தாறு விமானங்கள் தாழ்வாகப் பறந்து வரும் ஓசை பயங்கரமாகக் கேட்டது. சில வினாடிகளுக்கெல்லாம் ''டமார் டமார்'' என்று குண்டுகள் வெடித்தன.

ஃ ஃ ஃ

ஹமீது மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது அந்த வீடு நிம்மதியில் ஆழ்ந்திருந்தது.

சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளையும் ஓரத்தில் விழுந்து கிடந்த படத்தினையும் ஹமீதின் கண்கள் ஏக்கத்தோடு நோக்கின. ''ஷேக், தங்களுக்கு நேர்ந்த இந்த அபச்சாரத்தைத் தடுக்க முடியாமல் செயலற்றுப் போன என்னை மன்னிப்பீர்களா?'' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

அந்தப் படத்திலிருந்த பங்களா பந்து ஷேக் முஜிபுர் ரகிமான் எவ்விதச் சலனமுமின்றிப் புன்னகையோடு காட்சியளித்துக் கொண்டிருந்தார். அந்தப் படத்தையே வெகு நேரம் வரையில் உற்றுப் பார்த்துக கொண்டிருந்தான் ஹமீது. பிறகு படத்திலிருந்த முஜிபுர் ரகிமானின் உருவத்தைப் பார்த்துத் தனக்குத் தானே பேசிக் கொண்டான். ''பாபுஜி, அன்றைக்கு நீங்களும் நானும் செய்த மகத்தான தவறின் பலனை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் முஸ்லீம்கள் என்பதற்காக நம்மை ஒரு தனி தேசமாகக் கருதி இருபதாண்டுகளுக்கு முன் நாம் நடத்திய போராட்டம் மகத்தான வெற்றி பெற்றதாக எண்ணி, அப்போது குதூகலித்தோம். அதன் விளைவு... முஸ்

ஓடிவரும் ரயிலுக்குப் போடுகின்றார் புதுப்பாதை!

லீம்கள் என்பதாலேயே நாம் ஒரு தேசமாக வாழ முடியாது என்ற உண்மையினைக் காலம் நமக்கு உணர்த்தி விட்டது. முஸ்லீம்கள் முஸ்லீம்களையே கொல்லுகிறார்கள். மரியாதையுடன் போற்றப்பட வேண்டிய முஸ்லீம் பெண்கள் முஸ்லீம்களாலேயே மிலேச்சத்தனமாக மானபங்கப் படுத்தப் படுகிறார்கள்... பாபுஜி, நமது கரங்களில் படிந்த ரத்தக் கறையினை நமது ரத்தத்தாலேயே தான் கழுவிக் கொள்ள வேண்டுமென்பது அல்லா இட்டுவிட்ட கட்டளை. அன்றைக்கு நான் மதத்தைக் காக்கப் போராடுவதாக எண்ணி சொல்லக் கூசும் பாவங்களையெல்லாம் செய்தேன். அந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தமாக நான் செயலற்றவனாக...ஐயோ'' எனப் புலம்பிக் கொண்டு 'ஓ' வென்று கதறி அழுதான் ஹமீது. வெகு நேரம் வரை அவனுடைய விசும்பல் நிற்கவில்லை.

இரவு முடிவுக்கு வந்து பகல் ஆரம்பமாகப் போகிறது என்பதனை அறிவித்துப் பட்சி ஜாலங்கள் இனிய கீதம் இசைக்கத் தொடங்கின.

தோளிலே துப்பாக்கியைச்சுமந்து கொண்டு சலீம் ''தாதா, தாதா என்று அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான். கனவில் யாரோ அழைப்பதைப் போல உணர்ந்து கண் விழித்த ஹமீது, ''வந்து விட்டாயா சலீம்!'' என்றான்.

''தாதா, இது என்ன கோரம்? இரவு பாகிஸ்தானிய வேட்டை நாய்கள் இங்கே வந்து போனார்களா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் சலீம்.

ஹமீதினால் பதில் பேச முடியவில்லை. தண்ணீர் வேண்டுமென்று ஜாடை காட்டினான். சமையலறைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காகச் சென்ற சலீம் அங்கே ஆடை குலைந்த நிலையில் தனது தங்கை ஆயிஷா பாகிஸ்தானிய படை வீரர்களின் மிருகப் பசிக்கு இரையாகிப் பிணமாகிக் கிடக்கும் காட்சியைப் பார்த்து 'தாதா' என்று உரத்துக் கூச்சலிட்டான். தங்கையின் உடலின் மீது விழுந்து 'ஓ'வென்று கதறினான். ''தேசத்தைக் காக்கப் புறப்பட்ட நான், உனது பெண்மையைக் கூடக் காப்பாற்ற முடியாத பாவியாகி விட்டேனே ஆயிஷா!'' என்று புலம்பினான். பிறகு அவளைத் தூக்கி அப்படியே தோளில் போட்டுக் கொண்டு கையில் ஒரு கோப்பையில் நீரை எடுத்துக் கொண்டு தந்தையின் முன் வந்து நின்றான்.

''தங்களின் மகளைப் பார்த்தீர்களா தாதா?'' எனக் கேட்டுவிட்டு, அவளைக் கட்டிலில் கிடத்தி அந்தக் கட்டிலின் ஓரமாக மண்டியிட்டு அமர்ந்து சலீம் தேம்பித் தேம்பி அழுதான். மகளின்பிணத்தைப் பார்க்க மாட்டாதவனாய் ஹமீதும் தேம்பினான். தந்தையைத் தூணிலிருந்து அவிழ்த்து விட்டு அவருக்குத் தண்ணீர் கொடுத்தான் சலீம். ஹமீதால் இப்போது அழக்கூட முடியவில்லை. மகளையே வெறித்துப் பார்த்தபடி சிலைபோல் நின்று கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, ''சலீம்! எல்லாமே முடிந்துவிட்டது. உன்னுடைய துப்பாக்கியோ என்னுடைய கரங்களோ ஆயிஷாவின் மானத்தைக் காப்பாற்றும் சக்தியற்றுப் போய்விட்டன,'' என்றான் ஹமீது, அமைதியாக.

நடந்துவிட்ட நிகழ்ச்சியை இனி மாற்ற முடியாது என்பது அவனுக்குத் தெளிவாகத் தொடங்கியது. ''தாதா! இந்தப் பாகிஸ்தானிய அரக்கர்களை நம்முடைய கண்ணிலிருந்து அப்புறப்படுத்தும் நேரம் நெருங்கி விட்டது. நம்முடைய முக்தி பாகினிக்குத் துணையாக இந்திய முன்னணிப் படையினர் இன்றோ அல்லது நாளையோ நுழைந்து விடுவார்கள்,'' என்றான் சலீம்.

''உண்மையாகவா?'' என்று கேட்டான் ஹமீது.

''ஆமாம் தாதா! இந்திய பாரசூட் படையினர் நகரின் பல பகுதிகளிலும் இறங்கி விட்டார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டதால்தான் இரவு நான் வீட்டிற்குத் திரும்ப முடியவில்லை. நான் இரவு திரும்பி வந்திருந்தால் ஆயிஷாவுக்கு இந்த விபரீதமே நேர்ந்திருக்காது.'' என்றான் சலீம் நா தழுதழுக்க.

''அப்படியானால் இன்னும்இரண்டொரு தினங்களில் இந்தக் கொடியவர்களிடமிருந்து நமக்கு விடுதலை கிடைத்துவிடுமா?''

''கட்டாயம் கிடைத்துவிடும், தாதா. நான் உடனே போய் ஆயிஷாவை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன். இதற்கிடையில் இந்தியப் பாரசூட் படை வீரன் ஒருவன் என்னைத் தேடிக் கொண்டு நம்முடைய வீட்டிற்கு வருவான். அவனுக்குச் சாயா கொடுத்து இருக்கச் சொல்லுங்கள். நான் வந்து விடுகிறேன்.''

சலீம் வெளியே புறப்பட்டான். மகளின் பிரேதத்தையே கண்ணில் நீர் மல்க சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த ஹமீது சாயா தயாரிப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றான். ஒரு கப் சாயாவை தானும் குடித்துவிட்டு, இரண்டு கோப்பை மகனுக்கும், வரவிருக்கின்ற விருந்தாளிக்கும் தயார் செய்துவிட்டு வெளியே வந்த ஹமீது இந்தியப் படை வீரன் ஒருவன் தொப்பியைக் கழட்டிவிட்டு ஆயிஷாவின் பிரேதத்திற்கு முன் மரியாதை செய்து நிற்பதைக் கவனித்தான்.

''சலீமின் வீடு இதுதானே?'' வந்த இளைஞன் கேட்டான்.

''ஆமாம்.''

''நான் சலீமின் நண்பன். இந்தியப் படை வீரன். நேற்றுத்தான் பாரசூட் மூலம் நகருக்குள் வந்து இறங்கினேன். முக்தி பாகினியைச் சேர்ந்த சலீமும் நானும் முதல் சந்திப்பிலேயே நெருங்கிய நண்பர்களாகி விட்டோம். பெரியவரே, யார் இந்தப் பெண், உங்கள் மகளா, மருமகளா?''

''என் மகள்தான் தம்பி. பாகிஸ்தானியப் பருந்துகள் நேற்று அவளைக் கொத்திப் பாழ்படுத்தி விட்டன.''

வந்த இளைஞனின் கண்களில் நீர்த்திவலைகள் படர்ந்தன. ''பெரியவரே! இந்தக் கொடுமைகளுக்கு ஆக்கிரமிப்பாளர்கள் பதில் சொல்லித் தீரவேண்டிய நாள் நெருங்கி விட்டது.''

''உட்கார் தம்பி. நான் சாயா கொண்டு வருகிறேன்.''

''வேண்டாம் பெரியவரே. இந்தக் கொடுமைகளுக்கு மத்தியிலும் தங்களின் உபசரிக்கும் பண்பு என் உள்ளத்தை நெகிழ வைக்கிறது.''

ஹமீது விரக்தியாகச் சிரித்துக் கொண்டே, சமையலறைக்குள் போய் ஒரு கோப்பை சாயாவுடன் திரும்பி வந்தான்.

''உன்னுடைய பெயர்?''

''ரமேஷ்.''

இளைஞன், ஹமீது கொடுத்த சாயாவை சுவைத்து அருந்தத் தொடங்கினான். ஹமீது சூள் கொட்டிக் கொண்டே ''ரமேஷ்! என் மகளை நான் பறி கொடுத்தாலும் ஆண்டவன் இந்தத் தண்

டனையின் மூலம் ஒரு நியாயத்தை எனக்கு வழங்கியதாகவே நான் கருதுகிறேன்.'' என்றான்.

''நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை.'' என்றான் ரமேஷ்.

ஹமீது பேசத் தொடங்கினான். ''இந்த ஊருக்குச் சில மைல்கள் தெற்கே நவகாளி என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரைப் பற்றி நீயும் கேள்விப்பட்டிருக்கக் கூடும். இந்து முஸ்லீம் கலவரம் இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அங்கே உச்சக் கட்டத்தில் இருந்தபோது காந்திஜி பாத யாத்திரை வந்து மத ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்.''

ரமேஷ் பெருமூச்சு விட்டபடியே ஹமீது சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஹமீது தொடர்ந்தான்: ''அந்தக் கலவரம் பயங்கரமாக நடந்தபோது இந்துக்களை வெறித்தனமாகக் கொன்று குவித்தவர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன். அப்போது அதை எனது மதக் கடமையாக உள்ளபடியே நான் நம்பினேன். புனித 'ஜெகாத்'தில் பங்கு பெறும் ஒரு போர்வீரனாக என்னை எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது நடந்த ஒரு சம்பவம் என் மனதில் வடுவாக நிலைத்து என் மனதை இதுவரையில் உறுத்திக் கொண்டே இருந்தது. அந்த வடு நேற்று இரவுதான் எனது உள்ளத்திலிருந்து அழிக்கப்பட்டதைப் போல நான் உணர்ந்தேன்.''

''அப்படி என்ன சம்பவம் நடந்தது?'' என்று கேட்டான் ரமேஷ்.

''இந்துப் பெண்களை மானபங்கப் படுத்துவதே ஒரு புனிதக் கடமையாக வெறி உணர்ச்சியால் நான் எண்ணிக் கொண்டிருந்த நேரம் அது. இந்துஸ்தானத்தில் முஸ்லிம் பெண்கள் படும் அவமானங்களுக்குப் பழி தீர்ப்பதாக நினைத்துக் கொண்டு நவகாளியில் இந்துப் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டது. அப்போது நான்...''

ஹமீது பேச முடியாமல் தடுமாறினான். பிறகு அருகிலிருந்த குவளையிலிருந்து தண்ணீரை ஒரு முடக்குக் குடித்துவிட்டு மீண்டும் பேசத் தொடங்கினான்: ''எங்கள் வீட்டிற்கு எதிரில் கௌரவமான இந்துக் குடும்பம் ஒன்று வசித்து வந்தது. வகுப்புக் கலவரங்கள் ஏற்படுவதற்கு முன் எங்கள் குடும்பமும் அவர்கள் குடும்பமும் அன்னியோன்யமாகப் பழகி வந்தது.

மதவெறி பிடித்த தலைவர்களின் பேச்சுக்களால் வெறியேறிப் போயிருந்த சூழ்நிலையில் அவர்கள் இந்துக்கள் என்பதாலேயே அவர்களை நான் விரோதிகளாகப் பாவித்தேன். கலவரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்தபோது நானும் வேறு சிலரும் அவர்களுடைய வீட்டையே சூறையாடினோம். அந்த வீட்டுப் பெரியவரின் ஒரே மகள், அவளுடைய கற்பையும் நான் சூறையாடினேன். அப்போது ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடித்ததாக நான் கருதினேன். ஆனால் கால வெள்ளம் என் கண்களைத் திறந்தது. இன்றைக்கு என்னுடைய மகளின் கற்பை மற்றவர்கள் சூறையாடியபோது எனது ரத்தம் ஒரு கணம் கொதித்தாலும் அந்தத் தண்டனையின் நியாயத்தை உணர்ந்து என்னை நானே அமைதிப்படுத்திக் கொண்டேன்.''

''அந்தக் குடும்பத்தினர் எங்கே வசித்தார்கள்?'' ரமேஷ் கேட்டான்.

''நவகாளியில்'' ஹமீது அமைதியாகப் பதில் சொன்னான்.

''நீங்கள் கற்பழித்த பெண் யார் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியுமில்லையா?''

''தெரியும். அவள் பெயர் சாருமதி.''

ரமேஷ் பதில் பேசவில்லை. கண்களை மூடிக் கொண்டு அப்படியே வீற்றிருந்தான். அவனைப் பார்த்தபடியே ஹமீதும் வீற்றிருந்தான்.

ஒருக்களித்திருந்த கதவை யாரோ லேசாகத் தட்டினார்கள். ரமேஷ் எழுந்து போய் கதவைத் திறந்தான். சலீம் நின்று கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் நெருப்புத் துண்டங்கள் போல் சிவந்திருந்தன. கைத்துப்பாக்கியை எடுத்து படபடவென்று தந்தையை நோக்கிச் சுட்டான் சலீம். எல்லாம் ஓரிரு வினாடிகளில் நடந்து முடிந்து விட்டது. அவனைத் தடுத்து நிறுத்த முயன்ற ரமேஷ், ''சலீம், உனக்கென்ன வெறி பிடித்து விட்டதா?'' என்று உரத்துக் கூச்சலிட்டான்.

''இல்லை ரமேஷ். இப்போதுதான் என் மனம் ஆறுதல் அடைகிறது. என் தந்தை நவகாளி சம்பவம் பற்றி சொல்லிக் கொண்டிருந்த கதை முழுவதையும் இதுவரையில் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இப்படியொரு பயங்கரமான காரியத்தை இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் அவர் செய்திருப்பார் என்று என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அல்லா சரியான நியாயத்தைத்தான் வழங்கி இருக்கிறார். ஆனால் தந்தை செய்த பாபத்துக்கான தண்டனையை மகள் அனுபவித்தது எனக்கு நியாயமாகப் படவில்லை.''

ரமேஷ் பதில் பேசவில்லை. வெளியே சவப்பெட்டி தயாராகக் காத்துக் கொண்டிருந்தது. ரமேஷும் சலீமும் இரண்டு பிரேதங்களையும் ஒரே பெட்டியில் வைத்து மூடினார்கள்.

''நீ இன்னும் சாயா சாப்பிடவில்லையே?'' என்று கேட்டான் ரமேஷ்.

சலீம் பதில் சொல்லவில்லை. ரமேஷ் சமையலறைக்குப் போய் சலீமுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த சாயாவைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினான். ''உன் தந்தை உனக்காகத் தயாரித்த கடைசிக் கோப்பைச் சாயா இது.'' என்றான் ரமேஷ். நடுங்கும் கரங்களோடு சலீம் அதை மெதுவாக அருந்தினான். கோப்பையை அருகிலிருந்த ஸ்டூலின் மீது வைத்துவிட்டு, ''இப்படி ஒரு தந்தையைப் பெற்றதற்காக எந்த மகனும் அவமானப்படாமல் இருக்க முடியாது'' என்றான் சலீம்.

அவனையே உற்றுப் பார்த்த ரமேஷ், ''அந்த அவமானத்தில் எனக்கும் பங்குண்டு!'' என்றான் அமைதியாக.

திகைப்புடன் ஒன்றும் புரியாமல் ரமேஷை ஏறிட்டுப் பார்த்தான் சலீம்.

''உனது தாதாவால் கற்பழிக்கப்பட்ட பெண் சாருமதி வேறு யாருமல்ல; அவள் என்னுடைய தாய்.''

இதைச் சொன்ன பிறகு ரமேஷ் மெதுவாக வெளியே நடந்தான். சலீமின் கண்கள் ரமேஷ் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. ★

காலைப் பொழுதில்..

காலையில் நேரங்கழித்து எழுவதன் மூலம் காலைப் பொழுதைக் குறுக்கிக் கொள்ளாதீர்கள். காலைப் பொழுதை வாழ்வின் சாராம்சமாக எண்ணி அதிகாலையிலேயே எழுங்கள்.

பண்டை காலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது !

வாலிப - வயோதிக - அன்பர்களே !

பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை !

பிரபல பழனி

வைத்திய திலகம்

வைத்திய ராஜ்

Dr. S. காளிமுத்து

R.M.P. (IND) V.V.C.A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப் போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவர செய்ய இயலாமை—இதனுல் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும் தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி உஷ்ணம் சோம்பல், கைகால் அசதி, பலகீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடம் சொல்ல முடியாமல் மன வேதனையும் கஷ்டமுமடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறுர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 74 வருட அனுபவம் பெற்று நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், உயர் தரம், முதல் தரம், 2—ம் தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் நலமடைந்து புதியசக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில்தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி.பி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி.பி.பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்தவைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள் : மிகஉயர்தரம் ரூ. 90
உயர்தரம் ரூ. 42. முதல்தரம் ரூ. 33. 2 ந்தரம் ரூ. 24

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

கிளை; 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. போன்: 21448
சென்னை கிளை ஆபீஸில் 1முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்.

Govt. Regd. T.M. No. *204341* Regd. *15443*.

வைத்திய திலகம் வைத்திய ராஜ் டாக்டர், S. காளிமுத்து

பழனி சித்தர் வைத்தியசாலை,

(KV) பழனி S. I.

போன் : 316 **(தியேட்டர் ஸ்ரீரங்கராஜா பக்கம்)** **தந்தி : சித்தர்**

வரலாறு புதுக்கும் சிற்பி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கல்தோன்றி மண்தோன் றாக்கா லத்தே
முன்தோன்றி மூத்த குடியெனப் புகழ்பூத்து
வடவேங் கடம்தென் குமரி ஆயிடை,
தாளாண் மையிலும் வேளாண் மையிலும்
தறுகண் மையிலும் தகுதி சான்ற
தமிழ்க்குடி யதனின் தகைசால் பெரும்புகழ்
பொய்யாய்ப் பழங்கதை யாய்ப்போய் விடாமல்
புதுக்கிப் பொற்புடை வரலாற் றோவியம்
கவினுற எழுதும் கலைஞ,நின் கொற்றம்
வாழ்கென வாழ்த்துதும், வண்டமிழ் எனவே!

ஓங்கிய கோயில் உயர்வா யிற்கடை
மணிநா நடுங்க மன்னுயிர் தழைத்திடும்
நீதி வழங்கிய நெறிமனு நீதியின்
மரபின் வழாஅது மக்களுக் கெல்லாம்
அஞ்சலென் றெவ்வோ ரைந்தாம் நாளிலும்
குறையெலாம் கேட்டு நிறைநலம் நல்கும்
நின்றன் வடிவிற் பொன்னார் புகழின்
மனுநீதி மன்னனைக் கண்டுவாழ்த் துதுமே!
ஓவியத் தமிழை ஒண்மைத் தமிழை
உக்கிரப் பெருவழுதி ஒருங்கிருந் தாய்ந்தே
அலமரும் உலகம் அகப்பொரு ளின்றி
அயர்ந்த பொழுது அகப்பொருள் தந்தனன்!
பயில்மொழி பரங்கி மொழியா னமையால்
அறிவியல் தமிழில் இல்லா தயர்ந்த
பொழுது பலகலை பொதுளத் தமிழிற்
பயில வழிவகை கண்டனை! நின்தமிழ்க்
கொற்றம் உக்கிரப் பெருவழு திப்புகழ்க்
கொற்ற மே,எனக் குளிர்ந்துவாழ்த் துதுமே!

கொற்கைநன் முத்தெனக் கொழிதமிழ் முத்தாம்
அழிவில் புகழ்மிகு அறிவுடை நம்பி
பாண்டிய மன்னன்— பைந்தமிழ்க் கவிஞன்
அவன்றன் ஆட்சிப் பெரும்புக ழதனினும்,
அவன்கவி தைப்புகழ் அருமையால் உயர்ந்தது!
இற்றைத் தமிழகக் கொற்றக் கட்டிலில்
அமர்ந்தர சாளும் பெருந்தமிழ்க் கலைஞ,
நீயும்ஓர் கவிஞன்! நின்னருங் கொற்றம்
திருத்தணி முதல்தென் குமரியீ றாக
நின்ற நிலவ்வரைப் புடையதே யாயினும்

நின்கவிக் கொற்றமோ நீளுல கனைத்தையும்
ஆட்சிசெய் கின்றது! மாட்சிமை பெற்றது!
உலகம், உலகப் பெருங்கவி யென்றே
நின்னைப் போற்றி நின்றது! அதனால்,
அறிவுடை நம்பி அருந்தோன் றல்என
நின்னை வியந்து நினைந்து வாழ்த்துதும்!
ஆழிசூழ் உலகை ஆளுமின் பத்தினும்
முத்தமிழ்த் துறைமுறை போகியோர் தம்முடன்
சிந்தை ஒன்றிச் செழுந்தமி ழாய்ந்தே

இன்பக் களிப்பில் கூட்டுணாக் கொள்ளுதல்
பெரும்பே றென்றே பீடுசால் அதியமான்
அவ்வைப் பாட்டியோ டமர்ந்து மகிழ்ந்தனன்!
நின்னைச் சூழ ஆலை அதிபரும்,
அரசியல் தலைவரும், ஆளுநர் பலரும்
வளைந்து வளைந்து வந்த போழ்தினும்
நற்றமிழ் அறிஞர் கூட்டமே நாடி
வம்பெனத் திரிந்தனை! மகிழ்ந்தனை! அதனால்,
அதியமான் நெடுமான் அஞ்சியின் இயல்பை
நின்னிடம் கண்டு நினைந்துவாழ்த் துதுமே!

நாடுகள் பலவும் கடந்து வடபுலம்
கொண்டு வாகை சூடிய சேரன்
செங்குட் டுவன்தன் கீர்த்தியே போல
நாடுகள் பலவும் கண்டு ''நலமார்
முதல்வர்'' என்றே முழுதுறழ் புகழைச்
சூடி வரும்நினைச் சுடர்புகழ் பெற்ற
இற்றைச் செங்குட் டுவன்தான் என்கோ?
பத்தினித் தெய்வப் படிமம் வஞ்சியில்
அமைத்தனன் சேரன் அவன்போ லின்று
கற்பின் கனலி கண்ணகி போற்றிச்
சீர்மிகு சென்னையில் சிலைய மைத்தனை!
அண்ணன் கண்ணகி சிலையமைத் திட,அவன்
இளங்கோ பண்டு இலக்கியம் செய்தான்!
இன்(று)அவ் விரண்டும் எழில்பெற நீயே
அமைத்தனை! அதனால் நின்னையா மிங்கே
செங்குட் டுவனென்னச் செப்புவ தோ?இ(ல்)லை,
இளங்கோ வென்றே இயம்பிவாழ்த் துவதோ?
இருவரும் ஒன்று யியைந்த கோலம்நின்
உருவினில் கண்டுயாம் உவந்துவாழ்த் துதுமே!



இது மற்றவர் ரசனைக்கு

இது பெற்றவர் மகிழ்ச்சிக்கு

காடுகள் வெட்டிக் கழனிக ளாக்கிப்
பீடு பெற்றனன் கரிகாற் சோழன்!
பலநூறு காணிகள் பாங்குடன் திருத்திப்
பைங்கூ ழாக்கிப் பசுமைப் புரட்சி
செய்து செந்தமிழ் மக்கள்தம் முயிரைக்
கொல்லும் பஞ்சம் கொன்றனை! அதனால்,
கரிகா லன்புகழ் நின்புக ழான
பெருமை நினைந்து வாழ்த்துதும் யாமே!

எந்தை ஈசனை இன்பத் தமிழில்
ஏத்திப் போற்றிய தின்பத் திருமுறை!
வன்கணார்— வடமொழிப் பற்றுளார் சேர்ந்துநம்
வாழ்க்கைக் கொவ்வா வடமொழி தனக்குப்
பகையென் றஞ்சிப் பைந்தமிழ்த் திருமுறை
ஏடுகள் அனைத்தையும் எடுத்துத் தில்லையில்—
மூலையில் முடக்கிச் சிறைப்ப டுத்தினர்!
அச்சிறைக் கதவம் அதனை யுடைத்துச்
செந்தாள் முக்கட் செங்கரும் புச்சிவம்
வேட்புறக் கேட்கும் வியன்தமிழ் மீட்டுத்
தனிப்புகழ் கொண்டனன், தமிழர்தம் இதயம்
கவர்ந்த இராச ராசன்! அவனே
போல நாளும் நலமார் தமிழோ(டு)
இசைகேட் டிடும்நல் இச்சை யுடைய
எந்தம் இறைவன் தமிழினைக் கேளா
வண்ணம் சிறைப்படுத் திடுமோர் கொடுமையை
மாற்றி 'அருச்சனை பாட்டே யாகும்'
என்ற அழகுத் தமிழ்நெறி ஏற்றுப்
புதுக்கிப் புகழ்மிகக் கொண்டனை! அதனால்,
இராச ராசனே என்றுயாம் வாழ்த்துதும்!
பண்டு சுந்தரர் என்றொரு பத்தர்
உண்(டு)அவர் உயர்ந்த பத்தியில் பைந்தமிழ்ப்
பாடல் பாடினார்! அவர்தம் பாட்டிலே
அண்ணல் நம்சிவ பெருமான் தனக்குக்
கிறுக்கும் உண்டு! கெழுதகைச் சுந்தரன்
தனக்குத் தேவைகள் பற்பல உண்டு.
அவர்தம் தேவைகள் அறிந்த அண்ணலார்
சேரமான் பெருமாள் தன்னோடும் சேர்த்து
நட்புற வாக்கி நயம்பல செய்தார்!
சேரமான் சேரநாட் டரச னாயினும்
ஆரூர ரிடத்தே அகனமர் அன்பினன்;
ஆரூரர் மகிழ அனைத்தும் அளித்தனன்
அங்ஙனே போலும் நமக்குநீ வாய்த்தனை!
பாரினில் பத்திமை வாழ்க்கை பூண்டனம்!

கண்ணுதற் கடவுள் நமக்குப் போதிய
பொன்னும் பொருளும் தந்தனன்; ஆயினும்,
தமிழ்நெறி பேணத் தகுபணி பற்பல
மேற்கொண் டனம்யாம்; மிகுந்தன; விரிந்தன!
நின்னுடைக் கொடையால் நம்பணி சிறக்க
நம்முடன் நின்னை நம்சிவன் இணைத்தான்;
சேரமான் பெருமாள் என்னவே! நீயும்
நம்மை நட்டனை; நலம்செய் கின்றனை!
சீரிய செந்தமிழ்ச் சுந்தரன்— சேரமான்
பெருமாள் நட்பினும் பெரிதும் விஞ்சிய
நட்பென நினைந்து வாழ்த்து கின்றனம்!
ஆரூர் தந்த அருமைச் செல்வ,
பூம்புகார் போற்றும் பொற்புடைக் கலைஞா,
பழந்தமிழ்ப் புகழ்வர லாற்றைப் புதுக்கிச்
செதுக்கும் சிற்பியாம் நின்னை
மனங்களி கூர வாழ்த்துகின் றனமே!

ஃ ஃ ஃ

திருப்பம்

முழங் கைகளை மேசையில் ஊன்றியபடி உட்கார்ந்திருந்த மாணிக்கம், தன் முகவாய்க் கட்டையை கசக்கிவிட்டுக் கொண்டு எழுந்தான். பரபரப்போடு குளியல் அறைக்குள் நுழைந்தான். மூன்று முறை மாறி மாறிச் சோப்புப் போட்டு முகத்தைக் கழுவிக் கொண்டான். உயர்ந்த டர்லின் சட்டையும் பேண்ட்டும் அணிந்து கொண்டு அலை அலையாகத் தலை முடியை வாரிவிட்டுக் கொண்டான். இப்போது மாடிப் படிகளிலிருந்து அவன் பளபளப்பான பூட்ஸ் கால்கள் வேகமாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தன.

தெருவுக்கு வந்த மாணிக்கம்—தனக்காகவே வருவதுபோல் வந்துக் கொண்டிருந்த ஒரு டாக்சியை நிறுத்தி அதிலே ஏறிக்கொண்டான். அவன் இடக் கரத்தின் நுனியிலே இருந்த சிகரெட் தன் தலையிலே பூத்திருந்த சாம்பலை உதிர்த்துக்கொண்டது. இப்போது மாணிக்கம் வாடகைக் காரிலே தனது முக்கியமான கடமைகளை நிறைவேற்றி, அதில் வெற்றி காணப் போய்க் கொண்டிருக்கிறான்.

டாக்சி டிரைவருக்கு, தனது வண்டியில் ஏறி அமர்ந்த மாணிக்கத்தைப் பற்றி எதுவும் தெரிந்

திருக்க நியாயமில்லை. ''யாரோ பெரிய இடத்துப் பிள்ளை'' என்ற அளவிற்கு யூகித்துக் கொள்ள, மாணிக்கத்தின் உடையும்—ஊது கின்ற உயர்ந்த ரக சிகரெட்டும் உதவியிருக்கலாம்!

அவன் வாழ்கின்ற பகுதியைச் சார்ந்த அக்கம் பக்கத்துக்காரர் களின் நிலைமையும் இதுதான்.

அவன் யார்? என்ன செய்து கொண்டிருக்கிறான்? எந்த ஊர்க் காரன்? இதுபற்றி ஒன்றும் தெரி யாது. சென்னை நகரத்திற்குள்ள எத்தனையோ சிறப்புகளில் இதை யும் சேர்த்துக் கொள்ளலாம்.....

ஒன்று, முகூர்த்த மேளம் கேட்க வேண்டும்; அல்லது சங்கு ஊத வேண்டும் – இப்படி ஏதாவது சத்தம் கேட்டால் தான் அடுத்த வீட்டுக்காரனைப் பற்றி அக்கறை காட்டுவது என்று சென்னை 'மகா ஜனங்கள்' ஒரு முறையையே வகுத் துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பழக்கம் தன்னை அடையா ளம் காட்டிக் கொள்ளாமல் வாழ நினைக்கும் பலருக்கு சாதக மாகி விடுகிறது.

மாணிக்கமும் இதற்கு விலக் கல்ல. மற்றவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு இவனை விட்டு விலகிப் போகிறார்களோ – அவ்வளவுக்கவ் வளவு தனக்கு நிம்மதி என்று கருதினான் மாணிக்கம்.

''மாதம் ஆயிரமாவது செல வழியுமே, அவன் நடத்துகிற வாழ்க்கைக்கு!''

''அட யாரப்பா நீ .. அவன் ஊதித் தள்ளும் 'ஸ்டேட் எக்ஸ் பிரஸ்' சிகரெட்டுக்குக் காணாது நீ மதிப்பிட்ட ஆயிரம் ரூபாய்...''

''அவன் போட்டுக் கொள்ளும் டர்லின் சட்டையின் அழகு... ஆகா ... வெளிச்சம் பட்ட மாந் தளிர் போல பளபளன்னு... ''

''சட்டை இருக்கட்டும் ... அது காற்றிலே கலக்கும் மணம் ஆகா ஒருநாள் வாழ்ந்தாலும் ... இப்படி சொர்க்க வாழ்வு வாழ்ந்து விட்டு சாக வேண்டும் ... நாமும் வாழ் கிறோமே உப்பும் சப்பும் இல்லா மல்....

இப்படி ஊரில் மாணிக்கத்தைப் பற்றிப் பெசுவது வாடிக்கையாகி விட்டது. அவன் ஏதோ ஒரு பெரிய கம்பெனியின் ஏஜெண்ட்; திருமணமாகாத வாலிபன், தனி யாகத் தங்கியிருக்கிறான்; நல்ல வசதியான இடத்துப் பிள்ளை; தொழில் விசயமாக மாதத்தில் பதினைந்து நாள் வெளியூர் சுற்று கிறான். 'இது 'மகாஜனங்கள்' மாணிக்கத்தைப் பற்றி நிறை வேற்றியிருந்தத் தீர்மானம்.

இங்கே மாணிக்கம் டாக்சியி லிருந்து இறங்குகிறான். படம் முடிந்து வெளி வரும் மக்கள் கூட் டத்தை அவன் விசாலமான கண்கள் மேய்கின்றன. டாக்சியை அனுப்பி விட்டு தியேட்டருக்குள் கம்பீரமாக நடக்கிறான். 'கவுண்ட ருக்கு' முன்னால் ஒரே கூட்டம்.

''சே!'' ஒரு பெண், நெரிசலின் அழுத்தத்திலேயிருந்து தன்னைப் பிதுக்கிக் கொண்டு வெளியே வரு கிறாள். ஆனால், அவள் கையிலிருந்த பிளாஸ்டிக் பை இன்னும் வெளியே வரவில்லை ..... தவிக்கிறாள் – அதை பார்த்துக் கொண்டு மாணிக்கத் தால் சும்மா இருக்க முடியுமா? பாய்ந்து சென்று கூட்டத்தை விலக்கினான். பையும் கையும் வெளியே வந்தன. பற்களில் பாதி யைக் காட்டினாள்.

நன்றி சொல்வதில் லேடஸ்ட் மாடலாம், இது! இவனும் பதி லுக்குச் சிரித்தான் ... ஒருவருக் கொருவர் இப்போது அறிமுகமாகி விட்டார்களாம்!

அவளையும் புறக்கணிப்பதற் கில்லை. அழகாகவே இருந்தாள்! உடலின் முக்கிய பகுதிகளை 'உடை யென்ற ஒரு தொல்லையால்' மறைத்துக் கொண்டிருந்தாள். அவள் உடைகளும், உடலும் ஒன்றையொன்று வேண்டாவெறுப் போடு பார்த்துக் கொண்டன. அவள் தொடர்பை அறுத்துக் கொள்ள ஒவ்வொரு வினாடியும் அவள் சேலையின் முந்தானை துடித் துக் கொண்டிருந்தது. ஊருக்குப் பயந்து அவளும் அதை விடாமல் எடுத்து, எடுத்து மேலே போட்டுக் கொண்டிருந்தாள். எல்லாம் ஒரு சம்பிரதாயத்திற்காகத்தான்.

''வாட் ஏ கிரவுட் ...'' அவ ளுக்கு ஆங்கிலம் தெரியுமாம்.

''ஏஸ் ... டூ ....மச்....'' நானும் படித்திருக்கிறேன் என்று அவளுக்கு சொல்லிக் கொள்கிறா னாம்!

அவள் உதட்டை மெல்லக் பிரித்துச் சிரிக்கிறாள். அது அழகாக இருந்தது. நெற்றியில் 'ஓடிக் கொலோன்' போடும் போது ஏற்படுமே ஒரு உணர்ச்சி – அப் படிப்பட்ட ஒரு உணர்ச்சி அவன் இதயத்தில் ஏற்பட்டிருக்க வேண் டும்.

விளம்பரப் பலகையில் ஒட்டப் பட்டு பார்வைக்கு வைக்கப்பட் டிருந்த புகைப் படங்களை நோக்கி அவள் பார்வை திரும்பிற்று...

''படம் துவக்கப் போகிறார் கள் '' இதை ஆங்கிலத்தில் சொன் னான்.

''ஓ ...'' வார்த்தைகளை செல வழிக்கக் கூடாதாம் ... அவனைத் தொடர்ந்தாள்.

இரண்டு டிக்கட்டுகளோடு மாணிக்கத்தின் கரம் கவுண்டரிலே இருந்து வெளி வந்தது.

அதே கரம் இப்போது தனக்குப் பக்கத்திலே உட்கார்ந்துக் கொண் டிருந்த அந்தப் பெண்ணின் மென் மையான சதைப் பகுதிகளை லாவக மாக நெருடிக் கொண்டிருந்தது.

எதிரே திரையில் ஓடிக் கொண் டிருப்பது ஆங்கில வண்ணப் படம். கிராமப்புறங்களில் பத்துப் பனி ரெண்டு வயது மாடு மேய்க்கும் சிறுவர்கள் அணிந்துக் கொண் டிருப்பார்களே கோவணத்துண்டு— அதைப் போல ஒன்றை அணிந் துக் கொண்டு அந்த வயது முதிர்ந்த கதாநாயகி, தன் 'ஜட்டி' அணிந்த காதலனுடன் நீச்சல் குளத்தில் குதித்துக் கொண்டிருந்தாள்.

குலை தள்ளிய வாழையை வெட் டித் தோளிலே தூக்கிச் செல்லும் தோட்டக்காரனைப் போல – வேலை யற்ற கதாநாயகியை தோளிலே தூக்கிச் சுற்றிக் கொண்டிருந் தான். அடுத்தக் காட்சியில் அவளை தொப்பென்று ஒரு மெத்தையிலே தூக்கிப் போடுகிறான். அந்தப் 'ஸ்பான்ச்' மெத்தைக்குள் அவள் புதைந்துப் போகிறாள். அதற்கு மேலே இவன் விழுகிறான். இவன் முதுகுப் புறம் மட்டும் நெளிகிறது.. கேமரா விலகுகிறது . .அந்த சிங்காரியின் ஹ.ா...ஊ... என்ற முனகல் மட்டும் கேட்கிறது.

படம் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள் எதையோ கூட்டி விழுங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்த ஒரு வினாடியில், கல்யாணம் ஆனவன் — ஆகாதவன், வயது வந்தவன் — வயதைக் கடந்தவன் இப்படி எல்லோருக்குமே ஏதோ ஒன்று இதயத்துக்குள் புகுந்து வண்டு போல் குடை குடை என்று குடைந்திருக்க வேண்டும் — அவரவர் ஒரு முறை நிமிர்ந்தும் — நெளிந்தும் — அசைந்தும் — ஆடியும் உட்கார்ந்து கொள்கின்றனர்.

அந்தப் பெண் தனது கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டாள். மாணிக்கத்தின் விரல்கள் அவள் கழுத்தின் வழ வழப்பிலிருந்து நகர்ந்து கீழ்நோக்கிச் சென்றது. படம் முடிந்து எல்லோரும் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

''சரோ — உன்னை மீண்டும் எப்போது சந்திப்பது?''

''பதினெட்டு — பார்கித் ரோடு..'' என்று கூறிவிட்டு ஆறு எண்களைச் சொல்லி....'' லெட் அஸ் காண்டேக்ட் துரு போன்..'' அவள் சொன்னாள்.

''சரோ திருமணம் சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படறதா சொல்வாங்க. ஆனால், நம்முடைய திருமணம் இந்த சொப்பனா தியேட்டர்லே நிச்சயமாயிடிச்சி இல்லையா''.

அவள் இப்போது ஒன்றும் பேசவில்லை.... பதிலுக்குத் தனது சிவந்த உதடுகளைக் கூட்டிக் காட்டினாள்.

''சரோ நம் முதல் சந்திப்பின் அடையாளமாக இந்த மோதிரத்தையணிந்து கொள்'' அவள் பதிலை எதிர்பாராமலேயே மாணிக்கம் அவள் கரங்களை எடுத்து அவள் மெல்லிய விரலில் ஒரு மோதிரத்தை அணிவித்தான்.

அவளும் தன் கனிந்த காதலுக்கு அடையாளமாக தன் விரலில் இருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றி மாணிக்கத்தின் விரலில் அணிவித்தாள்.

பிரிய மனமில்லாமல் இருவரும் பிரிந்தனர்.

ஃ ஃ ஃ

விரைவு

வேகம் இருக்கவேண்டும்; அதே நேரத்தில் நிதானம் முக்கியம் என்ற அர்த்தத்தில் ஆங்கிலத்தில் சொல்வார்களே 'hasten slowly' என்று. அதேபோல்தான் 'hasten slowly' என்பதுதான் இந்தச் சர்க்காருடைய கொள்கை. விரைவாகத்தான் செல்வோம் - ஆனால் இடறி விழத்தக்க விரைவில் அல்ல!

— அண்ணா



தம்பி ஆட்டத்தைக் கண்டு — நான் தாவக் கற்றுக்கொண்டேன்



நீள்கதையின் முடிவு....

படம் ; சாந்தாமியான்

படம் ; சாந்தாமியான்

தொடர்கதையின் துவக்கம்!

அரசியலில் மட்டுமல்ல; பகுத்தறிவுத் திறனோடு சீர்திருத்தச் சமுதாயத்தின் எதிர்கால முன்னேற்றம் கணிப்பதிலும் இணையற்ற தீர்க்கதரிசியாக விளங்குபவர் தந்தை பெரியார் அவர்கள்.

பிள்ளைப்பேறு என்பது வருங்காலத்தில் இப்படியும் அமையலாம் என்று 1947'ல் ஐயா அவர்கள் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்திருக்கிறது.

''இனி வரும் உலகம்'' என்ற தலைப்பில் 47'ல் பெரியார் அவர்கள் பிள்ளைப் பேறுபற்றிப் பேசியது இது:

பிள்ளைப் பேறுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பதுகூட இல்லாமல் நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள குழந்தைகள் ஏற்படும்படியான வீரியத்தை ஊசி மூலம் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளாகப்பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கை இல்லாமலே குழந்தை பெறும் அளவு விஞ்ஞானத்தின் சாதனை வளர்ச்சிபெறும்.

—இது தந்தை பெரியார் அவர்கள் 47'ல் கூறியதாகும். அந்தப் பேச்சு புத்தகமாகவே வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகத்தின் அட்டையே இந்தக் கருத்தைப் பிரதிபலிப்பதாக—ஒருவர் கண்ணாடிக் குவளையில் அந்தச் செயற்கை சிசுவை வைத்திருப்பது போலவே படம் சித்தரிக்கப்பட்டிருந்தது.

ஐயா அவர்களின் அந்தக் கருத்து இன்று நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதற்கு உதாரணம், சென்ற ஆண்டு செப்டம்பரில் வெளியான 'இம்ப்பிரிண்ட்' பத்திரிகை.

'இனி வரும் உலகம்' புத்தகத்தின் அட்டையில் போடப்பட்டுள்ள சித்திரத்தை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் அந்த 'இம்ப்பிரிண்ட்' அட்டையில் செயற்கை முறையில் உருவாகி வரும் கருவை ஒருவர் கையில் வைத்துள்ள படம் வெளிவந்துள்ளது.

அது பற்றி உள்ளே ஒரு கட்டுரை-—அதன் சாரம் என்ன தெரியுமோ?

அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜான் ராக் என்பவரின் பரிசோதனைப் படி, டாக்டர் ஷெட்டில்ஸ் என்பார் ஆண் பெண் உடலுறவு கொள்ளாமலே பிள்ளைகளை உண்டாக்க முடியும் எனக் கண்டுபிடித்திருக்கிறார். அப்படி அவர் தயாரித்த பரிசோதனைக் குழாயில் வளர்ந்துவரும் ஆறுமாதக் கரு ஒன்றையே அட்டைப் படத்தில் நீங்கள் காண்கிறீர்கள்—என்றிருக்கிறது.

47'ல் தந்தை பெரியார் அவர்கள் செய்த யூகம் இன்று தீர்க்கதரிசனமாக நடைமுறைக்கு வந்துள்ளது.



பகுத்தறிவுப் பகலவனின் பல்வகைப் பணிகள்

காலை எழுந்து கடன் முடித்து
உடை மாற்றுகிறார்

காணவந்த நாவலருக்கு
கனிச்சாறு தருகிறார்

சிற்றுண்டி
முடிந்தபின்
சிறிது நேரம்
படிப்பு.....



'விடுதலை' ஏட்டிற்கு தலையங்கம் தயாராகிறது



குடும்ப டாக்டருடன் கொஞ்ச நேரம்



கடிதங்களைக் கவனத்துடன் படிக்கிறார்



கடிதங்களுக்குப் பதில் கைப்பட எழுதுகிறார்!

கூட்டத்திற்குத் தேதி கொடுக்கிறார்

முதல்வர் கலைஞரின் விளக்கத்தை வெண்தாடி வேந்தர் வியப்புடன் கேட்கிறார்.



காலையில் எழுதிய தலையங்கத்தை
"ப்ரூப்" பார்க்கிறார்

பூனையும், வளர்ப்பு நாயும்
புடைசூழ உணவு

மனையம்மை, மணியம்மை, பணியம்மை
என்பதற்குச் சாட்சி!

துணையிருக்கும் தந்தைக்கு
தோள்கொடுக்கும் தொண்டர்கள்

ஓய்வில்லாப்
பயணத்திற்கு
ஊர்தி
தயார்!

காஞ்சிக் கதிரவன்
கண்துயிலும் கோயிலுக்கு
ஈரோட்டுப் பேரொளியின்
இதய மரியாதை



ஐயா படம் திறக்கிறார் என்றால்
அண்ணாவுக்கு மகிழ்ச்சி வராதா
என்ன ?

இரண்டாம் தலைமுறைக்கு
இதயத்தால் வாழ்த்துகிறார்

அமுதோன்—

அடுத்துப் பேசுதற்கு
ஆழ்ந்து சிந்திக்கிறார்...

பனியென்ன – மழையென்ன
பகுத்தறிவுப் பிரச்சாரம்
பாடமாய் நடக்கிறது!

தேவகி

மருத்துவமனையிலிருந்து என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள். ''இனி நீ வீட்டிற்குச் செல்லலாம்!'' என்று பரிவோடு சொல்லித்தான் அனுப்பினார்கள். வீட்டிற்கா? எந்த வீட்டில் எனக்கு இடமிருக்கிறது? எங்கே போவது?

கால் சென்ற திசையில் நானும் சென்று கொண்டிருந்தேன். ஊதல் காற்று மிக ஓசையுடன் வீசியது. சிறிது நேரம் கழித்து மழை பிடித்துக் கொண்டது. நான் தெப்பலாக நனைந்துவிட்டேன். ஆனால் கால்கள் மட்டும் நடந்து கொண்டே இருந்தன!

எங்கே போகிறோம்—எங்கே போவது — என்ற சிந்தனையே இல்லை. கடைசியில் என்னால் நடக்கவே முடியவில்லை. நிற்கக்கூட முடியவில்லை. உடல் நடுங்கியது. ஒரே மழையும், காற்றும், இருளும்! ஏதோ ஒரு சக்தி என்னை உந்தித் தள்ளியது.

இதோ, இந்த வீட்டின் முன் பக்கத்தில் வந்து ஒண்டிக்கொண்டேன்! நல்லவேளை! வீட்டின் சொந்தக்காரர்கள் வெளியே சென்றிருந்தார்கள் போலிருக்கிறது! மூடியிருந்த கதவில் பூட்டுத்தான் தொங்கிக் கொண்டிருந்தது.

யாரோ ஒருவர்—வீட்டின் சொந்தக்காரர் போலிருக்கிறது—வந்து கதவைத் திறந்தார். இருட்டில் நான் நிற்பது முதலில் அவருக்குத் தெரியவில்லை. உள்ளே சென்று விளக்கைப் போட்டுவிட்டு வந்து பார்த்தார். நான் இருந்த பரிதாப நிலை, அவர் உள்ளத்தைத் தொட்டது போலும்!

''வெளியே ஏன் நிற்கிறீர்கள்? உள்ளே வந்து, மழை விட்டதும் போகலாமே!'' என்றார். மழையில் நனைந்து, குளிரில் விறைத்து நின்ற என்னால் எதுவுமே பேச முடியவில்லை. அவர் திரும்பவும், ''நீங்கள் வெளியே நிற்பது சரியல்ல! உள்ளே வந்திருங்கள்!'' என்றார். பதில் சொல்லாமல் அவரைப் பின் தொடர்ந்தேன்.

''நீங்கள் எங்கே போக வேண்டும்?'' தாழ்வான குரலில் அவர் கேட்டார்.

அது எனக்கே தெரிந்திருந்தால் அல்லவா, நான் அவருக்குப் பதில் கூற முடியும்?

நான் ஈரம் சொட்டச் சொட்ட நிற்பதைக் கண்டதும், அவர் அடுத்த அறைக்குச் சென்று வெளுத்த ஒரு வேட்டியையும், சிறியதொரு மேற் போர்வையையும் கையில் எடுத்து வந்தார். ''அந்த அறைக்குள் சென்று, இவற்றைக் கட்டிக்கொண்டு, உங்கள் ஆடைகளை உலர வையுங்கள்! இங்கே பெண்களுக்கான உடைகள் எதுவுமில்லை! நானொரு பிரம்மசாரி!'' அவர் முகத்தில் மெல்லிய புன்னகை படர்ந்தது! அவனும் இப்படித்தான் குறுநகை செய்வான்! குறும்பாகப் பேசுவான்!

அடுத்த அறைக்குச் சென்று நான் உடை மாற்றிக்கொண்டு வந்தேன். அவர் கையில் ஒரு கோப்பை தேநீருடன் காத்திருந்தார். வேண்டாம் என்று தலை அசைத்தேன். ''இல்லை! இப்போதைக்கு நீங்கள் என்னுடைய விருந்தாளி! சாப்பிடத்தான் வேண்டும்!'' என்றார். தேநீர்க் கோப்பையை வாங்கிக்கொண்டேன். அவருடைய பெயர் மெய்யப்பனாம். ஏதோ ஒரு தினசரி பத்திரிகையில் உதவியாசிரியராக இருக்கிறாராம். ''தங்கள் பெயர்?'' என்று கேட்டார். பெயரைச் சொன்னேன்.

மெய்யப்பன்

என் வாழ்வில் பெரியதொரு திருப்பத்தை அல்லவா உண்டாக்கிவிட்டாள் அவள்! அமைதியாக இருந்த என் மனதில்...

அன்றிரவு மழையும் காற்றும் ஓயவே இல்லை. அந்த அறையில் தான் அவள் இரவுப் பொழுதைக் கழித்தாள். அவள் அந்த இருளில் வெளியே போய்விடுவதாகத்தான் கூறினாள். ஆனால் அந்த மழையிலா! நான்தான் கூடவே கூடாது என்று தடுத்தேன். மறுநாட் காலை நான் அங்குமிங்கும் நடந்த சப்தத்தைக் கேட்டு அவள் விழித்துக் கொண்டாள். கதவைத் திறந்து வெளியே வந்ததும், தயங்கி நின்றாள்.

''நன்றாகத் தூங்கினீர்களா?''

தலை அசைத்தாள். ஒரு துண்டை எடுத்து அவளிடம் கொடுத்துக் குளிக்கும் அறையைக் காட்டினேன்.

அன்று மட்டும் எனக்கு எங்கிருந்து அவ்வளவு சுறுசுறுப்பு வந்தது? 'தெர்மாஸ் பிளாஸ்கை' எடுத்துக் கொண்டு போய், ஓட்டலிலிருந்து காப்பி பலகாரம் வாங்கிக்கொண்டு வந்தேன்.

தேவகி குளித்துவிட்டுத் தன் சொந்த ஆடைகளை உடுத்திருந்தாள். நல்ல அழகிதான்! ஆனால் முகம் மட்டும் ஏனோ அப்படி வெளிறியிருந்தது! சிற்றுண்டியைச் சாப்பிட்டு முடித்தோம்.

எங்கே போக வேண்டுமென்று இரண்டொரு தடவை கேட்டேன். பதில் இல்லை! அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை!''

''நீங்கள் எங்கே போக வேண்டும்?''

''போவதற்கு. . .இடம். . ஒன்றும்...இல்லை....'' அவள் திக்குமுக்காடினாள்.

நான் திடுக்கிட்டேன்! ''நேற்றிரவு எங்கிருந்து வந்தீர்கள்?''

என் கேள்விக்குப் பதில் கிடைத்தது! தேம்பித் தேம்பி அழுது

கொண்டே ஒருவாறு தன் சோக வரலாற்றைச் சொல்லி முடித்தாள்.

ஐம்பது மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் ஊரில் அரசாங்க அதிகாரி ஒருவரின் மகள் அவள். பி.ஏ. படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கல்லூரி பேராசிரியர் ஒருவர் சிவநெறியில் பெரிய மேதை. மதத்தைப் பற்றியும், இன்றைய உலகில் சீரழிந்துவரும் ஒழுக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், பிறர் மனதைக் கவரக்கூடிய விதத்தில் பேசுவார். அவளுக்கும் பேச்சுக் கலையில் ஈடுபாடு உண்டு. பிறந்ததோ பெரிய பக்திக் குடும்பம். ஆகவே பேராசிரியரின் சொற்பொழிவு அவளைக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. அவரைப்போலப் பேசி, மதத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆசை அவளுக்கு உண்டாயிற்று. ஒருநாள் தன் எண்ணத்தைப் பேராசிரியரிடம் தெரிவித்தாள்.

''உன்னைப் போன்ற இளம் பெண்கள் கடவுள் சேவைக்கு இந்நாளில் வருவது அரிது!'' என்று பாராட்டி, அவளைத் தம்மோடு சொற்பொழிவாற்ற வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினர்! அந்தச் சிவநெறியாளருக்கு அவளொரு விளையாட்டுப் பொருள்! அவ்வளவுதான்! காலம் வந்தபோது கைவிட்டு விட்டான்! வீட்டைவிட்டு, வெளியேறி மருத்துவமனையில் உயிரற்ற சிசுவை ஈன்றுவிட்டு வந்திருக்கிறாள்! இப்போது இவளோர் அனாதை!

அந்தப் பேராசிரியரின் பெயரென்ன என்று கேட்டேன். சொன்னாள். என்னால் நம்பவே முடியவில்லை. அவரா? பகுத்தறிவு பேசுபவர்களைத் தம் சொல்லாற்றலால் தாக்கித் தகர்க்கும் சண்டமாருதம் என்றும், சீலமிகு சிவமாமணி என்றும், ஒழுக்கத்தில் அவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை என்றும் பெயர் பெற்ற அந்தப் பேராசிரியரா? யார் கண்டார்கள்? உலகத்தில் எல்லோருமே அப்படித்தானே ஒருவேளை!

அவளுடைய கதை என்னை என்னவோ செய்தது!

இவள் மட்டும் என் மனைவியாக இருந்தால்? இவள் ஏன் எப்போதும் என்னுடனேயே இருக்கக் கூடாது?....என் மனதில் தோன்றியதை, எப்படியோ அவளிடம் சொல்லிவிட்டேன்.

தேவகி

இந்தச் சில மணி நேரத்திற்குள் என்னிடம் என்ன கவர்ச்சியைக் கண்டுவிட்டாரோ இவர்—தெரியவில்லை! நான் இவருடனேயே வசிக்க வேண்டுமாம்! என்னைத் திருமணம் செய்து கொள்கிறாராம்! எதற்காகவோ! எனக்குப் புது வாழ்வு தரவேண்டும் என்ற எண்ணம் ஒன்றும் இல்லையாம்! ''நான் ஒரு மகாத்மா அல்ல! வெறும் மனிதன்தான்! என் கண்களுக்குத் தேவகியின் அழகிய உள்ளுணர்வு தெரிகிறது! அதுபோதும்!'' என்றார்.

''வேண்டாம்! இந்த மாசடைந்தவளோடு சேர்ந்து உங்கள் வாழ்வையும் கறைபடுத்த வேண்டாம்!'' என்று தடுத்தேன்.

''நாம் இனிமேலாவது ஒருவரை ஒருவர் விரும்பியும் நம்பியும்...'' ஏதோ சொல்ல வாயெடுத்தார் அவர். என்னை அறியாமலேயேஎன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வந்தன: ''என்னுடைய நெஞ்சில் இனிக் காதலுக்கு இடமில்லை!என்னால் இனிமேல் யாரையும் காதலிக்கவும் முடியாது!''

''சரி, காதலிக்க வேண்டாம்! தேவகிக்கு என் மீது நம்பிக்கையாவது உண்டல்லவா?''

அதென்ன அவரிடம் அப்படிப்பட்ட ஒரு தீவிரமான வசீகர சக்தி! அவரைத் தடுத்து என்னால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை! உதடுகளை அசைக்க முடியாத என்னால், கண்ணீரைத்தான் சிந்த முடிந்தது!

மெய்யப்பன்

அப்பாடா! ஒரு வழியாக எல்லாவற்றையும் சரியாக முடித்துவிட்டோம்! பதிவுத் திருமணம்செய்து கொண்டு, எங்கள் புகைப்படத்தை பத்திரிகைகளில் வெளியிட்டோம். அவளுடைய பெற்றோர்கள்கூட வந்திருந்து, அவளை வாழ்த்திவிட்டுப் போனார்கள். எனக்கென்னவோ வாழ்க்கையே இப்போதுதான் பிடித்திருக்கிறது.

தேவகி

இது என்ன வாழ்க்கை! அன்று அந்தக் காவல்காரன் மட்டும் வராமல் இருந்திருந்தால், மருத்துவமனையின் கிணற்றிலேயே இந்தப் பாழும் உயிரை விட்டுத் தொலைத்திருப்பேனே! புது வாழ்வாம், புது வாழ்வு! இந்தக் கேடுகெட்டவளுக்கு இனிமேல் வாழ்வில் இன்பமில்லை என்று அப்போதே தெரிந்திருக்கக் கூடாதா?

குமுறும் என் உள்ளத்துக்கு இந்த வீட்டு வேலைகள்தான் ஒரு மருந்து. வேலைச் சுமையில்தான், என் துயரங்களைக் கொஞ்சமாவது மறக்க முடிகிறது. அவர் மட்டும் தினசரி அலுவலகத்துக்குப் போய்விட்டு வந்துவிடுகிறார். வந்ததும் ஏதாவது எழுதத் தொடங்கிவிடுகிறார். நடு நடுவே என்னோடு இரண்டொரு வார்த்தைகள்! அதுவும் பத்திரிகைத் தொழிலைப் பற்றியோ அல்லது அரசியல் நிலைமையைப் பற்றியோ இருக்கும்—அவ்வளவே!

பின் எதற்காகத்தான் என்னை வற்புறுத்தித் திருமணம் செய்துகொண்டார்? தாம் ஒரு இலட்சியவாதி என்று காட்டிக்கொள்ளவா? இல்லை, என்னைக் கைதூக்கிவிட்டுச் சமூகத் தொண்டு செய்ததாக எண்ணமோ? நல்ல தொண்டு!

மெய்யப்பன்

கொஞ்ச நாட்களாகவே தேவகி ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறாள். அவளுடைய எண்ணத்திற்கும் விருப்பத்திற்கும் விரோதமாக, நான் எதையாவது செய்துவிட்டேனா? நினைத்து நினைத்துப் பார்த்தாலும், ஒன்றும் விளங்கவில்லை.

அவள் அன்றே சொல்லிவிட்டாள்—தன் நெஞ்சில் காதலுக்கு இடம் இல்லை என்று. இன்றுவரை நான் அவளைத் தொட்டதுகூடக் கிடையாது. என் உள்ளக்கிளர்ச்சிகளையெல்லாம் கட்டுக்குள் வைத்து என்றாவது ஒருநாள் அந்த எழிலரசியின் உள்ளத்தில் காதல்பூ மலரும் என்றுதான் காத்திருக்கிறேன்!

'பொங்கல் மலர்' வேலை அலுவலகத்தில் நிறைய இருந்தது. இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, திரும்பவும் வேலைகளைக் கவனித்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்து வீட்டுக்குச் சென்றேன்.

தேவகி நாற்காலியில் உட்கார்ந்து அருகே உள்ள மேசைமீது கைகளை ஊன்றிக் கொண்டு, முகத்தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டிருந்தாள். நான் வருவதை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் கவிழ்ந்துகொண்டாள்.

நான் வழக்கமான குரலில், ''தேவகி! சாப்பாடு தயாராகி விட்டதா?'' என்று கேட்டேன்.

''சாப்பாடு! நான் ஒன்றும் சமையல் செய்துவைக்கவில்லை! வேண்டுமானால் நீங்களே சமைத்துச் சாப்பிடுங்கள்!''

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ எரிமலை திடீரென்று வெடித்து அனலைக் கக்குகிற மாதிரி இருந்தது. அவளுடைய முகத்தை அப்போதுதான் கவனித்தேன். அவள் நீண்ட நேரம் அழுது கொண்டிருந்திருக்க வேண்டும்.

நான் மெதுவாக அவள் அருகில் சென்று, ''தேவகி! சில நாட்களாக ஏன் இப்படி இருக்கிறாய்? உனக்குப் பிடிக்காத எதையாவது நான் செய்துவிட்டேனா?'' என்றேன்.

அவள் எழுந்துநின்றாள். ''என்னை எதற்காக மணந்து கொண்டீர்கள்?'' இப்படிக் கேட்டுவிட்டு அவள் கட்டிலில் விழுந்து அழ ஆரம்பித்துவிட்டாள். எனக்கு ஒரே திகைப்பு! அவளுக்கு நான் என்ன பதில் கூறுவது? எந்தக் கணவன் தான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்?

''நீங்கள் வேண்டுமானால் நனையுங்கள்! அறையை ஈரமாக்க வேண்டாம்!'' அவளது கடமையான வார்த்தைகள், என்னை நினைவுலகுக்குக் கொண்டுவந்தன.

அவளது விழி இமைகளில் தேங்கி நின்ற கண்ணீர், விளக்கு வெளிச்சத்தில் பிரகாசித்தது. 'நான் செத்துப் போனால்தான் நல்லது!' என்று அவள் தேம்பியழுதாள். அவளைத் தேற்றுவதற்காக அவள் கரங்களைப் பற்றினேன். ''என்னைத் தொடாதீர்கள்! நான் மாசுபடிந்தவள்! விடுங்கள்! என்னை விடுங்கள்! எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது!'' என்று அவள் விக்கி விக்கி அழுதாள்.

அவளது அழுகை என்னை வதைத்தது. அவளைக் கட்டி அணைத்து, ஆறுதலாக இரண்டு வார்த்தை சொல்லக்கூடமுடியவில்லை என்னால். அப்படி நான் ஆறுதல் கூறுவதை அவள் ஏற்றுக் கொள்ளமாட்டாள்—விரும்பவும் மாட்டாள்! நான் என்ன செய்வது!

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ''நான் அலுவலகம்வரை போய்விட்டு வருகிறேன்!'' என்று கிளம்பினேன். அவள் தலையை உயர்த்திப் பார்த்தாள்.

''நீங்கள் திரும்பி வரும்போது நான் இங்கே இருக்கமாட்டேன்!''

''எங்கே போகப் போகிறாய்?''

''எங்கே போவேனோ—எனக்கே தெரியாது!''

''இங்கே உனக்கென்ன கஷ்டம்?'

தேவகி மௌனமாக இருந்தாள் நான் அவளுடைய கைகளைப் பிடித்துத் தூக்கினேன்.

''என்னைத் தொடாதீர்கள்! நான் கறைபட்டவள். உங்களால் தொடத் தகுதியில்லாதவள்!'' என்று உடல் குலுங்கக் குலுங்க அழுதாள்.

''கறையா? தேவகி! ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' என் குரலில் இருந்த வேதனை அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்!

''வெறுக்கப்படும் இந்த உயிரை நான் சுமக்க விரும்பவில்லை!'' துக்கத்தினிடையே வார்த்தைகள் சிதறின.

''உன்னை யார்வெறுத்தார்கள்?'' என்று சிறிது கடுமையாகவே நான் கேட்டேன்.

''நீங்கள்தான்!''

''நானா? நானா உன்னை வெறுக்கிறேன்?''

பதறிப்போனேன் நான்! அவள் மீது கொண்டுள்ள அன்பை, ஆசையை, நான் எப்படிச்சொல்வது? எந்த வார்த்தைகளைக் கொட்டிக் காட்டுவது?

''என்னைப் பார்க்கக்கூட, உங்களுக்குப் பிடிக்கவில்லை!''

''எனக்கா? தேவகிக்கு அல்லவா என்னைப் பிடிக்கவில்லை! அவள் நெஞ்சில் அல்லவா எனக்கு இடமில்லை!''

''அய்யோ! என் நெஞ்சிலா உங்களுக்கு இடமில்லை!'' அவள் என் மார்பில் சாய்ந்து கொண்டு விம்மினாள்.

அவள் நெஞ்சில் காதலுக்கு இடமிருந்தது!

மனம்கவர் மாமல்லையின்
கண்கவர் காட்சி

படம்: அரங்க தங்கவேலன்



ஒட்டகத்தின் காலடியில்
உலகுபுகழ் தாஜ்மகால்!

படம்: சாந்தாமியான்

தொடர்கதை

ரஜினி

டாக்காவை விட்டு, தப்பித்துக் கொண்டு ஓடோடி வந்த மக்களுடன் நானும் வந்து விட்டேன். என் அண்ணன் சௌத்ரியும் என்னைப் போகும்படி அனுப்பி விட்டான். அவன் என்ன செய்ய முடியும்? திடீரென பாகிஸ்தானிய படையினர் தாக்கியதில், என் அண்ணி சந்திரவதி, அண்ணன் மக்கள் ரவி, சந்தர் ஆகியோர் இறந்துபோய் விட்டனர். அவனும் நானும் மிஞ்சினோம்.

என்னையாவது காப்பாற்றவேண்டும் என்ற ஆவலில், இந்தியாவை நோக்கி வந்த மக்களுடன் சேர்த்து அனுப்பிவிட்டான்.

ரசாகான் மட்டும் என்னை அனுப்பிவைக்க விரும்பவில்லை. அவர் டாக்டர். அவரிடம் நான் மனதைப் பறிகொடுத்திருந்தது என் சகோதரனுக்கோ, குடும்பத்தினருக்கோ தெரிய நியாயமில்லை. ஆனால், காலம் வரும்பொழுது, தெரிவித்து திருமணம் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார். ஆனால், சொந்த நாட்டை விட்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் எவரும் வெளியேறுவதை அவர் விரும்பவே இல்லை.

நாட்டுக்காகப் போராடி மடிவதுதான் சிறந்தது என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர். என் அண்ணன் அவருக்கு இளைத்தவரல்ல.

இருவருமே, முக்திபாகினியில் இரு வேறு படைக் கூறுகளுக்குத் தலைவர்களாக இருந்தார்கள்.

நாங்கள், பாகிஸ்தானியப் படை வெறியரின் தாக்குதலைத் தாண்டி, திரிபுராவில் எங்கோ ஒரு மூலையில் வந்து சேர்ந்தோம்.

இந்திய ஆட்சியை, நான் எந்த நாளும் மறக்கமாட்டேன்.



தில்ஷா வில்லாளன்

எம்.பி

பெண்ணுக்குரிய இரக்க சிந்தையுடன், அதன் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், என்னைப் போன்ற அகதிகளுக்கு மிகத் தாராளமாக உதவி செய்தார்.

அங்கு போய்ச் சேர்ந்தவுடன் டாக்காவிலிருந்து வந்த முகம்மதிய குடும்பம் இபுராகீம், அவன் மனைவி லீனாபேகம் என்னை தங்கள் சகோதரியாக ஏற்று ஆதரவு காட்டினர்.

மதம் எங்களைப் பிரிக்கவில்லை; நாடு எங்களை ஒன்றாக்கியது. பங்களா தேச மக்கள் நாங்கள்.

எங்களுக்குக் கிடைத்த உதவியைக் கொண்டு, ஒவ்வொரு நாளையும் என்று பங்களா தேசம் விடுதலை பெறும் என்று காத்திருந்தோம்.

எங்களுக்கும் விடிவு காலம் வருமா என்று ஏங்கியிருந்தோம். விடிவு காலம், இவ்வளவு விரைவில் வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

பாகிஸ்தான் போர் என்று அறிவித்தவுடன், முக்திபாகினி படையினருக்கு, இந்தியப் படையினர் உதவினர்.

இதிகாசத்தில் பாரதப் போர் பதினெட்டு தினங்கள் நடந்ததாகப் படித்திருக்கிறேன்; ஆனால், பங்களா தேசப் போர் பதினான்கே நாட்களில் முடிந்துவிட்டது.

பாகிஸ்தான் படையினர் சரணாகதி அடைந்தனர். நீதி வென்றது—அநீதி அழிந்தது. பங்களா தேசம் பிறந்தது.

அகதிகளாகிய எங்களை, இந்திய அரசு, திருப்பி அனுப்பி வைத்தது.

நானும் ஆவலோடு டாக்காவுக்கு ஓடினேன்.

அண்ணன் சௌத்ரியைத் தேடினேன். ஒரு கால் போன அண்ணனைத்தான் காண முடிந்தது. அழுதேன். அலறினேன். போன கால் வந்துவிடுமா?

சௌத்ரியாவது உயிருடன் கிடைத்தானே—அது போதும்!

அவரைப்பற்றி அண்ணனிடமே கேட்டேன். அவன் ஒரு கரம் இழந்தவரை தான் எனக்குத் தெரியும். அதன் பிறகு என்ன ஆனான் என்பது தெரியாது என்று கூறினான்.

அன்று, அண்ணனிடம், என் மனதில் புதைந்து கிடந்த காதல் இரகசியத்தை எடுத்துச் சொன்னேன்.

அண்ணனும், சேர்ந்து தேடுவோம் என்று புறப்பட்டான்.

ஆனால், அவர் எங்கு இருக்கிறார், என்ன ஆனார் என்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

எங்கள் தேசத்திற்கு விடிவு காலம் பிறந்தது. ஆனால் எனக்கு விடிவு காலம் பிறக்கவில்லை.

அண்ணன் கிடைத்தான்; ஆனால் என் ஆருயிர் காதலன் கிடைக்கவில்லை. தேடுகிறேன்—தேடுகிறேன்—தேடிக் கொண்டே இருக்கின்றேன்.

ராசாகான்

ரஜினி என்னைவிட்டுப் போனது கூடப் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் அவள் பிறந்த பங்களா மண்ணை விட்டுப் போய்விட்டாளே. பாவம், அவள் என்ன செய்வாள்! பெண்தானே! மானத்தைக் காக்க வேறு மார்க்கம் என்ன? அதுவும், அவள் அண்ணன் சொல்லும் பொழுது அவள்தான் என்ன செய்ய முடியும்?

அவனிடமே, தன் உள்ளக் கிடக்கையை எடுத்துச் சொல்ல வேண்டும். எப்படியும் அவளைத் திரும்ப அழைத்துவந்து, விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற முடிவுடன் போரிட்டு வந்தேன்.

இந்தியப் படை உதவிக்கு வருகிறது என்று அறிந்தவுடன், நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையையும் செய்யப் போகிறேன்—வீட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையையும் முடிக்கப் போகிறேன் என்று இறுமாந்து கிடந்தேன்.

ஐயோ, என் நிலை இப்படி ஆகி விட்டதே. பின் வாங்கும் பாகிஸ்தான் படை என்னைப் பிடித்துக் கைதியாக்கிவிட்டதே!

அதோ, சௌத்ரி, ஒரு கால் இழந்து மறைகிறானே! ஆ...என் ஒரு கை துண்டிக்கப்பட்டுவிட்டதே! துடிக்கிறேன், புழுபோல்! உயிர் பிரியவில்லை.

சௌத்ரியிடமாவது என் உள்ளத்தை எடுத்து வைத்திருந்தால் எனக்கு ஆறுதலாக இருந்திருக்கும்; அவனும் போய்விட்டான். ரஜினி எங்கு இருக்கிறாளோ—என்ன ஆனாளோ? அவளை ஒரு முறை பார்த்தாலாவது நிம்மதியாகச் சாகலாம். அதற்கும் வழியில்லை; இங்கிருந்து தப்புவது என்பது இனி நடக்கக்கூடிய காரியமில்லை.

படை வரும் சப்தம் கேட்கிறது—இந்தியப் படையாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஐயோ, பாகிஸ்தான் படையல்லவா வந்திருக்கிறது! ஐயோ எங்கள் ஒவ்வொருவரையும் பின் கட்டாகக்கட்டி இழுத்துச் செல்கிறார்களே! என்ன செய்வார்களோ?

அந்த துன்மார்க்கர்களின் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது—எங்கள் நாடு விடுதலை பெற்று விட்டது என்று.

ஆனால், எங்களுக்கு விடுதலை இல்லை—அதுவும் திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது.

எங்களை வரிசையாக நிறுத்தி வைத்துவிட்டனர்.

அதோ அந்த மனித மிருகங்கள் சுடத் தொடங்கிவிட்டன.

படார்...படார்...

''ரஜினி, ரஜினி, நாடு விடுதலை பெற்றது—நமக்கு மட்டும் விடிவு காலம் கிடைக்கவில்லை!

நாட்டுக்கு வெற்றிக் காலம் விடிந்தது, ஆனால், நம் வாழ்வோ முடிந்தது!...'' ஃ

அண்ணா சொன்னார்

தெனாலிராமன் காலத்தில் மன்னர் பல ஓவியர்களைக் கூப்பிட்டு சிறந்த ஓவியங்களை வரையச் சொன்னாராம். பலர் ஓவியம் வரைந்தார்கள். ஒரேயொரு ஓவியன் மட்டும் பல மாதங்களை எடுத்துக்கொண்டு ஒரு ஓவியத்தை வரைந்து வந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னரிடம் தெனாலிராமன், இந்த ஓவியத்தை வரைவதற்கா இத்தனை நாட்கள்? இத்தனை நாட்களில் எத்தனையோ ஓவியங்களை எழுதியிருக்கலாமே என்று குறிப்பிட்டானாம்.

மன்னர் தெனாலிராமனிடமே ஓவியம் வரையச் சொல்ல - அவர் குறிப்பிட்ட நாட்களில் ஐம்பது ஓவியங்கள் வரைந்து தருவதாகத் தெனாலிராமன் சொன்னான்.

குறிப்பிட்ட நாட்கள் முடிந்தன. அவன் வரைந்த ஓவியங்களைப் பார்க்க மன்னர் வந்தார்.

தெனாலிராமன் ஒரு திரையில் கண்ணைமட்டும் போட்டிருந்தான். இன்னொரு திரையில் இன்னொரு கண் போட்டிருந்தான். வேறொரு திரையில் ஒரு காலைப் போட்டிருந்தான். இப்படி ஒவ்வொரு உறுப்பை ஒவ்வொரு திரையில் போட்டிருந்தான்.

முதல் ஓவியத்தைப் பார்த்த மன்னர், "என்னப்பா ஒரு கண் மட்டும் இருக்கிறது, இன்னொரு கண் எங்கே?" என்று கேட்க-"இன்னொரு கண் அந்தத் திரையில் இருக்கிறது. ஒவ்வொரு திரையிலும் உள்ள உறுப்பை நீங்கள் ஒன்று சேர்த்தால் ஒரு உருவத்தையே பார்க்கலாம்" என்று சொன்னானாம்.

அதைப்போல ஒவ்வொரு திட்டமாகத் தொட்டுத் தொட்டு என்னை விடச் சொல்கிறீர்களா? அல்லது ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு அதைச் செம்மையாகச் செய்யச் சொல்கிறீர்களா?

காரிருளும் உதயசூரியனும்!

கி.வீரமணி

'சிகாகோ பல்கலைக் கழகத்தின் அரசியல் பிரிவில், அரசியல் கருத்தரங்கில் கலந்து உரையாற்றினேன். அங்குத் தங்களைப் பற்றியும், நமது இயக்க வரலாறு பற்றியும், அண்ணாவைப் பற்றியும், இன்றைய தமிழக அரசு பற்றியும் அமெரிக்க மாணவர்களும் பேராசிரியர்களும் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நம்மவர்கள்தான் தமிழகத்தில் நமது வளர்ச்சியை, சூரியனை மேகத்தால் மூட நினைப்பதுபோல், இருட்டடிப்புச் செய்ய முனைகிறார்களே தவிர, உலகின் பல்வேறு நாடுகளில் நமது பணியின் பயன்பற்றிப் பேசப்படுகிறது.

''சிகாகோ பல்கலைக் கழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சி, தங்கள் ஓயாத தொண்டு, தங்கள் காலத்திலேயே கொள்கைகள் பெற்றுவரும் வெற்றி குறித்தெல்லாம் குறிப்பிட்டேன். பேச்சுக்குப் பிறகு, தங்களைப் பற்றியும், தன்மான இயக்க வளர்ச்சி பற்றியும் நிறைய வினாக்கள் எழுப்பினார்கள். பதில்களை விளக்கமாக அளித்தேன்.''

—தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழர்தம் தனிப்பெருந் தலைவரும், தன்மான இயக்கமெனும் நம் பெருங் குடும்பத்தின் வழிகாட்டியுமான தந்தை பெரியார் அவர்களுக்கு நியூயார்க் நகரத்திலிருந்து எழுதிய கடிதத்தின் ஒரு பகுதிதான் மேலே காட்டப்பட்டுள்ள வரிகள்!

உலக வரலாற்றில் வைர வரிகளால் எழுதப்பட வேண்டிய அளவுக்குத் தனிப்பெருஞ் சாதனைகளைக் குவித்துவரும் இயக்கம் நமது இயக்கம்—ஆம், திராவிடர் இயக்கம்!

உரிமைப் போர்நடத்தி வெற்றி பெறும் இயக்கம் மட்டுமல்ல இது; அறியாமையை, மூட நம்பிக்கையை தற்குறித்தனத்தை, மௌடீகத்தை பழமையை, வைதீகத்தை, பாசீசத்தைவிடக் கொடிய ஆரியத்தை எதிர்த்து, வெற்றிவாகை சூடி வரும் சமுதாயப் புரட்சிஇயக்கமாகும் இது!



நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பற்பல வளர்ச்சிகள், உருமாற்றங்கள் முதலியன பெற்றாலும் திராவிட மக்களிடையே இனஉணர்ச்சியையும், உரிமை வேட்கையையும் தன்மான உணர்வையும், சுதந்திரமாகச் சிந்திக்கச் செய்யும்ஆற்றலையும்வளர்க்க, அரை நூற்றாண்டுக்கு மேல் இவ்வியக்கம் செய்துள்ள சாதனை, சரித்திரப் புகழ் பெற்ற சாதனைகள் என்றால் அது மிகையாகாது!

எதிரிகள் நம் இயக்கத்தின் கொள்கைகளை இருட்டடித்தது ஒரு கட்டம்; பிறகு, அலட்சியப் படுத்தப் பார்த்தனர். இது இரண்டாவது கட்டம்.

விஷமப் பிரச்சாரம் செய்து, திரித்துப் பிரச்சாரம்செய்தனர். இது மூன்றாவது கட்டம்.

இப்போது எதிரிகள் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, சரணாகதி அடைந்தாவது இதனை ஒழித்து விடலாமா என்று யோசிக்கின்றனர். இது நான்காவது கட்டமாகும்.

உள் நாட்டிலேயே, ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான மக்களை நாள்தோறும் சந்தித்து — பொதுக் கூட்டங்கள் மூலம்— அறிவுப் பிரச்சாரம், கொள்கைப் பிரச்சாரம் நடத்திப் புதுப் பாணி வகுத்ததே இந்தியத் துணைக்-

கண்டத்தின் வரலாற்றிலேயே நமது இயக்கந்தான்!

அதற்குமுன் கூடுவார்கள்— சிறிய சிறிய மண்டபங்களில். வீதிகளிலும், தெருக்களிலும், பாதைகளிலும், கடற்கரைகளிலும் பூங்காக்களிலும் பத்தாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களைக் கூட்டி, அவர்களுக்கு அறிவு கொளுத்தும் பிரச்சாரத்தை ஊட்டும் முறை—தமிழகத்தில் நமது இயக்கம் உண்டாக்கிய புது முறையாகும்.

வட நாட்டு மாநிலங்களில் இப்போதும் எல்லாம் ''ஹால் மீட்டிங்குகள்''தான். மிகப் பெரிய தேசியத் தலைவர்கள் வந்தால் தான் டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெருநகரங்களில் மைதானப் பொதுக்கூட்டங்கள்!

இப்படிப் புதுமை வகுத்துங்கூட இங்குள்ள ஏடுகள், நமது கொள்கைகளை, இயக்கத்தினை இருட்டடிக்கவே செய்தனர். மக்கள் ஆதரவே இல்லாதவர்களுக்கு மலையளவு விளம்பரம் தரும் ஏடுகள்கூட, லட்சோப லட்சம் மக்கள் கூடும் நமது கூட்டங்களையோ, மாநாடுகளையோ, ஊர்வலங்களையோ விளம்பரப்படுத்துவதில்லை!

என்றாலும் தந்தை பெரியார் அவர்களோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ இப்போக்கு கண்டு தளரவில்லை; சலிக்கவில்லை. ''ஊதுகிற சங்கை ஊதுவோம்; விடிகிற போது விடியட்டும்'' என்று இடைவிடாமல் எடுத்துக் கூறிக் கொண்டே வந்தார்கள். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகர்ந்து தானே ஆகவேண்டும்?

சுழன்றடித்த சுயமரியாதைச் சூறாவளியால் அறியாமையின், சாதி ஆண்வத்தின் அடிபீடம் ஆட்டங்கண்டது.

டாக்டர் கலைஞர் அவர்கள் கவிதை நடையில் பல ஆண்டுகளுக்கு முன்பே பாடியதுபோல், ''பாராட்டிப் போற்றிவந்த பழமை மோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்'' என்றபடி, இடிந்துவிட்டது! அந்த இடிபாடுகளுக்கிடையே தோன்றியதுதான் பகுத்தறிவாளர் ஆட்சியான இன்றைய தி.மு.க. ஆட்சியாகும்!

பத்திரிகைகளின் கட்டுப்பாடான இருட்டடிப்பு, விஷமப் பிரச்சாரம் —இவைகளையும் தாண்டி இந்த இயக்கம்—திராவிடர் இயக்கம் உலக வரலாற்றின் ஒளிமிகுந்த பக்கங்களில் ஏற இருக்கிறது!

உலகம் இன்று இரண்டு பெரும் வல்லரசு அணிகளாகி நிற்கின்றது. ஒன்று சோவியத் ரஷ்ய அணி. மற்றொன்று அமெரிக்க அணி. இவ்விரண்டு நாடுகளிலும் நம் இயக்கத்தைப் பற்றி, நமது அடிநாள் தொண்டினைப் பற்றி, நமது கொள்கைகள் எவ்வளவு புரட்சிகரமானது என்பதைப் பற்றி இப்போது அவ்விரு வல்லரசு நாடுகளின் வரலாறுகளும் பலமாகத் தெரிவிக்கின்றன!

லெனினையும், ஏங்கல்ஸையும் நமது இயக்கம் சுமார் 35 ஆண்டுகட்கு முன்பே தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்திற்று. அதேபோல, அமெரிக்க இங்கர்சாலையும், ஆபிரகாம் லிங்கனையும் நமது இயக்கம் தமிழ் நாட்டில் பிரபலப்படுத்தியது!

உலகில் எங்குமில்லாத அளவுக்கு மூட நம்பிக்கைகள் பற்றிப் படர்ந்து கொண்டுள்ள இங்கு உலகில் எங்கும் காணமுடியாத அருமையானதொரு கருத்துப் புரட்சி வெற்றி, ஆயுதம் ஏந்தாத மௌனப் புரட்சியாகவே சாதித்துக் காட்டி வருகிறோம்.

இதனால் உலகின் பார்வை நம் மீது இன்று வீழ்ந்து இருக்கிறது! பல மேல் பட்டப்படிப்பு ஆராய்ச்சியாளர்கள் நம்மை, நமது இயக்கத்தை, நாம் பெற்ற கொள்கை வெற்றிகளை மையமாகக் கொண்டு தங்களது ஆராய்ச்சியை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஹார்ட் கிரேவ் ஜூனியர் என்பவர் ''திராவிடர் இயக்கம்'' என்ற தலைப்பில் ஒரு சிறந்த நூல் 1967-ம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். அதன்மூலம் அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் நமது இயக்கம் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டினார்கள்!

டாக்டர் யூஜின் இர்ஷிக் என்ற கலிபோர்னியா பல்கலைக் கழகத்து வரலாற்றுத் துறையின் துணைப் பேராசிரியர் அவர்கள் ''தென்னிந்தியாவில் அரசியல் சமூகப் போராட்டங்கள் 1914 முதல் 1929 வரை—பார்ப்பனரல்லாதவர் இயக்க வரலாறு'' என்ற தலைப்பில் சுமார் ஆறு ஆண்டுகளுக்குமேல் ஆராய்ச்சி செய்து, தமிழ் நாட்டிலும், இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் மியூசிய நூலகத்திலும் உழைத்து சிறப்பான ஒரு நூலை எழுதி, இவ்வியக்கத்தின் சாதனை மகத்தானது என்று காட்டியுள்ளார்!

மலேஷியா பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான திரு. விசுவநாதன் அவர்கள் ஆஸ்திரேலியாவில், ஒரு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையில் அவர் டாக்டர் (பிஎச். டி.) பட்டம் பெறுவதற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைப்பு, ''தமிழ்நாட்டில் வட்டார இயக்கங்களின் வரலாறு (History of Regional movements in Tamil Nadu)'' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து வருகின்றார்.

அதுபோலவே தறபோது, சுவீடன் நாட்டைச் சார்ந்த குமாரி. அனிதாடேல் அம்மையார் (Miss Anita Dehl) தரங்கம்பாடியில் தங்கி, நமது இயக்கம் பற்றி மேலும் ஒரு தீவிர ஆராய்ச்சியில் (ஆராய்ச்சிப் பட்டத்தைப் பெறுவதற்கு) ஈடுபட்டுள்ளார்!

திருமதி பார்னெட் (Mrs. Barnett) என்ற ஒரு நீக்ரோ அம்மையாரும் இப்படி ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சில பல காலம் இங்கிருந்துவிட்டுப் பிறகு அங்கே போயிருக்கிறார்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ல், அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக் கழகத்தில் 'சப் ஃபெலோஷிப்' பெற்று, நமது இயக்கத்தினைப் பற்றியும், அதன் தன்னிகரற்ற சாதனைகளையும் பற்றி எடுத்துரைத்தார்கள்.

நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போதும், உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட போதும், அண்மையில் அமெரிக்காவிற்குச் சென்று, சிக்காகோ பல்கலைக்கழகம் நியூயார்க், வரவேற்பு போன்ற பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டபோதும் நமது இயக்கம்; கொள்கைகள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களது சாதனை, தி.மு.க. ஆட்சியின் வெற்றிகள்—இவைகளையெல்லாம் மிகவும் தெளிவுடன் குறிப்பிட்டுவிட்டு திரும்பிஇருக்கிறார்கள்!

இன்று நமது இயக்கம், கொள்கை நமது தி.மு.க. ஆட்சியின் சாதனைகள், வடநாட்டு மாநிலங்களில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பரவிப் புகழ் ஈட்டுவனவாய் அமைந்திருக்கின்றன!

காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? கறை சேற்றால் தாமரையின் வாசம் போமோ? என்றார், புரட்சிக் கவிஞர்!

ஆம்; கட்டுப்பாடான இருட்டடிப்பு என்ற காரிருள் இப்போது விலகி வருகிறது! அறிவியக்கம் என்ற நம் உதய சூரியன் தன் ஒளிக்கதிர்களைத் திசையெட்டும் பரப்பி வருகிறான்! நம் இதயங்கள் பெருமிதத்தால், மகிழ்ச்சியால் விம்முகின்றன! ∴

அன்றொரு நாள்...

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன்

பல ஆண்டுகளுக்கு முன் நான் முத்தமிழ்க் கலா வித்வரத்தின டி. கே. எஸ். நாடகக் குழுவில் பால நடிகன். அரைக் கால் சட்டைப் போட்டுக் கொண்டிருக்கும் பருவம் அப்போது. ஈரோட்டில் எங்கள் நாடகக் குழு முகாமிட்டிருந்தது. அப்போதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுக்கு வேகமாக அறிமுகமாகிக் கொண்டு வருகிறார்.

எழுத்திலே புதிய நடை—பேச்சிலே புதிய முறை—கற்றோர்—மற்றோர்—குறிப்பாக இளைஞர்கள் இன்ன பல்லோரின் இதயங்களில் குடிபுகத் தொடங்கிய நேரம்—என்கிறது. இரவு ஏன் இன்னும் வரவில்லை என்கிற கவலை. இருள் வந்துவிட்டது. மின்சார ஒளி மின்னத் தொடங்கியது. எனக்கோ மின்னும் அண்ணாவின் கண்களை எப்போது காணப்போகிறோம் என்ற பேராவல். எங்களைத் தனியாக ஒரு வீட்டில் தங்கவைத்திருக்கிறார்கள். அண்ணாவும் மற்றும் அந்நாடகத்தில் நடிப்பவர்களும் கொட்டகைக்கு வந்தவுடன் எங்களை அழைத்துச் செல்லப் போகிறார்களாம்.

இதிலும் ஒரு சோதனையா? முதலில் நாங்கள் போய்க் காத்திருக்கக்கூடாதா? வந்துவிட்டது வாசலுக்கு எங்களை அழைத்துச் செல்ல வேன். நான்தான் முதல் ஆளாக ஏறி அமர்ந்து கொண்டேன்.

வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது வேன். தியேட்டரை நோக்கி என் சிந்தனைச் சக்கரம் அதைவிட வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நாடகக் கொட்டகை வந்துவிட்டது. என்னுடன் வந்த ஒவ்வொரு நடிகர்களும் ஒவ்வொரு முகத்தைப் பிடித்துக் கொண்டனர் ஒப்பனை செய்ய!

எனக்கும் ஒரு முகம் அகப்பட்டது. ஒப்பனை வேலையைத் தொடங்கினோம். ஆனால் எனக்குக் கிடைத்த முகமோ நேராக இல்லாமல் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஏதேதோ நகைச்சுவையாகப் பேசிக் கொண்டு இருந்தது. எனக்கோ கோபம். இப்படித் தலையை ஆட்டிக் கொண்டேயிருந்தால் எப்படி ஒப்பனை செய்வது? என்று கடுமையாகப் பேசி அந்த முகத்தைப் பிடித்து படுபாடு படுத்தினேன். அதே சமயம் பக்கத்தில் ஒப்பனை செய்து கொண்டிருந்த இன்னொரு முகத்தையே அடிக்கடி ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏன் இந்த முகத்திடமே கேட்டு விடுவோமே!

''ஏன் சார்! இவர்தான் அண்ணாவா?''

''இல்லை.''

''பிறகு?''

''அவர்தான் ஈழத்தடிகள்.''

''பிறகு அண்ணா யார்?''

(அமைதியாக) ''நான்தான்!''

அவ்வளவுதான்! என் கைகள் நடுக்கமெடுத்தன. பேச்சு வரவில்லை. என் பெயர் இராஜேந்திரன். இந்த நாடகக் குழுவில் நடிகன்—என்றேன்.

அண்ணா சொன்னார்கள்—''தெரியும்! சம்பத் சொல்லியிருக்கிறான். சின்ன வயதிலேயே இயக்கத்தில் வெறி பிடித்த பற்றுக் கொண்டவன் நீ என்று.'' ஆஹா! நான் எங்கேயோ மேலே போய்க்கொண்டிருக்கிறேன். அண்ணா புகழ்ந்து விட்டார். என் தெய்வம் பாராட்டி விட்டது. இப்படித்தான் அண்ணாவை முதன் முதலில் சந்தித்தேன். பிறகு அண்ணாவின் புகழ் மின்னல் வேகத்தில் நாட்டில் பரவத் தொடங்கியது. கலை உலகம் இவரைத் தேடி வந்தது. கலைவாணர் என்.எஸ்.கே. அண்ணாவின் 'நல்ல தம்பியை' நாடெங்கும் திரையிட்டார்

அவன் நல்ல தம்பிகளை உருவாக்க முற்பட்டான். அண்ணா, வேலைக்காரியைத் தந்ததால் நாட்டைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளைச் சுத்தம் செய்ய முனைவதில் ஈடுபட்டாள், வேலைக்காரி. இப்போதுதான் அண்ணாவின்அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து வந்த—திருவா

''யாரோ அண்ணாதுரையாம். என்ன எழுத்து, என்ன பேச்சு! மனுஷன் சக்கைப்போடு போடுகிறாரய்யா' என்று பேச ஆரம்பிக்கப்பட்ட காலம்.

நான் அண்ணா அவர்களின் கருத்தோவியங்களைப் படித்திருக்கிறேனே தவிர, அவரை நேரில் கண்டதில்லை. நான் அவரது எழுத்துக்களைப் படித்துத் தான் ஏகலைவன் ஆனேனே தவிர, அவர் எப்போதும் துரோணர் ஆனதில்லை; ஆக விரும்பியதில்லை

இந்தச் சமயத்தில்தான் இனிக்கும் செய்தி எனக்குக் கிடைதது. ஈரோட்டில் நாடகம்—திராவிட நாடு பத்திரிகை வளர்ச்சி நிதிக்காக. அவரும் காஞ்சித் தோழர்களும் நடிக்கும் சந்திரோதய நாடகம். அதுவும் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிற கலையரங்கிலேயே. அதுவும் நாங்களே ஒப்பனை செய்துவிட வேண்டும். ஆகா! இன்று எழுத்துருவில் நம் இதயத்தில் குடிபுகுந்த அண்ணாவை முதன் முதலில் காணப்போகிறோம். அதுவும் நேரில்—பக்கத்தில் இருந்து. அடாடா நேரம் போகமாட்டேன்

காதலில் பலவகை...

இந்தி படிக்கமாட்டேன் என்று சொன்னால், அவர்கள் கோபித்துக்கொள்வார்களே - நம்மோடுபேச மாட்டார்களே என்று கருத்திருமன் பயப்படுகிறார்.

அவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும்; போராட்டத்தில் பல முனைகள் இருப்பதுபோல், காதலிலும் பல முனைகள் இருக்கின்றன. சில காதல் ராட்சஸக் காதல். ராட்சஸக் காதல் என்று சொல்வது காதைப் பிடித்து இழுப்பது, கிள்ளுவது, குத்துவது என்று இப்படிச் செய்தால் வரும்.

என் அனுபவத்தில் இந்த வடநாட்டுக் காதல்-அரசியல் காதலைச் சொல்கிறேன் - வடநாட்டுக் காதலில், அவர்களை மீறி நாம் நடப்போம் என்று தெரிந்தால்தான் கொஞ்சம் அவர்கள் இறங்கி வருவார்களே தவிர, வேறு வழியில்லை.

ஞர் மு. கருணாநிதி அவர்கள் கலைஞர் கருணாநிதயானார். அண்ணா அவாகள் கலைத்துறையில் முதலாம் போர் முனையைத் துவக்கி வெற்றிப் பாதையை நோக்கி நடை போட்டாரென்றால், கலைஞர் அவர்கள் அண்ணாவைப் பின்பற்றி கலைத் துறையில் வீர நடை போடத் துவங்கினார்.

இவரால் உருவாக்கப்பட்டஎழுத்தோவியங்கள் மக்கள் இதயத்தைத் தொட்டன. எத்தனையோ நாடகங்கள், எத்தனையோ திரைப் படங்கள், சில பிரச்சார நாடகங்களை எழுதி அண்ணாவைப்போல் இவர் நடிக்கவும் செய்தார். இவர்கள் உண்டாக்கிய கலைத்துறைப் பட்டாளத்துக்கு, சிப்பாய்கள், தலைவர்கள், மறைந்த அண்ணன் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர் அவர்கள், புரட்சி நடிகர்அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள், நான், நடிகமணி டி.வி.என். அவர்கள் எங்களைத் தொடர்ந்து வந்த சிப்பாய்கள் எத்தனையோ பேர். இவரால் உருவாக்கப்பட்ட பராசக்தியின் அருள் பெற்ற பக்தர்கூட இன்று இவரையும் கழகத்தையும் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு ஒழித்துக்கட்டுவேன் என ஓலமிடுகிறார்கள்.

கலைத்துறையில் நாம் புதுவழி கண்டு மக்களை ஈர்த்த நேரத்தில் நாம் சுகவாசிகளாக இல்லை.அன்று நடந்த அரசியல் கோமாளித் தனத்தையும், கொடுமையையும் மொழியுரிமை பறிக்கப்படும் சூழ்ச்சியையும் கண்டு கொதித்தெழுந்து திசை தெரியாமல் அலைந்து கொண்டிருந்த மக்களுக்கு நாம் தான் கண்ணில் பட்டோம்.ஏக்கத் துடன் என்ன செய்ய? என்றுநம்மையே பார்த்திருந்தனர். திருச்சியில் கூடிய மாபெரும் மாநாட்டில் கழகத்தைத் தேர்தலிலே ஈடுபடக் கட்டளையிட்டனர் மக்கள்.

அதன்படி தேர்தல் களங்களைச் சந்தித்தோம். பிறகு அரசை மக்கள் நம் கையில் ஒப்புவிக்கும்வரை அன்றைய ஆட்சியாளர்களால் நாம் அடைந்த தொல்லைகள், அனுபவித்த கொடுமைகள், துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிலும் குறிப்பாகக் கலைஞரவர்கள் அனுபவித்த கொடுமைகளைக் கண்ணீர் விடாமல் எழுத முடியுமா? அவர் செய்த தியாகங்களுக்கு விலை மதிப்புண்டா?

இதயம் உள்ள மக்கள் இதையெல்லாம் கண்டார்கள். ஐயா காந்தீய வாதிகளே! அகிம்சையின் பிரதிநிதிகளே நீங்கள் ஆண்டது போதும்; அதனால் மக்கள் மாண்டது போதும்; கீழே இறங்குங்கள். அரசுக் கட்டிலைவிட்டு—என ஆணை பிறப்பித்து அரசைக் கழகத்திடம் ஒப்படைத்தனர்—மக்கள். அண்ணா முதல்வரானார். அவர் ஆற்றிய பணிகள், போட்டு வைத்திருந்த நல்ல நல்ல திட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் வைதீக நடையில் சொல்லப் போனால் அளவுக்கு அதிகமாக உழைத்து விட்டாய்.நீ ஓய்வெடுத்துக் கொள். உனது தூய்மை நிறைந்த திட்டங்களை உன்னால் உருவாக்கப்பட்ட உனது தம்பிகள் நிறைவேற்றுவார்கள் என உறுதி கூறி அவரை அழைத்து வங்கக் கடற்கரையில் உறங்கச் சொல்லி விட்டாள் இயற்கைத் தாய்.

கலைஞர் செய்த தியாகங்களுக்கு விலைமதிப்பிருக்க முடியுமா? என்னை விட மாற்றார்களும் அவரைப் பாராட்டுவது கேட்டு மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறேன் நான். கலைஞரே! என் ஆருயிர்ச் சகோதரரே! நமது அண்ணா அவர்களின் தூய்மை மிக்க திட்டங்களையெல்லாம் துணிவோடு நிறைவேற்ற நீங்கள் நீண்ட காலம் வாழுங்கள். மக்கள் உள்ளத்தில் நீங்காத— நிரந்தரமான இடத்தைப் பெறுங்கள். எதைக் கண்டும் கலங்காதீர்கள். நாங்கள் இருக்கிறோம் பக்கத்தில்! வாழ்க! அண்ணாவின் புகழ்!

★



சில மனுஷங்களைப் பாத்துத் தான் நான் ஆமாம் சாமி போடக்கத்துக்கிட்டேன் !

சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய சின்னப்பா அவர்களைப் போல் அதற்கு முன்பிருந்த நல்ல நடிகர் ராஜா சாண்டோ. பம்பாயில் தொழில் கற்றுத்தேர்ந்த அவர் அங்கே பிரபலமான கதாநாயகனுகத் திகழ்ந்த நேரத்தில் தமிழ்ப் படங்களுக்கு இயக்குநர் ஆகலாம் என்று வந்தார்.

காரணம்—அவருக்குத் தமிழ் மொழி நன்ருகத் தெரிந்திருந்ததுதான்.

இங்கு வந்து அவர் படங்களை இயக்க ஆரம்பித்தபோது—நுணுக்கக் கலைகளில் அவர் அதிகமாகத் தலையிடுவது கிடையாது. ஏனென்ருல் அவருக்கு அவற்றில் அவ்வளவு பழக்கமும் கிடையாது.

நடிக்க வேண்டுமா? ஒரு காட்சியில் எப்படி வீரம் சொட்ட நடிப்பது... எப்படிக் காதல் காட்சிகளில் பங்கு பெறுவது என்பதையெல்லாம் வெகு நுட்பமாகக் கவனித்துச் சொல்லித் தருவார். ஒரு தடவை இரு தடவையல்ல; தான் நினைக்கிற உணர்வுகள் வரவில்லை என்ருல் நூறு முறைகூட நடிகரிடம் வேலை வாங்க அவர் தவறமாட்டார்.

அப்படியொரு வைராக்கியமான இயக்குநர் அவர்.

பழம்பெரும் இயக்குநர் ராஜா சாண்டோ



தலையில் முண்டாசு கட்டியிருப்பவர் இயக்குநர் பஞ்சு

அந்தக் காலத்தில் வரும் காதல் காட்சிகள் இந்தக் காலத்துக் காட்சிகளைப் போல் அல்ல. காதலன் காதலியாக நடிப்பது என்ருல் அது நடிப்புதான். கிட்டே நெருங்குவது தொடுவது எல்லாம் அன்று நடைபெற முடியாத விஷயம்!

ஆனால் இந்தக் காட்சிகளில் காதலன் காதலியைத் தொட வேண்டும் என்பது ராஜா சாண்டோவின் கொள்கையாக இருந் தது. விஷ்ணு லீலா என்ருெரு படம் அந்த நாளில் எடுக்கப்பட்டு வந்தது. அதில் இவருக்கு இரணியகசபு வேஷம். இரணிய கசபுவின் மனைவியாக எம். எஸ். தேவசேனு நடித்துக் கொண்டிருந்தார். ஒரு காட்சியில் ராஜா சேண்டோ அவரைத் தொட்டு நடிக்க வேண்டும் என்ருர். அந்த அம்மா முடியாது என்ருர்கள். ஆக இது பெரிய சண்டையாக வளர்ந்து கடைசியில் விஷ்ணு லீலா படமே பாதியில் நின்றுவிடுமோ என்கிற அளவுக்கு நிலைமை மிஞ்சி விட்டது.

இயக்குனர் பஞ்சுவின் இதயம் கவர்ந்தவர்

ராஜா சேண்டோவின் கோபத்தை ஒருவாறு சமர்தானப்படுத்தி அவரை நடிக்கச் செய்வதற்குள் அந்தத் தயாரிப்பாளர்களுக்கும் உதவியாளர்களாக இருந்த எங்களுக்கும் போதும் போதுமென்றாகிவிட்டது.

ஒரு வழியாக விஷ்ணு லீலா வெளி வந்த பிறகு 'ஆராய்ச்சி மணி'யை அவர் இயக்கிக் கொண்டிருந்தார். பெரியவர் (கிருஷ்ணன்) அப்போது அவருக்கு உதவியாளர்; நான் எடிட்டர்!

'ஆராய்ச்சி மணி' படத்தில் சோழனின் மகன் தன் கன்றைத் தேரில் நசுக்கி விட்டதைக் கண்ட பசு கதறிக் கொண்டு வந்து மணியை அடிக்கிற காட்சி படமாகிக் கொண்டிருந்தது.

என்னென்னவோ செய்துபார்த்தார்கள்; பசு கண்ணீர் விடவில்லை; ஆராய்ச்சி மணியையும் அடிக்கவில்லை. சலித்துப் போய் அவர் மீண்டும் மீண்டும் அந்தப் பசுவையும் உதவியாளர்களையும் கோபித்துக் கொண்டிருந்தபோது பெரியவருக்கு ஆத்திரம் வந்து வெளியே வந்தார். எனக்கும் அது என்னவோ போல இருந்தது. இருவருமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

''என்ன வேலை இது? பசுவை எப்படி வேலைவாங்கி படம் எடுப்பது என்று கூடத் தெரியாமல் இந்தப் பாடு படுத்துகிறாரே... அது மாடு தானே... மனுசரா?'' என்று ஏதோ படபடப்பில் நாங்கள் இருவருமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

திரும்பிப் பார்த்தால்—சிவந்த கண்களோடு ராஜா சேண்டோ நின்று கொண்டிருந்தார்.

''நீங்க ரெண்டுபேரும் வெளியே வந்து விமர்சனமா செய்யறீங்க? ஏன் அந்த சீனை நீங்க ரெண்டு பேரும்தான் எடுத்துக் கிழியுங்களேன் பார்ப்போம்!'' என்றார் அவர்.

எனக்கும் பெரியவருக்கும் துடிப்பு.

''எடுக்கிறோம்'' என்றோம்.

கொஞ்ச நேரம் யோசித்து அந்தக் காட்சியை ஷாட்டுகளாகப் பிரித்து எடுத்து முடித்தோம். படமாக்கப்பட்ட காட்சி கழுவிப் போட்டுப் பார்க்கப்பட்டபோது—ராஜா சேண்டோ என்ன எதிர்பார்த்தாரோ, அது காட்சியில் இருந்தது!

உடனே எங்களை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டார் அவர். இந்தப் பாராட்டும் அரவணைப்பும்தான் எங்களை முதன் முதலாக இயக்குநர்களாக அறிமுகம் செய்துவைத்தது.

அதையும் ராஜா சேண்டோ வேதான் செய்தார். அடுத்த படம் எடுக்கப்பட்டபோது எங்களுக்கு ஒரு முதலாளியையும் அறிமுகப்படுத்தி வைத்து அவரிடம் எங்களையே இயக்குநர்களாகப் போடச் சொல்லி சிபாரிசு செய்து எங்களை ஊக்குவித்தார், அவர்.

தனக்கு ஒரு தொழில் தெரியவில்லை என்றால் அதைத் தெரியாது என்று ஒப்புக் கொள்வதில் அவர் பெருந்தன்மையானவர் அந்த விஷயம் தெரியும்; இந்த விஷயம் தெரியும் என்றெல்லாம் நடிக்கிறவர் அல்ல. கதையில் என்ன பாத்திரம் இருக்கிறதோ அதை மட்டுமே நடிக்கத் தெரிந்தவர் ராஜா சேண்டோ!

இதே போலத்தான் ஒரு நடிகர் நன்றாக நடித்து விட்டால் அவரை வானளாவப் புகழ்ந்து ஊக்குவிப்பார். அப்படி அவரால் ஊக்குவிக்கப்பட்ட நடிகர்களிலே ஒருவர்தான் பி. யு. சின்னப்பா.

மைனர் ராஜாமணி படத்தில் நடிப்பதற்காக வந்த சின்னச்சாமியின் நடிப்பைப் பார்த்துத் தட்டிக் கொடுத்து ராஜா சேண்டோ ஊக்குவித்த பிறகுதான் அந்தச் சின்னச்சாமி — சின்னப்பா ஆனார் என்பது பல பேருக்குத் தெரியாத விஷயம்! ★

ஒரு மகவின் ஏக்கக் குரல்

''ஓ.. அன்னையே!
அறிமுகம் வேண்டாத
முன்னம் நான் கண்ட
முதல் முகம் உன் முகம்!
பின்னர் நீ சொல்லித்தான்
பெற்ற தந்தை அறிமுகம்
ஓ.. அன்னையே!''

இது ஓர் ஆங்கிலக் கவியின் தமிழ்வரி வடிவம்.

இந்தக் கவிதையை ஆங்கிலத்தில் யாத்தவர் பிரபல இயக்குநர் (கிருஷ்ணன்) பஞ்சு.

அவருடைய இல்லத்தின் முகப்பு வாயிலில் மாட்டப்பட்டுள்ள ஒரு ஓவியத்தின் அடியில் இந்த உணர்வூட்டும் வரிகளை எழுதி அதன் கீழ் 'பஞ்சு' என்றெழுதப் பட்டிருந்தது.

படம் கையால் வரையப்பட்ட ஒரு ஓவியம் தான். வெகு எளிமையாக அன்னையொருத்தித் தன் பிஞ்சு மகவை அரவணைத்தபடி சித்தரிக்கப்பட்டிருந்தாள்.

இந்தக் கவிதையின் பின்னணியில் ஏதோ இருக்க வேண்டும் என்று இயக்குநர் பஞ்சு அவர்களைக் கேட்டபோது அவர் சொன்னார்:

'என் வீட்டில் எல்லோருடைய புகைப்படங்களும் இருக்கின்றன. என் தாயின் படம் மட்டும் இல்லை. அவர் உயிரோடு இருந்தபோது பல தடவை முயற்சித்தேன். புகைப்படமெடுக்கக் கூடாது என்ற ஐதீகத்தோடு அவர்கடைசி வரை மறுத்து விட்டார். அவர் இறந்த பிறகு எனக்கு ஒரே ஒரு குறை மனதுக்குள் இருந்தது. அப்போது என் நண்பரும் ஓவியருமான ஒருவர் இந்தப் படத்தை வரைந்து கொண்டு வந்து கொடுத்தார்.

''அதன் கீழ் என்னையும் அறியாமல் விழுந்த வரிகள்தான் இந்தக் கருத்தில் இருக்கும் அந்த ஆங்கிலப் பாடல்!'' என்று சொன்னார் இயக்குநர் பஞ்சு!

''ஓ... அன்னையே!
அறிமுகம் வேண்டாத
முன்னம் நான் கண்ட
முதல் முகம் உன்முகம்!
பின்னர் நீ சொல்லித்தான்
பெற்ற தந்தை அறிமுகம்!
ஓ... அன்னையே!''

திரும்பவும் அந்த வரிகளைப் படிக்கும்போது அதில் ஒரு மகவின் தாய்ப் பாசம் பிணைந்து கிடப்பதை நம்மால் உணர்ந்து நெகிழ முடிகிறது!

-- இருகூரான்

ஓடம் நதியினிலே

உதிர்ந்த மரம் கரையினிலே!

உறுதி கூறுகிறோம் !

புதிய ஆண்டு துவங்கி விட்டது. கடந்த ஆண்டில்தான் நம் தேசத்தின் வலிமை சோதனைக்குள்ளாயிற்று. நெஞ்சுரம் மிக்கவர்களின் தலைமையில் நாம் கடமை உணர்வோடும், கண்ணியத்தோடும், நீதி காக்க போராடினோம். ஏற்றமிகும் வெற்றிகளும் கண்டோம். நமது அன்னை பூமியின் அழகுக்கொடி அனைத்து நாடுகளிடையேயும் பட்டொளி வீசிப் பறந்திடவும், நமது நாட்டின் கொள்கைகள் துலங்கிடவும், சிம்கோ நிறுவனத்தைச் சார்ந்த நாங்களும் முழு மூச்சுடன் பணி புரிவோம் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறோம்.

★

சிம்கோ மீட்டர்ஸ் லிமிடெட்,

மீட்டர் பாக்டரி ரோடு,

தபால் பெட்டி நம்பர் 46,

திருச்சி-1, : தமிழ்நாடு.

பூவக்கா

ஆ. மாதவன்

கிராமம் எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. சந்தபூமி என்று சொன்னார்கள். சோளமும், மணிலாப்பயிறும் துவரையும் அமோகமாக விளைந்து வந்தது. பிரதான ரோட்டிலிருந்து ஊரை வளைத்துக் கொண்டு கப்பிப் பாதை குறுகலும் நெடுகலுமாக சுற்றிச் சுற்றி வந்தது. கோட்டையூர் போல— நெடு வயல் வெளி எல்லையில் சுற்றிலும் பாறை பாறையாக மலைகள் உயர்ந்து நின்றன. மேற்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் அனலாகக் காற்று வீசிக் கொண்டிருக்கும். மேற்கே ஒரு மலை மேலே சோழர் காலத்து மண்டபக் கோயில் போல ஒரு சிவன் கோயிலிருந்தது. மலை இரக்கத்தில் மூன்று மைல், நாலு மைல் வட்டாரத்தில் பரவலாகப் பெரிய ஏரி இணங்கிய யானை போல, மெல்ல மெல்ல அலைகள் சிலுப்பியவாறு பரந்து கிடந்தது.

ஊர் மக்கள் ரொம்ப நல்லவர்களாக இருந்தார்கள். நிறையப் பேர் தெலுங்கே பேசினார்கள். ஆனால் எல்லோருக்கும் தமிழ் தெரிந்திருந்தது. அதனால்தான், தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியராக என்னை அங்கே அனுப்பியிருந்தார்கள். கப்பி ரோட்டுப் புழுதியில், சைப்பையும் சோர்வுமாக பஸ்ஸை விட்டு இறங்கிய போது, கொஞ்ச நேரம் எதுவுமே தெரியவில்லை. மசமசவென்று அழுக்கு உடையும், கூச்சலுமாகக் குடியானவர்கள் கடைத் தெருவில் கூடியிருந்தார்கள். ''அரிசி படி ஒரு ரூபா... வாங்கலியா ஆயா கத்திரிக்கா... வாளைப் பளோம்... இந்தாப்பா உன்னியைத்தான். காதா கேக்களே... அது எவரு புது மனுஷலு... எப்புடு ஒஸ்தாரு?..''

இந்த மாதிரி எத்தனையோ குரல் வகைகளிடையே நடக்கிறேன். அந்தி மயங்கி இருள் பரவத் துவங்கியிருந்தது. இடுப்பில் கோவணமும், தலையில் வேஷ்டி முண்டாசுமாக மாடுகளை ஓட்டிக் கொண்டு, கலப்பை தூக்கிக் கொண்டு நிறைய விவசாயிகள் என்னைத் தாண்டிப் போனார்கள். முக்குத் திருப்பத்தில் நந்தி கோவிலிலிருந்து பெரிய மணி நாதம் கேட்டது. ஆக, இந்த முதல் காட்சியே கிராமத்தை எனக்கு மிகவும் பிடித்தது ஆக்கிவிட்டது.

ஃ ஃ ஃ

வீட்டின் முற்றத்தில் சிமிண்ட் சுவர் கட்டிய கிணறு. இரண்டு பக்கமும் வேப்ப மரங்கள். சுவரைத் தாண்டி இலைகளே இல்லாத தொங்கட்டான் தொங்கட்டானைக காய்கள் நிரம்பிய விலுவை மரம் போன்ற இலவமரம் ஒன்று நின்றிருந்தது.

சாயங்காலங்களில் அந்த ஒற்றை மரத்தில் நிறைய வகை வகையான பறவையினம் வந்து சம்மேளித்தன. கீச்சுக் குரல், கூக்குரல், சீட்டிக் குரல், இறகு படபடப்பு — விசுக்கென்று கை முஷ்டி அளவு பறவையொன்று எழுந்து பறந்து, ஒரு சுற்று சுற்றி விட்டு மறுபடியும் வந்து கூட்டுப் பரபரப்பில் கலந்து கொள்ளும். பெரிய பொதுக் கிணற்றிற்கு அப்பால் பெரிய மலைப் பாதை மறைவில் சூரியன் மறைந்து வெகு நேரத்திற்குப் பிறகுஇருட்டு வரும். அமர்க்களமாக அழுது அடித்துவிட்டு அமைதியாகத் தூங்க ஆரம்பிக்கும் குழந்தை போல இலவ மர முகட்டில் பறவைகள் அரவம் அடங்கிப் போயிருக்கும்.

தெற்கே—வயல்வெளியிலிருந்து பச்சை நெல் மணத்தை சுமந்து கொண்டு பின்னக் காற்று வரும். குமரன் தியேட்டரில் ஒலிபெருக்கியிலிருந்து 'உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்'—என்று தினமும் கேட்கும் பாட்டு கேட்கும். புழுதித் தெருவில், பன்றிகளை ஓட்டிக் கொண்டு சேரிச் சிறுவர்கள் ஓடுவார்கள்... இப்படியே அந்தி மாலையை ரசித்துக் கொண்டிருக்கும்போது — சைக்கிளில் வந்து இறங்குவான் — எதிர்த்த வீட்டு மணியக்காரரர் மகன் ரங்கமணி.

''அப்பாலேயே வந்துட்டீங்களா சார்?'' என்று கேட்டுவிட்டு சைக்கிளைத் தள்ளிக்கொண்டே உள்ளே போவான். அவ்வளவுதான். ரங்கமணியை நினைக்கும்போது சிரிப்பு வரும். அந்த ஊர் ராவுக்குப் புறம்பாக சிவப்பாக சந்தன நிறமாக இருந்தான். கழுத்தில் மைனர் சங்கிலி அணிந்திருப்பான். பெண்பிள்ளை மாதிரி சுருட்டை மயிர். இதில் மிகவும் வேடிக்கை என்னவென்றால், ஆள் தாட்டீகாரத்திற்கு நேர் வக்கணையாகக் குரல் கீச்சுக் குரல் பெண் குரல் மாதிரி இருக்கும்.

கிராமத்திற்கு வந்த புதிதில் அந்த வீட்டில் குடித்தனம் வந்த தினத்தில் பெரியவர் மணியக்காரர்தான் வாசலில் வந்து நின்று வாய் நிறைய வரவேற்றும்,.. ''வாங்க... வாங்க.. சார்''— என்றவர் தம் வீட்டுக்குள்ளே பார்த்து — ''ரங்கம்!'' என்று கூப்பிட்டார். ''வந்துட்டேன் நாயனா—'' என்று பதில் குரல் வந்தபோது — வரப்போகும் நபர் ஒரு பெண்ணாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் வந்து நின்றது இந்த ரங்கமணி. ''சாரு புதுசா ஒஸ்தாரு. ஓ தோண்டி நீலு எஸ்துரா—'' என்று கட்டளையிட்டார். மறுகணம் ரங்கமணி ஒரு தோண்டி நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தான். ''கால் கை சுத்தம் பண்ணிவிட்டு உள்ளாற போங்க சார் — புத்ஸு இல்லே—'' என்றார் மணியக்காரரர். அந்ய ஆசாரமும் பவ்யமும் எனக்கு ரொம்பவும் பிடித்தது.

மணியக்காரரர் எதிர்த்த வீட்டு துணை. நல்ல உபகாரி. பக்குவமான அனுபவக்காரரர். கிராமத்தில் நிலம் நீச்சு — பஞ்சாயத்து அதிகாரம் என்றெல்லாம் இருந்தது. பிள்ளைகுட்டிக்காரரர். ஆறில் ஐந்தும் பெண், இரண்டாவது ஆண் வாரிசுதான் ரங்கமணி. எதிர்த்த வீடாயிருந்தாலும் அவரது வயதுவந்த பெண் குழந்தைகளை முக வெளிச்சமாக நான்

பார்த்ததில்லை. எல்லாவற்றிற்கும் ரங்கமணிதான். என்ன ஏதென்று விசாரிக்க, உள்ளே பெண்களுக்கு ஆனந்தவிகடன், குமுதம் என்னிடமருந்து வாங்கிக் கொடுக்க, சமயங்களில் 'என்ன சார் இந்த பாகிஸ்தான்காரன் கடேசிலே பாருங்க — நம்மளவங்க காட்ற தண்ணியிலே அம்போன்னு ஓடப் போறான்...' என்று அரசியல் கூட உளறுவான். தொண்டைக் குழியில் விசில் வைத்துக் கொண்டவன் போல அவன் பேசுவது கேட்க சிரிப்பு சிரிப்பாக வரும். 'சாருக்கு நம்ப பேசினா எதுக் கொண்ணும் சிரிப்புதான்' என்று சைக்கிளில் ஏறி வயலுக்கு ஓடுவான்.'

ஃ ஃ ஃ

மாலைப் பகலவன் பாறைகளின் மறைவில் போய்க் கொண்டிருக்கிறான். முட்டை முட்டையான பாறைகளைத் தழுவி வரும் காற்றில் கொஞ்சமாக வெப்பம் தணிந்துக் கொண்டிருக்கிறது. ஏரிக்கரையினூடே இறங்கி நடந்து அலை நுழைந்த ஒரு விளிம்பில் போய் தண்ணீரை கையில் எடுத்து முகத்தில் ஏற்றிக் கொள்கிறேன். கீழே நண்டுச் சிப்பிகள் உடைந்து கிடக்கும் வயலைப் பிளந்து போகும் பாதையினூடே தனிமையில் ரொம்ப தூரம் நடந்து போக சுகமாக இருக்கிறது. கதிர்அறுத்த நெல் தாழ்கள் காலில் குத்துவது கூட ஒரு கிசுகிசுப்பாகத்தான் இருந்தது. எவ்வளவு அமைதி, விஜனமான நெடும் தொலை. நடந்து போகப் போக அங்கங்காக உதிர்ந்த நெல் கொறிக்க கூட்டமாக அமர்ந்திருந்த குருவிகள் கால் அரவத்தால் எழுந்து பறந்தன. நான் முன்னால் போனதும் பழைய படியும் வந்து அமர்ந்தன.

ஏரி விளிம்பில் ஒன்றிரண்டு வெண் கொக்குகள் கூட நொண்டியாக பனங்கிழங்கு காலை மடித்துக் கொண்டு எழுந்து பறந்து ஏரி நடுவில் ஆமை போல் தலை நீட்டிய பாறை மேல் போய் குந்தின. ஏரி மறு காலில் தவளைகள் 'குரேம்' போடுகின்றன. ஏரி வட்டத்தில் சதுரமாக வெள்ளைச்சுவர் ஒன்று சிதிலமான கோட்டை போல் தூரத்தில் தெரிகிறது. தேசிங்கு ராஜன் காலத்தில் கட்டிய மசூதி இப்போது பாழடைந்து கிடப்பதாக சொன்னார்கள். தனிமையில் காற்றோடு நடக்க அதுவே பேரின்பமாக இருந்தது. மசூதிக் கோட்டைக்கு அப்பால் உள்ள பெரிய கேணியிலிருந்து குடி தண்ணீர் எடுக்க குடமேந்தி வரும் பெண்களின் பச்சை சிவப்பு கலர் சேலைகள் அசைவது தூரத்திலிருந்து பார்ப்பது தேர்க் கோலம் போவது போலிருக்கிறது.

இன்ப விருந்து!

பல்லவன் கலைஞான வாசல்—'மா
மல்லை' யெனும்சிற்பத் திறன்வாழும் கோயில்!
கல்லொன்றில் குடைந்துள்ள கோயில்—தமிழ்க்
கலைஞரின் புகழ்கூறும் ஒருகோடிப் பாடல்!
(பல்லவன்)

நெய்தலும் குறிஞ்சியும் கூடும்—காட்சி
நெஞ்செல்லாம் இனிக்கின்ற இன்பவிருந் தாகும்!
மருதமும் மறுபக்கம் தோன்றும்—கடல்
மல்லைக்கு இவையெல்லாம் அழகின் சிரிப்பாகும்!
(பல்லவன்)

'கலை'என்றால் 'கல்லின்மேல் அலைகள்'—ஏழு
கல்லின்மேல் நிலைத்துள்ள தமிழ்நெஞ்சின் அலைகள்!—ஆறு
கலைக்கோயில் கடற்பெண்ணின் மடியில்—இன்று
கரைநின்ற ஒன்றுதான் தமிழர்க்குப் புதையல்!
(பல்லவன்)

பலநாட்டுக் கலம்வந்து சேரும்—முன்னாள்
பலநாட்டுக் கலம்வந்து சேரும்—தமிழ்ப்
பண்டமும் பண்பாடும் ஏற்றிக்கொண் டோடும்!
கலைநாட்டுக் கலங்கரை விளக்கம்—உலகக்
கலைஞர்க்கு அறைகூவல் விடுத்தபடி யிருக்கும்!
(பல்லவன்)

கவிஞர் முருகுவண்ணன்

நடந்து நடந்து மசூதித் திடலில் வந்து அமர்ந்து கொள்கிறேன். பாழடைந்த வெள்ளைச் சுவருக்குக் கீழே பள்ளத்து வயல் கரையின் நல்ல தண்ணீர் கேணிக் கரையிலிருந்து பெண்களின் பேச்சுக்குரல், காற்றுவாக்கில் தெளிவாகவும் காற்று திசைமாறும் போது அரவமாகவும் கேட்கிறது. அங்கே வயலில், இன்னும் யாரோ காளை கட்டி உழுது கொண்டிருக்கிறார்கள். 'ந்தா—ந்தா'' அதட்டல் கேட்கிறது.

கீழே கேணிக் கரையிலிருந்து வரும் குரலகளில் ஒன்று ரங்கமணியின் கீச்சுக் குரலாக எட்டுகிறது. ''அவன் எங்கே, இங்கே பெண் பிள்ளைகள் தண்ணீர் எடுக்கிற இடத்திற்கு வந்தான்?'' என்று சந்தேகம் எழுந்து—பிறகு அந்த சந்தேகம் பலப்பட்டபோது மெல்ல எழுந்து போய், மசூதியின் ஒரு சின்ன உடைந்த மதில் மேல் ஏறி கீழே கேணி வட்டத்தைப் பார்க்கிறேன்.

அந்திப் பொழுது இன்னும் எட்டிப் பார்த்த பொழுதெல்லை நேரமாதலால், குளிக்கும் பெண்—தண்ணீர் எடுக்கும் பெண்கள், தோண்டியைப் பளபளக்க துலக்கும் பெண்கள் எல்லோரையும் பார்க்க முடிகிறது. ''ஆபா தோ சொவத்து மேலே ஆரோ உற்றுப் பாக்குறாங்க...'' என்று ஒரு சிறுமியின் புகார் குரல் எழுந்தது. ''யார்ப்பாது? செவத்து மேலே?'' ஒரு அதிகாரக் குரல்.

''நான்தாம்மா பள்ளிக்கூடத்து வாத்தியாரு. மணியக்காரர் மகன் ரங்கமணியின் குரல் கேட்டதே என்று பார்த்தேன்,'' என்றேன், இங்கே நின்றவாறு.

''மணியக்காரரு மகன் எங்கே இங்கே வந்தது?'' அவரு மக பூவக்காதான் இதோ தண்ணி மேலெ குளிச்சுக்குனுகிறா!'' — என்று கிணற்றின் கமலை ஓடைப் பக்கமாகக் காட்டினாள் ஒருத்தி.

அங்கே பார்த்தால், பூத்த புதிய நிலவு போல, ஏற்றிவைத்த விளக்கு போல, கட்டி வைத்த கொத்து போல, துலக்கி வைத்த முத்து போல, சிங்காரத் தேர் போல, செதுக்கி வைத்த சிலை போல நாணம் கொண்டு நிற்கிறாள், அந்த பூ அக்கா. பூக்களின் அக்காவோ? இவளை நான் நிறைய பார்த்திருக்கிறேன். ஆனால் இன்று போல் பார்த்ததில்லையே?

அவளும் மேலே பார்க்கிறாள். அவ்வளவு கீழே இருந்தும் அந்தப்

பார்வை என் கண்ணினுள்ளேயே மின்னலிட்டது. அடேயப்பா, என்ன வசீகரம்? இந்தப் பொன் வண்ணத்தை எதிர் வீட்டில் மூடி வைத்திருந்தும் காணாத குருடனாக அலைந்ததனே, அட, ரங்கமணி! இப்படி உனக்கொரு சோதரியா? உன் குறையெல்லாம் இந்த நிறைவால் வந்த வினையோ?

''ஏய் பூவக்கா, என்னடி ஆயா இது, வாத்தியாரு எதுத்த வூட்டண்டைதானே கீறாரு. சொச்சத்தை அங்க பார்த்துக்க. ஆயாடியோ?'' என்று ஒரு நடுத்தரக்காரி இவளை இழுச்சவம் நாணம் இவள் முகத்தை பூவாகச் சிவக்கடிக்கிறது. அவ்வளவுதான்!

ஃ ஃ ஃ

எல்லாம் புத்தம் புதிசாகத் தெரிகிறது. கிராமம் இன்னும் மனதை ஆக்கிரமித்துக் கொள்கிறது. மணியக்காரரின் ஓட்டு வீடும், அவர் சுற்றமும் ரம்மியமாக இருக்கிறது. வெள்ளெழுந்து கண்ணாடியை மூக்கு நுனியில் ஒட்டிக் கொண்டு தக்ளியில் நூல் சுற்றும் மணியக்காரரின் தாயார்க் கிழவியின் நரை முகங்கூட இப்பொழுது அசிங்கமாக இல்லை. அவர்கள் பேசும் தெலுங்கு தெவிட்டாத தெள்ளமுதாக இனிக்கிறது. இப்பொழுது — வம்பு பேச ரங்கமணியை வலிய வலிய அழைக்கிறேன். ''வேலைருக்குதுசார் வட்டிக் கடைக்குப் போக சொல்லிருக்கிறாரு நாயனா... தட்றாம் புட்டு வரைக்கும் போகோணும். பஸ் பூடப் போறது...'' என்றெல்லாம் அவசரத்தைச் சொல்லி ரங்கமணி இப்பொழுதெல்லாம் நழுவுகிறான். அட தந்திரகாரப் பயலே! ஆனால், இப்பொழுது அடிக்கடி பூவக்கா முகம் வாசல் வெளியில் தெரிகிறது. வாசலில்

அதிகாரங்கள் தடையாக இருக்கின்றன!

மக்களுக்கு எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்ற கர்வத்தோடு நாங்கள் இல்லை. இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதற்குத் தடையாக அதிகாரங்களை மத்திய அரசினிடத்திலே குவித்து வைத்து இருக்கிறார்கள். தொழில்களுக்கு லைசென்ஸ் வழங்குகின்ற உரிமையை மத்திய அரசு வைத்துக்கொண்டு உரிமம் கேட்க 10 தடவைகள் கடிதம் எழுதி நான்கு தடவைகள் அமைச்சர்கள் சென்று கேட்டபிறகு கூட உரிய நேரத்தில் உரிமை கிடைக்காத பரிதாப நிலை இருக்கிறது. மாநில அரசுக்கு மத்திய அரசிடமிருந்து முழுமையான அதிகாரம் பெறப் பாடுபடவேண்டும். அதில் நாம் வெற்றிபெற வேண்டும்.

—முதல்வர் கலைஞர்

நூல் நூற்கும் கிழவிக்கு எப்படித் தான் தெரியுமோ. அவள் வாசல் பக்கம் அசைந்தாலே 'இட்லே போ ஆயா—' என்று விரட்டி விடுகிறாள்.

கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால்— மண்ணில்குமரர்க்குதடையெல்லாம் ஒரு காரணமா என்ன?

அன்று சாயங்காலம் நல்ல தண்ணீர்க் கேணிக்குப் போகும் சாக்கில் ஏரி, மலை மேட்டில் முன் செல்லும் துணைப் பெண்களைவிட்டு அவளைக் கண்களால் இழுத்துக் கொள்கிறேன்.

''பூவக்கா!'' என்கிறேன்.

ஒரு உடைமுள் மரத்தில் பருந்து ஒன்று ஒற்றையாக அமர்ந்து கடூரமாகக் கத்துகிறது. பறக்க முடியாத அதன் கால் நொண்டித்தனம் முள் இலைகளிடையே இறகு படப்படப்பிலிருந்து தெரிகிறது. ஒற்றைப் பாதையின் வளைவிலிருந்து வெள்ளாடுகளை வீட்டுக்குத் துரத்திக் கொண்டு சேலை கட்டிய சிறுமி ஒருத்தி — நீண்ட குச்சியும் பரட்டைத் தலையுமாக வருகிறாள்.

''நேரமாகுதே.போகணுமே..'' என்கிறாள் பூவக்கா.

பூவக்காவின் உதடுகள் மாதுளை மொட்டுகள் போல எவ்வளவு அழகு விசித்திரம்.

''அவசரமா பூவக்கா?''

''ஆமாங்க... அப்பாரு தேடுவாங்க. பாட்டி திட்டுவாங்க.''

''உன்னை நான் கல்யாணம் கட்டிக்கிட்டாஎன்ன செய்வாங்க?''

''அதானே முடியாது.''

என்ன பூவக்கா?''

''எனக்கு ஆறு வயசிலேயே

''ஆயிட்டுதே கண்ணாலம்.''

''என்னது?''

''ஆமா. புருசன் கூட செத்துட்டூடாங்க. அதாலேதான் பாட்டி திட்டுறாங்க. வெளியே போகாதேங்கிறாங்க... தண்ணிக்கு மட்டும் கூட்டத்திலே சேத்து அனுப்புறாங்க, நான் அப்புறமா வர்றேன். அந்தா ஆட்டுக்காரப் பொண்ணு வந்திக்குது...''

பூவக்கா கிளி பறந்தது போல குடத்தோடு போய் விட்டாள்.

அந்த பருந்து இன்னும் கர்ண கடூரமாகக் கரைந்து கத்துகிறது. ஆட்டுக்காரச் சிறுமி ஆட்டுக் கூட்டத்தை பரபரவென்று துரத்திக் கொண்டு வழியே தாண்டிப் போனாள்.

எல்லாம் அப்படியே இருக்கிறது. ''உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்—'' என்ற பாட்டு இப்பொழுதும் காற்றுவாக்கில் வருகிறது. பன்றிகள் ஓடுகின்றன. சின்னான் புழுதித் தெருவில் சைக்கிளில் டபிள்ஸ் வைத்து மிதித்துப் போகிறான். குப்பத்து ஆயாக்காரி நைலான் சாரி கட்டிக்கொண்டு, அவசரத்தில்நடை வேகத்தில் வெத்திலை மடித்துப் போட்டுக் கொண்டே சினிமா விற்குப் போகிறாள். காற்று வீசுகிறது. நெல் மணம் வருகிறது. ஏரியிலிருந்து, சகதி காய்ந்து கவிச்சி நாற்றம் வீசுகிறது உடை மரத்தில் முள்ளாக நீட்டியிருக்கிறது. நொச்சி மரத்தில் ஒரு இலைகூட இல்லை... மாலைப் பொழுது இறங்கி வருகிறது. எல்லாம் அப்படியே இருக்கிறது.

ஃ ஃ ஃ

மணியக்காரர் சவிஸ்தாரமாகப் பேசிக் கொண்டிருந்தார். 'காலம் ரொம்பக் கெட்டுப் பூடிச்சிங்க... இத்தனையூண்டு வாண்டுப்பசங்ககூட அரசியல் பேசுறான்... தேர்தல் வந்திச்சு பாருங்க, அல்லா மரியாதையும் அத்துப் போயிடுச்சு. பழைய காலம் என்ன, நாட்டாமெ என்ன... இப்போ பேச முடியுமா?''

இன்னும் பழைய காலத்திலேயே இருக்கும் அவரிடம் நான் எப்படிப் பேசுவது? பெரிய கப்படா மீசையும் கட்டுக் குடுமியும் கடுக்கனும் தோரணை!

கிராமம் ரொம்பவும் மனதிற்குப் பிடித்துப் போய் விட்டது. காற்று வீசுகிறது. நெல் மணம் வருகிறது. ரங்கமணி சைக்கிளில் வருகிறான். பூவக்கா இன்னும் வாசலில் வந்து கடைக் கண்ணால் என்னை மாலையிடுகிறாள். வாசலில் கிழவி மட்டும், 'உள்ளே போ ஆபா' என்று தெலுங்கில் வழக்கம் போல் சொல்கிறாள்.

பூவக்காவின் கண் பேசிய மொழிந்த நான் மணமாலை தொடுக்கிறேன்.

நிச்சயம் மாலை அவள் மணிக் கழுத்திற்கே!

ஃ

அந்த நாளில் திரையுலகில் எழுத்தாளர்களை மதிக்கத் தெரிந்த கலைஞராகத் திகழ்ந்தவர் பி.யு. சின்னப்பா. ஒருவரின் எழுத்து பிடித்து விட்டால், அந்த எழுத்தை அவர் விமர்சிப்பதே தனித் தன்மையாக இருக்கும்.

''இது புதியதாக இருக்கிறது!'' என்று 'புதியது' என அழுத்தமாகக் கூறுவார், அவர். நன்றாக இருக்கிறது என்று பாராட்டுவது வேறு; புதியது என்று ஊக்குவிப்பது வேறல்லவா?

ஆனால் அதே சமயத்தில் கவிஞர்களோ — எழுத்தாளர்களோ அவரிடம் தாம் சுயமாகச் சிந்தித்து எழுதியது என்று போலித்தனமாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இலக்கியங்களில் அவருக்கு மிகுந்த பிடிப்பு உண்டு. ஆழமாகப் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல் அவரிடம் இருந்ததால் போலிகளை — அவர் அதன் ஆணி வேரோடு பேர்த்து—கூடவே நாலு வசவுகளையும் அடுக்கி முகத்தில் விட்டெறிவார்.

எனவே, அவரிடம் பலருக்கு அன்று பயமும் இருந்தது நியாயம்தான்.

குறிப்பாக அந்த நாளில் பிரபலம் அடைந்தருந்த சித்தர் பாடல்களில் அவருக்கு மிகவும் விருப்பம் இருந்தது. அதுபோக சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற நாடகாசிரியர்களின் பாடல்களும், குணங்குடி மஸ்தான் பாடல்களும் தலைகீழ்ப் பாடமாக இருந்தது. ஆகவேதான் தமிழில் தூய்மையாகப் பேசிப் பாடத் தெரிந்த நடிகராக அன்று அவர் புகழ் ஏணியில் உயர்ந்தார் என்றே சொல்லலாம்.

படத் துறையில் அவர் காலத்தில் ஒரு வழக்கம் தொடர்ந்து வந்தது. இது கடைசியில் அவரைப் பொறுத்தவரையில் ஒரு மரபாகவே ஆகிவிட்டது. அதனால்தான் — எந்த ஒரு படப்பிடிப்பு நடந்தாலும், அந்தத் தயாரிப்பாளர் நடிக்க வந்த நாளைக்கு பி.யு.சின்னப்பாவுக்கு இரண்டு பாட்டில் பிராந்தியும் இரண்டு கோழியும் தந்தாக வேண்டும் என்றாகி விட்டது.

காலையில் சிலம்ப விளையாட்டு விளையாடி உடலைக் கரைத்துக் கொண்டிருந்தபோது அந்த உடல் கரையாமல் உருண்டு திரண்டு கொண்டேயிருந்தது.

இதனால் நடிகையரில் சிலர் இவரை ஒரு முரடர் என்றும், குடிகாரர் என்றும் அந்த நாளில் கேலி செய்ததுண்டு. இப்படிப்பட்ட கேலிகளைக் கேட்டு மனதினால் அவர் நொந்து பொறுமியிருக்கிறார். ஆனால் அதற்காக அவர் நிம்மதிப் படுவதெல்லாம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பலர் முன்னிலையில் அப்படிச் சொன்னவர்களை வெட்கி நாணும்படி செய்து விட்ட பிறகுதான்! இப்படி வெட்கமடைந்தவர்களில் அவருடைய மொழிப்படி ''வெள்ளைக் குதிரை'' கண்ணாம்பா — ''குட்டி முயல்'' அஞ்சலிதேவி, ''கீச்சு அணில்'' பானுமதி போன்றவர்களும் உண்டு.

அவர் எப்போதும் வெளியிடங்களுக்கோ அல்லது கோயில்களுக்கோ செல்லும்போது சுமார் இரண்டரை லட்சம் பெறுமானமுள்ள நகைகளை அணிந்து செல்லுவார். இந்தப் பெருமையில் அவருக்கே ஒரு உள்ளார்ந்த திருப்தி இருக்கும். மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக நாடகம், திரைப்பட நடிகர்கள் அந்த நாளில் செய்து கொண்ட 'மேனியா' என்பார்களே அந்தப் படாடோபம் அவருக்கும் இருந்தது.

சிந்தை கவர் 'நடிகர்' சின்னப்பா

கவிஞர் சுரதா

கடுக்கனில் 14 வைரக் கல் இருக்கும். பச்சை மாலை போடுவார். 42 காரட் வைர மோதிரம் அணிவார். அந்த நாளில் காரட் வைரம் ஆயிரம் ரூபாய் விலையிருக்குமென்று நினைவு.

ஆனால் இத்தனை படாடோபமும் காட்ட நினைத்த அவர், இரவில் படுக்கும்போது இடுப்பில் ஒரு சின்னத் துண்டு கட்டிக் கொண்டு வெறும் தரையில் ஒரு காலையும் கையையும் உயர்த்திக் கொண்டபடி குப்புறப் படுத்துத் தூங்குவதில்தான் அவருக்குச் சுகமாம்.

''இதற்கு மேல் ஒரு இன்பம் எனக்கு கட்டிலிலும் இல்லை; மெத்தையிலும் இல்லை!''

இதுதான் அதற்கு அவர் அன்று சொன்ன பதிலாக இருந்தது. அந்தச் சுகமிக்க உறக்கத்தை எவரும் கலைத்துவிடக் கூடாது என்பதிலும் மிகக் கண்டிப்பாக இருந்தார் பி. யு. சின்னப்பா.

கறுப்பாக இருந்தாலும் அழகாக இருந்தார், அவர். ஆரம்ப காலங்களில் தனக்கு உதவி செய்தவர்களுக்கு எல்லாம் வளர்ந்து விட்ட நேரத்தில் உதவிப் பெருமை படுத்திய சின்னப்பா, நிதி உதவிகள் செய்வதிலும் தாராள மனம் கொண்டிருந்தார்.

இவரால் உதவி பெற்றவர்களில் பி. எஸ். கோவிந்தன் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

அதிகமாக ஆங்கிலப் படங்கள் பார்க்கும் பழக்கமுள்ள இவருக்கு மட்டும்நான் அந்த நாளில் எலியட் பீச்சுக்குள் நுழையும் அனுமதி இருந்தது. ஏனென்றால், அன்று எலியட் பீச் வெள்ளைக்காரர்களுக்கு மட்டுமே ஒதுக்கி விடப்பட்டிருந்த கடற்கரை.

தன்னை யாரும் நேராகப் பாராட்டுவதை விரும்பாதவர் அவர். அரிய விஷயங்களைத் தங்கு தடையில்லாமல் அறிவார்த்தமாகப் பேசும் ஆற்றலும், மற்றவர்களுக்காகச் சிபாரிசு செய்வதோடு நில்லாமல், அந்தச் சிபாரிசுடன் உடனடிப் பலனை உண்டாக்கி வைக்கும் துணிவும் கொண்ட இவர் சீட்டாட்டத்தில் புலி.

யாருடன் ஆடினாலும் முதல் மூன்று ஆட்டம் வரையில் தோற்று விட்டுப் பிறகுதான் கையை உயர்த்துவார். உயர்த்த ஆரம்பித்து விட்டால் கடைசியில் கூட ஆடுவோர் பையை எல்லாம் அள்ளிக் கட்டிக் கொண்டுதான் விடுவார்.

ஒரு சிறந்த எழுத்தாளருக்குரிய, அறிவாற்றலும், பாடகருக்குரிய ஞானமும் நிரம்பியிருந்த அவர் நடிகரானதோடு மட்டுமில்லை; தமிழார்வம் மிக்கவராகவும் இருந்தார்.

திறமை எங்கிருந்தாலும் மதிக்கத் தெரிந்த அவரோடு, மிகவும் பிடிப்பாக இருந்தவன் என்கிற முறையில் எனக்கு எம்.ஜி.ஆர். அவர்களை 1945 வாக்கில் அறிமுகப்படுத்தி வைத்து நல்ல எதிர்காலம் இவருக்கு ஏற்படும் என்று அவர் கூறிய சொற்கள் வீண் போய்விடவில்லை.

அவரை நினைக்கும் போதெல்லாம் அவருடைய எல்லாத் திறமைகளையும் விட கவித் திறன் தான் நெஞ்சில் மணக்கிறது. வெண்பா எழுதுவதில் அவருக்கு விருப்பமும் வேகமும் இருந்தது.

ஒரு தடவை இரு முதலடிகளை எழுதிவிட்டு தனிச் சீருடன் இரு ஈற்றடிகளை எழுதி முடிக்கும்படி என்னிடம் தந்தார் அவர். அதை எழுதிக் கொடுத்துவிட்டு அவரிடம் பாராட்டுப் பெற்ற அந்த நினைவுக்கு இப்போது அந்த வெண்பாவைக் கையில் வைத்துக் கொள்ளவில்லையே என்கிற மனக்குறை அடிக்கடி என் நெஞ்சில் எழும்.

அது எழும்போதெல்லாம் என் நெஞ்செல்லாம் நிறைந்து நிற்பார் பி. யு. சின்னப்பா.

★

எடுப்பு

தாயே உனைநான் மறந்தறியேன்—நின்
தாள்அலால் வேறெதும் நினைந்தறியேன்—தமிழ்த்
(தாயே)

தொடுப்பு

நீயே துணையென நித்தமும் இருந்தேன்
நினைந்திடும் மனையொடு மக்களும் மறந்தேன்
(தாயே)

முடிப்பு

உனமுகம் மலர்ந்தால் போதுமென் றெண்ணி
உளமகிழ்ந் திருந்தேன் உளபொழு தெல்லாம்
என்முகம் சுருங்கிட நன்மனம் வருந்திட
ஏனெனை விடுத்தாய் இடர்பல கொடுத்தாய்
(தாயே)

நாமலர்ந் துன்னையே நாளெலாம் போற்றும்
நன்மகன் எனக்கோ தந்நனை தொல்லை
பாமலர் புனைந்துனைப் பணிந்திட முனைந்தால்
பாவிஎன் உள்ளமோ மலர்ந்திட வில்லை
(தாயே)

நொந்தே நின்மகன் நுடங்கிடல் நன்றோ
நோய்தனை நீக்கிடல் தாய்கடன் அன்றோ
நந்தா விளக்கே நானென்ன செய்தேன்
நாளெலாம் இருள்தனில் நலிந்திடச் செய்தாய்.
(தாயே)

என்றும் இளைய கண்ணாம்பா

[அந்தக் காலத்தில் பசப்பு லேடி என்று புகழப் பெற்றவர் கண்ணாம்பா. அவரோடு படிக்காத மேதை போன்ற படங்களிலும், பற்பல தெலுங்குப் படங்களிலும் இணைந்து நடித்த சௌகார் ஜானகி இங்கு அவரைப் பற்றி நினைவு கூர்ந்து சொல்கிறார்.]

வசனங்களில் அதன் உயிரோட்டத்தை அனுபவித்துப் பேசக்கூடியவர் திருமதி கண்ணாம்பா, தமிழ் ஆகட்டும்; தெலுங்கு ஆகட்டும். மெய்மறந்து அந்தந்தப் பாத்திரங்களோடு உருக்கமாக ஒன்றி நடித்த நடிப்பாற்றலினால்தான்—இன்றும் சிறந்த. குணச்சித்திர நடிகையாகத் திகழ்ந்தார்—அவர்!

அவரது இளமைக் காலத்திற்குப் பிறகு பெரும்பாலும் அவருக்குக் கிடைத்த பாத்திரங்கள்— அவரிடமிருந்த திறமைக்கு ஏற்றபடி உருக்கமான பாத்திரங்களாகவே அமைந்திருந்தன.

காலமெல்லாம் இளமையோடு இருக்க வேண்டுமென கண்ணாம்பாவுக்கு ஆசையாம்... அதை என்றும் இளமையோடிருக்கும் சௌகார் ஜானகி கூறுகிறார்.

என்னதான் உருக்கமான பாத்திரங்களில் நடித்தாலும்—பழக்கத்தால் அவர் ஒரு குழந்தையைப் போலவே இருந்தார். இன்னும் சொல்லப்போனால்—அந்த நாளில் எங்களைப் போன்றவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர்—நாங்களெல்லாம் அவரைவிட வயதில் எவ்வளவோ சின்னவர்கள் என்றும் அதைப் பெரிதாக நினைக்காமல்—எங்களுக்குச் சரிக்குச் சரியாகக் கேலிகள் பேசி கலகலப்பு மூட்டியவருங்கூட.

அதனால்தான் அவர் செட்டில் இருக்கிறார் என்றால் எங்களுக்கு எந்த மனக்குறை கவலைகள் இருந்தாலும் அவற்றை மறந்து சில மணி நேரம் விழுந்து விழுந்து சிரிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்கிற நிறைவு இருக்கும்.

எப்போதும் அவர் மனதால் மட்டுமில்லாமல் தோற்றத்தாலும் இளமையாக இருக்க விருப்பப்பட்டவர். பெரிய பெரிய தங்கவடம் சங்கிலிகள், வைரம் பதித்த அணிகள், ஜரிகை நிறைந்த புடவை, அகன்ற பொட்டு இப்படி... தன்னை அலங்கரித்துக் கொண்டு இருப்பதில் அவருக்கு ஒரு தனி ஆனந்தம் இருந்தது.

இந்த ஆனந்தத்தின் பிரதிபலிப்பு சில நாட்களில் மேக்கப் கலைஞரால் தவிடு பொடியாகிவிடும். அன்றைக்கு நடிக்கும் படத்தில் வயதான மூதாட்டியாக வர வேண்டியிருக்கும்.

காட்சிக்கு ஏற்றபடி மேக்கப் கலைஞர், அவருடைய தலையில் சிறிது நரையையும், நெற்றியில் சுருக்கத்தையும் எற்படுத்திவிடுவார் என்று வைத்துக் கொள்வோம். இதை எப்படியாவது மெல்லக் கலைத்து விடுவதில்தான் அவர் கருத்து ஓடிக் கொண்டிருக்கும்.

முடியின் கருமையையும் அடர்த்தியையும்—தன் முகத்தின் பொலிவையும் பாதுகாத்துக் கொள்ள அந்த மேலோட்டு வேலைகளை அவர் எப்படியாவது தவிர்த்தே விடுவார்.

இப்படிப் பல படங்களில் அவருடைய வேடம் மூதாட்டியாக இருந்தும் தலைநரைக்காத மூதாட்டியாக அவர் திகழ்ந்ததுண்டு.

அந்த நாளில் திரையுலகில் கவர்ச்சிக் கதாநாயகியாகவும் காந்தக் கண்ணழகியாகவும் திகழ்ந்த அவர்—பிற்காலத்திலும் அதே இளமையோடு என்றும் இருக்க விரும்பினார். அவருக்குக் குழந்தைப் பேறு எதுவும் இல்லாததால்—இந்த எண்ணத்தில் அவரது மன ஏக்கங்கள் மூழ்கிப்போய் முடிவில் அவரே ஒரு குழந்தையாக மாறி விட்டார் என்று தான் படவுலகில் இருந்தவர்கள் அப்போது எண்ணுவார்கள். அந்த இளமைப் பொலிவும்—எண்ணத்தில் இளமையும் நடிப்பாற்றலும்தாம் அவரை இன்றும் சாகாத புகழ்த் தோற்றத்தோடு நம் கண் முன் கொணருகின்றன.

ஒரு தடவை அவர் உடல் நலமில்லாமல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அன்று—

மத்தியானம்; திரைப்பட வட்டாரத்தில் ஒரே பரபரப்பு!

''கண்ணாம்பா இறந்து விட்டார்'' என்று தொலைபேசிகள் அலறின. கேட்டவர்கள் எதிரே பார்த்தவர்களிடம் பதறிப்போய்ச் சொன்னார்கள்.

நடித்துக் கொண்டிருந்தவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். சுழன்ற காற்றாடிகள் எரிந்த விளக்குகள் எல்லாம் பட்டபட் என்று நின்றன. கார்கள் ஜெனரல்

ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்த வண்ணம் இருந்தன. ஆஸ்பத்திரியின் மாடிப்படிகளில் ஒரே கூட்டம்; வராந்தாவில் நிறைந்து, மாடிப்படி வழியே வழிந்ததுபோல் ஒரே திரள்! அவ்வளவு பேரும் கலையுலகோடு சம்பந்தப்பட்டவர்கள் என்பதை விட கண்ணாம்பாவிடம் அன்பினால் கட்டுப்பட்டவர்கள் என்பதே பொருந்தும்!

இத்தனை உள்ளங்களையும் ஏமாற்றிவிட்டுப் போய்விட்டதே அந்த ஏற்றமுள்ள உயிர்? என்று ஏங்கியவர்களின் விழிகளை அடுத்த சில நிமிடங்களில் ஓர் அற்புதம் போல் மலரச் செய்தார் கண்ணாம்பா.

ஸ்பெஷல் வார்டைவிட்டு வெளியே வந்தார் அவர். எல்லாருடைய கண்களிலும்தென்பட்ட ஆச்சரியத்தை அளக்க அவருக்கு வெகு நேரம் ஆகவில்லை.

சட்டென்று பதில் சொன்னார் கண்ணாம்பா.

"இன்றைக்கு ஆஸ்பத்திரியில் அட்மிட்டானே ஆனேன்? யாரோ நான் செத்துப்போனதாகக் கதை கட்டிவிட்டார்களா?" என்றார் அவர்.

யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.

எப்படிச் சொல்வார்கள் எல்லாரும்? ஏதோ சமாதானம் சொல்லி விட்டு, உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஆறுதல் கூறிவிட்டுத் திரும்பினார்கள்.

அன்று மாலை தான் எல்லாருக்குமே இந்தச் செய்தி மாறுபாட்டிற்கு விளக்கம் புரிந்தது. அன்று இறந்துபோனதாக சொல்லப்பட்டவர் கண்ணம்வார் என்ற புகழ்பெற்ற பம்பாயைச் சேர்ந்த அரசியல்வாதிதான் என்பதும் அது கண்ணம்மா என்று திரிந்துவிட்டது என்றும் அன்றைய மாலைச் செய்திப் பத்திரிகைகள் மூலம் தெரிய வந்தன.

இப்படி இருக்கும்போதே செத்துப்போனதாகச் செய்தியானவர்களுக்கு ஆயுள் கெட்டி என்பது ஓர் ஐதீகம்.

ஆனால்—அந்த ஐதீகம் பலிக்க வில்லை.

அடுத்த ஒன்றிரண்டு மாதங்களில் கண்ணம்மா உண்மையாகவே இறந்துபோய் விட்டார்.

இப்போது அந்த உண்மை எங்களுக்கெல்லாம் செறிக்கவில்லை. ஏனென்றால் அவரது இல்லத்தில் அவரது உடலைப் படுக்க வைத்திருந்தது.

நான் பார்த்தேன். நம்பவே இல்லை கண்ணாம்பா இறந்து விட்டதாக!

எப்படி என்னால் அவர் இறந்து விட்டார் என்று சொல்ல முடியும்?

அதே அகன்ற ஜரிகைக்கரை போட்ட பட்டுப் புடவை; சிரித்த முகம்; அழுந்தமாக—துளிகூட நரையில்லாமல்—வாரி விடப்பட்ட கூந்தல்; அகன்ற—குங்குமப் பொட்டு; கழுத்திலும் காதிலும் மூக்கிலும் வைரம் இழைத்த அணிகலன்கள்—தங்க ஒட்டியாணம்—கல்யாணப் பெண்போல் பொலிவு அழியாத அலங்காரத்தோடு—என்றும் இளமையோடு இருக்க விரும்பி அதே இளமையோடு கண் மூடிக் கிடந்தது போல் தெரிந்ததே ஒழிய—அப்போது கண்ணாம்பா இறந்துபோய் விட்டார் என்பதையே நான் நம்பவில்லை.

எல்லாரும் போகும் போது எதைக் கொண்டு போகப் போகிறார்கள் என்று கேட்பதுண்டு. ஆனால் கண்ணாம்பாவைப்பொறுத்தவரை அவர் எல்லாவற்றையும் தான் கொண்டுபோனார்.

என்றைக்கும் இளையதான எண்ணங்கள்; எத்தகைய துன்பத்திலும் புன்முறுவல் பூத்தபடி கலகலப்பாக இருக்கும் நெஞ்சுரம்; பாத்திரங்களோடு பாத்திரமாய்மாறி, சொற்களின் உயிர்த் துடிப்பை அனுபவித்துக் கணீரென்று பேசுகிற நடிப்பாற்றல்—இவையெல்லாவற்றையும் அவரோடு கொண்டுபோனதோடு பூவோடும் பொட்டோடும் நகைகளோடுமே போனார் அவர். ஆனால்—அவருடைய புகழ்; நடிப்பில் வகுத்த இலக்கணங்கள் இவையெல்லாம் இன்றும் அவரை நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

★

ஐயோ! பாகிஸ்தான் விமானம் பறக்குது போலிருக்கே!

ஹய்யா... நம்ம நாட்டு விமானம் அதை சுட்டு விழ்த்திடுச்சு...

வள்ளுவரின் பிள்ளை

கவிஞர் சுப்பு ஆறுமுகம்

யார் சொன்னது? வள்ளுவரின் பிள்ளையா? வள்ளுவருக்குப் பிள்ளை ஏது? என்று யாரும் என்னைக் கேட்பதற்கு முந்தியே, நான் சொல்ல நினைத்ததைச் சொல்லி விடுகிறேன்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் வள்ளுவர் வாழ்ந்து கொண்டிருந்தால் — அவருக்கு ஒரு பிள்ளை பிறந்திருந்தால்— அந்த 'இளைய வள்ளுவன்' என்ன என்ன சிறப்பைப் பெற்றிருப்பானோ, அத்தனையும் ஒருங்கே அமையப் பெற்றுந்தவர்தான் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் என்பது என் கணக்காகும்! சொல்லிய முறை கற்பனையாக இருந்தாலும், அதில் சொல்லப்பட்டிருக்கும் பெருமை என்னவோ உண்மைதான்!

கலைவாணரது உடலின் கதை முடிந்து, இன்று பதினாறு ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, அவரது புகழின் வரலாறுக்கு வயதுவைத்து சொல்ல வேண்டும் என்றால், இதற்கும் பதினாறு வயதாகிறது. இந்தப் புகழை பிணி மூப்பு தீண்டவே தீண்டாது; இறவாத இளமையுடன் என்றும் பதினாறு வயதுடன் அவரது புகழ் நிச்சயமாக, நீடூழி வாழும் என்று நம்பலாம்.

கலைவாணரது 'இனிஷியல் — தந்தை' சுடலைமுத்துப் பிள்ளை! அதாவது, 'என்' என்பது நாகர்கோவிலைக் குறிக்கும்; அடுத்துள்ள 'எஸ்' என்ற எழுத்து சுடலைமுத்துப் பிள்ளையைக் குறிப்பிடும். ஆயினும் என். எஸ். கே.யின் இதயத்துக்குத் தந்தையாக விளங்கிவந்தவர் — வாழ்வுக்கு — வளர்ச்சிக்கு — அறிவுக்குத் தந்தையாக விளங்கியவர் வள்ளுவர்தான்! தேசத் தந்தை காந்தியடிகள் — என்ற சொற்றொடர் வந்ததுபோல், பகுத்தறிவுத் தந்தை பெரியார் என்று வந்து விட்டதுபோல் கலைவாணரைப் பொறுத்த வரையில் அவரது பேரறிவுக்குத் தந்தையாக விளங்கிய பெம்மான் குறளாசிரியர்தான்!

இவ்வளவு திண்ணமாகச்சொல்ல எப்படி முடிகிறது உங்களால் என்று யாரோ கேட்பது கூட என் காதில் விழத்தான் செய்கிறது. அதற்குப் பதில் உரைப்பதே இக்கட்டுரையின் தலையாய நோக்கம்!

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' இந்தக் குறள்படி கலைவாணர் நடந்தாரா?

நடந்தார்!



கடவுளை வாழ்த்த அவர் எப்போதும் மறந்ததே இல்லை. ஆதி பகவன் முதற்றே உலகு என்பதற்கு மறுப்பாக வாழ்ந்தார் என்று சொல்லுவதற்கு அவர் வாழ்வில் ஒரு சம்பவம் கூட சொல்ல முடியாது!

ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வம் இந்த இந்த ஊரில், இன்ன இன்ன வடிவத்தில் இருக்

எவரை மயக்க இந்தச்சிரிப்பு
யாரை எண்ணி இந்த நடிப்பு

கிறது என்று வழிபட்டு வந்தது போல் கலைவாணரும், தாம் வணங்க, தமக்கு ஒரு கடவுள் வடிவத்தை வைத்துக் கொண்டார்.

'நல்லதம்பி' — பேரறிஞர் அண்ணா தந்த அறிவுப் பெருங் காவியம்! இந்தத் திரைப்படத்திலே, கலைவாணர் ''பார்த்தீர்களா நான் வணங்கும் தெய்வங்களை'' என்று வசனம் பேசி பெற்றோர்களின் படத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஒருமுறை, திருநெல்வேலியில் உள்ள சத்திரம் புதுக்குளம் என்ற எனது சிற்றூரில் இருக்கும் எங்கள் வீட்டிற்குக் கலைவாணரை அழைத்துச் சென்றிருந்தேன். எங்கள் குலதெய்வம் திருச்செந்தூர் முருகன். இவர் வந்த அன்று, அங்கிருந்து இலை விபூதி வந்திருந்தது. எனது தாயாருக்குத் தெய்வ ஈடுபாடு மிகவும் அதிகம்! விருந்தாளியாக வந்திருந்த கலைவாணரின் கையில், முருகனின் இலை விபூதியைக் கொடுத்தார்கள். அதை வாங்கிய கலைவாணர் இப்போது என்ன செய்யப் போகிறார் என்று உற்றுப் பார்த்தேன். தனது பரந்த நெற்றியில் பிரமாதமாக என்னவோ பெரிய பக்த சிரோன்மணியைப் போல் பூசிக் கொண்டார். கலைவாணரின் நெற்றி, அப்போது வாரியாரின் நெற்றியைப் போல் காட்சியளித்தது. இந்தச் சம்பவத்திற்கு முன் நான் எப்போதும் கலைவாணரின் நெற்றியை இந்தத் திருக்கோலத்தில் பார்த்ததேயில்லை!

விருந்து முடிந்தது!

அன்று, அவருடனேயே காரில் நானும் சென்னைக்கு வந்துகொண்டிருந்தேன். வரும் வழியில் தாழையூத்து என்ற ஊர் பக்கம் என்று நினைவு. நான் கேட்டேன் — ''அண்ணே! எங்கம்மா தந்த திருநீற்றை அப்படியே அள்ளிப் பூசிக் கொண்டீர்களே! எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே அண்ணே!'' என்று கேட்டேன். இதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

''கண்ணால் காண முடியாத தெய்வத்துக்காக கண்கண்ட தெய்வம் நம்ம அம்மா — இவங்க மனசை வருத்தப்படுத்திவிடக் கூடாதல்லவா! அதனால்தான், அப்படியே வாங்கி நெற்றியில் பூசிக் கொண்டேன் என்றார். இதிலிருந்தே அவரை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா!

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். படப் பிடிப்பு நிலையங்களில் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன், தேங்காய் உடைத்து கேமராவுக்குப் பூப் போட்டு கற்பூரம் காட்டுவது வழக்கம். இது தினமும் நடைபெறும். கலைவாணர் எடுத்துவந்த படங்களுக்கும், இந்தப் பூசை உண்டு. அவர் எதுவும் சொல்வது கிடையாது. பூசை ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும். இவர் ஒரு பக்கம் இருந்து, அன்று எடுக்க வேண்டிய காட்சிக்கு 'ஷாட்ஸ்' பிரித்துக் கொண்டிருப்பார். பூசை என்பவர் என்றாவது ஒரு நாள் ஆள் மாறிப்போய், புதிய நபர் வந்து கற்பூரத் தட்டை கலைவாணரிடம் முன் கொண்டு போய் காட்டி விட்டாலும் கூட, அதற்காக அவர் கோபித்துக் கொள்ள மாட்டார். மற்ற பக்தர்களுடன் சேர்ந்து இவரும் அதற்கு வணக்கம் செய்து கொள்ளுவார்.

ஒருவர் கேட்டார்: "நீங்களும் வணங்குகிறீர்களே — என்ன விவரம். புரியவில்லையே" என்று! அதற்குக் கலைவாணர், அவர்கள் எல்லோரும் யார் யாரையோ நினைத்துக் கும்பிட்டுக் கொண்டார்கள். நான் அந்தக் 'கேமரா'வைக் கண்டு பிடித்த மேதையைநினைத்து வணங்கிக் கொண்டேன் என்றார்! ஆதிபகவனை ஆலயத்தில்தான் இருக்கிறார் என்று சாதிக்காமல் வாழ்க்கைப் பாதையில் சாதனை புரிந்து கொண்டிருந்த மேதைகளிடமே கண்டு வணங்கினார்! ஆக, வள்ளுவர் எந்தவொரு கருத்தை நினைத்து அந்தக் குறளைப் படைத்தாரோ, அந்தக் கருத்தை அணைத்தபடியே கலைவாணரின் வாழ்க்கை கம்பீரமாக ஏறுநடை போட்டு முன்னேறிக் கொண்டிருந்தது!

''இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃதொப்பது இல்'' துன்பம் வரும்போது சிரி — அதை வெல்லவல்லது இது போல் வேறில்லை என்பதே அதன் சாரம்.

கலைவாணரின் வாழ்க்கையித இதற்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ சம்பவங்களைச் சொல்லலாம்.

இல்லாத பழி அவரை இரண்டரை ஆண்டுக் காலச் சிறையில் தள்ளியது. உள்ளேயும் சிரித்துக் கொண்டுதானிருந்தார். யார் எனக்குக் 'கவலை'யைத் தந்தாலும் சரி, அதில் உள்ள நடு எழுத்து 'வ'னாவை அழிச்சிடுவேன். படிச்சுப் பார்ப்பேன். மிச்சமாக இருக்கிறது 'கலை' தான்! இதை எனக்கின்னு வச்சுக்குவேன் என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு! பகுத்தறிவு உலகம், அவரது விடுதலைக்காகப் பாடுபட்டது. அய்யாவும் அண்ணாவும் மாநாடுகள் கூட்டி, அந்தச் சிரிப்பு வேந்தனுக்குப் படத் திறப்பு விழா நடத்தினார்கள். திறந்த மனதுடன் நடைபெற்ற படத் திறப்பு விழாக்களின் பலன் சிறையின் கதவுகளும் திறந்தன.

கலைத் திறமை கொண்டவர்களுக்கு மட்டும்தான் மதிப்புஇருக்கிறது இன்று! கலைவாணர் சகாப்தம் அப்படியல்ல. கலைத்திறன் சற்றுக் குறைவானவர்களாக யாராவது வந்து விட்டால், அவர்களிடமும் கலைவாணர் எவ்வளவு அன்பாக இருப்பார் தெரியுமா? ஒரு நொண்டிப் பிள்ளையிடம் தாய் காட்டும் அன்பை அப்போது அங்கு காணலாம்.

ஒரு பாகவதர் கலைவாணர் வீட்டில் உள்ளவர்களுக்கு தினமும் வந்து பாட்டு சொல்லிக் கொடுப்பார். உலகியல் தெரியாத பாகவதர் அவர். அதிகாலையில் வந்து அமங்கலமான பாடல்களையே சொல்லிக்கொடுத்து வந்தார். சற்று பணம் தட்டுப்பாடான அந்த நாட்களில் — ''பணமே உன்னால் என்ன குணமே தண்டம் பண்ணினேன் — சற்று என் கண்ணின் முன் நில்லாதே— போ பணமே — போ பணமே'' என்று மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பாடலைப் பாடி விடியும் முன்னேயே வந்து வித்துவான் பணத்தை விரட்டிக்கொண்டிருந்தார். வீட்டிளுள்ளவர்களுக்கு இவரைப் பிடிக்கவில்லை. விலக்கிவிடச் சொன்னார்கள்.

வேலையைவிட்டுப் போகச்சொல்ல கலைவாணருக்கு வருத்தம்தான். என்றாலும் வீட்டில் வற்புறுத்துவதற்கும் மதிப்பு தர விரும்பிய கலைவாணர், பாடகரை வேலையை விட்டுப் போகச் சொல்லும் திட்டத்தில் மாடியிலிருந்து இறங்கி வந்தார். வரும்போது, பாடகர் என்ன பாடிக் கொண்டிருக்கிறார் தெரியுமா? ''இந்த உத்தியோகம் என்ன பெரிதா, உலகில் இது போனால் வேறு கிடைப்பது அரிதா?' என்பதுதான் இப்போது பாடகர் பாடிக் கொண்டிருந்த பாட்டு!

''ஆமா! நான் இப்ப உம்மை வேலையை விட்டுப் போகச் சொல்லப் போகிறேன் என்ற சங்கதி உமக்கு எப்படி முன்னமேயே தெரியும்?'' என்று சிரித்தவாறு கேட்டார் கலைவாணர். மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வித்துவானை வேலையை விட்டுப் போகச் சொல்லிவிட்டு, காரில் வந்து ஏறினார். வித்துவான் தொடர்ந்து வந்து தன் குடும்ப நிலையைச் சொன்னார். அவ்வளவு தான்—கலைவாணரால் தாங்கமுடியவில்லை! கம்பெனிக்கு வா என்று காட்டி விட்டார். வீட்டில் வேலை போன பாடகருக்குக் கம்பெனியில் வேலை கிடைத்தது. இப்படியே கம்பெனியில் வேலை போய் விட்ட சிலருக்கு வீட்டில் வேலை கிடைத்ததும் உண்டு.

ஒரு மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் கலைவாணர் அவர்களுடன் குற்றாலம் செல்லும் வாய்ப்பு கிட்டியது. அதிகாலை. நல்ல பனி. பங்களாவின் வெளிப் புறத்தில் உள்ள திண்ணையில் கலைவாணர் ஒரு நல்ல காஷ்மீர் போர்வையால் தன்னை நன்றாகப் போர்த்திக் கொண்டு, முன்பிருந்த வெற்றிலை செல்லத்திலிருந்து ஏதோ நினைவில் வெற்றிலை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது பழுத்த கிழவர் ஒருவர் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். பனி தாங்க முடியாமல் அவர் உடல் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. கையும் காலும் குளிரால் ஆடிக்கொண்டிருந்தது. அவரைப் பார்த்து விட்டார் கலைவாணர். அழைத்தார். தாத்தா உடனே குரலைக் கேட்டு, உள்ளே வந்து, அழைத்தவர் கலைவாணர் என்பதையறிந்து கையெடுத்துக் கும்பிட்டு அன்பைத் தெரிவித்தார்.

தாம் போர்த்தியிருந்த அந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து அப்படியே தாத்தாவின் மேல் போர்த்தி புன்னகை புரிந்தவாறே, ''போயிட்டு வாருங்க தாத்தா. நீங்கதான் காலை நேரத்தில் பனியில் இப்படி அங்கே இங்கே அலைய வேண்டியதிருக்கு. அதனால் முறைப்படி இந்தப் போர்வை இருக்க வேண்டியது உங்ககிட்டதான். நாங்கதான் பனி புகாத பங்களாவுக்குள்ளே வந்து பந்தோபஸ்தாக இருக்கிறோமே'' என்று சொல்லி வழியனுப்பி வைத்தார். வயோதிகர் வாழ்த்திச் சென்றார்.

கலைவாணரின் முகத்தில் பொன்னாடை போர்த்தப்பெற்ற நாளைவிடச் சிறப்பானதோர் புத்தொளியைக் கண்டேன். அன்பின் வழியது உயர்நிலை என்ற குறளே அவர் வாழ்க்கையாக அமைந்திருந்தது என்பதற்கு, இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை'.

அண்ணன் அவர்களைப் பலர் பலவிதமாக அப்போது தாக்கிப் பேசியதுண்டு. இன்று பகுத்தறிவுச் செல்வங்களுக்காகத் தங்களை பத்திரிகைகளில் பல பக்கங்கள்



நான் ஆணையிட்டால் . . .
அது நடந்துவிட்டால் . . .

ஒதுக்கி தங்கள் பிழைப்பை நடத்தும் பிரபல பத்திரிகைகள் சில, அன்று கலைவாணரின் சிறப்பு பற்றி அவ்வளவாக எழுதுவதில்லை. மாறாக ஜாதிய உணர்வினால் சற்று தாக்கி எழுதிய சந்தர்ப்பங்களும் உண்டு.

அன்று பெரிய நடிகர்களாக இருந்த சிலர், கலைவாணரைத் தாக்கி, துண்டுப் பிரசுரங்களே கூட வெளியிட்டார்கள். பொறாமையால் ஏதேதோ சொன்னார்கள். 'என். எஸ். கிருஷ்ணன் ஒரு கோமாளி' என்று விருதுநகர்ப்

பெரியவர் ஒருவர் கருத்துரைத் தார். யார் என்ன சொன்ன போதிலும், அவ்வளவு பேரையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தாங்கிக் கொண்டது, அந் தக் கலைமனம்.

''குணமென்னும் குன்றேறி நின் ருர் வெகுளி கணமேயும் காத்த லரிது''

கலைவாணர் சோவியத் நாடு சென்றதும், அங்கிருந்து ஒரு அதிர்ச்சியான சேதி வந்தது. ஸ்டாலின் வாழ்ந்த காலம் அது. ''ரஷியாவில் என். எஸ். கிருஷ் ணன் சத்தியாகிரகம்'' இந்தத் தலைப்பில் வந்த சேதியைப் படித் தால்... காந்தியம் கட்டை வண் டியில் போகிறது. கம்யூனிசம் பிளேனில் போகிறது. போய்ச் சேரும் இடம் ஒன்றுதான் என் றதை அங்குள்ளோர் மொழி பெயர்க்க மறுத்ததும் கலைவாணர் வெகுளிக்கு இலக்காகி விட்டார். வேண்டாம் உங்க விருந்து என்று வெளியேறி விட்டார். சரி, அப் படியே மொழி பெயர்க்கிருேம் என்றதும் — சமாதானப்படுத்தி யதும் கணப் பொழுதில் மாறி விட்டது அந்தக் கைக்குழந்தை உள்ளம்.

''இனிய உளவாக இன்ஞதை கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று''.

கடுமொழி அறியாதவர் கனி வைத் தவிர வேறெதையும் நினைத் தறியாத மனம் — பேசியறியாத வாய்!

பேரறிஞர் அண்ணு அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்ற நாள் அது. பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிசு கள் வழங்க வேண்டும் என்று, கம்பெனியில் ஒருவரை அனுப்பி நோட்டு பென்சில் எல்லாம் வாங்கி வரச் சொன்னுர். பெரிய பெட்டி நிறைய வந்திறங்கின. வாங்கி வந்தவர் பென்சில் அழிக்கும் ரப் பர் வாங்கிவர மறந்துவிட்டார். இதை, இவர் கவனிக்கவில்லை. காரில் ஏறி ஒவ்வொரு பள்ளிக் கூடமாகப் போய் பிள்ளைகளுக்கு நோட்டு பென்சிலை எடுத்தெடுத் துக் கொடுத்துக் கொண்டேயிருந் தார்.

ஒரு துருதுருப்பான பையன் கேட்டான். ''ரப்பர் இல்லையா எங்களுக்கு?''என்று. அதற்கு இவர் இனிமையாக இப்படிப்பதில் சொன் ஞர்: ''காஞ்சிபுரம் வெற்றி பெற் ருச்சு. இனி கல்வி நல்லா வளரும். அதனுலே, பிள்ளைகள் யாருமே இனி தப்புபோட்டு எழுதமாட் டீங்க. தப்பு இல்லையின்னு, பிறகு ரப்பர் எதற்கு?'' என்று ஓர் இனி மையான பதிலைச் சொன்ஞர். பிள்ளைகள் மனம் குளிர்ந்தது.

நோட்டு பென்சில் வாங்கி வந் தவரைப்பார்த்து, ''ஏய்! மடையா ஏண்டா ரப்பர் வாங்கி வர வில்லை'' என்று சுடு மொழி வீச வில்லை. ரப்பர் கேட்ட பிள்ளைகளை நோக்கியும், ''ஏய்! வாலுப் பசங் களா! குடுக்கிறதை வாங்கிக் கிங்க'' என்றும் குணம் கெட்டுப் பேசவில்லை. இதயத்தில் பேசினுர். இனிமையாகப் பேசினுர். அத் துடன் ஏற்புடைய ஒரு கருத்தை யும் சொல்லிவிட்டாரே!

காரை ஓட்டிவந்தவர், ஒரு முறை நாகர்கோவில் செல்லும் போது மிகவும் வேகமாக ஓட்டி வந்தார். இவர் எவ்வளவோதடவை சொல்லியும் ஏதோ ஒரு உற் சாகத்தில், ஓட்டுநர் விரைவாகவே சென்ருர். இவர், உடனே காரை நிறுத்தச் சொல்லி, இறங்கி வெற் றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு, பாதையின் ஓரத்திலி ருந்த பாறையில் போய் உட் கார்ந்து வெற்றிலைபோட ஆரம்பித் தார். 'உனக்கு அவ்வளவு அவசர மாக இருந்தால், நீ மட்டும் போ! நாங்கள் பஸ்ஸில் வருகிருேம்.' என்ருர், சிரித்துக் கொண்டே!

பிறகு அங்கிருந்து புறப்பட்ட கார் சுமார் முப்பது மைல் வேகத்தை மீறவே இல்லை!

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு''.

கலைவாணரின் கொள்கையே இதில் எழுந்ததுதான்!

காந்தியடிகளின் கதையை வில் லுப் பாட்டாகப் பாடினுர். பொது வுடைமைத் தலைவர் ஜீவானந்தம் அவர்களுடன் சிந்தை கலந்து பழகினுர். ரசிகமணி டி.கே.சியுடன் இலக்கியமாக இணைந்திருந்தார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை யிடம் ஒரு கவிதையாகப் பழகி ஞர். ஓ.பி. ராமசாமி ரெட்டியா ரிடம் உள்ளங் கலந்திருந்தார். கல்கியின் நகைச்சுவையிலே நல்ல ஈடுபாடு உண்டு. தமிழ் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் எழுதிய ஒரு கருத்தைக்கூட, ஒரு படத்தில் சொல்லியிருக்கிருர். விஞ் ஞான மேதை ஜி.டி. நாயுடு விடம் தொண்டிருந்த மதிப்புக் காக, மெய்ஞான மேதை கிருபா னந்தவாரியாரைப் பற்றிய மதிப் பைக் குறைத்துக் கொள்ளவில்லை.

சிலம்புச் செல்வர் எல்லைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத் தில், அவரது கொள்கைக்காக, இவர் ஒரு வில்லுப் பாட்டே அமைத்துப் பாடினுர். நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவர்களின் சுவை யான பேச்சில் தம்மை மறந்திருப் பார். ராஜாஜியுடன் கலகலப்பாக உரையாடுவார். மேதை வாரா. அவர்களிடம் நெருங்கிய பழக்க முண்டு கலைவாணருக்கு! இன்னும் எத்தனையோ மேதைகளிடம் மனம் கலந்து பழகியபோதிலும்—எப் பொருள் யார் யார் வாய் கேட் பினும்—மெய்ப்பொருளை, கலைவா ணர் கண்டது,

ஈரோட்டிலும் — காஞ்சியி யிலும்—திருக்குவளையிலும்தான்! தமிழில் உள்ள ஆயுத எழுத்து ஃ போன்றவர்கள், இம் மூவரும் என்றே கருதினுர்—நாடு, 67ல் வந்த முடிவுக்கு கலைவாணர் 47 லேயே வந்துவிட்டார்! 71ல் தான், கலைஞரை நாடு 'டாக்ட ராகக்'' கண்டது. ஆனுல், கலை வாணர், 'மணமக'ளுக்கு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய போதே, டாக்டராகக் கண்டுவிட் டார். படத்துக்கு கலைஞரவர்கள் எழுதியனுப்பிய காட்சிகளை, கலை வாணர் கண்களில் வைத்துவணங்கி மகிழ்ந்த நாட்களை நினைக்கிறேன்— அந்தக் கலைப் பெருமகனுக்கு, கருணுநிதி—ஓர்—உலக மகா கவி ஞர் என்பது அன்றே புரிந்திருக் கிறது.

மெய்ப்பொருளைக் கண்டுகொண் டாடும் மேதை மட்டுமா—இன் னும் குறளின் நிழலில் அவர் வாழ்ந்ததற்கு எத்தனை எத்த னையோ சொல்லலாம். குறளாகவே அவர் மாறியதற்குப் பல சான்று கள் உண்டு. சிற்சில இடங்களில் தோன்றும் முரண்பாடுகள், உல கத்தோடு ஒட்ட ஒழுகல்—என்ற குறளில் அடிபட்டுப்போய்விடுகிறது. இந்தச் சிந்தனையின் விளைவாக எழுந்ததுதான் 'வள்ளுவரின் பிள்ளை'—என்ற தலைப்பு. காலம் கை கொடுக்குமானுல், இதே தலைப்பில் கலைவாணரைப் பற்றி ஒரு பெரிய நூல் எழுத நினைத் திருக்கிறேன். அந்த ஒரே ஒரு சிறிய சாதனையையாவது வாழ்க் கையில் என்னுல் செய்து முடிக்க இயலும் என்று நம்பிக் கொண் டிருக்கிறேன்.

''திஞ, முஞ, கஞ—!

திருக்குறள் முன்னணிக் கழ கம்''—என்று வள்ளுவரின் பிள்ளை —கலைவாணர்—பாடிய பாடலை எண்ணி நாளும் அவருக்கு வணக் கம் செலுத்துவோமாக!

★

சென்னையில் ஒரு பறக்கும் பாதை

50 லட்சரூபாய் திட்டத்திற்கு அண்ணா ஒருரூபாய் ஒதுக்கினார்! ஏன்?

“ஏதோ கார்டு கொடுக்கிறார்களே... என்ன அது?” என்று நுங்கம்பாக்கம் ஹை ரோட்டில் வந்து கொண்டிருந்த ஒரு காரோட்டியை உள்ளே இருந்த மற்றொருவர் கேட்டார்!

“இவர்கள் ஹோம் கார்டு சார்!” என்றார் அந்த டிரைவர்.

“ஹோம் கார்டு—ரோட்டிலே நின்று எதுக்கய்யா கார்டுகொடுக்கிறாங்க?” என்றார் உள்ளே இருந்த சந்தேகப் பிரியர்.

அவர் இரண்டு தடவை துளைத்ததும் டிரைவர் தலையை வெளியே போட்டு, “என்னத்துக்கு இது?” என்று கேட்டார்.

“சர்வே எடுக்கறோம்!” என்று கார்டு வழங்கிய ஹோம் கார்டு ஊழியர் பதில் சொன்னார்.

“சர்வே என்றால்?” என்று டிரைவர் சந்தேகத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

“அதுதான் போற வர்ற வண்டிகள் கணக்கை எடுக்கறது!” என்று முதலில் சந்தேகம் கேட்டவர் இப்போது விளக்கம் கொடுத்தார்.

ஃ ஃ ஃ

அன்றைக்கு ஒரு நாள் முழுவதும் இப்படிப் போகிற வருகிற வண்டிகள் ஒவ்வொன்றுக்கும் சீட்டுக் கொடுத்து அடுத்த முனையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் ‘கலர் கலர் கார்டு’கள் ஒரு பலமான புள்ளி விவரத்தைத் தெரிவித்தன.

நாளொன்றுக்கு நெரிசல் வேளைகளில் மட்டும் ஒரு மணிக்கு ஏழாயிரத்து முன்னூற்று அறுபது வாகனங்கள் ஜெமினிச் சந்திப்பில் குறுக்கும் நெடுக்குமாகப் போகின்றன என்கிற விவரம்தான் அது!

“அடேயப்பா... 7360—ஆ..” என்று இது கேட்டு அகலமாக வாய் திறப்பவர்களின் வாயை இன்னும் பத்து ஆண்டில் மும்மடங்கும் இருபது ஆண்டில் ஒன்பது மடங்குமாகத் திறக்க வைக்கிற கணக்கு ஒன்றுண்டு!

இதே போக்கில் வாகனங்கள் பெருகினால், இன்னும் பத்து ஆண்டுகளில் ஒரு மணிக்கு ஜெமினி சந்திப்பில் சுமார் அறுபத்து ஆறு ஆயிரம் வாகனங்கள் இப்படியும் அப்படியுமாகக் கடக்கப் போகின்றன!

ஃ ஃ ஃ

ஒன்பது மடங்கு அகலமாக வாய் திறக்க முடியாது என்பதற்காகத்தான் இப்போது ஜெமினி சந்திப்பருகே பறக்கும் பாதையைத் திறக்கும் முயற்சிகள் செயல்பட்டு வருகின்றன.

ஆதலினால் யாரும் அவ்வளவு கஷ்டப்பட்டு வாயைத் திறக்க



அண்ணு சாலையில் - ஜெமினி அருகில் பறக்கும் பாதைக்காக பகலிரவாய் வேலை நடந்துகொண்டிருக்கும் காட்சி

வேண்டாம்! கொஞ்சம் காதுகளைத் தீட்டிக் கொண்டாலே போதுமானது.

'பறக்கும் பாதை' என்ருல் என்ன?

நெரிசல் நேரத்தில் எந்த ஒரு வாகனமும் தான் நினைத்த திக்கில் தடங்கல் இல்லாமல் முன்னுல் போகும் வண்டியை முத்தமிடாமல் — செல்வதே பறப்பது போலத்தானே?

இப்படி வாகனங்கள் 'பறக்க' வழி செய்யும் 'பாதை'தான் — 'பறக்கும் பாதை'.

ஒரு மணி நேரத்தில் ஏழாயிரத்துச் சொச்சம் வண்டிகளும் நினைத்தபடி பறப்பது என்ருல் இப்போதுள்ள பாதையில் விரிவு ஏற்படுத்துவது மட்டும் போதுமானது ஆகிவிடாது. ஏனென்ருல், ஜெமினி சந்திப்பில் வடக்கு தெற்காக மட்டும் வண்டிக்காரர்கள் பறக்க நினைப்பதில்லை—கிழக்கு மேற்கிலும் இத்துடன் இன்னெரு ஈசானியத் திக்கிலிருந்தும் வாகனங்கள் பறக்க வேண்டியிருக்கின்றன!

1. நுங்கம்பாக்கம் பெரிய சாலை
2. கோபதி நாராயண செட்டிசாலை
3. அண்ணு சாலை
4. கதீட்ரல் சாலை
5. அண்ணு சாலை (தொடர்ச்சி)

இப்படி ஐந்து பெரும்பாதைகளும் ஒன்றுக்கொன்று சாமானியப்பட்டதில்லை — என்கிற சாலைகள் ஆகும்.

இந்த ஐந்தும் பறக்க வேண்டுமானுல் ஜெமினி சந்திப்பில் ஒரு போக்குவரத்துத் தீவு மண்டலம் உருவாகி ஆக வேண்டும்!

உதாரணத்துக்கு இப்படி எடுத்துக் கொள்ளுங்கள்!

மேலே குறிப்பிட்ட சாலை எண்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது சாலை எண் மூன்றும், சாலை என் ஐந்தும் பறக்க வேண்டுமானுல் — ஒன்று, இரண்டு நான்கு ஆகிய சாலைகளில் அடைப்பு உண்டாக்கவேண்டும்.

அதாவது 3—ம் 5—ம் பறக்க 1, 2, 4 ஆகியவர்கள் நிற்க வேண்டும். அதற்குள் — 1—ம் 4—ம் பறக்க 2, 3, 5 ஆகியவர்கள் நிற்க வேண்டும். அடுத்து 2 பறக்க நினைக்கும்போது— 1, 3, 4 முடிந்தால் 5—ம் இப்போது பறக்கலாம்.

இப்படிப் பார்க்கும்போதும் ஒவ்வொரு தடவையும் மூவர் நிற்க நேரிடுவதால் ஒவ்வொருவருக்கும் அதிகப்பட்சம் இருவர் இருவராகப் பறந்து போகிற வரையில் அடைப்பு ஏற்பட்டே ஆகிறது.

இதனுல் போக்குவரத்து நெரிசல் (1) குறிப்பிட்ட காலத்தில் போக முடியாத தடங்கல் (2) எரிச்சல் (3) முந்திக் கொண்டு போகத் தூண்டும் படபடப்பு (4) ஆகியவற்றுடன் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புகள் உண்டாகின்றன.

மேலே சொன்ன நான்கில் முதலிரண்டும் இடையூறுகள்! பின்னவை இரண்டும் 'மன ஊறு'கள்!

இப்படி இடையூறுகளும், மன ஊறுகளும் உண்டாகி, அவ்வப்போது கொசிறுக்கு விபத்தும் உண்டாகிற நிலை தவிர்க்கப்பட என்ன செய்யலாம் என்கிற உணர்வு போக்குவரத்துத் துறையினருக்கும் நெடுஞ்சாலைப் பிரிவினர்க்கும் ஏற்பட்டதால் கிளர்ந்ததுதான் — ஜெமினி அருகே அமைந்து வருகிற 'பறக்கும் பாதை!' அதாவது ஜெமினி மேம்பாலம்!

ஃ ஃ ஃ

பறக்கும் பாதையைச் சென்னையில் நிறுவ வேண்டும் என்கிற எண்ணம் நெடுஞ்சாலைப் பிரிவினருக்கு வந்தபோது, இதைஎப்படி அமைக்கலாம் என்கிற ஒரு மாதிரியை இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சியின் போது நடைபெற்ற நெடுஞ்சாலைக் கண்காட்சியில் வைத்தார்கள்.

அவர்களுடைய கற்பனை—அல்லது கனவு அப்போது மலர்ந்திருந்த கழக ஆட்சியின் உதயத்தால் நனவாயிற்று!

இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொள்வதென்று பேரறிஞர் அண்ணா அந்த ஆண்டு வகுக்கப்பட்ட பட்ஜெட்டில் ரூபாய் 'ஒன்று' ஒதுக்கி சம்பிரதாயமாக அங்கீகரித்தார்.

ஃ ஃ ஃ

அப்போது இத் திட்டத்தின் அமைப்பும், செலவுகளும் மிகவும் ஆழ்ந்து பரிசீலனைக்கு உள்ளாகி வந்தன. இதுபோன்ற ஒரு பறக்கும் பாதையை ஜெமினி அருகே மட்டும் அமைத்தால் போதுமா? வேறு சில நெரிசல் மிக்க சந்திப்புகளிலும் இதுபோன்ற பாதைகள் அமைப்பது அவசியமில்லையா என்றெல்லாம் கேள்விகள் தோன்றின.

ஆனால் அரசினால் திடீரென்று எல்லா இடங்களிலும் இது போன்ற பாதைகளை அமைப்பது என்பது ஒரே மூச்சில் நடை

குழுவினரின் பரிந்துரைகளின்படியும் இந்த முயற்சியை ஓர் அழகுணர்வோடு ஜெமினி அருகே மறுபரிசீலனைக்குப் பின் நிறுவ முன்வந்தது கலைஞரின் அரசு.

ஃ ஃ ஃ

ஏன் இப்படி மறுபரிசீலனை?— என்று சிலருக்கு மண்டை அரிக்கலாம். குயுக்திக்காரர்களின் கேள்விக்கு விளக்கம் தர வேண்டுமானால் — கீழ்க்கண்ட விவரங்களைச் சொல்லி ஆக வேண்டும்.

முந்தைய திட்டத்தின்படி இந்தப் பறக்கும் பாதைக்கென ஆக்ரமிக்கப்பட வேண்டிய பகுதிகள் அதிகமாக இருந்தன.

அவற்றின் ஆக்கிரமிப்புக்குத் தரப்படும் உத்தேச நட்டஈட்டுத் தொகையே திட்ட மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கு வந்தது.

கட்டுமானச் செலவு மூன்றில் ஒரு பங்குதான்.

'வயிற்றெரிச்சல் செலவு' மூன்றில் இரண்டு பங்கு!

இப்படி நிலத்துக்கு நட்டஈடு கொடுத்து, பெரிய பெரிய கட்டி

இந்தப் பாதை அமைந்துவிட்டால், சாலை எண்கள் முதலில் குறிப்பிட்டது போல்—1, 2, 3, 4, 5 ஆகியவை ஐந்தும் நினைத்தது போல் தடங்கல்கள் இல்லாமல் தங்கள் திக்கு நோக்கிப் பறக்க முடியும். படத்தில் காண்பது போன்ற அமைப்பில் எந்தத் திக்குக்கும் போவதற்கு ஒவ்வொரு வழி உண்டாவதைக் கூர்ந்து பாருங்கள்.

எனவே, தடங்கலற்ற முறையில் போக்குவரத்து பறப்பதற்கு வழியமைத்துள்ள இந்தப் பறக்கும் பாதையின் அமைப்பு மேற்கொண்டும் விரிவு படுத்துவதற்கு ஏற்ற முறையில்தான் சரிவுப் பகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தம் 32 தூண்களில் இந்தப் பாதையின் சுமார் 1500 அடி தூரம் நிறைவு படுகிறது. ஒவ்வொரு தூணின் இடைவெளியும் 34 அடி ஒன்பது அங்குலம் உள்ளது.

பறக்கும் மேம்பாலப் பாதையின் அளவில் 48 அடி அகலம்



'பறக்கும் பாதை' வேலை பாதிக்குமேல் முடிந்துவிட்டது;
பாதை திறந்துவிட்டால் பஸ்கள் இப்படி நிற்க வேண்டியிராது.

பெறுகிற காரியமில்லை. என்பதை விட — அனைத்து இடங்களிலும் இப்படி அமைக்கப்படும்போது ஏற்படுகிற போக்குவரத்துத் தடங்கல்களை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் பெரிய தலைவலியாக இருக்கும் போலிருந்தது.

எனவே போக்குவரத்து அதிகாரிகளின் யோசனைகளின் படியும், இதற்கென அமைக்கப்பட்ட

டங்களையெல்லாம் இடித்துச்செல விடுவதை விடச் சுலபமான முறையில் குறைந்த செலவில் அமைக்க முடியுமா என்பதற்குத்தான் மறுபரிசீலனை நடந்தது.

அந்த மறுபரிசிலனையின்படி இப்போது நாற்பத்தொன்பதரை லட்ச ரூபாயில் இந்தப் பறக்கும் பாதையின் கட்டுமானச் செலவு (மனை விலைகள் உட்பட) திட்டமிடப்பட்டிருக்கிறது!

மறு பரிசீலனையில் திட்டமிடப்பட்டதுதான். இதில் இரண்டு கார்கள் போகவும் இரண்டு கார்கள் வரவும் ஒரே சமயத்தில் இயலும்.

கீழ்ப்பகுதிகள் ஒரு பெரிய தீவுப் போக்குவரத்தில் ஒன்றையொன்று சந்திக்காமல் போவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த தீவு வழியே கதீட்ரல் பாதையிலிருந்து அண்ணா சாலைக்கு

வலவர் என்றால்...

கலைஞர்: வலவர்களும், அதிகாரிகளும் சிரத்தையோடு விபத்தைக் குறைக்கப் பாடுபடவேண்டும்.

இல. பலராமன்: 'வலவர்' 'வலவர்' என்று அமைச்சர் சொல்லுவதற்கு என்ன அர்த்தம் என்று அறியலாமா?

கலைஞர்: இலக்கியத்தில் வலவர்கள் இல்லா வானூர்தி' என்று வருகிறது. ஆகவே, வலவர் என்றால் ஓட்டுநர் என்று பொருள்.

★

மோகினிப்படி

க. ராமமூர்த்தி: ஸ்ரீரங்கநாதர் மோகினி வேஷம் போட்டுக் கொண்டதால் மோகினிப்படி கொடுக்கப்படுகிறது என்பதனால், இதை வைஷ்ணவக் கோயில்களுக்கு மட்டும் கொடுப்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

கலைஞர்: ரங்கநாதர் பெண் வேஷம் போட்டு சிவனைத்தான் மயக்கினார். ஆகையால் சிவன் கோயில்களுக்கும்கொடுக்கலாம்.

★



பறக்கும் பாதை அமைப்பின் வரைபடம்

போகநினைக்கும் வண்டிக்கு அண்ணா சாலையின் தொடர்ச்சியில் ஒருசிறு பாலம் உண்டாக்கப்பட்டிருப்பதையும் காணுங்கள். அதே போல நுங்கம்பாக்கம் சாலையில் வருவதற்காக தீவு வழியே வளைவு மேம்பாலத்தில் செல்லுவதற்கும் ஏற்பாடு உள்ளது.

ஆக — தடங்கலற்ற முறையில் ஒரு மணிக்கு 7360 வண்டிகளும் போகவர ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பறக்கும் பாதையின் தூண்கள் மட்டும்தான் இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேல் தளம் தனித்தனி அமைப்புகளாக நிறுவப்பட்டு பெரிய பெரிய பளுத் தூக்கிகள் மூலம் இனி மேல் கொண்டு வந்து இணைக்கப்பட இருக்கின்றன.

போக்குவரத்துக்கு இடையூறு உண்டாகாமலிருக்க இப்படிச் செய்யப்படுவதாக நெடுஞ்சாலைப் பிரிவின் பொறியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

அழகுணர்வோடு இந்தப் பறக்கும் பாதையின் தீவு வட்டத்தடியில் நீரூற்றுக்களும் — பூந்தோட்டமும் அமைக்கப்பட இருக்கின்றன.

தீவு வட்டம் மட்டும் 150 அடி விட்டம் கொண்டதால் பாதைக்குரிய பகுதி போக மீதி இடத்தை காலி மனையாக விடாமல் இப்படிப் பூந்தோட்டமாக்குவதைப் போலவே சிறு வளைவு மேம்பாலத்தின் அருகேயுள்ள அரை வட்டப் பகுதியிலும் தனியார் சார்பில் நீரூற்றுத் தொட்டிகள் அழகு படுத்தலாம் என்று ஒரு செய்தி உலவுகிறது.

தூண்களில் சித்திரங்களோ அல்லது பூக்களோ பதித்து விடவும் ஒரு திட்டம் இருக்கிறது. கட்டுமானச் செலவு திட்டத்தின் உத்தேச மதிப்புக்குக் குறைந்தால் இந்த அழகுணர்வுகள் இங்கே தலைதூக்கும் என்றும் நம்பப்படுகிறது.

இந்தப் பாலத்தின் செலவினை எப்படிச் சரிக்கட்டுவது — என்பதில் ஒரு யோசனையை முதல்வர் கலைஞர் ஒரு பொறியாளர் கூட்ட நிகழ்ச்சியில் தெரிவித்தது உண்டு.

பாலத்தின் மீது போகும் வாகனங்களிடம் ஒரு தொகையை வசூலிக்கலாமா என்பது அந்த யோசனை. ஆனால் — வேகமாகப் போகிறவர்களிடம் மீண்டும் தடங்கல் செய்து வசூலிப்பதை விட வேறு நல்ல யோசனைகள் இருந்தால், தமிழகப் பொறியாளர்கள் அதற்கு யோசனை கூறலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த வசூலில் வேறு யோசனைகள்தான் செயல்பூர்வமாக வருமென்று நம்பப்படுகிறது. அந்த யோசனைகளை யார் சொல்கிறார்களோ — அவர்களுக்கு நெடுஞ்சாலைப் பிரிவினரும், தமிழக அரசும் நன்றி செலுத்திக் கௌரவிக்கும்!

ஏனென்றால், இப்படி ஒரு திட்டத்தின் செலவுத் தொகை சிறுகச் சிறுக வசூலிக்கப்படுவதால் இன்னும் பல திட்டங்கள் உருவாவதற்கு வழியுண்டு அல்லவா?

★



அந்த நாட்களை மீண்டும் நினைக்கிறேன்..

புரட்சி நடிகர் எம்ஜிஆர்

சதி லீலாவதி

நான் நடித்த எனது முதல் படமான 'சதி லீலாவதி' யில் எனக்களிக்கப்பட்டது 'இன்ஸ்பெக்டர்' வேடம்.

முதலில் 'துப்பறிபவன்' என்று சொன்னார்கள்... அதன் பிறகு கதாநாயகனின் நண்பன் பரசுராமனாகக் குறிப்பிடப் பட்டு வேறு வழியின்றி என்மீது பச்சாதாபப்பட்டுக் கொடுத்த வேடம்தான் 'இன்ஸ்பெக்டர்' பாத்திரம். அதிலும் சைக்கிள் ஓட்டத் தெரியாத இன்ஸ்பெக்டராகப் பதவியேற்றுக் கொண்ட நான், பதவியின் தகுதியைக் காப்பாற்ற கலை வாணரின் வாயிலாக சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டேன்.



சிலர் பதவியை உயர்த்துகிறார் கள். சிலரைப் பதவி உயர்த்து கிறது. ஆனால் நானோ அந்த அப் பாவி இன்ஸ்பெக்டரையும்உயர்த்த வில்லை; அந்த இன்ஸ்பெக்டர் பதவி (வேடமும்) என்னையும் உயர்த்தவில்லை.

தட்சயக்ஞம்

நல்ல உள்ளம் படைத்த எந்த திரு. எம். கே. ராதா அண்ணன் அவர்கள் சிபாரிசு செய்தும், 'சமூ கத் தொண்டு' என்ற படத்தில் நடிக்க மறுத்தேனோ அதே அண் ணன் திரு. எம். கே. ஆர். அவர் களிடம் நானே வலியச் சென்று வேலை கேட்டு நடிப்பதற்கும், சிறந்த ஆசான் இராசா சந்திர சேகர் அவர்களை மூத்த அண்ண னாகவும் அன்பு ஆசானாகவும் அடையவும் காரணமாயிருந்த படம் தான் 'தட்சயக்ஞம்'

'தட்சயக்ஞத்தில்' எனக்குவேலை வாங்கித் தந்த திரு. எம்.கே.ஆர். அண்ணன் அவர்கள் முதலில் தட்சனாக நடிக்க ஒப்பந்தம் பேசி முடிவில் சம்பளத் தொகை வேறு பாட்டினால் நடிக்காமல் போய் விட்ட படம்தான் அது.

புரட்சி நடிகரிடம் அவர் நடித்த சில படங்களைக் காட்டி நினைவு கூர்ந்து எழுதும்படி கேட்டோம். இங்கே அவர் நினைவின் தொகுப்பு இடம் பெற்றுள்ளது.

எனக்கு வேலை வாங்கிக் கொடுத்து விட்டுத் தனக்கு வேலையில்லாமற்போயும் மகிழ்ச்சியோடு வாழ்க்கையைக் கழித்த திரு. எம். கே. ஆர். அவர்களின் பண்பை நடைமுறையில் வெளிக்காட்டிய படமும் அதுவே,

தக்ஷயக்ஞம்

ஸ்ரீ முருகன்

'ஸ்ரீ முருகனி'ல் சிவன் வேடத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நான், அதில் நடனம் ஆடுவதற்காகக் குறைந்தது மூன்று நான்கு மாதங்கள் நடனப் பயிற்சியைப் பெற்ற எனக்கு—நடன ஆசிரியராகப் பணியாற்றியும் 'ஆசான்' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவருமான திரு. கே. ஆர். குமார் அவர்களை எனக்கு உடன் பிறவா அண்ணனாகப் பெறக் காரணமாயிருந்த படம்தான் 'தட்சயக்ஞம்'. இங்கும் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்த இயக்குனர் திரு. இராசா சந்திரசேகர் அவர்களே, அந்தப் படத்தை இயக்கும் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொள்ளும்படி நேரிட்டது. ஆனால் நான் அந்த வேடத்தில் நடித்தே ஆக வேண்டும் என்று என்னை வற்புறுத்தி நடிக்கச் செய்து மகிழ்ந்தவர் அவர்!

இந்தப் படம் முடிவதற்குள் எத்தனையோ விபரீதங்கள் ஏற்பட்டன. கலைவாணரும் ஸ்ரீ முருகனாக நடிக்க இருந்த 'ஏழிசை மன்னன்' திரு. எம். கே. தியாகராச பாகவதர் அவர்களும் குற்றவாளியென்று கைது செய்யப்பட்ட நேரம் அது. பாகவதருக்குப் பதில் திரு. ஹொன்னப்ப பாகவதர் நடிக்கும் நிலை உருவாக்கப்பட்டதும் அந்தப் படத்தில்தான். என்னைவிட வயதில் மூத்த திரு. ஹொன்னப்ப பாகவதருக்குத் தந்தையாக நான் நடிக்கும் வாய்ப்பு அது. எனக்கு அவர்களோடு நடிக்கும்போது ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லத்தரமன்று.

மோகினி

'மோகினி' படத்தில் நடிக்கும் போது எனது சொந்த வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது. முதன் முதலாக விவரம் தெரிந்த நிலையில், ஓரளவிற்கு உலகம் தெரிந்த நிலையில், நான் ஒரு பெண்ணை மணந்துகொள்ளும் ஆசை ஏற்படக் காரணமாயிருந்த படம் 'மோகினி'. ஆமாம், அப்போது அந்தப் படத்தில் என்னோடு நடித்த ஜானகிதான் அந்தப் பெண்.

அதற்குப் பிறகுதான் நாங்கள் மணந்து கொள்ள முடிவு செய்யும் சூழ்நிலை உருவாகியது.

இப்போதைய எனது வாழ்க்கைத் துணைவியான திருமதி ஜானகி ராமச்சந்திரனை எனக்குத் தந்தது அந்த 'மோகினி'தான்.

அந்தமான் கைதி

'அந்தமான் கைதி' படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புத் தந்தவர் என் வளர்ப்புத் தந்தை போல் என்மீது அன்பு செலுத்திய, மறைந்த டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்களாவார். இதில் எனக்காகச் சிதம்

என்னைவிட மூத்தவருக்குத் தந்தையாக நடித்து ...

நினைவு தெரிந்து ஒரு பெண்ணை நான் விரும்பி மணந்த நேரம்...

பரம் திரு. ஜெயராமன் அவர்கள் பாடியிருக்கிறார்கள். 'காணி நிலம் வேண்டும்' என்ற பாரதியாரின் பாடல் கேட்கக் கேட்கத் திகட்டாத ஒன்றாக இன்னும் என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டே இருக்கின்றது.

அந்தப் படத்தில் நான் நடித்த வேடத்தில் தங்கையின் பெயரைச் சொல்லி அழைக்க வேண்டிய காட்சியில் வேறு ஒரு பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பல ஷாட்டுகளில் தவறுகள் நேர்ந்தன. எல்லா நண்பர்களும் கேலி செய்தனர்.

நானும் ஏன் அப்படித் தவறு நேரிடுகிறது என்பதை என்னால் யூகிக்க முடியாமல் தவித்தேன். பலர் எனது பண்புள்ள நடத்தையைப் பற்றிக்கூடச் சந்தேகப்பட்டது போன்றிருந்தது, அவர்களுடைய பார்வை; பேச்சு; ஒருவருக்கொருவர் சைகை செய்து சிரித்துக் கொண்டது எல்லாம்.

சிறிது நேரம் என்னை நானே அமைதிப்படுத்திக் கொண்டு சிந்தித்தேன். அப்பாடா! காரணம் தெரிந்து விட்டது...

'அந்தமான் கைதி'யில் எனது தங்கையின் பாத்திரத்துக்குள்ள பெயரை மறந்து, 'மீனு' என்று வேறு பெயரைச் சொன்னதற்குக் காரணம் — 'மீனு' என்ற பெயரைத் தாங்கியவர் எனது காதலியாக நடித்த வேறு ஒரு பாத்திரத்தின் பெயர்கூட அல்ல; இன்னொரு படத்தில் எனக்குத் தங்கையாக நடித்த பாத்திரத்தின் பெயராகும் 'மீனு..' என்பது.

இந்த 'மீனு' என்ற பெயர் மட்டும் ஏன் எனது நினைவில் நின்று 'அந்தமான் கைதி'யில் தங்கையின் பெயர் மறந்துவிட வேண்டும்? இந்த இரு தங்கைகளில் ஒருவர்மீது மட்டும் பற்றும் அக்கறையும் அதிகமாக எனக்கு இருந்ததா? அப்படி ஏதுமில்லை!

சுமார் பத்துப் பதினைந்து நாட்களாக இரவு பகல் என்றில்லாமல் 'என் தங்கை' படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததாலும் தன் தங்கையைப் பிணக் கோலத்தில் கண்டு கதறி அழுது தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கடலில் போய்த் தங்கையின் சவத்தோடு மூழ்கிவிடுவதும் போன்ற உச்சக்கட்டக் காட்சிகளில் நடித்துக் கொண்டிருந்ததன் விளைவுமே அது என்பதை உணர்ந்தேன்.

அடிக்கடி தங்கையின் பெயரை மறந்து...

இதை அறிந்த திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் பிற்பகலில் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு என்னை வீட்டிற்குப் போய் ஒய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

என் தங்கை

''என் தங்கை''யில் நான் நடித்ததை இப்போது எண்ணினுலும் மனத்தில் அப்போது நிலைத்த நிகழ்ச்சிகள் பல தோன்றி என் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன.

அந்தப் படத்தைத் தயாரித்த உரிமையாளர்களில் எங்களிடம் அதிகம் நெருங்கிப் பழகியவர்கள் இருவர். இவர்களிருவரும் புதிய தயாரிப்பாளர்கள் போலவே இல்லை. ஒவ்வொரு உரையாடலிலும் காட்சியிலும் அவ்வப்போது தொடர்பு கொண்டு ஆங்காங்கே திருத்தங்கள் செய்த வண்ணமிருந்தனர்.

அவர்களில் திரு. சவுண்டப்பச் செட்டியார் அவர்கள் தீவிரமாகச் செயல்படுவார். ஆனல் இவர் பேசுகிற சத்தமே வெளியில் கேட்காது. ஆனல் சொல்லுகின்ற கருத்துக்கள் அறிவு செறிந்ததாகவும், ஆழமானதாகவும், பண்புள்ளதாகவுமே இருக்கும். முதன் முதலாக இந்த உரிமையாளர்கள் தான் தமிழில் ஒப்பந்தப்பத்திரம் எழுதியவர்கள். தமிழ்ப் பற்றும், தமிழர்கள் என்பதில் தனித் தன்மையோடு பெருமிதமும் கொண்டவர்கள். தமிழை—தமிழரை, யார் குறைவாகப் பேசினுலும் கிஞ்சித்தும் பொறுத்துக் கொள்ளாதவர்கள். படம் வெளியிடப்பட்டபின் எனக்கும், எனது தமையனுருக்கும் அசோகா பிக்சர் ஸாரிடமிருந்து கடிதம் வந்தது. ''நீங்கள் தந்த ஒத்துழைப்பும் உங்களின் திறமையும்தான் ''என் தங்கை'' படம் வெற்றிகரமாக ஒடிக் கொண்டிருப்பதற்குக் காரணம். உங்களுக்கு எங்கள் நன்றி!'' என்ற கருத்தில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு முன்னும் அப்படிப்பட்ட கடிதங்கள் எனக்கு வந்ததில்லை. அதற்குப் பிறகும் வந்ததாக நினைவில்லை.

ஜெனேவா

''ஜெனேவா'' கிருஸ்துவ மத சம்பந்தப்பட்ட கதை. இதில் கர்த்தரை வணங்குவது போன்ற காட்சி ஒன்று வருகிறது. நான் அப்படிப்பட்ட காட்சியில் நடிப்பேனே மாட்டேனே என்ற சந்தேகம் இயக்குநருக்கும் தயாரிப்பாளருக்கும். காட்சி சோடனைகளைத் தயார் செய்துவிட்டார்கள்.

உலகப் பெரியார்களை அதாவது சமூகத்துக்காக சேவை செய்து தியாகத்தழும்பேற்று மக்களுடைய நல்வாழ்வுக்காகத் தம் உயிரையே ஈந்தவர்களின் கொள்கையில் ஒரு



மீனு மீனு என்று நினைவில் நின்ற பாத்திரம் ...

கிறிஸ்துவப் படத்தில் நான் நடிப்பேனு என்று ...

சில பிடித்திருந்தாற் கூட அவர்களைப் போற்றலாம். அவர்களைப் பின்பற்றலாம். இதுதான் எனது எண்ணம். எனவே நான் அந்தக் காட்சியில் நடித்தேன்.

எனது நண்பர்கள் யாரும் எந்தக் குறையும் கூறவில்லை. ஆகவே கொள்கைத் தெளிவு பெற்றவர்கள் யாரும் எந்த மதத் தலைவரையும் மதிப்பதாலோ, அவர்களிடம் மரியாதைகாண்பிப்பதாலோ தனது கொள்கையை விட்டுவிட்டதாகப் பொருளாகாது என்ற உறுதியை எனக்களித்த படமாகும் இது.

மர்மயோகி

''மர்மயோகி'' இது சம்பந்தமாக எழுத வேண்டுமாயின் அதுவே ஒரு தனிக் கதைபோன்று பெரியதாக நீண்டுவிடக் கூடியதாகும். என்னைக் கலை வாழ்க்கையின் புதிய தொரு பாதைக்குத் திருப்பிவிட்ட படமாகும் இது. எத்தனையோ நல்லவர்களின் துணையில் வெற்றிகரமாக என்னை நடைபோடவைத்த படமாகும் இது. கலைமேதையான மறைந்த திரு. கே. ராமனுத் என்ற நல்லறிவாளரின் அன்புத் தொடர்பு கிட்டவும், அவர் இயக்கி நான் நடிக்கவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பாகும் இந்த ''மர்மயோகி''படம்.

நான் ஏற்ற பாத்திரத்துக்காக எனக்கு எழுதப்பட்டிருந்த உரையாடல்கள் ஆட்சி செய்வோரின் கொடுங்கோல் தன்மையை ஏசுவதாகவும் மக்களின் சார்பாக சர்வாதிகாரம் செய்யும் அரசைத் தாக்குவதாகவும் அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் படத்தில் நடித்து படம் வெளிவந்தபின் மக்கள் எனது கொள்கையின் பிரதிபலிப்புதான் இந்த உரையாடல்கள் என்பதை அறிந்தனர். ஏனெனில் என் உள்ளத்தில் இருந்த எழுச்சி நிறைந்த வேகத்தை— இந்த உரையாடல்களும் இருந்ததால் உணர்ந்து, அதை வெளிப்படுத்தினேன்—அழுத்தந் திருத்தமாக. எனவேதான் மக்களின் உள்ளத்திலும் அது எதிரொலித்தது. அந்தப் படம் வெளிவந்த பிறகு ஒருநாள் திருச்சியில் நடந்த கழக நாடகத்தை இன்றைய முதல்வர், கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் தலைமையிலும் எனது முன்னிலையிலும் நடித்தார்கள். அந்த நாடகத்தின் போதுதான் இந்நாள் முதல்வரால் கழகச் சார்பில் எனக்கு ''புரட்சி நடிகர்'' என்ற பட்டம் தரப்பட்டது. அப்படிப்பட்ட சிறந்த பெருமை தரக் காரணமாயிருந்தது இந்த மர்மயோகி.



கலைஞர் தந்த கருத்துப் படையல்...

மந்திரி குமாரி

''மந்திரி குமாரி'' படம் தயாரிக்கப்பட்டபோது பல எதிர்ப்புக்கள் இருந்தன. கம்பெனியில் இருப்பவர்களில் குறிப்பிடத்தக்க சிலரே, ''இந்தப் படம் ஓடாது; தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத கருத்துக்களும் தமிழக மக்கள் வெறுக்கக்கூடியதுமாக இருக்கின்றது'' என்றும், ''எதையும் பொறுத்துக் கொள்வார்கள்; கணவனையே மனைவி கொன்று விடுவது சகிக்க முடியாத ஒன்றாகும்'' என்றும் குறைகூறி அச்சுறுத்தினார்கள். ஆனால் எதிர் நீச்சலே தனது வாழ்க்கை யென்று ஓர் இலக்கணத்தைத் தனது முன்னேற்றக் கொள்கையால் அமைத்துக் கொண்டுவிட்ட கலைஞர் அவர்களின் கதையும், உரையாடலும் மறைந்த திரு. டி. ஆர். எஸ். அவர்களை ஈர்த்துக்கொண்டுவிட்ட காரணத்தால் படம் தயாரிப்பதை அந்த சகுனிகளால் தடைப்படுத்த இயலாமற்போய்விட்டது. படம் வெளியிடப்பட்ட பிறகுதான் தெரிந்தது கலைஞரின் நியாயமான கருத்துக்கள்தான் தமிழக மக்களில் நொந்துபோனவர்களான ஏழைகள், பட்டாளித் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலியவர்களின் கருத்துக்களும் என்பது வெளிப்படுத்தப்பட்டது. தமிழகமெங்கும் வெற்றிகரமாகப் பல வாரங்கள் ஆங்காங்கே சிறப்பாக ஓடியது. குற்றம் சொன்னவர்களின் கூற்றுக்கள் அனைத்தும் இந்த வெற்றிக் கொடி பறந்தடித்த காற்றில் எங்கோ சிதறுண்டு போயின.

நாம்

''நாம்'' படத்தைத் தயாரித்த மேகலா பிக்சர்ஸ் தோன்றியது வினோதமான ஒன்றாகும்!

முதலில் எனது தமையனார், நான், இயக்குநர் திரு. ஏ. காசிலிங்கம் இம்மூவரும்தான் உரிமையாளர்கள். பிறகு நடிகர் திரு. பி. எஸ். வீரப்பா அவர்களும் பங்குதாரர். ஆனால் அதன் பிறகு எங்கள் வற்புறுத்தலுக்குப் பின் இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைப் பங்குதாரர் ஆனார்.

படம் வெளியிட்ட பின் கல்லக்குடி போராட்டத்தின்போது கலைஞர் சிறையிலிருந்தபோது தமையனார் முதலில் விலகினார். பிறகு



மேகலா தயாரித்த முதல் படம்...

'புரட்சி நடிகர்' பட்டத்துடன் திருப்பங்களை உருவாக்கிய படம்...

நான் விலகினேன். அதன் பிறகு வீரப்பா. அதற்கடுத்து திரு. காசி லிங்கம். இப்படி எல்லோரும் பிரிந்தோம். ஆனால் அன்றும் இன்றும் இப்போதும் நாங்கள் அனைவரும் ''நாங்கள்'' என்றில்லை; ''நாம்'' என்றிருக்கிறோம்.

மேகலாவில் உரிமையாளர்களாயிருந்த நாங்கள் அனைவருமே தனித்தனித் தயாரிப்பாளர்களாக உருவாகிவிட்டோம். தனித்தனி தயாரிப்பாளர்களாக இயங்கும் தன்மை பெற்றுள்ள நாங்கள் ஒன்று சேர்ந்து எடுத்த ''நாம்'' படம் அன்று மிகப் பெரிய வெற்றி பெறவில்லை; ஆனால் நாங்கள் ஒவ்வொருவரும் தனியாகத் தயாரித்த படங்கள் நல்ல நல்ல வெற்றிகளைப் பெற்றன!

படங்கள் :

பி. ஜி. ஆனந்தன்

இரண்டு கருத்து

காங்கிரஸ் நண்பர் ஒருவர் கவர்னர் உரையிலே ஒன்றுமேயில்லை என்று சொன்னார்கள். எனக்குக்கூட பயமாக இருந்தது. என்ன ஏழெட்டுப் பக்கங்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள், ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்களே, ஒரு வேளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் அச்சாபீசில் ஏதாவது அடிக்காமல் விட்டுவிட்டார்களோ என்று கூடப் பயப்பட்டேன்.

ஆனால், அடுத்துப் பேசிய இன்னொரு உறுப்பினர் அதே கட்சிக்காரர் அதிலே ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்குப் பதில் இதிலே 'நாங்கள்' சொன்னதெல்லாம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

இரண்டையும் பொறுத்திப்பார்த்தால் விவரம் விளங்கவில்லை!

- அறிஞர் அண்ணா


நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும்
புதிய பிரச்சினைகளை உருவாக்குவது,
மக்கள் தொகைப் பெருக்கம்தானே!
அதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?
பசுமைப் புரட்சி பரவுகிறது!
புகு முக வகுப்பு வரை
இலவசக் கல்வி
தொழில்
துறையில்
புதிய புதிய முயற்சிகள்
சட்டத்தின்
துணையோடு
ஏழை எளிய மக்களுக்கு
நிலப்பட்டா!
தாழ்த்தப்பட்ட
பிற்படுத்தப்பட்ட
மக்களுக்கு
தனிச் சலுகைகள்
வீட்டுமனைப்பட்டா!
எல்லா ஊர்களுக்கும்
குடிநீர், வடிகால்
திட்டங்கள்
பிச்சைக்காரர்
மறுவாழ்வுத்
திட்டங்கள்
மாநிலத் திட்டக் குழு
நாட்டுக்கும் நல்லது
வீட்டுக்கும் நல்லது
குடும்ப நலத்
திட்டம்
குடும்ப நலத் துறை
தமிழ்நாடு அரசு

ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில்

அய்யம்பாளையம், மங்கலம் அஞ்சல்,

பல்லடம் வட்டம், :: கோவை மாவட்டம்

*

"நற்குணங்கள் செழித்தோங்க நலிந்தவர்கள் துயர் நீங்க
புற்றுமண் நீரளித்து புவியிலுள்ளோர் புண்துடைத்து
கற்பிதமாம் வையமிதில் கருணைமிகு மன்பினொரு
வெற்பெனத் துலங்கு நல்லய்யனடி வாழ்த்துவோமே."

*

அஞ்செழுத்து மந்திரத்தால் நஞ்சகற்றும் நாதன் ஆகிய ஸ்ரீ வழைத் தோட்டத்து அய்யன் கோயில் பல மகிமைகளுடன் தீராத பிணிகளையும் ஆறாத புண்களையும் சகல விஷக்கடிகளையும் போக்கி அருளும் திருத்தலமாகவும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்தை சோமனூரிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வரும் டவுன் பஸ்கள் இதர பஸ்கள் மூலமாக அடையலாம். இத் திருக்கோயிலில் தற்சமயம் கர்ப்பகிரஹ அர்த்த மண்டப கருங்கற் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக் கோயிலின் சார்பில் அனாதை மாணவர் இல்லம் ஒன்றும், சாமளாபுரத்தில் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் துவக்கப்பெற்று செயல்பட்டு வருகிறது. பக்தர்கள் தங்க விடுதிகளும் குடி நீர், மின்சாரம் முதலான வசதிகளும் உண்டு. எனவே பக்தர்கள் அனைவரும் இத் திருத்தலத்திற்கு வருகை தந்து அருள் செல்வமும், பொருள் செல்வமும் பெற்று விளங்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்

P. R. கோவிந்தராஜலு, B.A., B. Com.
நிர்வாக அதிகாரி.

சோ. கு. பழனிசாமி,
தலைவர், அறங்காவலர் குழு.

S. A. P. சுந்தரம்,
M. சின்னமாரப்ப கவுண்டர்,
M. பழனிசாமி,
M. சுப்பையன்,
அறங்காவலர்கள்.

கோயமுத்தூர்
மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,
கோவை-18.

தந்தி : "கோடிஸ்ட் பேங்க்". அஞ்சல் பெட்டி எண் : 1398 கோவை - 18.

தொலைபேசி எண் : 33447 (3-லைன்)
துணைத் தலைவர் : 31304
செயலாளர் : 31303
செயலாளர் இல்லம் : 34002

சேர்மன் : திரு. A. M. ராஜா, M.A., M.L.A.,

மாவட்டத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பாங்காராகவும். உற்ற தோழனாகவும் பணி புரிகிறது.

பிக்சட் டிபாசிட்டுகளுக்கும், மற்ற டெபாசிட்டுகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி அளிக்கப் படுகிறது.

பிராவிடெண்டு டிபாசிட்டுகளுக்கு 7 சதவீதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்களின் வசதிக்காக வங்கி முறையில் எல்லா அலுவல்களும் மேற்கொள்ளப் படுகிறது. பாதுகாப்பு பெட்டக வசதிகளும், நகைக் கடன்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

விபரங்களுக்கு தலைமை அலுவலகம் அல்லது கிளைகளுக்கு விண்ணப்பிக்கவும்.

எம். பழனிசாமி, பி. காம்., எச். டி. சி.
செயலாளர்.

கிளைகள்	போன் நெ.	கிளைகள்	போன் நெ.
1) ஈரோடு	506	9) கிருஷ்ணாபுரம் (கூட்டுறவு சர்க்கரை ஆலை)	
2) உடுமலை	202	10) பவானி	328
3) தாராபுரம்	315	11) அவினாசி	
4) கோபி	195	12) கிணத்துக்கடவு	
5) திருப்பூர்	843	13) மேட்டுப்பாளையம்	
6) வெள்ளகோவில்	89	14) பெருந்துறை	
7) பொள்ளாச்சி	984	15) சூலூர்	
8) ஆர். எஸ். புரம் (கூட்டுறவு சிறப்பு அங்காடி)		16) காங்கயம்.	

தமிழ் நாடு மின்வாரியத்திற்கும்

எமது வாடிக்கையாளர்களுக்கும்

மற்றும் நண்பர்களனைவருக்கும்

எங்கள் உளம்கனிந்த

"பொங்கல் வாழ்த்துக்கள்"

ஒமேகா கேபிள்ஸ்

ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட்

புகாரியா பில்டிங் (3வது மாடி)

1, மூர்ஸ் ரோடு, சென்னை - 6.

தொலைபேசி: 84241 (4 லைன்கள்) தந்தி: "SPOOLER"

TELEX: "SPOOLER - MS - 7342"

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் & தொழிற்சாலை

அம்பத்தூர் சென்னை - 58.

தொலைபேசி: 60431/2

எங்கள் உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

லக்ஷ்மி பிராண்டு

சிப்போர்ட்ஸ் & பிளஷ்டோர்ஸ்

உள்கதவுகளுக்கும்
வெளிக்கதவுகளுக்கும்
பினால்பார்மல்டிகைடுரெஸின்
உபயோகிக்கப்படுகிறது.

★ எந்த சீதோஷ்ண ஸ்திதியினாலும் பாதிக்கப்படாதது.

★ தண்ணீரினால் பாதிக்கப்படாதது.

★ ஒரே கனம், கெட்டியான சிப்போர்டு உட்பலகை.

★ எந்த பரிமாணத்திலும் பாதுகாப்பானது வளையாதது.

★ கடும் வெப்பத்தையும் தாங்கவல்லது. உறுதியான இலகுவான இயக்கமும் அமைப்பும் கொண்டது.

உற்பத்தியாளர்கள் :

மதராஸ் சிப்போர்ட்ஸ் லிமிடெட்,

பி. எஸ். கே. நகர், ராஜபாளையம்.

சென்னை ஆபீஸ் : சோர்டியா மான்ஷன்
150-A மவுண்ட்ரோடு, சென்னை - 2.

ஸ்ரீ பன்னாரி மாரியம்மன் தேவஸ்தானம்,

பன்னாரி ராஜன்நகர் அஞ்சல்,

கோபி வட்டம், :: கோவை மாவட்டம்.

(தொலைபேசி எண். 89SCR)

பிரதி வருடம் பங்குனித் திங்கள் உத்திரம் நட்சத்திரம் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கள் நாளில் இரவு பல திக்குகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து கூடி அம்பிகையைப் பூசிப்பார்கள். அன்று இரவு அக்கினிக் குண்டம் வளர்ப்பது வழக்கம். இரவு சுமார் 3 மணிக்கு குண்டம் இறங்குவதற்கு ஆரம்பித்து மறுநாள் செவ்வாய் பகல் சுமார் 11 மணி வரை பக்த கோடிகள் இறங்குவார்கள். இந்த ஆலயம் தற்போது அறநிலைய இலாகாவிற்கு உட்பட்டு ஆறு பரம்பரை தர்மகர்த்தர்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு இக்கோயிலில் இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கல்யாண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. மற்றும் பல ஆக்க வேலைகள் நடைபெற்று வருகிறது. எனவே, பொது மக்கள் தாராளமாக நன்கொடைகள் அளித்து அம்மையின் திருவருளுக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சி. பி. வீரப்பகவுடர்,
தலைவர்.

பி. இராமசாமி,
நிர்வாக அதிகாரி.

தர்மகர்த்தர்கள் குழு

சி. டி. வெங்கட்ராம நாயுடு,
என். பழனியப்ப கவுடர்,
வெ. வீரப்ப கவுடர்,
உ. ராமசாமி கவுண்டர்,
சி. ஆர். தங்கவேல்.
பரம்பரை தர்மகர்த்தர்கள்.

'சிந்தாமணி' கூட்டுறவு சிறப்பு அங்காடி,

கோயமுத்தூர்.

★

கிளைகள் :

உடுமலைப்பேட்டை — காந்திபுரம் — வேடப்பட்டி

தலைவர்: திரு ஜி. ஆர். கோவிந்தராஜிலு நாயுடு

உறுப்பினர்: 28,552

பங்குத் தொகை: ரூ. 2,93,620/-

	விற்பனை ரூ.	நிகர இலாபம் ரூ.
1967—68	76,97,514	94.734
1968—69	1,74,75,152	3,66,732
1969—70	3,17,54.864	4,51,734
1970—71	4,70,13,753	2,41,196

19 விற்பனைப் பிரிவுகளுடன் வெற்றிகரமாகப் பணியாற்றும் சிறப்பங்காடி.

ஜி. வி. இராமசாமி,
செயலாளர்.

வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

*

சிவானந்தா மில்ஸ் லிமிடெட்

கோயமுத்தூர்-6.

*

உயர்ந்த ரக 60s, 80s, 100s, கார்டட்,
கோம்புடு பருத்தி நூலும், 31s, 40s,
ஸ்டேபிள் பைபர் நூலும்
தயாரிப்பவர்கள்.

Veena
Embroideries

வீணை எம்ப்ராய்டரீஸ்

★ தமிழகத்தின் உன்னத தயாரிப்பு.
★ நவீன டிசைன்கள்
★ கண்கவர் வண்ணங்கள்
★ சீரிய பூ வேலைப்பாடுகள்
★ நீடித்த உழைப்பு
★ எம்ப்ராய்டரி ஜவுளிகளில் மிகச் சிறந்தது.

மற்றும்

2 × 8 சூப்பர்பைன் வேட்டிகள்
டூ பை டூ, புல்வாயில்
கேம்பிரிக் & பிரின்டெட் சேலைகள்

தயாரிப்பாளர்கள் :

S. S. M. பிரதர்ஸ் (பி) லிமிடெட்

குமாரபாளையம் P. O., வழி—ஈரோடு.

டிப்போ
8, கிடங்கு தெரு,
சென்னை-1.

ஷோரூம்
சேலம் மெயின் ரோடு,
குமாரபாளையம்.

நவீன டெக்ஸ்டைல் பிராசசிங்:

S. S. M. ப்ராசசிங் மில்ஸ்,

எடப்பாடி ரோடு, குமாரபாளையம்.

பொங்கல் நன்னாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

வாழ்க தமிழ்! **வளர்க தமிழகம்**

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்,

மருதமலை, கோயம்பத்தூர்-7.

தைப்பூச தேர்த்திருவிழா அழைப்பிதழ் — 1972

24—1—72 காலை — கொடியேற்றம்.
30—1—72 மாலை — தேர்த் திருவிழா.
31—1—72 மாலை — தெப்பத் திருவிழா.
1—2—72 மாலை — இசைப் பேரறிஞர் மதுரை திரு. சோமு அவர்களின் இன்னிசை விருந்தும், சிறந்த வாணவேடிக்கையும் நடைபெறும்.

வருக! வருக!! மருதமலை முருகனருள் பெற வருக!

என். இராமசாமி, எம். ஏ.,
நிருவாக அதிகாரி.

அறங்காவற் குழு
என். நடராஜ், B. Com., தலைவர்.
ஆர். மாணிக்கவாசகம், எம்.எல்.ஏ.,
எஸ். இராமகிருஷ்ண நாயுடு
சி. எஸ். தங்கவேல் முதலியார்
ஏ. இலட்சுமணன்

பட்டிப் பெருமான் திரு ஆலயம்

பேரூர், கோவை-10.

இது தொன்மையும், பழமையும் வாய்ந்த சிவாலயம், இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் சுயம்பு மூர்த்தி. இவ்வாலயத்திலுள்ள கனகசபையில் கோமுனி பட்டிமுனி இருவருக்காக ஆடிய பாதத்தோடு விளங்கும் நடராஜர் வடிவம் மிக மிக அழகானது நடராஜப் பெருமானை வலம் வரும் வண்ணம் அமையப் பெற்றுள்ள தலம் இது ஒன்றே என்று சொல்லலாம். இத்தலம் மேலைச் சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது. கனகசபை மதுரை திருமலை நாயக்கர் சகோதரரான அளகாத்திரி நாயக்கரால் (1625-1659) கட்டப்பட்டது. இக் கனக சபையில் சிற்பக் கலை வேலைப்பாடுகள் மிளிர்கின்றது.

புராதனமான பட்டிப் பெருமாள் கோவிலில் கற்பக் கிருகத்தைக் கரிகால் சோழன் அமைத்த தாகச் சொல்லப்படுகிறது! என்றும் அழிவற்ற இறவாப்பனையும், பிறப்பேயில்லாத பிரவாப்புளியும் பைத்தியத்தை நீக்கும் புண்ணிய தீர்த்தம் சுரக்கும் பிரம்ம தீர்த்தக் கிணறும், இத்தலத்தில் புனிதத்தை இன்றும் எடுத்துக் கூறுபவை. அப்பரும் சுந்தரரும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இங்குள்ள முருகப் பெருமான் தண்டாயுதபாணி என அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கி நின்று அருள் புரிகின்றார். அருணகிரிநாதர் இத் தண்டபானிப் பெருமானை இரு திருப்புகழ்ப் பாடல்களாற் பாடியுள்ளார். கடந்த 5 வருடங்களாக இச்சன்னதி திருப்பணி செய்யப் பெற்று கடந்த 12-7-1971 அன்று குடமுழுக்குவிழா சிறப்புற நடைபெற்றது.

அன்பர்கள் வந்து தரிசித்து வணங்கி பச்சைநாயகி சமேத பட்டிப் பெருமான், தண்டாயுத பாணிப் பெருமானின் திருவருளைப் பெருமாறு வேண்டுகிறோம்.

N. R. லிங்கமராஜா, M.A.,
நிர்வாக அதிகாரி.

M. R. சிவசாமி,
அறங்காவலர் குழுத்தலைவர்.

K. சிவசாமி, R. கருப்புசாமி, K. P. ஜெகன்னாதன்,
அறங்காவலர்கள்.

STANDARD

20

IN SERVICE OF THE NATION

WE SUPPLIED 71 AMBULANCES FOR BANGLADESH

AND NOW 400 STATION WAGONS FOR FAMILY PLANNING



STANDARD TWENTY CAN DO PLENTY

IT IS A VERSATILE VEHICLE....

Manufactured by:

Standard Motor Products of India Limited

29, Mount Road, MADRAS-2

Distributors:

THE UNION CO. (MOTORS) PRIVATE LTD.,
MADRAS & OOTACAMUND.

UNICORN (BANGALORE) PRIVATE LTD.,
BANGALORE.

With the best compliments of:

FARM INDUSTRIES,

Manufacturers of:

BOARING MACHINE;

CALYX CORE DRILLING MAHCHINES

PRESS COLONY POST,

COIMBATORE - 19.

With the best compliments of:

SAKTHI SUGARS LIMITED

Manufacturers of:

BEST QUALITY WHITE SUGAR

and

SAKTHI HYBRID SORGHUM

and

BAJRA SEEDS

Factory:

SAKTHI NAGAR P.O.
BHAVANI TALUK
ERODE R.M.S.

Regd. Office:

72, SENGUPTA STREET,
RAMNAGAR P.O.
COIMBATORE-9



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக முரசொலி அச்சகத்தில் ஆசிரியர் மாறனால் அச்சிடப்பட்டு
3-147, அண்ணா சாலை, சென்னை-6 லிருந்து வெளியிடப்படுகிறது.

தந்தி : "காட்டன்" குமாரபாளையம் போன் : 216, 321, 310, 311 (பவானி)

சுந்தரம் நூற்பு ஆலை

தபால் பெட்டி எண் : 25 குமாரபாளையம் அஞ்சல் (ஈரோடு வழி)
நிறுவப்பட்ட கதிர்கள் : 25,228
முறுக்கு கதிர்கள் : 1,200

தந்தி : "ஸ்பின்னிங்" போன் : 374, 375, 308, & 284

கந்தசாமி நூற்பு ஆலை

தபால் பெட்டி எண் : 14 பவானி அஞ்சல் (ஈரோடு வழி)
நிறுவப்பட்ட கதிர்கள் : 12,064
அனுமதிக்கப்பட்ட கதிர்கள் : 25,000

தந்தி : "பேர்டல்" போன் : 307 & 305

அழகப்பா பஞ்சு ஆலை

தபால் பெட்டி எண் : 18 நாகம்மை நகர், இராஜபாளையம்
நிறுவப்பட்ட கதிர்கள் : 12,000

தந்தி : "சூடாம்பிகை" போன் : 38 & 182

ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிட்.,

பி. எஸ். சுந்தரம் ரோடு, திருப்பூர் அஞ்சல், கோவை (மாவட்டம்)
நிறுவப்பட்ட கதிர்கள் : 38,600
முறுக்கு கதிர்கள் : 2,000
விசைத் தறிகள் : 192

தந்தி : "புள்ளிக்கார்" போன் : 259 & 233

புள்ளிக்கார் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி எண் : 67, திருச்செங்கோடு அஞ்சல், சேலம் (மாவட்டம்)
நிறுவப்பட்ட கதிர்கள் : 25,000

தந்தி, "பங்களா" [illegible] போன் : 208 & 205 (பவானி)

க[illegible]சாமி வீவிங் பேக்டரி & கோ.

தபால் பெட்டி [illegible] : 33-குமாரபாளையம் அஞ்சல் (ஈரோடு வழி)
மொத்தம் நிறுவ[illegible] கதிர்கள் : எல்லா ஆலைகளிலும் 1,12,892

உரிமையாளரகள் :

ஜே. கே. கே. அங்கப்பன் ஜே. கே. கே. நடராஜா
ஜே. கே. கே. சுந்தரராஜா ஜே. கே. கே. முனிராஜா

குமாரபாளையம் அஞ்சல், ஈரோடு (வழி)

அற்புத அலுமினியம் உற்பத்தி உயர
தீவிர திட்டம் தீட்டி அதை ஆவன செய்ய......
மதருஸ் அலுமினியம் கம்பெனி இப்பொழுது
ஈடுபட்டுள்ளது. தனது தற்போதைய ஆண்டொன்றுக்கு
உற்பத்தித்திறன் 12,500 டன்களாகும்.
இதை 25,000 டன்களென படிப்படியாக உயர்த்த
ஏற்பாடு செய்து வருகிறது.
இத்தாலி நாட்டை சேர்ந்த மிகவும்
பிரபல கம்பெனியான மாண்டிகாடினி-எடிஸன்
ஒத்துழைப்புடன் இயங்கிவரும் இந்த நிறுவனம்
தனியார் துறையில் மாபெரும் ஸ்தாபனமாக
தென்னகத்தே விளங்கிவருகிறது. மேலும்
சீக்கிரமே தகடுகள் தயாரிக்கும் உருட்டாலை
முதலியன ஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்து வருகின்றது.
இக்கம்பெனி நமது நாட்டின் அந்நிய செலாவணியை
பெருமளவு மிச்சப்படுத்துவதுடன் அதன் சீரமைப்பு
பணியிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது.

MALCO

மதருஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்

பதிவு காரியாலயம்
கோயமுத்தூர்

தொழிற்சாலை
மேட்டூர் அணை



FDSMACTY